# DJH3E - HISTORY OF FAR EAST- 1840-1970

**Unit I**

Historical and Geographical Survey- Early European Intercourse - The Opium Wars – Treaties - Taiping Rebellion - Sino Japanese War - The Triple intervention - Open Door Policy - Reform Movement- The Boxer Rising- Hundred Days Reforms.

**Unit II**

The Revolution of 1911 - Founding of Republic - Dr. Sun yat sen - China and the First World War - Cultural Movements - The Kuomingtang Party - The Kuomingtang and the Communists - Siankaishek.

**Unit III**

China and the Second World War- Establishment of the People's Republic - The National Government in Formosa - Mao Tse - Tung - Foreign Policy of China From 1950 – 1970.

**Unit IV**

Meiji Restoration - Economic and Educational Changes - Religious Changes - Rise of Japan - War with China - War with Russia - Japan and Korea – Mutshihito - His Service - Japan and the First World War - Japanese Militarism.

**Unit V**

Japan's Economic and Social problems between the two world wars - Japan and the Second World War - Occupation of Regina - Economic Recovery - Foreign Relations.

**Reference Books:**


1. A Short History of the Far East in Modern Times - S.L. Roy
2. Clyde and Beers - The Far East
3. Rise and Growth of Modern China - M.D. David
4. Rise and Growth of Modern Japan - M.D. David

# அலகு - I

## தொலைகிழக்கு நாடுகளின் வரலாறு (1840 – 1970)

## 1840-ல் சீனாவின் நிலை

**1840ம் ஆண்டில் சினாவில் நிலவிய சமூக, அரசியல் நிலைமையை விவரிக்க**

**சீனாவில் மஞ்சுக்களின் ஆட்சி**

சிங்வம்சம் என்று அழைக்கப்படுகின்ற மஞ்சு வழ்சம் சீனாவை ஏறக்குறைய 300 ஆண்டுகள் ஆண்டு வந்தது. அக்காலத்தில் பேரரசு மிகவும் விரிந்து பரந்து காணப்பட்டது. அப்போது அதில் சீனாவின் முழுப்குதி மஞ்சூரியா, மங்கோலியா, சின்சியாங், திபெத் ஆகியவைகள் அடங்கியிருந்தன. நேபாளம், பர்மா, லாவோஸ், சயாம், அன்னாம், கொரியா ஆகிய நாடுகளிடமிருந்து நிறை பெற்று பெரும் கௌரவத்துடன் ஆட்சி செய்து வந்தது. அவர்களது ஆட்சியின் போது நாடு பல வகைகளிலும் வளமும் நலமும் பெற்று விளங்கியது. 17-ம் நூற்றாண்டின் முழுமையான காலத்தின் உலகின் ஏனைய பகுதிகளைக் காட்டிலும் சீனா செழிப்புற்று விளங்கியது என்றால் அது மிகையாகாது. மஞ்சு வம்சத்தின் ஆட்சியின் ஆரம்பத்தில்தான் சீனா பழைய பாணியிலிருந்து விடுபட்டு புதிய பாணிக்கு அடி எடுத்து வைத்தது. அப்போதுதான் மேலை நாட்டின் போர் வலிமையினையும், அவர்களின் சமயத்தினையும் சீனர்கள் உணரலானார்கள்.

பீகிங்கில் ஆட்சி செய்த முதல் மஞ்சு மன்னன் ஷூன்ஷி என்பவன் ஆவான். அவனுக்குப் பின் அவனுடைய மகன், காங்சி என்பவன் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றான். ஆவன் 62 ஆண்டுகள் ஆட்சி செய்து வந்தான். அதன்பின் யுங் செங் பன்னிரெண்டு ஆண்டுகள் ஆண்டு வந்தான். பின்னர் சின் லுங் 1735 முதல் 1796 வரை ஆட்சியிலிருந்தான். அவனுடைய ஆட்சியின் போது நாட்டின் மக்கள் தொகை பெருகியது. சேல்வம் மிகுந்து காணப்பட்டது. இது ஏனைய நாடுகளை விட இங்கு ஏற்பட்ட மாறுதல்களாகும். அவனுக்கு பிறகு அவனுடைய மகன் சியா செங் 1769ல் அரியணை ஏறினான். ஆவன் 1820 வரை ஆட்சி செய்தான். அவன் உறுதியுடனும், மன வலிமையுடனும் செயல்படவில்லை. அவன் திறமையற்றவனாகக் காணப்பட்டான். அவன் 1820-ல் இறந்த போது அவனது மகன் தாவோ குவாங் அரியனை ஏறினான். ஆவன் தந்தைக்கு மிஞ்சிய தனயனாகவே செயல் திறமையில் காணப்பட்டான். அவனுடைய ஆட்சியின் போது "அலுவலகங்களில் கையூட்டு வழங்குதல் மலிந்து இருந்ததாலும் ஊழல் மலிந்து காணப்பட்டதாலும், திறமையற்ற நிர்வாகத்தாலும், இராணுவத்தின் பிற்போக்கான நிலையாலும், நிதி நிலை சீர்கேட்டாலும் மஞ்சு வம்சம் வீழ்ச்சியை நோக்கி விரைந்து சென்று கொண்டிருந்தது. வெளித்தோற்றத்தில் மட்டுமே அதன் பழம்பெருமை காணப்பட்டது. ஆனால் உள்ளே புகுந்து பார்க்கும் போது அதன் பெருமை மறைந்து காணப்பட்டது என்பது உண்மையேயாகும். இச்சமயத்தில் மேலே நாட்டவர்கள் வணிகத் தலங்களை சீனாவில் திறக்க முற்பட்டார்கள் அவர்களது இராஜதந்திரமும் இடம் பெற முற்பட்டது. எனவே புதிய வரலாறு ஆரம்பமாயிற்று".

**பேரரசின் பரப்பு**

மஞ்சுக்களின் காலம் பேரரசை விரிவாக்குவதில் பேரார்வம் காட்டிய காலமாகும். அது புகழ் ஏணியின் உச்சியில் இருந்த போதும், மேலே நாட்டவர்கள அதன் கதவுகளைத் தட்டிய போதும் அதில் கீழ்காணும் பகுதிகள் அடங்கியிருந்தன என்பதை காணலாம்.

1) 18 மாநிலங்களைக் கொண்ட சீனா
2) மூன்று மாநிலங்களைக் கொண்ட மஞ்சூரியா
3) திபெத், மங்கோலியா
4) பேயரளவிற்கு அடிமை நாடுகளான கொரியா, அன்னாம்

ஆடிமை நாடுகளைத் தவிர்த்து சீனாவின் மொத்த பரப்பளவு 4,277,170 சதுர மைல்களாகும். திறை செலுத்தும் நாடுகளுக்கு நடுவாக சீனா அமைந்திருந்ததால் அதற்கு ‘‘நடுவர் பேரரசு’’ என்று பெயர் வழங்கப்பட்டது.

**சமுதாயம்**

பண்டைய சீனா புவியியல் அடிப்படையிலும், மக்கள் தொகையிலும் மிகப் பெரிய நாடாகும். குறிப்பாகவும், சிறப்பாகவும் மஞ்சுக்களின் ஆட்சியின் போது மக்கள் தொகை, நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாகப் பெருகிக் காணப்பட்டது. அதன் மக்கள் தொகை 100,00,000 ஆகும். 1812-ல் அத்தொகை 362 மில்லியன் ஆகும். 1850-ல் அது 430 மில்லியன்களானது. முக்கள் தொகைப் பெருக்கத்தினால் பொதுவாக மக்களின் பொருளாதார நிலை மிகவும் மோசமாகவே இருந்தது.

சீன மக்களிடையே பல இனத்தவர்கள் காணப்பட்டனர். அவர்கள் அனைவரும் மஞ்சு ஆட்சியில்தான் ஒருங்கிணைந்து ஒரே மாதிரியான பண்பாட்டைப் பின்பற்றலானார்கள். சீன சமுதாயம் செய்யும் தொழிலின் அடிப்படையில் 5 வகையாகப் பிரிக்கப்பட்டடிருந்தது. அவைகளாவன:

1. உயர்வகுப்பினரான அறிஞர்கள் அதாவது கற்றவர்கள் அப்பிரிவிலிருந்து அதிகாரிகள், ஏனைய அலுவலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்
2. குடியானவர்: மக்கள் தொகையில் பெரும்பகுதியினர் குடியானவர்களே ஆவார்கள். சீனாவின் பொருளாதாரத் தன்னிறைவிற்குப் பாடுபடுபவர்கள்.
3. கைத்தொழில்களில் ஈடுபட்டிருந்த கைவினைஞர்கள்
4. சமுதாயத்தில் பின்தங்கிய வணிகர்களும் வியாபாரிகளும்
5. ஏவலர்களும், வீரர்களும்

**மஞ்சுக்களின் அரசியல் முறை**

கன்பூசியச் கோட்பாடுகள்: பண்டைய சீனாவின் அரசியல் முறையில் கன்பூசிய கோட்பாடுகளின் செல்வாக்கு மேலோங்கியிருந்தது. அவருடைய அரசியல் கோட்பாட்டில் சில திட்டவட்டமான அவருடைய போதனைகளைக் காணலாம். ஆவைகளில் ஒன்று சமுதாய அரசயில் ஐக்கியத்தைப் பற்றியதாகும். ‘விண்ணில் எவ்வாறு இரண்டு ஞாயிறுகள் இருக்க முடியாதோஅவ்வாறே மக்களுக்கும் இரண்டு மன்னர்கள் இருக்க முடியாது என்று போதித்தார்.

இதனால் பேரரசின் அரசியல் பிரிவுகள் இல்லை' மற்றொரு போதனை மென்சியஸ் என்பவருடையதாகும். ஆதன்படி "பேரரசர் தெய்வத்தால் தன் பதவியினைப் பற்றுள்ளார் என்றும், அவர் விண்ணின் மைந்தன் என்றும் அவர் தெய்வத்தின் கட்டளையின் பேரில்ஆட்சி செய்து வந்தார் என்றும் புலப்படுகிறது. ஒரு திறமையற்ற அல்லது கொடூரமான அரசன் அரியணை ஏறும் போது தெய்வம் தன் கட்டளையைவிலக்கிக் களொள்கிறது. அதை நேர்மையான ஒரு பிரபுவின் வசம் ஒப்படைக்கிறது. அவர்கள் மன்னனை எதிர்த்து கிளர்ச்சி செய்து தானே அப்பொறுப்பினை ஏற்றுக் கொள்வாராம். இக்கோட்பாட்டினால் புரட்சி செய்து என்பது நியாயப்படுத்தப்படுகிறது. துவறான ஆட்சி நடைபெறும் பகுதிகளை வெற்றி கொள்வதற்கும் இக்கோட்பாடு வழிவகுக்கிறது.

முடியாட்சி: பேரரசர் எல்லையற்ற அதிகாரங்களைக் கொண்டு விளங்கினார். இது கோட்பாட்டளவில் காணப்பட்டதேயல்லாமல் செயல்முறையில் காணப்படவில்லை. அவரைத் தடைப்படுத்தவும், எல்லையற்ற அதிகாரங்களை செயல்படுத்தவும் முடியாத அளவிற்கு நாட்டின் பழக்க வழக்கங்கள் (தன் முன்னோர்கள் கையாண்ட முறைகள்) பின்பற்றப்படவேண்டிய நிலைகள் அமைந்திருந்தன. அவர் தன்னுடைய அமைச்சர்களின் ஆலோசனைப்படி நடந்து வந்தார். பொதுவாக நோக்குவோமேயானால் பேரரசின் அதிகாரம் பேரரசால் அட்டுமே பயன்படுத்தப்படவில்லை. மேலும் அது தளபதிகளாலும் வசதி பெற்ற குடும்பங்களாலும், மேலும் அது தளபரிகளாலும், வசதி பெற்ற குடும்பங்களாலும், அவரது உறவினர்களாலும் கொண்டு செலுத்தப்பட்டது எனலாம்.

ஆமைச்சர்களும் துறைகளும்: பேரரசின் நிர்வாகம் ஆறு அமைச்சகங்கள் மூலம் நடைபெற்று வந்தது. அவைகள் முறையே

1) சிவில் அலுவலகம்-அதிகாரிகளை நியமிப்பது.
2) வருவாய்துறை
3) சடங்குகள்
4) போர்த்துறை
5) துண்டனைகள்
6) பொதுப்பணிகள் (கால்வாய்கள், வெள்ளத்தடுப்பு முதலியன) அவைகள் தவிர அரசாங்கத்தின் தன்னிச்சையாக விளங்கிய இரண்டு குழுக்கள் இருந்தன. அவைகள் முறையே
    1) இராணுவ முறைகளை நிர்வகிப்பது
    2) துணிக்கை முறையினைக் கண்காணித்தல் ஆகும்

அத்துடன் பல அதிகாரிகள் செயல்பட்டனர். அவர்களில் கல்வித்துறைகளில் பொறுப்பேற்று நடத்தியவர்கள் முக்கியமானவர்களாவர். புறிகால மஞ்சுக்களின் ஆட்சியில் அவர்களுக்கு ஆலோசனை கூற ஆறு உறுப்பினர்கள் கொண்ட ஒரு அவை ஏற்படுத்தப்பட்டது. அது ராணுவம் மற்றும் பிற விஷயங்களில் ஆலோசனை கொடுத்து வந்தது.

**சிவில் சர்வீஸ் தேர்வுகள்:**

போட்டித் தேர்வுகள் மூலம் அலுவலக ஊழியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அத்தேர்வில் மிக முக்கியமான தாளான பா-குவென் என்பதை ஒவ்வொருவரும் எழுதி தேர்வு பெறுதல் வேண்டும். அதற்கு ‘எட்டுக்கால் கட்டுரைத்தாள்’ என்றும் பெயருண்டு.

**மாநிலங்கள்**

சீனப் பேரரசு பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டன. மாநிலத் தலைவர்கள் பேரரசரால் அமர்த்தப்பட்டனர். அவர்கள் ஓரளவிற்கு தன்னிச்சையாகச் செயல்பட்டு வந்தனர். அவர்கள் மாநிலங்களில் அமைதியைப் பேணுவது மைய ஆட்சிக்குரிய வருவாயைப் பெருக்குவது ஆகியவற்றை கவனித்து வந்தனர். படிப்படியான ஒன்பது பிரிவுகளைக் கொண்ட அதிகாரிகளால் மாநில நிர்வாகம் நடைப்பெற்று வந்தது.

மாநில அரசாங்கத்தின் தலைவர் வைஸ்ராய் அல்லது மாநில ஆளுநரானார். ஆத்துடன் மஞ்சுக்களின் படைப்பிரிவினைக் கண்காணிக்க தளபதி ஒருவரும் இருந்தார். வருவாய் வசூலிக்கவும் அதை பங்கீடு செய்யவும் ஒரு பொருளாளர் இருந்தார். பீகிங் நகரில் ஒரு நீதிபதி, ஒரு உப்பள ஆணையாளர், தானிய ஆணையாளர் ஆகியோர் இருந்தனர். சிவில’ சர்வீஸ் தேர்வுகளை மேற்பார்வையிட ஒரு கல்வி அதிகாரி அமர்த்தப்பட்டார்.

**நல அரசாங்கம்:**

மாநிலம் பல கவுண்டிகள் என்ற மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. மாவட்டத்தில் பல நகரங்களும், கிராமங்களும் அடங்கி இருந்தன. மாவட்டம் என்பது மாஜிஸ்திரேட் என்ற அதிகாரியின் கீழ் கொண்டு வரப்பட்டது. அவர் பல்வெறு பணிகளை மேற்கொண்டிருந்தார். அவருடைய பணிகளாவன,

1) வரி வசூலித்தல் வருவாயைப் பெருக்குவது.
2) நிதி நிர்வாகம் செய்தல்.
3) நிலங்களைப் பதிவு செய்தல்.
4) அலுவலக் கட்டிடங்களைப் பாதுகாத்தல்
5) சட்டம் ஒழுங்கு அமைதியை நிலைநாட்டுவது.

அவருக்குக் கீழ் பல நல அதிகாரிகள் இருந்தனர். அவர்கள் உயர் குடிமக்கள் என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் நன்முறையில் பணிகளை மேற்கொண்டனர்.

மஞ்சு அரசாங்கம் மையத்தில் ஒருமுகமாக அதிகாரங்களை வைத்திருந்தாலும், மாநில மாவட்டங்களுக்கு ஒரு சில அதிகாரங்களைக் கொடுத்திருந்து என்றால் அதில் எவ்வித மாற்றமும் இல்லை எனலாம். அவர்களுடைய ஆட்சிமுறையில் சர்வாதிகாரப் போக்கின் கூறுகளும் மக்களாட்சியின் தன்மைகளும் கலந்து காணப்பட்டன என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. மைய ஆட்சி உண்மையான அதிகாரத்தில் குறைந்த அளவை மட்டுமே பயன்படுத்தியது. ஆனால் குடும்பம், குழு அமைப்பு முறை மக்களின் எல்லாச் செயல்களையும் கட்டுப்படுத்தி வந்தது எனலாம்.

**உயர் குடிமக்கள் அல்லது நற்பண்புள்ளவர்கள்**

மஞ்சு ஆட்சியின் போது சமுதாயத்தில் முக்கிய பங்கினைப் பெற்றவர்கள் அறிஞர்பெருமக்களான உயர்குடி மக்களாராவார்கள். அவர்கள் பெரும்பாலம் மஞ்சு இனத்தவர்களாக இருந்தனர். அவர்கள் சிறப்புமிக்க உரிமைகளைப் பெற்றிருந்தனர் நடை, உடை பாவனைகளில் அவர்கள் பொதுமக்களில் இருந்து வேறுபட்டும், மாறுபட்டும் காணப்பட்டனர். உயர்பதவிகள் அவர்களுக்கு அளிக்கப்பட்டது. அவர்கள் உடலுழைப்பிலிருந்து விலக்களிக்கப்பட்டனர்.

**இராணுவ நிர்வாகம்**

**அ**ந்நியர்கள் சீனாவில் வன்முறையில் பன்முறை புகுந்த போது அவர்களது இராணுவம் அவ்வளவு திறமையுள்ளதாக இல்லை. மஞ்சுக்கள் இரண்டு இராணுவப் பிரிவுகளை வைத்திருந்தனர். அவைகளில் 1) கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட அமைப்பு முறை (பேனர் அமைப்புமுறை) 2) பச்சசை நிலையின் கீழ் உள்ள இராணுவ வீரர்கள், முதல் வகையில் வடக்குஎல்லைப்புற மனிதர்கள் இடம் பெற்றிருந்தனர். அவர்கள் மஞ்சுகளுக்கு உண்மையுள்ளவர்களாக நடந்து வந்தனர். அந்த இராணுவத்தின் பிரிவுகள் மாநிலத் தலைநகரங்களிலும் மற்றும் முக்கிய இடங்களிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அந்த ராணுவம் சிறப்பு உரிமை பெற்று விளங்கி வந்தது. அது ஜப்பானில் தோருகுவா காலத்தில் சாமுராய் என்ற பிரிவினர் பெற்றிருந்த இடத்திற்கு ஒப்பிடப்படுகிறது. அவர்கள் நீண்ட நாட்களாக அமைதியை நாடியதின் விளைவாக சோம்பேறிகளாக மாறினர்.

**ஐரோப்பியரின் தொடர்பு**

**ப**ண்டைய காலம் தொட்டே சீனாவை நாடி வணிகர்களும் கடற்பயணிகளும் வரலானாரகள். ஐரோப்பி நாட்டவர்களில் முதன் முதலில் சீனாவிற்கு வந்தவர்கள் போர்த்துக்கீசியர்களும் அவர்களைத் தொடர்ந்து ஸ்பெயின் மக்கள், டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள், பிரெஞ்சுக்காரர்கள், அமெரிக்கர்கள் ஆகியோர் அங்கு வர முற்பட்டனர். போர்த்துகீசிரியர்கள் 1557-ம் ஆண்டில்மாகோ என்ற இடத்தில் வணிகத்தலங்களை ஏற்படுத்தினர். இது 16, 17 ஆம் நூற்றாண்டுகள் முழுவதும் நடைபெற்று வந்தது. 18ஆம் நூற்றாண்டில் சீனர்களுடன் அவ்வித உறவினை மேற்கொள்ள நல்லதொரு சூழ்நிலையினை ஸ்பானிய டச்சுகளால் ஏற்படுத்திக் கொள்ள முடியவில்லை. அனைத்து ஐரோப்பிய நாட்டவர்களில் ஆங்கிலேயர்கள் சீரிய இடத்தினைப் பெற்றனர். ஐரோப்பியர்கள் அனைவருமே சீனாவின் தென்கடற்கரை வழியாக வந்து சீனப்பேரரசுடன் காண்டனின் வணிகத் தொடர்புகளை மேற்கொண்டனர்.

**காண்டன் வணிகம்**

சீன வாணிபத்தின் மூலம் அந்நிய நாட்டவர்கள் பெரும் லாபம் அடைந்தனர். அவர்கள் மென்மேலும் வாணிபத்தைப் பெருக்கி அதிக சலுகைகள் பெற முற்பட்டனர். அவர்கள் மூலம் புரட்சிக் கருத்துக்கள் சீனாவில் வேறுான்றி தங்களுக்கு எதிராக திரும்பிவிடுமோ என மஞ்சுக்கள் அஞ்சினர். ஆதனால் அந்நியர் வாணிபத்தில் பல கட்டுப்பாடுகள்

கொண்டுவரப்பட்டன. அதன் விளைவாக பேரரசர் கின்லுங் காண்டனில் நடைபெற்று வந்த அந்நியர் வாணிபத்தை கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார்.

**சமூகக் கட்டுப்பாடுகள்**

சீனர்கள் வாணிபத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை. வணிகர்கள் நன்முறையில் நடத்தப்படவில்லை. அவர்கள் அறிஞர்கள், குடியானவர்கள், கைவினைஞர்கள் ஆகியோரை விட கீழ்நிலையில் வைக்கப்பட்டனர். அந்நிய வணிகர்கள் வெறுப்பாகுவம் மோசமாகவும் நடத்தப்பட்டனர். அவர்கள் சீனமொழியை கற்றுக் கொள்ள அனுமதிக்கப்படவில்லை. ஆலைகளில் பெண்கள் அனுமதிக்கப்படவில்லை. அந்நியர்களின் பயணத்திற்கு தடை கொண்டுவரப்பட்டது. சீனர்களுக்கு வேண்டிய அனைத்தும் சீனாவில் உள்ளது என்பதை சீனர்கள் உணர்ந்தனர். ஆகவே அந்நியர் வாணிகம் அவசியமற்ற ஆடம்பரமான செயல் எனக் கருதினர்.

**சீனர்களின் உயர்வு மனப்பான்மை**

உலகம் முழுவதிலும் சீனர்களே மிகவும் நாகரீகமானவர்கள் என்று பண்டைக் காலம் தொட்டே அவர்கள் கருதிவந்தனர். அவர்களது அரசு தெய்வீகப் பேரரசு என்றும் கருதி வந்தனர். பிறமக்கள் எல்லோரும் நாகரீமற்றவர்களாக சீனர்களின் கண்களுக்கு புலப்பட்டது. எனவே அந்நியர்கள் சமமாக நடத்தப்படாமல் கீழானவர்களாக மதிக்கப்பட்டனர். அவர்கள் பேரரசர் முன் ‘கௌடோ’ என்ற மண்டியிட்டு வணங்கும் முறையைப் பின்பற்றுமாறு கட்டாயப்படுத்தப்பட்டனர். ஆனால் மேலை நாட்டவர்கள் மண்டியிட்டு வணங்கும் முறையை அறவே வெறுத்தனர்.

## முதல் அபினிப்போர்

**அ.போரின் அபினிப்போரின் (1839-42) காரணங்களையும் முக்கியத்துவத்தையும் ஆய்வு செய்க**

1839-1842 ஆண்டுகளில் நடைப்பெற்ற ஆங்கிலேய சீனப்போர் அபினிப்போர் என்று அழைக்கப்படுகிறது. தனிமையிலே இனிமை கண்டு கொண்டிருந்த சீனாவை முதன் முதலில் மேலை நாடுகள் தாக்கியது இப்போரில்தான். இவ்வாறு ‘தெய்வீக பேரரசை தாக்கி நடுவண் பேரரசில் ஒரு விரிசலை ஏற்படுத்தியது அப்போர் என்றால் அது மிகையாகாது. பொருளாதாரச் சுரண்டலை ஏற்படுத்தும் வகையிலும், குடியேற்றங்கள் மூலம் வாணிபத்தலங்களை ஏற்படுத்தும் நோக்குடனும் வரிசையாக ஏற்பட்ட மேலை நாடுகளின் தாக்குதல்களுக்கு இது முதல் தாக்குதலாக அமைந்தது எனலாம்.

### போரின் காரணங்கள்

**1.வெளிநாட்டு வாணிபத்தின் மீது சீனா கொண்டிருந்த கொள்கை**

ஊலகின் ஏனைய நாடுகளை விட உயர்ந்த அதிகாரம் வாய்ந்த நாடாக தன்னை, சீனா கருதிக் கொண்டியிருந்தது. பரந்து விரிந்துள்ள நடுவண் பேரரசுக்கு அயல்நாட்டுப் பொருள்கள் தேவையில்லை என்று எண்ணியது. அவர்கள் “பொருளாதாரத் தன்னிறைவு” என்ற கோட்பாட்டில் மிகவும் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டியிருந்தனர். அதன்படி தங்கள் நாடு

தன்னிறைவு பெற்ற நாடென்றும், வாழ்க்கைக்கு அவசியமான எல்லாப் பொருள்களையும் ஏராளமாக உற்பத்தி செய்வதால் அயல்நாடுகளிலிருந்து எந்தப் பொருளையும் இறக்குமதி செய்ய வேண்டியதில்லை என்றும் கருதி வ்நதனர். 1793ல் இங்கிலாந்து மன்னரான மூன்றாம் ஜார்ஜ் என்பவருக்கு சின்லுங் என்ற சீனப் பேரரசர் தன் நாட்டின் வணிகக் கொள்கையை திட்டவட்டமாகக் குறிப்பிட்டுள்ளார். ஆதன்படி ''நாங்கள் எல்லாப் பொருள்களையும் பெற்றிருக்கின்றோம், புதிய அல்லது நுட்பமான பொருள்கள் மீது எங்களுக்கு விருப்பம் கிடையாது. ஊங்கள் நாடு உற்பத்தி செய்யும் பொருள்களை நாங்கள் பயன'படுத்தவும் விரும்பவில்லை.'' என்று குறிப்பிட்டுள்ளார். ஆகவே அயல் நாட்டினர் பெரும் முயற்சி எடுத்து சீனாவுடனான வணிக உறவு வளமடையப் பாடுபட்டனர்.

**2.அயல்நாட்டு உறவுகளைப் பற்றிய சீனரின் அறியாமை**

ஆயல்நாடுகளை சமமாகப் பாவித்து நடத்த வேண்டும் என்று சீனாவிற்கு தெரியவில்லை. மஞ்சுக்கள், வீழ்ச்சியின் விளிம்பில் நின்று விழித்துக் கொண்டிருந்தாலும் பழைய கோட்பாட்டில் மாறாப் பற்றுக் கொண்டிருந்தனர். அத்துடன் தங்களுடைய 'நடுவண்' பேரரசுதான் உலகத்திலுள்ள நாகரீக நாடுகளின் நடுநாயகமாக உள்ள பேரரசு என்று கருதி வந்தனர். ஆகவே அதனுடன் நல்லுறவினை நாடும் நாடுகள் அதற்கு கப்பம் பட்ட வேண்டும் என அது விரும்பியது. ஆதனால் மற்ற திறமையுள்ள நாடுகளுக்கு அது சமமான இடம் அளிக்க மறுத்தது. பேரரசின் தலைநகரான பீகிங்கில் அயல்நாட்டுத் தூதரகங்களைத் திறக்க அது அனுமதிக்கவில்லை. அவைகளுக்கு சம் அந்தஸ்து கொடுக்கவும் அது மறுத்தது.

**3.சீனரின் உயர்வு மனப்பான்மை**

ஊலகத்திலேயே சீனர்கள் தான் நாகரீகமானவர்கள் என்ற எண்ணத்தில் அவர்கள் இருந்தனர். அவர்களுடைய அரசு ''தெய்வீகப் பேரரசு'' அவர்களுடைய அரசர் ''தெய்வீகப் பேரரசர்'' என்றனர். ஏனைய மக்கள் சீனர்களுடைய கண்களுக்கு அநாகரீகமானவர்களாக தென்பட்டார்கள். ஆகவே எல்லா வெளிநாட்டவர்களும் சமமாக நடத்தப்படாமல் அவர்களைவிடக் கீழானவர்களாக நடத்தப்பட்டார்கள். அத்துடன் வெளிநாட்டவர்கள் ''கௌடோ'' என்ற மண்டியிட்டு வணங்கும் முறையினை பேரரசர் முன் செய்ய வேண்டியிருந்தது. இம்முறையினை மேலை நாட்டவர்கள் அறவே வெறுத்தனர்.

**4.காண்டன் வணிக முறை**

சீனர்கள் லேை நாட்டவர்களை சந்தேகக் கண்கொண்டு பார்த்தனர். மஞ்சு அரசாங்கமும் அவ்வாறே கருதியது. அயல்நாட்டு வணிகர்களைக் கொள்ளைக்காரர்களாகக் கருதினர். எனவே சீனாவின் தென்கோடியிலுள்ள காண்டனில் மட்டும் அவர்களுடைய வாணிபம் நடைமுறை ஒப்புக்கொள்ளப்பட்டது. ஏனைய துறைமுகங்கள் மூடப்பட்டன. அதனால் அந்த காண்டனில் நடைபெற்ற வாணிபம் அயல் நாட்டவர்களுக்குச் சாதகமாகவோ அல்லது ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையிலோ அமையவில்லை. காண்டனில் நடைபெற்று வந்த வாணிபத்தின் சிறப்புக் கூறுகளாவன:

1) கோ-ஹாங்:

காண்டன் துறைமுகத்தின் வழியாக நடைபெற்று வந்த வாணிபத்தின் முக்கியத் தன்மைகளில் ஒன்று ஒரு வணிகக்குழுவினை ஏற்படுத்தியது. அதற்கு கோ-ஹாங்'' என்று பெயர்இவர்கள் மூலமே நடைபெற்று வந்தது. அயல் நாட்டு வணிகர்கள் அவர்கள் மூலம்தான் வாணிபம் செய்ய வேண்டும். தனிப்பட்ட சீன வியாபாரிகளுடன் அவர்கள் வாணிபம் மேற்கொள்ளக்கூடாது. ஆயல்நாட்டிலிருந்து பொருள்கள் ஏற்றி வரும் கப்பலை பராமரிப்பது, அப்பொருள்களை இறக்குவது, விள்பனை செய்வது, அக்கப்பல் தங்க பாதுகாப்பு அளிப்பது, அது மீண்டும் செல்ல வழி செய்வது ஆகிய வேலைகள் ஒரு ''கோ-ஹாங்' வியாபாரியின் பொறுப்பில் விடப்பட்டது. சுருங்கக் கூறினால் அதிகாரிகளுக்கு அயல் நாட்டவர்களுக்கும் தொடர்பு படுத்தும் பாலமாக கோ-ஹாங்குகள் செயல்பட்டனர்.

2) சுங்க வரிவிதிப்பில் முரண்பாடுகள்:

நிலையான சுங்க வரிவிதிப்புக் கொள்கையில்லாததால் மேலைநாட்டு வணிகர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். ஒழுங்கான சுங்கவரி 2 விழுக்காடும் மதிப்பின்பேரில் 4 விழுக்காடும் இருந்தது. ஆனால் தல அதிகாரிகள் அடிக்கடி அவ்வரிகளை உயர்த்தி வந்தனர். சிலசமயங்களில் பீகிங் அதிகாரிகள் மூலம் குறிப்பிடப்பட்டிருந்த அளவை விட 10 மடங்கும் அவர்கள் வசூல் செய்தனர். இவ்வாறு தள அதிகாரிகளால் அயல்நாட்டு வணிகர்கள் கசக்கிப் பிழியப்பட்டனர்.

3) சமுதாயக் கட்டுப்பாடுகள்:

சீனர்கள் வாயிபத்திற்கு மிகக் கீழான மதிப்பையே கொடுத்து வந்தனர். வணிகர்களுக்கு சமூக அந்தஸ்து ஏதும் இல்லை. அவர்கள் நாட்டிலுள்ள அறிஞர்கள்குடியானவர்கள், கைவினைஞர்கள் ஆகியோருக்கும் கீழ் நிலையில் வைக்கப்பட்டனர். சீன அதிகாரிகள் தங்களுடைய வியாபாரிகளையே வெறுப்பாக நடத்தி வந்தனர். ஆகவே அவர்கள் வியாபாரிகளை அதுவும் அயல்நாட்டு வியாபாரிகளை சமூக அந்தஸ்து என்ற ஏணியின் அடிமட்டத்தில் உள்ளவர்கள் எனக் கருதி வந்தனர் என்பதை சொல்லவும் வேண்டுமோ?

4) வுாணிபத்தில் ஏற்றத்தாழ்வு:

18-ம் நூற்றாண்டில் காண்டனில் நடைபெற்று பந்த வாணிபம் சீனாவிற்கே அனுகூலமாக இருந்தது. தங்கள் நாட்டுப் பொருட்களை வெளிநாட்டினர் வாங்கவேண்டும் என்று விரும்பினர். அதே சமயத்தில் வெளிநாட்டுப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டவில்லை. இதனால் வெளிநாட்டு நாணயம் சீனாவில் கொட்டப்பட்டது.

5) ஆயல்நாட்டவர்கள மீதான கட்டுப்பாடுகள்

ஆயல்நாட்டவர்கள் சில விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டியிருந்தது. அவைகளை மீறும்போது வாணிபம் தடைப்படுத்தப்பட்டது. அவர்கள் மீதான விதிதுறைகளாவன:

அ) காண்டனுக்கு அருகில் உள்ள போக் என்ற இடத்துக்குஅருகில் எந்தவொரு வெளிநாட்டுக் கப்பலும் வருதல் கூடாது. ஆ) அயல்நாட்டுப் பெண்களோ அல்லது துப்பாக்கிகளோ தொழிற்சாலைக்குள் அனுமதிக்கப்படக் கூடாது.

இ) அயல்நாட்டுக் கப்பல்கள் சீனர்களுடன் நேரிடையான தொடர்பு கொள்ளுதல் கூடாது.

ஈ) சீனப'பெண்களை அயல்நாட்டுத் தொழிற்சாலைகளில் பணியில் அமர்த்துதல் கூடாது. எட்டு சீனர்களுக்கு (ஆண்கள்) மேல் ஒரு ஆலையில் வேலை செய்யக்கூடாது.

உ) கோ-ஹாங் மூலம்தான் அயல்நாட்டவர்கள் சீனர்களுடன் தொடர்பு கொள்ளுதல் வேண்டும்.

ஊ) அயல்நாட்டவர்கள் நதிகளில் படகு ஓட்ட அனுமதி கிடையாது

எ) அயல்நாட்டவர்கள் மூடப்பட்ட நாற்காலிகளில் அமர அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் மேல்மட்டம் இல்லாத சிறியப் படகுகளைப் பயன்படுத்துடல் வேண்டும்.

ஏ) ஆலைகளில் அவர்கள் அடிக்கடி சுற்றக்கூடாது. நூறு கஜத்திற்குள்ளேயே சுற்றிவர அனுமதிக்கப்பட்டனர்.

ஐ) வாணிபகாலம் முடிவடைந்த பின் அயல்நாட்டவர் காண்டனில் தங்குதல் கூடாது. கப்பல் வந்த போது கூட அவர்கள் மாக்கோவில் மட்டுமே தங்குதல் வேண்டும்.

ஒ) அயல்நாட்டுக் கப்பல்கள் வாம்போவாவில் மட்டுமே நங்கூரம் இடுதல் வேண்டும்.

ஓ) அயல்நாட்டவர்கள் சீன நூல்களை வாங்கக்கூடாது. அவர்கள் சீன மொழியினைக் கற்றுக் கொள்ளக்கூடாது.

மேற்கண்ட கட்டுப்பாடுகளால் அயல் நாட்டவர்கள் பெரிதும் துன்பப்பட்டனர். அவர்கள் தங்கள் வாணிபத்தில் ஏராளமான இலாபத்தைப் பெற்றதால் சீனர்களுடனான வாணிபத்தை விட்டுவிட விரும்பவில்லை. அவர்கள் வாணிபத்திற்காக தொல்லைகளைப் பொறுத்துக் கொண்டு இருந்தனர். எனினும் சீனர்களின் செயல்களை வெறுத்தனர்.

**5)நீதிவிசாரணை முரண்பாடுகள்**

ஆயல்நாட்டவர்கள் சீன மண்ணின் குற்றம் புரிந்தால் சீனச் சட்டப்படி விசாரிக்கப்படுதல் வேண்டும் என்று சீனர்கள் வலியுறுத்தினர். சீனர்களின் தண்டனை கொடுமையாக இருந்ததால் அயல்நாட்டவர்கள் அதை எதிர்த்தனர். மேலும் அவர்கள் ஐரோப்பிய முறையிலான விசாரணை வேண்டுமெனக் கோரினர். ஆத்துடன் அவர்கள், கழுத்தை சுருக்கிட்டுக் கொல்வது, கட்டாய முறையில் குற்றத்தை ஒப்புக் கொள்ள வைப்பது, துன்புறுத்துவது ஆகியவற்றைக் கடுமையாக எதிர்த்தனர்.

**6)சமயப்பரப்புக் குழுவினரின் பேராசைத் திட்டங்கள்**

தேய்வீகப் பேரரசின் மூலை மூடுக்கெல்லாம் கிறிஸ்துவசமயத்தை பரப்ப வேண்டுமென அக்குழுவினர் பேராசை கொண்டனர். அவர்கள் அவ்வாறு பரப்புவதை அவர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த நடமாடும் தடைச்சட்டம் முட்டுக்கட்டை போல் தடுத்து நிறுத்தியது. எனவே அவர்கள் ஆத்திரமடைந்தனர்.

**7)பிரிட்டிஷாரின் அரசியல் அடிப்படையிலான உறவு ஏற்பட முயற்சி**

பீகிங்கிற்கு 2000 மைல் தொலைவிலுள்ள காண்டனில் நடைபெறும் சீர்கேடுகள் சீன அரசிற்கு தெரியாது பிரிட்டிஷ் அரசாங்கம் எண்ணியது. எனவே வாணிபத்தைச் சீராக்க சீனாவின் தலைமையுடன் நேரிடையான தொடர்பு கொள்ளுதல் வேண்டுமென அவர்கள் நினைத்தார்கள். ஆகவே லண்டனிலிருந்து அரசு தரப்பு ஒரு குழு சீனாவிற்குச் சென்றது.

1)மேக்கார்ட்னே குழு:

1792-ல் மெக்கார்ட்னே என்ற பிரபுவின் தலைமையில் ஒரு குழு சீனாவிற்கு கீழ்க்காணும் நோக்கங்களுக்காக அனுப்பப்பட்டது.

அ) பிரிட்டிஷ் வணிகர்கள் தங்குவதற்கு ஒன்று அல்லது இரண்டு இடங்களைப் பெறுதல்

ஆ) சீனா முழுவதிலும் வாணிபம் மேற்கொள்ள ஒரு உடன்படிக்கையினைச் செய்து கொள்வது.

இ) காண்டனில் நடைபெற்று வரும் சீர்கேடுகளிலிருந்து விடுபடுதல்.

ஈ) பீகிங்கில் அரசியல் ரீதியில் ஒரு பிரதிநிதி தங்குவதற்கு வழி செய்தல்.

ஆக்குழு நன்முறையில் வரவேற்கப்பட்டு நல்லாதரவு கொடுக்கப்பட்டது. பிரதிநிதி தங்குவதற்கு அனுமதி வழங்குவது வாணிபத்தை நீட்டிப்பது ஆகியவை மறுக்கப்பட்டது. ஏனெனில் அவைகள் சீன, பழக்கவழக்கத்திற்கு ஒவ்வாததென என்பதேயாகும்.

**ii) ஆம்ஹர்ஸ்ட் குழு:**

மேலே குறிப்பிட்ட நோக்கங்களை அடைய வேண்டி இந்தியாவில் ஆளுநராகப் பணியாற்றிய ஆம்ஹாஸ்ட்பிரபுவின் தலைமையில் தூதுக்கோஷ்டி சீனாவிற்கு சென்றது. மனதைப் புண்படுத்தும்படியான சடங்குகளையும் மண்டியிட்டு வணங்கும் முறையையும் ஆம்ஹாஸ்ட் பிரபு செய்ய மறுத்துவிட்டார். இவ்வாறு மெக்கார்ட்னேவும், ஆம்ஹர்ஸ்ட் பிரபுவும் அமைதிப்பேச்சு வார்த்தைகளின் மூலம் நோக்கங்களை அடையத் தவறி விட்டனர். எனவே மூன்று வழிகளில் ஏதேனும் ஒன்றைபின்பற்ற வேண்டுமென எண்ணினர். ஆவைகளாவன

1) சீன வாணிபத்திற்கு விடை கொடுத்து அனுப்புவது
2) சீனர்களுக்கும் கீழ்ப்படிந்து நடப்பது
3) படைப்பலத்தைப் பயன்படுத்துவது.

இப்பூவுலகில் மிகவும் சக்தி வாய்நத நாடான பிரிட்டன் அதுவும் கடல்களின் தலைவியான பிரிட்டன் முதல் இரண்டு வழிகளை பின்பற்ற முயலாது என்றும், மூன்றாவது வழியா வன்முறையே தங்கள் வணிகத்திற்கு வளமான, நலமான வழி என்றும் கருதியது.

**iii) தேப்பியர் தூதுக்கோஷ்டி:**

1833-ம் ஆண்டின் பட்டயச் சட்டப்படி கிழக்கத்திய வர்த்தகக் கம்பெனி பெற்றிருந்த சீனாவின் வணிக முற்றுரிமையானது நீக்கப்பட்டதால் சீனாவிற்கும் இங்கிலாந்துக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்படலாயிற்று. நேரிடையான வாணிபத்திற்கு வழி கோளப்பட்டது. அப்போது நாட்டின் மதிப்பையும், மரியாதையையும் பாதுகாக்க வேண்டுமென்ற எண்ணம் வாணிப ஆர்வத்தைவி மேலோங்கி நின்றது. இதன் முக்கியத்துவத்தைச் சீனர்கள்

உணரவில்லை. இந்தச் சூழ்நிலையில் தான் நேப்பியர் பிரபு காண்டனின் பிரிட்டிஷ் வணிகத் தலைமைக் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார். அவரும் 1834-ம் ஆண்டு அங்கு சென்றார். சீனர்களின் வணிக விதிமுறைகளை அவர் மீறவே அவர் உடனே சீனாவை விட்டு வெளியேறும்படி ஆயிற்று.

**8)அபினி வாணிபம்**

சீனர்கள் விரும்பி வாங்கக் கூடிய ஒரு பொருளை ஆங்கியேலயர்கள் வியாபாரம் செய்ய முன்வந்தனர். அப்பொருள்தான் அபினியாகும். ஆதன் மூலம் வணிகத்தில் ஏற்பட்டுள்ள ஏற்றத்தாழ்வினை சரிக்கட்டினர். இந்தியாவிலிருந்து சீனாவிற்கு ஏராளமான அபினி ஏற்றுமதியாயிற்று. 1729-ல் 100 பெட்டிகளும், 1830ல் அதைவிட ஏராளமானபெட்டிகளும் ஏற்றுமதி ஆயின. 1838-39ம் ஆண்டுகளில் அது 4000 பெட்டிகளாக உயர்ந்தது. அபினியை ஏறக்குறைய 10 மில்லியன் சீனர்கள் உபயோகப்படுத்தினர். இதனால் அவர்களுடைய பொருளாதாரம் பெரிதும் பாதித்தது. சீனாவில் தொடர்ச்சியாக அபினி சென்றதன் விளைவாக அங்கிருந்து தொடர்ந்து சீன வெள்ளி நாணயங்கள் விடைப்பெற்றுக் கொண்டு வெளியேறின. ஏறக்குறைய ஆண்டுதோறும் 4லிருந்து 5மில்லியன் நாணயங்கள் வெளியேறியதால் நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. 1729-ல் மஞ்சு மன்னராக வீற்றிருந்த யுங் செங் அபினி வணிகத்தை தடை செய்யலானார். ஏந்த ஒரு நாகரிகமான அரசாங்கமும் மக்களுக்கு பெரிதும் தீங்கிழைக்கும் இத்தகைய வாணிபத்தைப் பொறுத்துக் கொள்ளாது என்று அவர் கூறினார். அதன்பின் ஆட்சிப் பொறுப்பேற்ற சியாவிங் அபினி ஏற்றுமதியை சட்டத்திற்குப் புறம்பானது என்று அறிவித்தார். 1800-ல் சீன அரசாங்கம் மற்றொரு ஆணையை வெளியிட்டு அபினியைத் தடை செய்ய முற்பட்டது.

இதற்கிடையில் அபினி வணிகத்திற்கு எதிராக பல ஆணைகள் வெளிவந்த போதிலும் கள்ளக்கடத்தல் மூலமாக அபினி வாணிபத்தை பிரிட்டிஷ்காரர்கள் பெருக்கி வந்தனர். அவ்வியாபாரம் இனியமுறையில் தனிசிறக்கப் பாடுபட்டனர்.

**9)காண்டன் ஆணையாளர் லின்னின் செயல்கள்**

**க**ாண்டனில் நடைபெற்று வந்த கள்ளக்கடத்தல் அபினி வியாபாரத்தைக் கட்டுப்படுத்த 1838-ல் லின் சேசு என்பவர் பதவியில் அமர்த்தப்பட்டார். அவர் வன்முறையில் பல ஆணைகளை வெளியிட்டு அதை அடக்கலானார். அவர் சீன அபினி வியாபாரிகளையும், தரகர்களையும், அபினிப் பழக்கமுள்ளவர்களையும் கடுமையாக நடத்தலானார்.

லின் என்ற ஆணையாளர் அயல்நாட்டு வணிகர்களிடமிருந்து அபினி இருப்புகளை உடனடியாகக் கொண்டு வந்து சரணடையச் செய்தார். இனி எதிர்காலத்தில் இது போன்ற கள்ளத்தனமான வியாபாரத்தில் ஈடுபடுவதில்லை என்ற உறுதி மொழியையும் வாங்கிக் கொண்டார். அவருடைய ஆணைகளை மீறுபவர்கள் மரண தண்டனைக்கு ஆட்படுவார்கள் என்றும், அவர்களுடைய சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும் என்றும் அவர் கூறினார். பிரிட்டிஷ் கண்காணிப்பாளரான எலியட் அவைகளை ஏற்றுக்கொள்ள முதலில் மறுத்தார். அவர் அபினிப் படெ்டிகளை கொடுத்துவிட்டு உறுதிரொழிப் பத்திரம் கொடுக்க முடியாதென மறுத்தார்.

அதன் விளைவாக உணவு, தண்ணீர், பணிபுரிய ஆட்கள் ஆகியவற்றை தடுத்து நிறுத்தினார். எனவே பிரிட்டிக்காரர்கள் மாக்கோவிற்குச் செல்ல நேர்ந்தது.

**10)உடனடிக் காரணங்கள்**

கௌலுன் என்ற இடத்தில் ஏற்பட்ட கைகலப்பில் ஆங்கிலேயர்கள் ஒரு சீனக் கிராமவாசியைக் கொன்றுவிட்டனர். லின் குற்றவாளியைச் சரணடையும்படி கூறினார். எலியட் அதை மறுத்தார். மாறாக அவர் அந்தக் குற்றவாளிக்கு எளிய தண்டனை வழங்கினார். இதனால் ஆத்திரமும், வெறுப்பும் கொண்ட லின் மாக்கோவிலிருந்து பிரிட்டிஷ்காரர்களை வெளியேற்ற நடவடிக்கைகள் மேற்கொண்டார். அதனால் போர் ஏற்பட்டது.

போரின் போக்கு:

1839ல் ஏற்பட்ட முதல் கடற்போரில் பிரிட்டிஷ் கடற்படை சீனாவின் கடற்படையினை முறியடித்தது. காண்டன் முற்றுகையிடப்பட்டது. 1841-ல் அதுவும் பிடிப்பட்து. அதன்பின் நிங்போ, சுமாய், கிங்கியாங் ஆகிய இடங்களும் கைப்பற்றப்பட்டன. யாங்சி நதியின் பெரும் இடங்கள் அவர்களிடம் வந்து சேர்ந்தன. ஒவ்வொரு நகரமும் ஒன்றன்பின் ஒன்றாக வீழ்வதைக் கண்ட சீனர்கள் பீதி அடைந்தனர். இறுதியில் அமைதியை நாடலானார்கள். 1842-ம் ஆண்டு நான்சிங் உடன்படிக்கையால் முதல் அபினிப்போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

**நான்கிங் உடன்படிக்கைகளின் முக்கியத்துவம்**

1842-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் பிரிட்டனுக்கும் சீனாவிற்கும் இடையில் இந்த உட்னபடிக்கை ஏற்பட்டது. 1843-ல் துணை உடன்படிக்கையான போர் உடன்படிக்கையும் ஏ்பட்டது. இந்த இருஉடன்படிக்கைகளுமே பிரிட்டனின் ஆக்கிரமிப்பு வணிகக் கொள்கையை எடுத்துக் காட்டுகின்றன.

1) பிரிட்டிஷ் வணிகர்களும், பிரிட்டிஷ்காரர்களும் தங்கி வாழவும், வியாபாரம் செய்யவும் ஐந்து துறைமுகங்கள் திறந்து விடப்பட்டன. ஹாங்காங் பிரிட்டனுக்குக் கிடைத்தது. கோ-ஹாங் முறை நீக்கப்பட்டது. சீனர்கள் பெரும் இழப்பீட்டுத் தொகை தரவேண்டியதாயிற்று.
2) சீனா, சுங்க வரி வதிப்பில் தன்னாட்சி அதிகாரத்தை இழந்தது. 5விழுக்காடு சுங்கவரியினை ஏற்றுக் கொண்டது. அதை அதிகரிக்க எண்ணினால் இரு நாடுகளும் கலந்து முடிவு செய்ய வேண்டும் என்பதை இரண்டும் ஏற்றுக் கொண்டன.
3) இந்த உடன்படிக்கையால் சீனாவின் இறைமை பாதிக்கப்பட்டது. விசேஷப்பிரதேச உரிமைகளை கொடுத்தது.
4) ஆபினி வாணிபத்தைப் பற்றி இவ்வுடன்படிக்கை ஏதும் கூறவில்லை. ஒழுக்க ரீதியில் சீனர்கள் அபினியை ஏற்றுக்கொள்ளவில்லை. அதே நேரத்தில் அதை அறவே தடைசெய்ய முடியாமல் சீனா தவிர்த்துக் கொண்டியிருந்தது.
5) பிரிட்டனுக்குச் சாதகமான சலுகைகள் கொடுக்கப்பட்டன. இதன்விளைவாக மற்றநாடுகளான பிரான்சும், அமெரிக்காவும் அது போன்ற சலுகைகளை சீனாவிடமிருந்து பெற வழி ஏற்பட்டது. அதன்படி பிரான்ஸ் சீனாவுடன் வாம்போவா

உடன்படிக்கையைச் செய்து கொண்டது. அமெரிக்காவும், சீனாவும் நான்கியா உடன்படிக்கையினைச் செய்து கொண்டன.

6) நூன்கிங் உடன்படிக்கை உள்ளபடியே சீனாவை பெரிதும் பாதித்தது. இதனால் நெடுங்காலமாக தனிமையில் இனிமை கண்டு கொண்டிருந்த சீனா துண்டிக்கப்பட்டது. அதன் மூலம் சீனா மேலைநாடுகளுக்குத் தன் கதவுகளைத் திறந்துவிட நேரிட்டது.
7) பொருளாதாரம் பொலிவிழந்தது. அபினி அவர்கள் உடலைக் கெடுத்தது. உள்ளத்தைக் கெடுத்தது. செல்வத்தைப் பாதித்தது: போரில் தோல்விகண்டதால் நாடெங்கும் ஒழுங்கீனம் தலைகாட்டியது. உள்நாட்டு வியாபாரம் ஸ்தம்பித்து நின்றது.
8) இதனால் ஆணையாளர்களின் பதவி நீக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டார். அதற்குக் காரணம் அவருடைய திறமையின்மையே எனலாம்.

### நான்கிங் உடன்படிக்கை

**‘‘ஐரோப்பிய வாணிபத்திற்கு சீனா திறந்து விடப்படுவதற்கு நான்கிங் உடன்படிக்கை ஆரம்பமாகும்’’ விவாதிக்க,**

முதல் அபினிப்போரின் மூலம் சீனாவானது மேலை நாட்டவர்களுக்குத் திறந்து விடப்பட்டது. அவர்கள் பொருளாதாரச் சுரண்டலையும் குடியேற்றங்களையும் ஏற்படுவதற்கு வழிகண்டனர். இதுவரையில் ‘தெய்வீகப் பேரரசு’’ என்ற சீனா தன்னுடைய கதவுகளை மூடிக்கொண்டு தனிமையிலே இனிமை கண்டு கொண்டிருந்தது. ஒரு சிறிய வழி அயல்நாட்டவர்களின் வாணிபத்திற்கு சில கட்டுப்பாடுகளுடன் ஏற்பட்டது. ‘‘நடுவண் பேரரசில்’’ ஒரு விரிசலை உண்டாக்கியது. முதல் அபினிப் போர்நான்கிங் உடன்படிக்கையின் மூலமும், பிற உடன்படிக்கைள் மூலமும், அயல்நாட்டவர்கள் சீனாவின் நிலையான இடத்தைப் பிடித்துக் கொண்டனர். ஆனால் அவர்கள் கேட்டது கிட்டவில்லை. நான்கிங் உடன்படிக்கையின் விதிமுறைகளை ஆராய்ந்தால் அதன் தன்மை நன்கு புலனாகும். அதன் விதிமுறைகளாவன:

1) ஹாங்காங் தீவு பிரிட்டனுக்குக் கொடுக்கப்பட்டது.
2) குாண்டன், ஆமோய், பூசௌ, ஷாங்கை ஆகிய ஐந்து துறைமுகங்கள் அயல்நாட்டவர்கள் வாணிபத்திற்குமட வாழ்வதற்கும் திறந்து விடப்பட்டன.
3) கோ-ஹாங்குகள் அனுபவித்து வந்த முற்றுரிமை நீக்கப்பட்டது. சீனக்குடிமகன் ஒவ்வொருவரும் அயல்நாட்டு வியாபாரிகளுடன் வணிகம் செய்ய அனுமதி கொடுக்கப்பட்டது.
4) ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களுக்கு நியாயமான ஒழுங்கான சுங்கவரி நிர்ணயிக்கப்பட்டது. இரு நாடுகளும் சேர்ந்து வரியினை அதிகப்படுத்துவது பற்றி ஆலோசனை செய்யும்.

5) இழப்பீட்டுத் தொகையாக 12 மில்லியன் டாலர்களை சீனா இங்கிலாந்திற்குக் கொடுக்க ஒப்புக்கொண்டது. நாசமாக்கப்பட்ட அபினிக்காக 86 மில்லியன் டாலர்களை இங்கிலாந்து பெற்றுக் கொண்டது.

6) நாடுகளை சமமாகப்பாவிக்கும் கோட்பாட்டை சீனா ஒப்புக் கொண்டது. அலுவலகத் தொடர்புகளிலும் சமத்துவமுறையானது பின்பற்றப்பட்டது. நீண்ட நாட்களாக இருந்து வந்த ''கௌடோ'' என்ற மண்டியிட்டு வணங்கும்முறை அகற்றப்பட்டது.

போக் உடன்படிக்கை (1843) :

ஆதற்கு அடுத்த ஆண்டிலேயே சீனாவிற்கும், இங்கிலாந்திற்கும் இடையே போக் உடன்படிக்கை ஏற்பட்டது. அதன் விதிகளாவன:

1) **விசேஷப்பிரதேச உரிமை:**

உடன்படிக்கையில் கண்ட துறைமுகங்களில் இருக்கும் பிரிட்டிஷ் குற்றவாளிகள் பிரிட்டன் நீதிமன்றங்காளல் இதுமுதல் விசாரிக்கப்படுவர். நீதிமுறைகளை கண்டித்தும் வெறுத்தும் வந்த அன்னியர்கள் இந்த உரிமைகளில் திருப்தி அடைந்தனர். சீன நீதித்துறையில் ஏற்பட்ட ஒரு பெரும் தலையீடு இது என்று அவர்கள் எண்ணினர். துங்கள் சொந்த 'மண்ணில் நீதித்துறையின் பந்தத்திற்கு ஏற்பட்ட அவமானம் என்றனர்.

2) **மிகவும் சலுகை பெறத்தக்க நாட்டு அந்தஸ்து :**

பிற நாடுகளுக்கு கொடுக்க விரும்பும் அனைத்து சலுகைகளையும் சீனா பிரிட்டனுக்குத் தர முன்வந்தது. எனவே இக்கொள்கையால் பிரிட்டன் எல்லாச் சலுகைகளையும், உரிமைகளையும், அதிகாரங்களையும் சீனாவில் பெற்றது.

3) **சுங்க வரிகளை நிர்ணயித்தல் :**

இந்த உடன்படிக்ரைகயால் இறக்குமதி வரி 13 விழுக்காடு ஆக்கப்பட்டது. (சராசரி 5 விழுக்காடு ஆகும். ஏற்றுமதி வரி ஒன்றரை முதல் பத்தேமுக்கால் விழுக்காடாகும்.

4) **சீன நீர்ப்பகுதிகளில் பிரிட்டிஷ் கடற்படை தங்க அனுமதித்தல்**

வாணிபத்தினை பாதுகாக்கவும் மாலுமிகளை கட்டுப்பாட்டுடன் கொண்டு செல்லவும் பிரிட்டிஷ் போர்க்கப்பல்கள் ஐந்து துறைமுகங்களில் தங்க அனுமதிக்கப்பட்டது.

5) **உடன்படிக்கைகள் பற்றிய திறனாய்வு**

துப்பாக்கி முனையில் வெற்றி பெற்றவர்கள் தோல்வி அடைந்தவர்களிடம் ஏற்படுத்திக் கொண்டவைகள் இந்த உடன்படிக்கைகள் என்றால் அது மிகையாகாது. நெருக்கடியின் பேரில் இது கையெழுத்து வாங்கப்பட்டதால் சீனா பெரிதும் இன்னலுக்குள்ளானது. அது ஒரு வேதனையான மனதை புண்படுத்தக்கூடிய ஒரு உடன்படிக்கையாகும். ஆபினி பற்றி இந்த உடன்படிக்கையில் எதுவும் குறிப்பிடப்படாததால் மற்றொரு போருக்கு

வழிவகுத்தது எனலாம். ஆயல் நாட்டவர்கள் விரும்பியதெல்லாம் இதனால் பெற முடியவில்லை. சீனாவின் உட்பகுதியில் அவர்கள் செல்ல அனுமதிக்கப்படவில்லை. அரசாங்க ரீதியிலான உறவு ஏற்பட தலைநகரில் தூதர் ஒருவர் தங்கிக் கொள்ள அனுமதி கிட்டவில்லை. பீகிங் தொடர்ந்து அயலவர்களுக்கு தடைசெய்யப்பட்ட நகரமாகவே விளங்கியது. சீனர்கள் அதிகம் கொடுத்து விட்டதாகவும், பிரிட்டிஷ்காரர்கள் ஒரு சிறிதே பெற்றுக் கொண்டதாகவும் கருதினர்.

**உடன்படிக்கையின் விளைவுகள்**

1) **பகுதிகள் இழப்பு:**

சீனாவுடன் சேர்ந்திருந்த ஹாங்காங் பிரிட்டனுக்கு கொடுக்கப்பட்டது. இது மென்மேலும் பிரிட்டன் பல பகுதிகளைப் பெற வழி செய்தது. சீனாவில் ஐந்து துறைமுகங்கள் திறந்துவிடப்பட்டதால் அயல்நாட்டவரின் செல்வாக்கு சீனாவின் கிழக்குக் கடற்கரை முழுவதிலும் பரவி இருந்தது.

2) **இறைமையின் இழப்பு**

சுதந்திரநாடுகளின் அதிகாரங்களில் ஒன்றான நீதித்துறை இறைமை மிகவும் கட்டுபடுத்தப்பட்டது. இந்த விசேஷப் பிரதேச உரிமையின்படி அன்னியர்கள் சீன மண்ணில் தவறு செய்தால் தண்டிக்க முடியவில்லை.

3) **பொருளாதார உரிமைகள் பாதிப்பு:**

பொருளாதார ரீதியில் நிர்ணயிக்கப்பட்ட சுங்கவரிகள் சீனாவின் பாதுகாப்பு வரிக்கொள்கையினை மிகவும் பாதித்தது. அயல்நாட்டுப் பொருள்கள் குவிந்தால் சீனாவில் கைத்தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டது பாதுகாப்பு இல்லாமல் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தொழில்கள் நசிந்தன. கள்ளக்கடத்தல் மூலம் அபினி வியாபாரம் தொடர்ந்து நடைபெற்று சீனாவின் செல்வத்தைச் சுரண்டி எடுத்துக் கொண்டிருந்தது. மக்கள் ஏழ்மையில் தள்ளப்பட்டனர். மேலும் சீனா பெரும் இழப்பீட்டித் தொகை கொடுக்க வேண்டியிருந்ததால் நாட்டின் வெள்ளி நாணயம் வெளியேற்றப்பட்டது. மூடிய கதவுக் கொள்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு, திறந்தவெளிக் கொள்கையானது பின்பற்றப்பட்டதால் மேலை நாட்டவரின் பொருளாதார ஆதிக்கம் ஏற்றம் பெற்றது.

4) **சீனாவின் செயலின்மை வெளிப்டுதல்**

மேலை நாட்டவர்கள் சீனாவை ஒரு ‘‘தூங்கும் பூதத்திற்கு’’ ஒப்பாகக் கருதினார்கள். முதல் அபினிப் போருக்கும் நான்கிங் உடன்படிக்கைக்கும் பிறகு அதுவே ‘‘இறந்த பூதமாகக்’’ கருதப்பட்டது. அதன் இராணுவ வலிமை கண்டு அவர்கள் அஞ்சவில்லை. அதன் திறமையின்மையைக் கண்டு கொண்ட அவர்கள் அடுத்த தாக்குதலுக்குத் தயாரானார்கள்.

ஆயல்நாட்டுத் துப்பாக்கிப்படகுகள் ஐந்துதுறைமுகங்களில் தங்க அனுமதி வழங்கப்பட்டதாலும், அந்த சலுகை மேலும் யாங்டிசி நதிவரையில் நீடிக்கப்பட்டதாலும் அவர்கள் எங்கும் தங்குதடையின்றி செல்லலாமென எண்ணினர்.

5) **சமுதாயப்பாதிப்புகள்**

அந்த ஐந்து துறைமுகங்களில் அயல் நாட்டவர்களுக்கு வாணிபம் செய்ய அனுமதி கொடுக்கப்பட்டதால் செல்வாக்குடன் விளங்கிய வியாபாரிகளின் இனம் அந்த சமுதாயத்தில் தோன்றலாயிற்று. மஞ்சு அரசாங்கத்தின் மீதிருந்த நம்பிக்கை குறையலாயிற்று. பரவலாக இருந்த ஏழ்மைநிலை தோல்வியால் ஏற்பட்ட மன அளவிலான பாதிப்பு அரசியல் வெறுப்பினை ஏற்படுத்தியது. பெருத்த தோல்வி சீனர்களை அடக்கிய உடன்படிக்கை ஆகியவற்றை அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எனினும் அப்போர் அவர்களின் பிற்போக்கான தன்மையினை உணரச் செய்யவில்லை. தங்கள் இராணுவத்தின் திறமையின்மையை அவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. மாறாக அவர்கள் மேலும் 50 ஆண்டுகள் உறக்கத்தில் உழன்றனர்.

6) **அரச தந்திர உறவிலான பாதிப்பு**

சீனா தன்னுடைய இறைமையை இழந்து ஏனைய நாடுகளை சமமாக பாவிக்க வேண்டும் என்பதை உணர்ந்து கொண்டது. மேலைநாடுகளுடன் சீனா அலுவலகத் தொடர்பினைப் பெற்றதோடு பன்னாட்டு சமுதாயத்தில் ஒரு புதிய இடத்தைப் பெற வழி ஏற்படுத்திக் கொண்டது.

7) **மற்ற நாடுகளுடன் செய்து கொண்ட உடன்படிக்கைகள்**

பிரிட்டிஷ்காரர்கள் பெற்ற சலுகைகளை ஏனைய நாடுகள் பெறவேண்டி சீனாவை அவைகள் கேட்டன. இச்சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்ட அந்த நாடுகள் மூலம் புதிய சிக்கல்கள் ஏற்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காக சீனா அன்னிய நாடுகரள ஒன்றன்மேல் ஒன்றை ஏவிவிட முயற்சி செய்தது. அவைகளிடத்தில் பிரிவை ஏற்படுத்த வேண்டும் என்று திட்டமிட்டு ‘‘பிரிந்துதான் வாழ வேண்டும்’’ என்ற கொள்கையைப் பின்பற்றியது.

i) நாங்கியா உடன்படிக்கை 1844: பிரிட்டனுடன் செய்து கொண்ட உடன்படிக்கையைப் போல அமெரிக்காவுடன் நாங்கியா உடன்படிக்கையைச் செய்துக் கொண்டது. அதன்படி அபினி வாணிபத்தை தடைசெய்ய ஒப்புக்கொண்டது. விசேஷப் பிரடீதச உரிமை அளிக்கப்பட்டது. மிகவும் சலுகை பெறத்தக்க நாட்டு அந்தஸ்து அளிக்கப்பட்டது. துறைமுகங்களில் (உடன்படிக்கையின் பாற்பட்ட) திருச்சபைகள் மருத்துவமனைகள் ஆகியவற்றை பராமரிப்பது என்று முடிவு செய்யப்பட்டது. பன்னிரெண்டு ஆண்குகளுக்குப் பிறகு அந்த உடன்படிகையினை புதுப்பித்துக் கொள்வதென்றும் முடிவு செய்யப்பட்டது.

ii) வாம்போவா உடன்படிக்கை: வாம்போவா என்ற இடத்தில் பிரான்ஸ்' ஒரு உடன்படிக்கை செய்துகொண்டது. நாங்கியாவின் விதிமுறைகள் அதற்கும் என்றனர். அத்துடன் கிறிஸ்துவ சமயத்தை தடையின்றி பரப்ப அனுமதி அளிக்கப்பட்டது.

iii) பெல்ஜியம், நார்வே, சுவீடன், போர்ச்சுக்கல் ஆகிய நாடுகளும் இது போன்ற உடன்படிக்கைகளைச் செய்து கொண்டு அந்த நாடுகள் பெற்ற எல்லாச் சலுகைகளையும் பெற்றன.

**8) துறைமுக உடன்படிக்கை முறையின் ஆரம்பம்**

பிரிட்டன் அமெரிக்கா பிரான்ஸ் ஆகிய நாடுகளின் உடன்படிக்கைகளால் துறைமுக உடன்படிக்கை முறை ஆரம்பமாயிற்று. அவைகள் பின்னால் ஏற்படப் போகின்ற ஒப்பந்தங்களுக்கு வலிவும், பொலிவும் தந்தன. இந்த சமமற்ற உடன்படிக்கைகள் சீனாவின் இறைமையைப் பெரிதும் பாதித்தன. இதனால் அவர்கள் குடியேற்ற உரிமைகளைப் பெற்று ஒரு அரசினுள் அரசாக வளர்ச்சி பெற்றனர்.

## இரண்டாவது அபினிப்போர்

**காரணங்கள்**

1) சீனாவின் ஏமாற்றுத் தந்திரங்கள்:

மேலை நாடுகளுக்கும் கீழை நாடுகளுக்கும் தொடர்ந்து ஏற்பட்ட போட்டிகளின் விளைவாக இரண்டாவது அபினிப்போர் ஏற்பட்டது எனலாம். இராணுவ வெற்றிகளை ஈட்டியபோதிலும் சீனர்கள் வெளிநாட்டவர்களை அநாகரிமானவர்கள் என்றே கருதி வந்தனர். அவர்கள் வெளிநாட்டவரின் நாகரீகத்தை வெறுத்தனர். காலதாமதம் செய்வதன் மூலமும் தப்பிக்கப் பின்பற்றும் ஏமாற்று பதில்களும் தான் இழந்த நிலையினை அடைய உதவி செய்யும் என சீனா கருதியது. மாநிலத் தலைவர்கள் அதிக அதிகாரம் பெற்று அனுபவித்து வந்ததால், சமய அரசு உடன்படிக்கைகளை அமல் செய்வதில் இடர் ஏற்பட்டது. ஆகவே ன்முறை என்ற வலிய ஆயுதம்தான் சீனாவைப் பணிய வைக்க உற்ற நண்பன் என மேலைநாட்டவர் எண்ணினர்.

2) ஆபினி வாணிபம்

ஆபினி வாணிபப் பிரச்சனை இன்னும் தீர்ந்தபாடில்லை. ஒழுக்க அடிப்படையில் அபினி அவர்களைப் பாதித்தது. அபினி வாணிபத்தை சீனா தடை செய்த போதிலும், கள்ளக்கடத்தல் மூலம் அந்த வியாபாரம் நடைபெற்றுக் கொண்டுதானிருந்தது. அதற்கு அயல் நாட்டவர்கள் ஆதரவுநல்கி வந்ததை சீனா வெறுத்தது.

3) கூலிகளின் பிரச்சனை:

சீனாவிலிருந்து ஏராளமான கூலிகள் கிபோர்னியா, ஆஸ்திரேலியா, கியூபா, பெரு, சிலி, அமெரிக்காவின் மேற்கு கடற்கரைப்பகுதி ஆகிய இடங்களில் வேலை செய்துவந்தனர். அவர்கள் மிகவும் சொற்பமான கூலி பெற்றனர். அவர்கள் நிலை

மிகவும் மோசமாக இருந்தது. அந்தக் கூலிகள் அடிமைகளாகக் கருதப்பட்டனர். தங்கள் மக்கள் அங்கு கொடுமைகள் பல அனுபவிப்பதைக் கண்டு அவர்கள் உள்ளபடியே மனம் நொந்தார்கள்.

4) கடற்கொள்ளை:

சீனாவிற்கு அடிக்கடி வந்த வெளிநாட்டுக் கப்பல்கள் கள்ளக்கடத்தல் வியாபாரத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்தன. போர்த்துக்கீசியக் கப்பல்கள் அடிக்கடி கொள்ளையடித்தலில் ஈடுபட்டன. இதை சீன அரசாங்கம் அறவே வெறுத்தது.

5) காண்டன் நகரப்பிரச்சனை:

காண்டன் துறைமுகத்திலும் தொல்லைகள் ஏற்பட்டன. தலவியாபாரிகள் காண்டனில் இருந்த வெளிநாட்டவர்களை விரோதிகளாகப் பாவித்தனர். அதிகாரிகள் அன்னியர்களை காண்டனில் தங்கிவாழ அனுமதிக்கவில்லை. சீன வணிகர்களே வியாபாரத்தை கவனிக்க முயற்சி செய்தனர். தங்கள் நகரில் பிரிட்டிஷ்காரர்கள் நுழைந்ததை அவமானமாக் கருதினார்கள். அதே சமயத்தில் பிரிட்டிஷார் தாங்கள் அங்கு வாழ உரிமையுண்டு என்று கூறினார்கள். ஆதனால் அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டன. பிரிட்டிஷ்காரர்கள் சிலரை அவர்கள் கொலையும் செய்தனர். எனவே சீன-ஆங்கிலேய உறவு மிக வேகமாகச் சீர்கெட்டு வந்தது.

6) விசேஷப் பிரதேச உரிமைகளைத் தவறாக பயன்படுத்துதல்:

உடன்படிக்கையின்படிடி மேலை நாட்டவர்கள் விசேஷப் பிரதேச உரிமைகளைப் பெற்றனர். துறைமுக உடன்படிக்கைகளின்படி தங்களுக்கென நீதிமன்றங்களையும், சிறைகளையும் வைத்துக் கொள்ள உரிமை பெற்றனர். அதன்விளைவாக அந்த உரிமைகளைத் தவறாகப் பயன்படுத்தலானார்கள். சீன ஏவலர்கள்கூட அவர்களுடைய நீதிமன்றத்தின் முன்விசாரிக்கப்பட்டனர். மதம் மாறிய சீனர்கள்கூட அந்த விசேஷப்பிரதேச உரிமைகளால் பாதிக்கப்பட்டனர்.

7) யேமின் சின்னின் பிடிவாதமான செயல்கள்:

1852-ல் யேமின் சின் என்பவர் காண்டனின் ஆணையாளராகப் அமர்த்தப்பட்டார். அவர் அன்னியருக்கு எதிரான போக்குக் கொண்டவர்: கடுமையானவர்: பிடிவாத குணமுள்ளவர்: அன்னியர் பிரச்சனையை செவிமடுக்கவில்லை: தெய்வீகப் பேரரசின் மதிப்பை காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால் அன்னியர்களை மதித்து வரவேற்கக் கூடாதென அவர் எண்ணினார். புதினைந்து மாதங்களாக பிரான்சின் அமைச்சர் காத்திருந்தும் அவரை சந்திக்க முடியவில்லை. இதிலிருந்து அவருடைய நோக்கு இனிது புலனாகும்.

8) உடன்படிக்கைகளை புதுப்பித்தலில் எழுந்த பிரச்சனை:ஷ

1844 ஆண்டு ஏற்படுத்தப்பட்ட அமெரிக்க, பிரெஞ்சு நாடுகளுடனான உடன்படிக்கைகளில் 1856-ம் ஆண்டில் புதுப்பிக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. 1842ம் ஆண்டில் ஏற்பட்ட நான்கிங் உடன்படிக்கையில் அது போன்ற விதிமுறை இல்லை என்றாலும் அவைகளுக்குக் கொடுக்கப்பட்ட

சலுகைகள், குறிப்பாக உடன்படிக்கையினைப் புதுப்பிப்பது தங்களுக்கும் நீடிக்கப்பட வேண்டுமென பிரிட்டன் கோரியது.

9) சமயப்பரப்புக் குழுவின் நடவடிக்கைகள்:
ஊடன்படிக்கைகள் ஏற்படுவதற்கு முன்பே சமயப்பரப்புக்குழுவினர் மிகத்தீவிரமாக கிறிஸ்துவ சமயத்தைப் பரப்பலானார்கள். உடன்படிக்கைகள் ஏற்பட்டபின் சட்டப்படி அவர்கள் நாட்டின் மூலை முடுக்கெல்லாம் தங்கள் பணிகளை செய்யலானார்கள். 1856-57 பிரெஞ்சு பாதிரி ஆப்சாப்டிலெய்ன் என்பவர் குவாங்கி என்ற இடத்தில் கைது செய்யப்பட்டு விசாரணையின்றி கொலை செய்யப்பட்டார். இக்கொலையினால் ஆத்திரம் கொண்ட பிரெஞ்சுக்கள் ஆங்கிலேயருடன் சேர்ந்து கொண்டனர்.

10) லோர்ச்சோ ஆரோக் கப்பல் நிகழ்ச்சி:
போருக்கு மற்றொரு மிக முக்கியமான காரணம் ஆராக்கப்பல் நிகழ்ச்சியாகும். இது சீனர்களுக்குச் சொந்தமான கப்பலாகும். சுாங்கிங்கில் பதிவு செய்யப்பட்டிருந்தது. இது ஆங்கிலக் கொடியுடன் ஆங்கிலேயத் தலைவனின் கீழ் இயங்கி வந்தது. காண்டனில் அது தங்கியிருந்த போது சீனர்கள் அதில் புகுந்து அதிலிருந்த மாலுமிகளைக் கொள்ளையர்கள் எனக் குற்றம் சாட்டிக் கைது செய்தனர். பிரிட்டிஷ் தூதுவர் அது தங்களுக்குச் சொந்தமான கப்பல் என்றும் கைது செய்தவர்களை உடனே விடுதலை செய்யவேண்டுமென்றும் கோரினார். யேமின் எவ்வித மன்னிப்பும் கோராமல் அவர்களை விடுதலை செய்தார். பிரிட்டிஷ் தூதுவர் ஹோரி பார்க்ஸ் என்பவர் தங்களுடைய கொடியானது சீனர்களால் கிழிந்து எறியப்பட்டதென்றும் அது தங்களுக்கும் தங்களது அரசனுக்கும் தங்களுடைய மணிமுடிக் ஏற்பட்ட அவமானமாகும் என்றும் கூறினார். எனவே அதற்கு நஷ்டஈடு தரவேண்டுமென அவர் கேட்டார். சீனர்கள் மறுக்கவே போர் ஆரம்பமாயிற்று.

போர்: ஆங்கிலேய-பிரெஞ்சுப்படைகள் 1858ல் காண்டன் நகரை நோக்கி கைப்பற்றிக் கொண்டன. நற்பெருமையுள்ள ஆளுநரான யேமின் கைது செய்யப்பட்டு கல்கத்தாவிற்கு கொண்டு செல்லப்பட்டார். அவர் கைதியாகவே காலம் கழித்து அங்கேயே மாண்டு போனார்.காண்டன் வீழ்நதவுடன் நேசப்படைகள் பீகிங்கை நோக்கி பீடு நடைபோட்டன. பெய்ஹோவின் முகத்துவாரத்தைப் பாதுகாத்துக் கொண்டிருந்த தர்கூர் கோட்டைகள் தகர்க்கப்பட்டன. இவ்வாறு அப்போர் சீனாவிற்கு நீரிலும் நிலத்திலும் படுதோல்வியைக் கொடுத்தது. இதனால் அது அமைதி நாடி வலுக்கட்டாயமாக வரவேண்டியதாயிற்று.

டியன்சின் உடன்படிக்கைகள்: போரில் இங்கிலாந்தும் பிரான்வும் பங்கு பெற்றன. மீதி நாடுகள் பயனை அடையக் காத்திருந்தன. ‘‘மிகவும் சலுகை பெறத்தக்க நாடு’’ என்ற விதியின்படி எல்லா நாடுகளும் சீனாவிடமிருந்து சலுகைகள் பெற தகுதி பெற்றிருந்தன.

அமைதிப்பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து 1856-ம் ஆண்டு ஜீன் திங்களில் பல உடன்படிக்கைகள் சீனாவிற்கும் மேலை நாடுகளுக்கும் இடையே ஏற்பட்டன.

பிரிட்டனுடனான உடன்படிக்கை: இந்த உடன்படிக்கையில் 50க்கு மேற்பட்ட விதிகள் இருந்தன. அவைகளில் முக்கியமானவற்றைக் கீழே காணலாம்.

1) அதிக துறைமுகங்களைத் திறந்து விடுதல்: மேலும் பத்து துறைமுகங்களை திறந்துவிட சீனா ஒப்புக்கொண்டது. 1842-ல் ஆக மொத்தம் 15 துறைமுகங்கள் தற்போது மேலை நாட்டவர்களுக்குத் திறந்துவிடப்பட்டன.

2) அரசாங்கப் பிரதிநிதி தங்க அனுமதி: பீகிங்கில் அரசாங்கப் பிரதிநிதி இராஜதந்திர உறவுமுறைகளை ஏற்படுத்திக் கொண்டு தங்கி வாழ அனுமதி தரப்பட்டது. இது தூதரகங்கள் திறக்கப்பட வழிபிறந்தது.

3) சமயப்பரப்புக் குழுவினர்களுக்கு உரிமை: எவ்விதத் தடையுமின்றி சீனாவில் உட்பகுதிகளில் கிறிஸ்துவ சமயத்தைப் பரப்பிக் கொள்ள அக்குழுவினர்களுக்கு உரிமை அளிக்கப்பட்டது. உயிருக்கும், கொத்துக்கும் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

4) தடையின்றிச் செல்ல உரிமை: அயல்நாட்டவர்கள் தங்கள் தூதுவரின் கையொப்பமிட்ட னுமதிச்சீட்டைப் பெற்றுக் கொண்டு சீன அதிகாரிகளின் மேற்கையொப்பமுடன் சீனாவின் எல்லாப் பகுதிகளிலும் சுற்றிவர அனுமதிப் பெற்றனர். துறைமுகற்களைச் சுற்றி 33 மைல்களுக்குள் போய் வர அனுமதிச்சீட்டு தேவையில்லை.

5) சுங்கவரிகள்: ஐந்து விழுக்காடு நிர்ணயம் செய்யப்பட்ட சுங்கவரிகள் இனி இரு நாடுகளின் ஒப்புதலின் பெரில் புதப்பிக்கப்பட வதி வழி செய்தது. அதாவது சீனா தன் விருப்பப்படி அதை மாற்ற முடியாது பிரிட்டனின் அனுமதியுடன் தான் அது செய்யமுடியும். இதனால் சீனாவில் பொருளாதாரச் சுதந்திரம் குறைக்கப்பட்டது.

6) ஊடன்படிக்கையின் பாற்பட்ட துறைமுகங்களில் போர்க்கப்பல்கள் தங்க அனுமதி: அயல்நாட்டுப் போர்க்கப்பல்கள் குறிப்பிட்ட 16 துறைமுகங்களில் வந்து தங்க அனுமதி கொடுக்கப்பட்டது.

7) யுாங்சிக்கியாங் பள்ளத்தாக்கில் உரிமை பெறுதல்: சீன அரசாங்கத்திடமிருந்து வளமான யாங்சிக்கியாங் பள்ளத்தாக்கைப் பயன்படத்திக் கொள்ள பிரிட்டன் உரிமை பெற்றது.

8) அபினி வாணிபத்தைச் சட்டரீதியாக்குதல்: அபினி வாணிபம் சட்ட பூர்வமாக்கப்பட்டது. திருட்டுத்தனமாக அந்த வியாபாரம் நடைபெறத் தேவையில்லை என்று அறிவிக்கப்பட்டது.

9) இழப்பீடு: பிரிட்டனுக்குப் பெரும் இழப்பீடு தர சீனா ஒப்புக் கொண்டது.

10) உடனபடிக்கைகளை உறுதிப்படுத்துதல்: உடன்படிக்கை முடிவு பெற்ற ஒரு ஆண்டிற்குப் பிறகு மீண்டும் பீகிங்கில் இது உறுதி செய்யப்படுதல் வேண்டும் என்பதும் முடிவு செய்யப்பட்டது.

மீண்டும் பகைமை ஏற்படுதல்:

உடன்படிக்கையை உறுதிப் படுத்த வேண்டி அனைவரும் பீகிங்கில் அவர்கள் கூடினர். மேலை நாட்டுத் தூதுவர்கள் பீகிங்கில் தங்குவதற்கு சீனா நொண்டிச்சாக்குகள் கூறி அதை தவிர்க்க முற்பட்டது. மேலும் அதை காண்டன் அல்லது ஷாங்காங் அல்லது டியன்சி ஆகிய இடங்களில் செய்ய வேண்டுமெனக் கோரியது. இது டியன்சின் உடன்படிக்கையை மீறிய செயல் என பிறநாடுகள் அங்கு வர மறுத்துவிட்டன. இந்தவிதமாக மீண்டும் பகைமை ஏற்பட்டது.

கோடைக்கால அரண்மனை தாக்கப்படல்:

ஆங்கிலேய பிரெஞ்’சுப்படைகள் பீகிங்கை நோக்கி முன்னேறின. சீன பேரரசரும் அவரது அமைச்சர்களும் இஜஹோலுக்கு ஓட்டம் பிடித்தனர். எல்ஜின் பிரபுவின் ஆணைப்படி சீனப் பேரரசின் கோடைக்கால அரண்மனை தாக்கப்பட்டது. அதன் வனப்பு மிக்க எல்லாச் சொத்துக்களும் அழிந்தன. இதனால் சீனர்கள் அடிபணிந்தனர். 1860-ல் ஏற்பட்ட பீகிங் ஒப்பந்தபடி போர் முடிவுற்றது. மனக்கசப்புடன் அவ்வொப்பந்தத்தை சீனா ஏற்றுக் கொள்ள நேரிட்டது.

பீகிங் ஒப்பந்தம் (1860)

i) பீகிங் ஒப்பந்தம் டியன்சின் உடன்படிக்கையினை உறுதிப்படுத்தியது.
ii) இதற்கு முந்தைய ஆண்டில் தாகூவில் ஏற்பட்ட மனவேறுப்பாட்டிற்கு பேரரசர் வருத்தம் தெரிவித்துக் கொண்டார்.
iii) பீகிங்கில் நிலையாக பிரிட்டனின் தூதர் தங்கிக்கொள்ள பேரரசர் அனுமதித்தார்.
iv) இழப்பீடு தரவும் இசைந்தார்.
v) டீயன்சினை உடன்படிக்கையின் பாற்பட்ட துறைமுகமாக ஏற்றுக் கொண்டார்.
vi) ஹாங்காங்கிற்கு எதிரே அமைந்திருந்த கௌலூன் பிரிட்டனுக்கு அளிக்கப்பட்டது.

vii) பிரான்சிங்கும், பிரிட்டனுக்கும் முறையே எட்டுமில்லியன் சீனநாணயங்கள் இழப்பீடாகத் தர அது ஒப்புக் கொண்டது.

ரஷ்யரின் பலன்: சீனாவிற்கும் நேசநாடுகளுக்கும் இடையில் பீகிங் ஒப்பந்தம ஏற்பட்ட ரஷ்யத்துாதுவர் இக்னேஷியவ் பணிபுரிந்தார். அதற்குக் கைமாறாக ரஷ்யா உஸ்ஸீரி ஆற்றிற்குக் கிக்கேயுள்ள பகுதியைப் பெற்றுக் கொண்டது. அத்துடன் மிக முக்கிய துறைமுகமான விளாடிவாஸ்டாக் கிடைத்தது. இவ்வாறு ரஷ்யா தன் எல்லையை சீனா, கொரியா வரை நீட்டிக்கொண்டது.

**விளைவுகளும் மதிப்பீடும்**

1) சீனாவின் செயலின்மை வெளிப்படுதல்: மேலை நாடுகளுடன் ஏற்பட்ட மோதலில் சீனாவில் அடித்தளமே ஆட்டம் காண நேரிட்டது. மஞ்சு அரசாங்கத்தின் வலிமையற்றநிலை இதனால் உலகுக்குத் தெரிய ஆரம்பித்தது. அதைப் பயன்படுத்திக் கொண்டு மேலைநாடுகள் சீனாவை சுரண்ட ஆரம்பித்தன. சீனா ஏராளமானஇழப்பீட்டுத் தொகை கொடுத்ததோடு மட்டுமல்லாமல் தன் பகுதிகள் பலவற்றையும் இழந்தது. ஹாங்காங், கெலுான் பிரிட்டனுக்கு் கொடுக்கப்பட்டது. உஸ்ஸீரி ஆற்றிற்குக் கிழக்கேயுள்ள பகுதியினையும் ரஷ்யா பெற்றுக் கொண்டது. அது மஞ்சூரியா, கொரியாவின் ஆக்கிரமிப்பிற்கு வழிகோலியது.

2) இறைமையை இழத்தல்: சீனா தன் இறைமையை இழந்து தவிக்கலாயிற்று. சீனாவின் உட்பகுதிகளிலும் அன்னிய போர்க்கப்பல்கள் நடமாட அனுமதி வழங்கியது. சுங்கவரியை 5 விழுக்காடு நிர்ணயிக்க ஒப்புக்கொண்டதோடு அதில் மாற்றம் செய்ய மற்படும் போது பிரிட்டன் அனுமதியுடன் செய்ய வேண்டுமென்று அவர்கள் கோரியதையும் ஏற்றுக் கொண்டது. தன்னுடைய உள்நாட்டு விவகாரங்களில் சீனா சுதந்திரமாக செயல்பட முடியாமல் இவைகள் தடையாக நின்றன.

3) பொருளாரத்தின் பாதிப்பு: சுங்கவரி மிகவும் குறைவாக இருந்ததால் மேலை நாடுகளுடன் அது போட்டி போட முடியவில்லை. சீனாவின் தொழில்கள் பாதுகாப்பின்றி மிகவும் பாதிக்கப்பட்டன. காப்புவரி எதுவும் விதிக்க இயலவில்லை.

4) மேலை நாட்டவரின் ஆக்கிரமிப்பு அதிகரித்தல்: சீனாவின் வலிமையற்ற கையாலாகாத நிலையினைப்புரிந்து கொண்ட மேலை நாட்டவர்கள் மேலும் ஆக்கிரமிப்பில் ஈடுபடலாயினர். ஆதன் விளைவாக சீனாவை பல செல்வாக்கு மண்டலங்களாகப் பிரித்தனர்.

5) மேலை நாட்டவரின் வாணிபமும் கருத்துக்களும் புகுதல்: சீனாவின் தனிமைக் கொள்கைக்கு விடை கொடுக்கப்பட்டது. மாற்றம் என்னும் காற்று சீனாவில் வேகமாக வீசலாயிற்று. பழைய கருத்துக்களைப் பற்றி கொண்டிருந்த சீனர்களிடையே புதிய கருத்துக்கள் பரவின. மேலை நாட்டுப்பாணியில் இராணுவநிர்வாகமும், நிர்வாக நிறுவனங்களும் மாற்றி அமைக்கப்பட்டன. சமயப்பரப்புக் குழுக்கள் நாட்டின் கருத்துக்களிலும், நூல்களிலும் அடிப்படை மாற்றங்களைக் கொண்டு வந்தன. முக்கயிமான மையங்களில் மேலை நாட்டுக் கல்வி புகுத்தப்பட்டது.

6) தோழில்மயமாதல் ஆரம்பம்: தொழில்மயமாதல் முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்டு 1878-ல் கெய்ப்பிங் சுரங்கங்கள் தோண்டப்பட்டன. டோங்ஷான் இருப்புப்பாதை இருப்புப்பாதை கட்டப்பட்டது. 1873-ல் சீனாவின் முதல் தீவிரப் போக்குவரத்துக் குழுமம் ஏற்படுத்தப்பட்டது. அதன்பின் ஹான்யாங் இரும்புத் தொழிற்சாலை திறக்கப்பட்டது.

தைபிங் கிளர்ச்சி

ஹங் சியு சுவான் என்பவர் தலைமையில் கிறிஸ்துவ சமயத்தின் தைபிங் கிளர்ச்சியானது ஆரம்பிக்கப்பட்டது. சுதந்திரம், சமத்துவம் ஆகியவற்றை அடையவும் சமயச் சீர்திருத்தத்தைப் பெறவும் சமுதாய மாற்றங்களை ஏற்படுத்தவும் அது துவக்கப்பட்டது. சீனாவில் ஏற்பட்ட பெரும் சமுதாயப் புரட்சிகளில் அதுவும்ஒன்றாகும். தைபிங்கிளர்ச்சி சீனாவில் சமுதாய அரசியல் அமைப்பினை மாற்றியமைத்ததைப் போல வேறு எந்த ஒரு நிகழ்ச்சியும் சீன வரலாற்றை மாற்றவில்லை எனலாம். முனிதஇனம் கண்ட ரத்தம் சிந்திய புரட்சிகளில் இதுவும் ஒன்றாகும். அதனால் இதை தைபிங் அல்லது ‘பெரும் அனுமதி’ என்று கூறுகின்றனர். சமுதாய இயக்கம் என்ற முறையில் ஏற்கனவே இருந்த சமுதாய அமைப்பினை மாற்றும் நோக்கத்தினைக் கொண்டிருந்தது. சமய இயக்கம் என்ற முறையில் இது ஒரு புதிய கிறிஸ்துவ சமயத்தை சீனமக்களின் பெயரில் தோற்றுவித்தது. அரசியல் இயக்கம் என்ற முறையில் மஞ்சு வம்சத்தை தூக்கி எறிய முயற்சி செய்தது.

**தைபிங் கிளர்ச்சியின் காரணங்கள்:**

கிளைடும், பீயர்சும் தங்களுடைய “தூரக்கிழக்கு நாடுகள்” என்ற நூலில் மங்சு வம்சத்தின் திறமையின்மையாலும், சீ அரசாங்கத்தில் மலிந்து கிடந்த ஊழல்களாலும், அளவுக்கு அதிகமான வரிக்கொடுமையாலும், சிறுபான்மையோர்களின் பிரச்சனைகளாலும், மக்கள் தொகைப் பெருக்கத்தினாலும் இக்கிளர்ச்சி ஏற்பட்டது” என சுருங்கக் கூறியுள்ளனர். இப்புரட்சிக்குக் காரணம் சமுக பொருளாதார, அரசியல் அமைதியின்மை ஆகியவைகளே ஆகும்.

**சமுதாயக் காரணங்கள்**

i) மிக வேகமான மக்கள் பெருக்கம்: தையிங் கிளர்ச்சியின் மிக முக்கியக் காரணங்களில் ஒன்று மக்கள் தொகைப் பெருக்கமாகும். 1850-ல் சீனாவில் மக்கள் தொகை 430 மில்லியன்களாகும். மஞ்சு ஆட்சியின் போது விளைச்சல் 35 விழுக்காடுகள் தான் அதிகரித்தது. இதன் விளைவாக பசி பட்டினி ஏற்பட்டது. அவைகளால் சமுதாயத்தில் அமைதியின்மை குடிகொண்டது.

ii) குடியானவர்களின் அவலநிலை: சீன சமுதாயத்தில் பெரும்பாலோர் குடியானவர்களாவர். இரண்டாயிரம் ஆண்டுகளாக இருந்து வந்த சமுதாய அமைப்பும் நாகரிகமும், அவ்வளவாக மாற்றம் பெறவில்லை. நீர்ப்பாசன முறையினைப் புறக்கணித்தது, வெள்ளத்தடுப்பினை தடுக்காமல் இருந்தது. பருவ காலம் தவறியது ஆகிய அனைதடுமட அவர்களுடைய துன்பங்களை அதிகரிக்கச் செய்தன. நிலமற்ற குடியானவர்களின் வாழ்க்கை மிகவும் மோசமாக இருந்தது. நிலத்தைப்பறி கொடுத்த குடியானவர்கள் மூட்டை தூக்கும் கூலிகளாகவும், வேலையாட்களாவும் பணிபுரிய நகரங்களுக்குச் செல்லலானார்கள் சிலர் மேலை நாடுகளுக்குச் சென்றனர். மற்றும் சிலர் சோம்பேறிகளாகவும் மாறினர்.

iii) சிறுபான்மையோரின் துன்பங்கள்: சீனாவிலிருந்த பூர்வீக மக்களுக்கும், அங்கு குடியேறிய ஹக்கா என்ற இனத்தவருக்கும் இடையில் ஏற்பட்ட சிக்கலும், போராட்டமும் பொருளாதாரச் சீர்கேட்டை மேலும் சிக்கலுக்கு உள்ளாக்கியது. மைய சீனாவிலிருந்து தெற்கில் குடியேறிய ஹக்காவினர் பூர்வீக மக்களால் கேவலமாகக் கருதப்பட்டனர். அவர்கள் சமூகத்திலிருந்து விலக்கப்பட்டவர்கள் என்றனர். இதனால் எந்த நேரத்திலும் இவ்விரு பிரிவினர்களுக்கும் மோதல் ஏற்படுவது தவிர்க்க முடியாததாயிற்று. ஹக்கா இனத்தனர் கிறிஸ்துவ சமயத்திற்கு மாறியதால்அவர்களை பூர்வீக மக்கள் வெறுக்க முற்பட்டனர். தைபீங் வீரர் பெரும்பாலோர் இந்த இனத்திலிருந்துதான் தோன்றினர்.

iv) கூலி வியாபாரம்: கலிபோர்னியா, மேற்கு இந்தியத் தீவுகள், லத்தீன், அமெரிக்கா ஆகிய இடங்களில் கூலி ஆட்களுக்குத் தேவை அதிகம் ஏற்பட்டது. அங்கெல்லாம் அவர்கள் நல்ல முறையில் நடத்தப்படவில்லை. ஏழ்மையில் தவித்த சீனர்கள் கடத்தப்பட்டு கப்பல்களில் இங்கு கொண்டு செல்லப்பட்டார்கள்.

**பொருளாதாரச் சிக்கல்:**

i) வெள்ளிக்குத் தட்டுப்பாடு ஏற்படுதல்: இறக்குமதி தாராளமாகச் செய்யப்பட்டதாலும், இழப்பீட்டுத் தொகை அதிகமாக கொடுக்கப்பட்டதாலும், வெள்ளிக்குத் தடடுப்பாடு ஏற்பட்டது. வெள்ளியின் விலை விஷம் போல்

ஏறியது. தானியங்களின் விலை வெகுவாகக் குறைந்தது. இதனால் உள்நாட்டுப் பொருளாதாரம் சீரழிந்தது. நாணய மாற்று நசுக்கப்பட்டது. நாட்டில் தொல்லை ஏற்பட்டது.

ii) அபினி இறக்குமதி அதிகரித்தல்: முதல் அபினிப் போருக்குப்பின் அபினியின் இறக்குமதி கணிசமான அளவுக்குக் கூடியது. 1853-ல் 52000 பெட்டிகள் இறக்குமதியாயின. ஆதன் மொத்த மதிப்பு 40 மில்லியன் டாலர்களாகும். ஆபினி வியாபாரம் சீனாவை அல்லல்படுத்தியது. அவலநிலைக்குத் தள்ளியது. அது அவர்களின் உள்ளத்தைக் கெடுத்தது, உடலைக் கெடுத்தது. பொருளாதாரத்தை பொலிவிழக்கச் செய்தது.

iii) காண்டன் வாணிப முறையினை நீக்கியதன் விளைவுகள்: வாணிப முறை நீக்கப்பட்டு அயல்நாட்டவர்கள் பன்முறை வன்முறையில் புகுந்தனர். பல துறைமுகங்கள் திறந்துவிடப்பட்டன. அதனால் ஆயிரக்கணக்கான படகுக்காரர்களும் மூட்டை தூக்கும் ஆட்களும் வேலையின்றித் தவிக்கலானார்கள்.

iv) வுாணிபத்தில் அயல்நாட்டுப்போட்டி ஏற்படுதல்: பிரிட்டன், அமெரிக்க ஆகிய நாடுகளிலிருந்து ஏராளமான பருத்திப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன. பஞ்சாலைப் பொருள்களை ஏற்றுமதி செய்யும் நாடாக இருந்த சீனா அவற்றை இறக்குமதி செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டது. ஐரோப்பிய தொழில் மூலதனம் சீனாவை சுரண்டியதோடு மட்டுமல்லாமல் அவர்களது வாணிப மூலதனத்தையும் சுரண்ட முற்பட்டது. இது சீனாவின் பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட பேரதிர்ச்சியாகும் நெசவாளிகள். பிற கைவினைஞர்கள் சீனாவில் அழிக்கப்பட்டார்கள். மிக மலிவான அயல்நாட்டு ஜவுளிகள் குவிந்ததால் சீனாவில் லட்சோலட்சம் நெசவாளிகள் நசுக்கப்பட்டனர்.

**1)அரசியல் காரணங்கள்:**

i) தெய்வக்கட்டளையை விலக்கிக் கொள்வது: கன்பூசியஸின் அரசியல் கோட்பாட்டின்படி, கிளர்ச்சி என்பது ஒரு அவசியமான அரசியல் நிறுவனமாகும். தேய்வக்கட்டளைப்படி மன்னன் பூவுலகில் ஆட்சி புரிகின்றான். ஆவன் கொடுமையானவனாகவும், திறமையற்றவனாகவும் இருப்பானேயானால் அக்கட்டளையானது விலக்கிக் கொள்ளப்படும். மக்கள் அக்கொடுங்கோலாட்சிக்கு முடிவு கட்டி புதிய ஆட்சியினை அமைப்பார்கள். ஆப்போது மஞ்சு மன்னனான இருந்த ஷீன் பெங் வலிமையற்றவன் மட்டுமல்ல, திறமையற்றவனும் கூட. அவன் அயல் நாட்டவர்களிடம் பலதோல்விகள் கண்டான். எனவே சீனர்கள் தெய்வக்கட்டளை விலக்கிக் கொள்ளப்பட்டது என்று எண்ணி கிளர்ச்சி செய்ய முற்பட்டார்கள்.

ii) மஞ்சுக்கள் அயல்நாட்டவர்கள் என்ற எண்ணம் ஏற்படுதல்: மைய மற்றும் தென்சீனாவில் வாழ்ந்து வந்த சீனர்கள் பெரும்பாலோர் மஞ்சுக்களை அயல்நாட்டவர்களாக் கருதி வந்தனர்.

சீனாவின் பூர்வீகமான மிங் வம்சத்தை விரட்டி சீனாவின் ஆட்சிப்பீடத்தை அபகரித்தவர்கள் என்ற கருத்து அவர்களிடத்தில் நிலவி வந்தது. ஆகவே அவர்கள் இரகசிய சங்கங்கள் பல நிறுவி மஞ்சுக்களைத் தூக்கி எறிய முற்பட்டனர். அச் சங்கங்களாவன

1) வேண்தாமரைச் சங்கம்
2) சிறிய பாக்ஸ் சங்கம்
3) விண், மண்ணுலகு சங்கம்
4) சிறியவர்கள் சங்கம்

இவைகள் அனைத்தும் மஞ்சுக்களுக்கு எதிரான இயக்கங்களாகும். இவைகள் ஒரு பெரும் கிளர்ச்சிக்கு வழிவகுத்தன.

ஆரசியல் ஊழல்: மைய அரசு வலிமையற்று காணப்பட்டதால் நாட்டில் புரையோடிய ஊழலைக் கட்டுப்படுத்த முடியவில்லை. மக்களின் நலனில் அக்கறை காட்டப்படவில்லை. அதே சமயத்தில் அதிகாரிகள் தங்கள் பை நிறைந்தால் போதுமென்று கை நிறைய லஞ்சம் வாங்கலானார்கள். பெரும் பதவிகள் விற்கப்பட்டன வாங்கப்பட்டன.

**சமயக்காரணங்கள்:**

தையிங் கிளர்ச்சியானது முதலில் முழுக்க முழுக்க ஒரு சமய மறுமலர்ச்சி மறுமலர்ச்சி என்றும் இரண்டாவதாகத்தான் மஞ்சுகளுக்கு எதிரான கிறர்ச்சியாகும் என்றும், சி.எப். பிட்ஜெரால்டு என்பவர் கூறியுள்ளார். ஐதபிங் கிளர்ச்சியின் இருதயமே சமய உணர்வுதானாகும். 19-ம் நூற்றாண்டில் சீனாவில் மூன்று புகழ் வாய்ந்த சமயங்கள் நிலவின. ஆவைகள் மூன்றும் அழிவுப் பாதையில் சென்று கொண்டிருந்தன.

புத்தமதம்: அது மிகவும் எளிய முறையில் பின்பற்றக்கூடியதாகும். புத்தருடைய 'எண் வகை மார்க்கம்' மக்களின் ஒழுக்க பழக்க வழக்க நெறிக்களில் எவ்விதச் செல்வாக்கையும் ஏற்படுத்தவில்லை.

குன்பூஷிய மதம்: இது அறிஞர்களுக்கு ஒளிகாட்டியதே அல்லாமல் பாமர மக்களுக்குப் படிப்பினை காட்டவில்லை.

தாவோயிச மதம்: மூட நம்பிக்கைகளில் இது ஈடுபாடு கொண்டிருந்தது. மாய, மந்திரங்களில் தன் பாதையினை வகுத்துக் கொண்டிருந்தது.

எனவே ஆன்மீகத் துறையில் வெற்றிடம் தோன்றியது. அதை நிரப்புவதற்கு கிறிஸ்துவ சமயம் வந்து சேர்ந்தது. அயல் நாட்டு சமயப்பரப்புக் குழுவினர்கள் சீன மொழியைக் கற்றுக் கொண்டு நாடுமுழுவதிலும் தங்கள் சமயத்தைப்பரப்ப முற்பட்டார்கள். அவர்கள் கோவில்கள், பள்ளிகள், மருத்துவமனைகள், அனாதை இல்லங்கள் ஆகியவற்றைக் கட்டினர். அவர்கள் சீன நூல்களை மேல்நாட்டு மொழிகளிலும் மேலைநாட்டு நூல்களை சீன மொழியிலும் மொழி பெயர்த்தார்கள். அவர்களின் தன்னலமற்ற தொண்டுகள் எளிதில் கவர்ந்தன. ஆனால் அரசியல்வாதிகள் அவைகளை ஏகாதிபத்தியச் செயல்கள் என்றும், மேலை நாட்டவரின் ஆதிக்கத்திற்கு அச்சாரம் கட்டுவது போன்றது என்றும் கூறிவந்தனர்.

**பிற காரணங்கள்:**

i) சீனாவின் தோல்விகள்: அபினிப் போர்களின் சீனா தோல்வியுற்றதும், அதற்குப்பின் ஏற்பட்ட உடன்படிக்கைகளை ஏற்படுத்திக் கொண்டதும் சீனர்களுக்கு ஒரு பெரிய அவமானமாக இருந்தது. நாடு தோல்வியுற்றதற்கு மஞ்சு ஆட்சியே காரணம் என்று அதை மக்கள் வெறுக்கலானார்கள்.

ii) இராணுவத்தின் சீர்கேடு: மஞ்சு இராணுவத்தினர் மிகவும் திறமையற்றவர்களாகக் காணப்பட்டார்கள். சண்டை போடுவதில் அவர்களுக்கு திறமை என்பது எள்ளளவும் கிடையாது. ஆப்போது கொடிகளைப் பெற்றிருந்த பிரிவினர், பச்சை நிலையின் கீழுள்ள பிரிவினர் என்று இரு பிரிவினர் இருந்தனர். முதல் வகையினர் மஞ்சுக்களுக்கு உண்மையுள்ளவர்களாக நடந்து வந்தார்கள். பின்னர்கள் சோம்பேறிகளாக மாறினர். ஆதற்குக் காரணம் நீண்ட நாட்கள் அமைதியை நாடியதலாகும். பேரரசின் இந்த இராணுவ வலிமையின்மை கிளர்ச்சியினை வரவழைக்க ஏதுவாக இருந்தது.

iii) இயற்கை கோளாறுகள்: 1840 முதல் 1850 வரையிலான பத்து ஆண்டுகளில் அயற்கையின் சிற்றங்கள் பல தோன்றி நாட்டை அலைக்கழித்தன. அவைகளில் 1847-ல் ஏற்பட்ட ஹோனான் வறட்சி, 1849-ல’ ஏற்பட்ட யாங்சிக்கியாங்கின் வெள்ளத்தால் அழிக்கப்பட்ட நான்கு மாநிலங்கள், 1852-ல் ஹாண்டுங் என்ற இடத்தில் தெற்கேயிருந்து வடக்கே மஞ்சன் நதி தன்போக்கை மாற்றியதால் ஏற்பட்ட அழிவு, மக்கள் பட்ட அவதி, வெள்ளத்தின் கொடுமை ஆகியவை முக்கியமான இயற்கையின் அழிவுகளாகும். வெறுப்பினாலும், ஏமாற்றத்தினாலும் உந்தப்பட்டு துன்பத்தின் கோரப்பிடியிலிருந்து மக்கள் வெகு எளிதில் கிளர்ச்சியில் ஈர்க்கப்பட்டார்கள்.

**இயக்கத்தின் தோற்றம்**

ஹங்சியு சுவான் என்ற காண்டன் நகரவாசியால் இப்புரட்சி ஏற்பட்டது. அவர் கற்றறிந்தவர். சிவில் சர்வீஸ் தேர்வில் தேர்ச்சி பெறாதவர். தூன் அப்பரீட்சையில் தேராததிற்குக் காரணம் சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்பு மங்சுக்களின் வெற்றிக்கு முட்டுக்கட்டையாக தன்னுடைய ஹக்கா இனம் இருந்ததாலும் தென் சீனாவில் பிறந்துவிட்ட காரணத்தினாலும் தான் என்று அவர் கருதினார். இதன் மூலம் ஏராளமான படித்த மக்கள் அவர் பக்கம் வரலானார்கள். அவர்கள் எல்லோரும் மஞ்சு வம்சத்திற்கு முடிவு கட்ட முடிவு செய்தனர்.

**தெய்வீகக் கட்சிகள்** 1887-ல் ஹங் உடல்நிலை பாதிக்கப்பட்டு படுத்த படுக்கையானார். ஆப்போது சில காட்சிகளை அவர் காண நேர்ந்தது. அவைகள் தெய்வீகமானவை என்று அவர் கருதினார். அவர் காண்டனில் கிறிஸ்துவ இலக்கியங்கள் சிலவற்றைப் படிக்க முற்பட்டார். அவகைள் சமீபகாலத்தில் அங்கு வந்த குழுவினரால் எழுதப்பட்டவையாகும். ஆதைப் படித்த அவரது மனம் திருப்தி அடைந்தது. அவர் படித்த கருத்துக்களுக்கும் அவர்

காய்ச்சலால் படுக்கையில் இருந்த போது கண்ட காட்சிகளுக்கும் பெருத்த ஒற்றுமை இருந்தது. அன்றைய நாளிலிருந்து கிறிஸ்தவப் பாதையில் தான் கண்ட கோட்பாட்டை அல்லது புதிய சமயத்தைப் பரப்புவதில் தன் வாழ்நாளை அர்ப்பணித்தார்.

**புதிய சமயக் கோட்பாடுகள்**

அவர் கண்ட புதிய சமயம் கிறிஸ்துவத்தின் தாராளத் தன்மையைக் கொண்டிருந்தது. அவர் தன்னை ஏசுவின் இளைய சகோதரர் என்று கூறிக் கொண்டார். பூவுலகில் 'இறை அரசை' ஏற்படுத்துவது தான் தன்னுடைய நோக்கம் என்றார். அவருடைய கோட்பாடு அனைத்து மக்களையும் கவர்ந்தது. நாளடையில் அவரது கோட்பாட்டைக் கேட்டு, மக்கள் 'மகுடி கேட்ட நாகம் போல்' ஆயினர். 'இறை வழிபாட்டுக் கழகம்' என்று தங்களை அழைத்துக் கொண்ட தைப்பிங்குகளையும் அவர்களது தலைவரையும் அடக்க மஞ்சு அரசு முடிவு செய்தது. இது முழுக்க முழுக்க சமய இயக்கமாகும். மஞ்சுக்கள் இதை அமைதியின்மையை ஏற்படுத்தும் கிளர்ச்சி என்று அடக்க முற்பட்டனர். இக்கழகத்தை அடக்க தடைச்சட்டம் கொண்டு வந்ததால் அந்த இயக்கத்தின் செல்வாக்கு மென்மேலும் வளர்ந்து வரலாயிற்று.

**முற்றிலும் அமைதி நிலவும் இறை அரசை ஏற்படுத்துதல்**

அவரது கோட்பாடுக்ள மூலை முடுக்கெல்லாம் பரவின. அவருடைய கொள்கைகளால் ஏராளமான மக்கள் ஈர்க்கப்பட்டனர். அவர் ரேமைதி அல்லது முற்றிலும் அமைதி நிலவும் இறை அரசை நிறுவினார். மஞ்சுக்களுக்கு எதிரானவர்கள் அனைவரும் அவர் பக்கம் வந்து சேர்ந்தனர். 1850-ல் கிளர்ச்சி ஆரம்பமாயிற்று. 1852-ல் ஹாங்கௌ வீழ்ந்தது. 1853-ல் நான்கிங் வீழ்ந்தது. 1854-ல் டியன்சின், பீகிங் ஆகிய நகரங்கள் பீதி கொண்டன. இவ்வாறு அவரது இயக்கம் உச்சக்கட்டத்தை அடைந்தது. ஹங் சமயத்தின் அடிப்படையில் யாங்டிசி பள்ளத்தாக்கில் தன் புதிய அரசை நிறுவினார். இதற்கு தைபிங் தீன்குவோ என்று பெயர். நான்கிங் அதன் தலைநகராக விளங்கியது.

**தைபிங் சீர்திருத்தங்கள்**

தைபிங்குகளின் அரசியல் நோக்கம், மஞ்சுவம்சத்தை தூக்கி எறிந்து புதிய ஆட்சியினை ஏற்படுத்துவது'. இது பொது உடைமை சமுதாய அடிப்படையில் சமுதாயத்தை மாற்றியமைத்தது. எல்லோருக்கும் சமத்துவம் அளிக்க வேண்டுமென்பது அந்தக் கிளர்ச்சியின் சமுதாய பொருளாதாரக் கோட்பாடாகும்.

i) பெண்களுக்கு உரிமைகள் வழங்கப்பட்டன

ii) விபச்சாரம் தடைசெய்யப்பட்டது.

iii) பாதங்களை கட்டுதலும் தடைசெய்யப்பட்டது'

iv) பலதார மணம் நீக்கப்பட்டது

v) தேவைக்கேற்ப எல்லாப்பொருள்களும் பகிர்ந்து அளிக்கப்பட்டன.

vi) ஆபினி உபயோகம் தடைசெய்யப்பட்டது.

vii) வயதானவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டது. ஊனமுற்றோர்க்கு உதவி கொடுக்கப்பட்டது. விதவைகளும் அனாதைகளும் பாதுகாப்பு அளிக்கப்பட்டனர். சுருங்ககூறின் தைபிங்குகளின் கோட்பாடு ஒரு புரட்சி சமுதாயத்தை உருவாக்கியது எனலாம்.

**தைபிங் கிளர்ச்சி தோல்வி அடையக் காரணங்கள்**

1. வடமாநிலங்களின் ஆதரவின்மை: ஹீங் வட மாநிலங்களிலும் தனக்குப் பேராதரவு இருக்கும் என எண்ணி ஏமாந்தார். அங்கு அவருக்கு ஆதரவு துளி அளவும் இல்லை. ஆதரவாளர்களும் இல்லை. அங்கு மஞ்சு ஆதிக்கமு், கன்பூசியஸ் கோட்பாடும் உறுதியாக நிலைபெற்றிருந்தது. பேரரசின் அருகில் இருந்த மக்களைக்கவரும் வகையில் தைப்பிங்குகளின் இராணுவம் நம்பிக்கையைப் பெற்று பணிபுரியவில்லை.

2. ஹங்சியு சுவானின் எளிய போர்த்தந்திரம்: நான்கிங் வீழ்ச்சிக்குப் பிறகு ஹீங் தொடர்ந்து வடபகுதி சென்றிருப்பாரேயானால் மஞ்சுக்களை சீனாவை விட்டு விரட்டியிருக்கலாம். ஆவ்வாறு அவர் செய்யாமல் நான்கிங்கில் தன் அரசை அமைக்க தங்கிவிட்டார். பின்னர் ஒரு சிறிய படையை மஞ்சுக்களை விரட்ட வட மாநிலங்களுக்கு அனுப்பினார். அது எதையும் சாதிக்கவில்லை. இதற்கிடையில் மஞ்சுக்கள் அதிர்ச்சிலிரந்து எழுந்து மேலை நாட்டவரின் உதவியுடன் கிளர்ச்சியினை அடக்க முற்பட்டார்கள்.

3. மேலை நாடுகளின் எழுச்சி: கிளர்ச்சியை அடக்க மேலை நாடுகள் நடுநிலைமை வகித்ததிலிருந்து விலகி மஞ்சுகளுக்கு ஆதரவுதர முன்வந்தன. ஷாங்காய் வியாபாரிகளின் பண உதவியுடன் பிரடெரிக் வார்டு என்ற அமெரிக்கர் ஒரு படையினை ஒருவாக்கி தைப்பிங்குகளைக் கடுமையாக அடக்கினார். வார்டு இறந்த பிறகு தளபதி கார்டன் என்பவர் 'எப்போதும் வெற்றி கொள்ளும் படை அல்லது வெற்றிப்படையின் தலைமைப் பொறுப்பினை ஏற்றார். அவர் தொடர்ந்து தைபிங்குகளை அடக்க முற்பட்டார்.

4. சேங்குவோ-பானும் அவரது இராணுவமும்: பேரரசின் அதிகாரி செங்குவோ-பான் என்பவர் படிப்படியாக நன்கு திறமை வாய்ந்த அனைத்து ஆயுதங்களையும் கொண்ட ஒரு படையினை உருவாக்கினார். ஹீனானில் செங் செய்ததை அன்ஹீல் என்ற இடத்தில் லிஹாங்காங் பின்பற்றினார். இத்தகைய படை அயல்நாட்டவர் துணையுடன் தைபிங்குகளை துாள்துாளாக்கியது.

5. தலைவர்களின் வலிமையின்மை: தைபிங் தலைவர்கள் தங்களுடைய ஆரம்ப வெற்றிக்கு பிறகு சீர்திருத்தங்களை மேற்கொள்வதில் ஆர்வம் காட்டவில்லை. 'எந்தச் சீர்கேடுகளையும் தீங்குகளையும் நீக்கவேண்டி கிளர்ச்சி செய்தார்களோ அவைகளுக்கே

அவர்கள் இரையானார்கள். ஆத்துடன் அவர்கள் தங்கள் பக்கத்தில் புதிய இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு இராணுவப் பயிற்சி கொடுக்கவில்லை. ஆனால் அவர்களுக்கு எதிரியான மஞ்சு முகாமில் இளவரசன் குங் தலைமையில் புத்துணர்ச்சி பெற்ற இளைஞர்கள் திரண்டனர். அவருடன் செங்குடீவா பான்லி ஹீங்சாங்வும் மற்றவர்களும் இருந்தனர்.

6. தைபிங்குகளின் கற்பனைத் திட்டத்தின் தன்மை: சீனர்களின் சமூக, அரசியல், பொருளாதார வாழ்க்கையில் புரட்சிகரமான மாற்றங்களை அறிமுகப்படுத்த வேண்டுமென்று தைபிங்குகள் விரும்பினார்கள். கூட்டுத் தலைமையும் சமமாகப் பகிர்ந்து அளித்தலும், இன்ன பிறவற்றையும் பகுத்தறிவு கோட்பாட்டின்படி தீவிரமாகச் செயல்படுத்த விரும்பினார்கள். இந்த மிகத்தீவிரமான மாற்றங்களை சீன சமுதாயம் ஏற்றுக்கொள்ளும் நிலையில் இல்லை. ஹங்கின் கருத்துக்கள் காலத்தால் முந்தியவைகளாகும். எனவே வைகளை சீனர்களால் ஜீரணிக்க முடியவில்லை. வியாபாரிகளும், குடியானவர்களும் நல்ல சீர்திருத்தங்களை அவர்களிடமிருந்து விரும்பினார்கள். அவர்கள் விருப்பம் நிறைவேறவில்லை.

7. உள்நாட்டுத் தொல்லைகள்: தைபிங் அரசை நிலைகுலைய வைக்கக்கூடிய அளவில் 1856-ல் ஒரு வாரிசுப்போர் ஏற்பட்டது. அதற்குக் காரணம் கீழைப்பகுதியின் மன்னன் யாங்கின் நடவடிக்கைகளேயாகும். இவர் கடவுன் தனக்குச் சாதகமாக உள்ளார் என்று கூறிக்கொண்டார். விரைவிலேயே இவர் படையின் தலைமைப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டார். ஆற்றின் தென்பகுதியிலிருந்த பேரரசின் முகாமை அவர் அழித்தது அவருடைய சாதனைகளில் மிகப்பெரியதாகும். ஆவ்வெற்றியால் தூண்டப்பட்ட அவர் அரியணையின் உரிமையைக் கோரலானார். ஆனால் ஹாங் வடக்குப் பகுதியின் மன்னனின் உதவியால் அவனைக் கொலை செய்தார். பின்னர் வடக்குப்பகுதியின் மன்னனின் தலையினையும் கொய்தார். இச்செயல்கள் தைபிங்குகளின் ஊக்கம், உணர்வுகளை உருக்குலைத்தது.

**தைபிங் கிளர்ச்சியின் முக்கியத்துவமும் விளைவுகளும்**

1) அழிவு: கிளர்ச்சி வெற்றி அடையாவிட்டாலும் அது சில விளைவுகளை ஏற்படுத்திவிட்டு மறைந்துவிட்டது. வரலாறு காணாத அழிவுகளையும் நாசங்களையும் ஏற்படுத்தியது. அக்கிளர்ச்சியில் 20 மில்லியன் மக்கள் கொல்லப்பட்டதாக கணக்கிடப்பட்டிருக்கிறது. பேரரசின் மாநிலங்களில் 12 வளமான மாநிலங்கள் நாசமாக்கப்பட்டன. கிளர்ச்சியின் போதும், கிளர்ச்சிக்குப் பிறகும் அழிந்து போன மாநிலங்களிலிருந்து வரிவசூல் செய்ய முடியவில்லை. ஏழ்மையும் அங்கு நிலவிய குழப்பமும் நாட்டில் கொள்ளை கொலைச் செயல்களுக்கு வழி வகுத்தன. நாட்டில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க முடியாமல் பேரரசு திணறியது.

2) சுங்கவரி நிர்வாகச் சீர்கேடு: இக்கிளர்ச்சியின் விளைவாக ஷாஹ்காயில் சுங்கவரி வசூலிக்க அதிகாரிகள் இல்லை, பிரிட்டிஷார் அவ்வரியினை வசூலிக்க தற்காலிக ஏற்பாடு ஒன்றினை மேற்கொண்டனர். பின்னர் சீன அரசாங்கம் அப்பணியினை பிரிட்டிாரிடமே விட்டுவிட்டது. இது 1920 வரை தொடர்ந்து இருந்து வந்தது.

3) இராணுவம் பரவலாக்கப்படுதல்: கிளர்ச்சியினைக் கிள்ளி எறிந்த பிராந்திய இராணுவம், அரசியல் இராணுவ நிர்வாகத்தில் புதிய முறைகளைப் புகுத்தியது. பண்டைய இராணுவப் பிரிவுகள் மைய அரசின் கீழ் பணிபுரிந்தன. புதிய இராணுவம் பிராந்திய தல அதிகாரிகளின் பண உதவியால் செயல்பட்டு வந்தனர். இது அஇராணுவ அதிகாரத்தைப் பிரித்ததோடு மட்டுமல்லாமல் மைய இராணுவத்தின் அதிகாரத்தைவெகுவாகக் குறைத்தது. இதன் விளைவாக 19-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் போர்த்தளபதிகள் எழுச்சி பெறலானார்கள்.

4) பிராந்திய ஆர்வத்தின் எழுச்சி: தைபிங் கிளர்ச்சியின் போதும், அதற்குப் பிறகும் மைய அரசிலிருந்து அதிகாரமானது பிராந்தியங்களுக்கு மாறாலாயிற்று. குறிப்பாக அரசியல் இராணுவத்துறைகளில் அந்த நிலை ஏற்பட்டது. இந்த முறையினால் பிராந்தியங்கள் அதிக அதிகாரங்களை அனுபவித்து வந்தன. குறிப்பாக படையினரைப் பராமரிப்பது, தலவரிகளை நிர்ணயம் செய்வது, நிர்வாகம் ஆகியவற்றில் அப்பிராந்தியங்கள் செல்வாக்குப் பெற்றன. இதனால் சீனா பல மாறுப்பட்ட வேறுபட்ட கருத்துக்களைக் கொண்ட பல வீடுகளாகப் பிரிந்து காணப்பட்டது. இது மேலை நாட்டவரின் சுரண்டலுக்கு எளிதில் வழிவகுத்தது எனலாம்.

5) நுலன் பயக்கும விளைவுகள்: தைபிங் கிளர்ச்சி நல்ல விளைவுகளை ஏற்படுத்தாமல் இல்லை. மக்களுக்கு ஏற்பட்ட பேரழிவு மக்கள் தொகைப் பிரச்சனையை எளிதாக்கியது. செங்-லி இளவரசன் குங் போன்ற புதிய இளைய தலைவர்கள் தோன்றலானார்கள். மேலை நாட்டவரின் நிர்வாகத்தில் வெளியிட்ட வரிகள் நிதி நிலைமையைச் சீராக்கியது.

6) தேசியவாதிகளுக்கு ஒரு தூண்டுகோலாக அமைந்தது: பொதுவாக நோக்குமிடத்து தைப்பிங் கிளர்ச்சி சமூக, பொருளாதார திட்டங்களை பொறுத்தவரை சீனர்களின் மனத்தில் பசுமரத்தாணி போல சில பயன்களைப் பதித்துவிட்டுச் சென்றது. சீர்திருத்தக்காரர்களும் புரட்சிவாதிகளும் தங்கள் நடவடிக்கைகளுக்கு இதை ஒரு தூண்டுகோலாகக் கொண்டனர். மேலைநாட்டவரின் செல்வாக்கை முதலில் சீனாவில் புகுத்தியவர்கள் தைபிங்குகளேயாவர். சிறப்பாக சமயப் போர்வையில் அதை அவர்கள் புகுத்தினார்கள் எனலாம்.

7) சீனர்களுக்கு அரசாங்கத்திலும் முக்கியப்பதவிகள்: அரசியல் ரீதியில் அரசாங்கமானது மஞ்சுக்கள் கைகளிலிருந்து சீனர்களின் கைகளுக்கு மாறியது. இக்கிளர்ச்சியால் தான் என்றால் அது மிகையாகாது. முக்கிய கவர்னர்-இஜனரல், கவர்னர் பதவிகள் சீனர்களுக்கு அளிக்கப்பட்டன. அதாரணமாக ''செய்குவோன் பான் என்பவன் லியான்கியாங் என்ற இடத்தில் கவர்னர் ஜெனரலாக அமர்த்தப்பட்டான். லி.ஹாங்சாங் என்பவன் குவாங் சுவின் ஆளுநராக அமர்த்தப்பட்டான். ட்சோ சுங்-ஹாங் என்பவன் சிக்கியாங் என்ற இடத்தின் ஆளுநராக அமர்த்தப்பட்டான்.

### தைப்பிங் சீர்திருத்தங்கள்

தைபிங் அரசு சமய அடிப்படையில் தோன்றியதேயாகும். ஆதில் சமய, சிவில், இராணுவ பண்பாட்டு சமுதாய துறைகளின் இழைகள் ஒன்றோடு ஒன்று பின்னப்பட்டு காட்சியளித்தனர். அவர்களுடைய புதிய சமய அரசியல் 'கடவுள் தெய்வீகத்தந்தை' என்றும் 'ஏசு தெய்வீக மூத்த சகோதரன் என்றும் ஹங் தெய்வீக இளைய சகோதரன் என்றும் கருதப்பட்டனர். ஆரம்பத்தில் ஹங் 'இறைவழிப்பாட்டுக் கழகம்' என்பதை நிறுவினார். அவர் ஏற்படுத்திய புதிய சமயம் கத்தோலிக்க கோட்பாட்டைக் காட்டிலும் புராட்டஸ்டண்டு கோட்பாட்டை அதிகம் பெற்றிருந்தது. ''சிலைகள் அழிக்கப்பட்டன, கோயில்கள் தரைமட்டமாக்கப்பட்டன, இது முகமது நபியின் சமயப்போரைப் பொலக் காட்சியளித்தது'' என்று இஸ்ரேல் எபஸ்டின் என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

### தைப்பிங்குகளின் அரசியல் நிர்வாகம்:

ஹங்சியு சுவான் ஏற்படுத்திய அரசிற்கு 'முற்றிலும் அமைதி நிலவும் இறை அரசு' என்று பெயர் (தைபிங்தீன்குவோ) அவர் தன்னை 'தெய்வீக மன்னன்' (தீன்வாங்) என்று அழைத்துக் கொண்டார். அவர்களுடைய வம்சம் 'தையிங்' என்று அழைக்கப்பட்டது. அவருடைய தலைநகரம் நான்கிங் அவருக்கு உதவியாக நான்கு மன்னர்கள் (வாங்ஸ்) நியமிக்கப்பட்டார்களா. அவர்கள் முறையே

i) யாங் (கீழைப்பகுதியின் மன்னன்)

ii) பெங் (தென் பகுதியின் மன்னன்)

iii) சியாவோ (மேலைப்பகுதியின் மன்னன்)

iv) வெய் (வடபுல மன்னன்)

இவர்களைத் தவிர 'ஹ்' என்பவர் துணை மன்னராக நியமிக்கப்பட்டார். பல அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.

### சமூக, பொருளாதாரப் புனரமைப்பு

மஞ்சு வம்சத்தை துக்கி எறிய வேண்டுமென்று எண்ணியதோடு சமுதாயத்தை மாற்றி அமைக்க வேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள். ஆதன் விளைவாக அவர்கள்

1. அபினிப்பழக்கத்தை அறவே ஒழித்தனர் 2) சிசுவதையினை தடுத்து நிறுத்தினர் 3) புகையிலைப் பழகத்திற்று முடிவு கட்டினர் 4) மது அருந்துவது ஒழிக்கப்பட்டது. 5) விபச்சாரம் ஒழிக்கப்பட்டது 6) கால்களைக்கட்டுவது, பெண்களைவ ிற்பது தடுக்கப்பட்டது 7) சூதாட்டம் நீக்கப்பட்டது 8) பலதார மணம் தடை செய்யப்பட்டது 9) கையூட்டு வழங்குதல் ஓழல் குற்றமாகக் கருதப்பட்டது 10) மொத்தமாகத் தண்டனை வழங்குவதும், கொடுத்தண்டனைகளும் நீக்கப்பட்டன 11) அடிமைத்தனம் அகற்றப்பட்டது 12) ஆசை நாயகிகளை வைத்துக் கொளவது ஒழிக்கப்பட்டது 13)தைபிங்குகள் ஆரம்பத்தில் தூய்மைக் கொள்கையைப் பின்பற்றினர். பேண்களுக்கு முழுச் சுதந்திரம் வழங்கப்பட்டது. அரசாங்க இராணுவப் பதவிகள் கொடுக்கப்பட்டன. கலைகள் ஊக்குவிக்கப்பட்டன. 14) கைவேலை, பின்னல்வேலை, நெசவு, சிறபவேலை ஆகியவை ஊக்குவிக்கப்பட்டன. 15) அயல்நாட்டவர்கள் சகோதர்களாகப் பாவிக்கப்பட்டனர். அநாகரீகமானவர்களாகக் கருதப்படவில்லை.

**நிலச்சீர்திருத்தங்கள்**

தனிப்பட்டோர் நிலம் கொத்து உரிமைகளை ஒழித்து பொதுவுடைமையினைப் புகுத்தியது அவர்களின் சீர்திருத்தங்களிலேயே தலையானதாகும். ஓவ்வொரு குடியானவனும் தன் வாழ்க்கைக்குத் தேவையான நிலத்தைப்பெற ஒரு புரட்சிகரமான நிலப்பங்கீட்டினை அவர்கள் கொண்டு வந்தனர். 1853ல் குடியானவர்களுக்கான சட்டம் ஒன்று கொண்டு வரப்பட்டது. அதன்படி விண்ணின் கீழுள்ள எல்லா நிலங்களும் விண்ணின் கீழுள்ள எல்லோராலும் பயிர் செய்யப்பட வேண்டும் என்பது அறிவிக்கப்பட்டது.

**கம்யூன் முறை**

இந்த எளிய சமத்துவக் கோட்பாடு செயல்முறைபடுத்தப்பட்டது. அந்தச் சட்டப்படி பதினாறு வயதிற்கு மேற்பட்ட ஒவ்வொரு ஆணும், பெண்ணும் நிலப்பங்கினைப் பெற தகுதியுள்ளவர்களாவார்கள். பதினாறுக்கும் கீழுள்ளவர்கள் அந்த நிலப்பங்கில் பாதியைப் பெற்றனர். செழிப்பைப் பொறுத்து நிலமானது ஒன்பது வகைகளாகப் பிரிக்கப்பட்டது. நிர்வகத்தின் சிறிய அளவு குடும்பமாகும். ஓவ்வொரு குடும்பமும் ஐந்து பெட்டைக் கோழிகளையும் இரண்டு பெண் பன்றிகளையும் வைத்திருத்தல் வேண்டும். இருபதைந்து குடும்பங்கள் சேர்ந்து ஓர் சமுதாயப் பிரிவாக அமைக்கப்பட்டது. அவர்களுக்கென பொதுவான ஒரு கிடங்கு, ஒரு திருச்சபை அவர்களுடைய சமய, பிற சடங்குகளை கவனிக்க ஒரு தலைவர் ஆகியோர் இருந்தனர். அந்த தலைவர்கள் அந்த 25 குடும்பங்களில் சிவில், கல்வி, சமயநிதி, சார்பான விஷயங்களைக் கவனித்து வந்தார். அவர் அக்குடும்பங்களைவ ழக்குகள், திருமணங்கள், இறுதிச்சடங்குகள் ஆகியவற்றையும் கவனித்து வந்தார். அறுவடையின் போது தன் பிரிவுக்கு வேண்டிய தானியங்களை அவர் சேமித்து வைக்க வேண்டும். அது பற்றாக்குறைப் பகுதிகளுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும். மாதாந்திர வரி விதிக்கும் முறை அமல்படுத்தப்பட்டது.

**இராணுவ சிவில் நிர்வாகத்திற்கு இடையிலான உறவு**

ஐதபிங்குகளின் ஆட்சியில் சிவில், இராணுவத்துறைகள் இணைந்து செயல்பட்டது ஒரு சிறப்பு அம்சமாகும். அதிகாரிகள் சிவில் இராணுவக் கடமைகளைச் செய்ய பணிக்கப்பட்டனர். இராணுவத்தில் கடுமையான ணழுக்கம் கடைப்பிடிக்கப்பட்டது. கொள்ளையடித்தலையும், ஊழலையும் தடை டிசய்தார்கள். மஞ்சு அதிகாரிகளை கடுமையான நடத்தினர். பெரும் நிலப்பிரபுக்களும் வட்டிக்குப் பணம் கொடுப்பவர்களும் வாட்டி வதைக்கப்பட்டனர். பெண் படைப்பிரிவு ஒன்று அமைக்கப்பட்டது. இராணுவத்தில் நான்கின் ஒரு பங்கு பெண்களால் நிர்வகிக்கப்பட்டு வந்தது.

**பண்பாட்டிற்கும் சமயத்திற்குமுள்ள தொடர்பு**

தைபிங் அரசில் கிறிஸ்துவக் கோட்பாடுகள் சீரிய இடத்தைப் பெற்றன. 478 வாக்கியங்களைக் கொண்ட இலக்கியம் ஒன்று புதிதாகப் படைக்கப்பட்டது. அது ஹங்கின் விவிலிய நூலைப் பற்றிய திறனாயிவின் அடிப்படையில் எழுதப்பட்டது. அது குழந்தைகளுக்காக எழுத்தப்பட்டதாகும். ஆந்த நூலின் ஆரம்பப் பக்கத்தில் ‘‘கடவுள் நம் தலைவர்’’ என்றும் ‘‘அவர் விண்ணையும் மண்ணுலகையும், மலைகளையும், கடல்களையும் படைத்துள்ளார்’’ என்றும் ‘‘அதில் எல்லாப் பொருள்களும் உள்ளனவென்றும் அவைகள் ஆறு நாட்களில் உருவாக்கப்பட்டன’’ என்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. பத்துக் கட்டளைகளே அவர்களுடைய கோட்பாட்டின் அடிப்படையாகும்.

**சிவில் சர்வீஸ் தேர்வு**

நிர்வாக அதிகாரிகளைத்’ தேர்ந்தெடுக்க தைபிங்குகள் சிவில் சர்வீஸ் தேர்வுகளை நடத்தினர். மஞ்சு ஆட்சி முறையில் தேர்வில் இலக்கிய நடை எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தைபிங்குகள் எளிய மொழியில் எழுதலாமென அிறிவித்தனர்இ. கன்பூஷிய கோட்பாடுகள் தேர்வில் கேட்கப்படவில்லை. விவிலிய நூலிலிருந்து சில கோட்பாடுகள் தேர்வுகளில் கேட்கப்பட்டன.

**பிற சீர்திருத்தங்கள்**

ஒரு ஆண்டுக் கணக்கு முறை (காலண்டர்) புகுத்தப்பட்டது. அது சந்திரன், சூரியன் ஆகியவற்றைக் கொண்டு கணக்கிடப்படும் முறையல்ல. சமுகச்சீர்திருத்தங்கள் பல புகுத்தப்பட்டன. நோயால் பீடிக்கப்பட்டவர்கள், விதவைகள், அனாதைகள் ஆகியோர் பயன் பெறும் வகையில் அவைகள் அமைந்தன. நீர்ப்போக்குவரத்து வளர்ச்சி பெற்றது. இருப்புப்பாதைகள் போடப்பட்டன. வெள்ள பஞ்ச நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

## சீனாவில் மேலை நாடுகளால் ஏற்பட்ட மாறுதல்கள்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதிகள் சீன வரலாற்றை ஒரே தொடரில் சொன்னால் ‘சீனாவில் மேலைநாடுகளால் ஏற்பட்ட மாற்றத்தின் கதை’ என்று குறிப்பிடலாம். அதுவரையில் சீனா தனிமையில் இனிமை கண்டு கொண்டிருந்தது. தெய்வீகப் பேரரசுதான் உயர்ந்தது என்றும், ஏனைய நாடுகள் அதற்கு திறை செலுத்த வேண்டும் என்றும் கருதப்பட்டு

வந்தது. 'நடுவண்பேரரசு மேலை நாடுகளை சமமாக பாவிக்க முடியாது என்றும் அவைகளுடன் எவ்வித உறவினையும் மேற்கொள்ளாது என்றும் திட்டவட்டமாக அறிவித்தது. தலைநகரான பீகிங்கில் தூதுவர்கள் தங்க அனுமதி மறுத்தது. ஆகவே அந்நகரம் 'தடைசெய்யப்பட்ட நகரம்' என்று அழைக்கப்பட்டது. அதனால் அவர்கள் காண்டனில் மட்டுமே இருந்தனர். சீனாவின் மக்கள் மேலைநாடுகளின் செல்வாக்கிலிருந்து விலகியே இருந்தனர். பழமைவாதம் என்ற தடுப்புச்சுவரை தன்னைச் சுற்றி எழுப்பிக் கொண்டு அது தனித்த சோம்பாலான வாழ்வினை மேற்கொண்டிருந்தது.

19-ம் நூற்றாண்டில் மேலை நாட்டவர்கள் அந்தத் தடுப்புச் சுவரை தகர்த்தனர். இரண்டு அபினிப்போர்களும் சீனாவின் கதவுகளைத் திறந்துவிட்டன. அவைகளால் ஏற்பட்ட மாற்றத்தினை அது உணரலாயிற்று. அதன் உடனடி விளைவுகளாவன.

i) ஆயல்நாட்டவரின் வாணிபத்திற்குப் பதினைந்து துறைமுகற்கள் திறந்து விடப்பட்டன.

ii) சீனா பல பகுதிகளை இழந்தது. ஹாங்காங், கௌலுன் பகுதிகள் பிரிட்டனுக்குக் கொடுக்கப்பட்டன

iii) சுங்கவரிவதிப்பில் உரிமையை இழந்தது. அது 5% ஆகம்.

iv) விசேஷ பிரதேச உரிமைகளை வழங்கியதால் தன் இறைமையினை இழந்தது. அதனால் பிறநாட்டவர்கள் தங்கள் நீதிமன்றங்களை அமைத்துக் கொள்ளும் உரிமையினைப் பெற்றனர்.

v) கிறிஸ்துவ சமயப்பரப்புக் குழுவினர்களுக்கு ஏராளமான சலுகைகள் வழங்கியது. அதனால் அவர்கள் சீனாவில் தங்குதடையின்றி எங்கும் செல்லலானார்கள். துங்கள் சமயத்தைப் பரப்பவும், நிலங்களை வாங்கவும், திருச்சபைகள், பள்ளிகள், மருத்துவமனைகள் கட்டவும் உரிமை பெற்றனர்.

vi) சீனர்களின் கடலாதிக்கம் பிரிட்டிஷ்காரர்களின் கைகளில் மாறியது

**சீனா மீது மேலை நாட்டவரின் மனோநிலை**

"பிற்பகுதி சிங்சீனாவினை உருவாக்குவதில் அயல்நாட்டு செல்வாக்கு ஒரு பெரும் சக்தியாக விளங்கியது" என்று இமானுவேல்சூ என்பவர் குறிப்பிட்டுள்ளார். ஆயல்நாட்டு அரசாங்கங்களும், அவர்களின் பிரதிநிதிகளும் சீனாவில் "முன்னேற்றம்" என்ற பாதையில் முன்னேறினர். அவர்களின் நிறுவனங்களை ஏற்றுக் கொள்ள வற்புறுத்தினர். அவர்களின் பொருள்களையும் வாங்கும்படிச் செய்தனர். அயல்நாட்டு அறிவுரையினைச் சார்ந்திருந்த சீனா, அதன் நல்லெண்ணம் வாணிபம், உதவி ஆகியவற்றைப் பெற்றது. அது சுதந்திரமான சீனாவைவிட நன்டுறையில்தான் இருந்தது. நவீனமாதலை அது அனுமதிக்கவில்லை. அவர்களை வீழ்த்தும் வலிமையையும் அது பெற்றிருக்கவில்லை. அவர்கள் சீனாவை நட்பு நாடாக நடத்தவில்லை. ஆனால் அதை இரையாக்க முற்பட்டனர். தன்னம்பிக்கையும், மறுமலர்ச்சியும் பெற்ற ஐரோப்பா அறிவியலில் தான் கண்ட புதிய கண்டுபிடிப்புகளாலும்

மனிதனுக்கு மதிப்புத் தரவேண்டும் என்ற புதிய கோட்பாடுகளாலும், சமுதாயத்தின் ஒற்றுமையாலும் பலதுறைகளில் ஏற்பட்ட முன்னேற்றத்தாலும், தேசிய சக்தியாலும் சூழப்பட்டு வலிவும் பெற்று கீழைநாடுகளின் செல்வச் செழிப்பான நாட்டின் நுழைவுவாயிலின் கதவுகளைத் தட்ட ஆரம்பித்தது.

**1.சீன அரசியலில் அயல்நாடுகளால் ஏற்பட்ட மாற்றம்**

i) சுங்கிலியேமனைத் திறத்தல்: இளவரசர் குங்தலைமையில் பீகிங்கில் 1861-ல் சுங்கிலியேமன் என்ற வெளிநாட்டு உளவுத்துறையானது அயல்நாட்டு விவகாரங்களை கவனிக்க வேண்டி திறக்கப்பட்டது. மேலை நாட்டடவரால் ஏற்பட்ட மாற்றங்களில் இது முதலில் ஏற்பட்ட சீரிய மாற்றமாகும்.

ii) மேலைநாடுகளில் சீனத் தூதரகங்களை திறத்தல் பீகிங் ஒப்பந்தத்திற்கு பிறகு உடன்படிக்கை செய்து கொண்ட நாடுகள் எல்லாம் சீனாவில் தங்கள் தூதரகங்களை ஏற்படுத்திக் கொண்டன. அமெரிக்கத் தூதர் பர்லின்கேம் என்பவர் பிற தூதரகங்கள் அமைப்பதற்கு முன்னோடியாகவும், தலைவராகவும் விளங்கினார். அவர் சீனாவுடன் கூட்டுறவுக் கொள்கையினை ஏற்படுத்தினார். அவர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றபோது சீனாவில் வரவழைக்கப்பட்டு அதன் தூதராகப் பொறுப்பேற்று முதன்முதலில் உடன்படிக்கை செய்து கொண்ட நாடுகளுக்குச் சென்றார். அவர் சீனத் தூதுக் கோஷ்டியை அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு, ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு அழைத்துச் சென்றார். அதன் விளைவாக பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளில் சீனத் தூதரகம் ஏற்படுத்தப்பட்டது.

3)வணிகக் கண்காணிப்பாளர்கள் டியன்சின், ஷாங்காய் ஆகிய இடங்களில் அயல்நாட்டு வணிகத்தை கவனிக்க அமர்த்தப்பட்டார்கள்

**II) சீனாவின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்**

சீனாவின் பொருளாதாரத்தில் அயல்நாட்டர்களால் படிப்படியாக சில மாற்றங்கள் நிகழ்ந்தன. 1876-ல் ஷாங்காவிலிருந்து வூகங் வரை இருப்புப்பாதை போடப்பட்டது. 1881-ம் ஆண்டில் டோங்ஷான் இருப்புப்பாதை ஏற்படுத்தப்பட்டது. 1882-ல் போக்குவரத்தில் மற்றொரு சாதனை ஏற்படுத்தப்பட்டது. பின்னர் தொழில் வளர்ச்சி பெருகலாயிற்று. 1878-ல் கெய்பிங் கனிவளங்கள் தோண்டி எடுக்கப்பட்டன. 1867-ல் டியன்சினில் இயந்திரத் தொழிற்சாலை ஒன்று நிறுவப்பட்டது. 1873ல் சீன நீராவிக் கப்பல் போக்குவரத்து குழுமம் ஒன்று நிறுவப்பட்டது. 1890-ல் ஹான் யாங் இரும்பு ஆலை கான்சுவில் திறக்கப்பட்டது. காண்டன், வூசாங், ஹோபே ஆகிய இடங்களில் ஜவுளி ஆலைகள் திறக்கப்பட்டன. காண்டன் டியன்சிங் போன்ற இடங்களில் 1887-ல் நாணய அடிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டன. அதே ஆண்டில் மோஹோ என்ற இடத்தில் தங்கச்சுரங்கங்கள் தோண்டப்பட்டன.

**III) கப்பல் கட்டும் தொழிலில் முன்னேற்றம்**

1873-ல் சீன நீராவிக் கப்பல் போக்குவரத்து குழுமம்' நிறுவப்பட்டது. அது அரசாங்க மேற்பார்வையில் நடைபெற்று வந்தது. இரண்டாண்டுகளுக்குப் பிறகு இரும்பை பயன்படுத்தி

நல்ல கப்பல்கள் கட்டப்பட்டன. பிரான்சிலிருந்து இயந்திரங்கள் வாங்கி பூர்செள என்ற இடத்தில் 1866-ல் கப்பல் தங்கும் துறை ஒன்று நிறுவப்பட்டது. அதனைச் சார்ந்து ஒரு கப்பல் கட்டும் பயிற்சிப் பள்ளி ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. அது இரு பிரிவாக இயங்கி வந்தது ஒன்று பிரெஞ்சு மொழியினையும் கப்பல்கட்டும் பணியினையும் கற்று கொடுப்பது மற்றொன்று ஆங்கிலத்திலும், கப்பற்பயணத்திலும் பயிற்சி பெறச் செய்வது மாணவர்கள் மேலை நாடுகளுக்கு கப்பல் கட்டும் நுணுக்கங்களைத் தெரிந்து கொள்ள அனுப்பப்பட்டார்கள்.

### IV) ராணுவத்தில் ஏற்பட்ட நவீன மாற்றம்

முாநிலத் தலைவர்களான செங்குவோ பான், லி ஹங்சங் போன்றவர்கள் நவீன கப்பற்படையினை ஏற்படுத்த பெரு முயற்சி எடுத்துக் கொண்டனர். இராணுவத்திலும் மேலைநாட்டு பாணியைப் புகுத்தி துப்பாக்கிகளைப் பயன்படுத்த வழி செய்தனர். அவர்கள் மேலைநாட்டு ராணுவ ரகசியங்களையும், கப்பல் கட்டும் முறையினையும் கற்றுக் கொள்ள விரும்பினர். அநாகரீகமானவர்களை அடக்க, அநாகரீகமானவர்களின உயர்ந்த நுணுக்கங்களைக் கற்றுக் கொள்ள பேரவா கொண்டனர். 1862-ல் மூன்று துப்பாக்கி தொழிற்சாலைகள் ஷாங்காயில் நிறுவப்பட்டன. சீனர்கள் வெடிகுண்டுகளை பயன்படுத்தி துப்பாக்கிகள் சுடுவதை பிரிட்டிஷ் அதிகாரிகளிடமிருந்தும், சிறுதுப்பாக்கிகளைப் பயன்படுத்துவதை ஜெர்மன் அதிகாரிகளிடமிருந்தும் கற்றுக் கொண்டனர். 1880-ல் நவீன கப்பற்படை நிறுவ திட்டங்கள் தீட்டப்பட்டன. அதற்காக அயல் நாட்டுக் கப்பல்கள் வாங்கப்பட்டன. 1885-ல் டியன்சினில் ராணுவக் கழகம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

### V) கிறிஸ்து சமயப்பரப்பு குழுக்களின் வளர்ச்சி

கி.பி.16ம் நூற்றாண்டிலிருந்தே கத்தோலிக்க சமயக் குழுவினர் தீவிரமாக பணிகளில் ஈடுபட்டு வந்தனர். 19ம் நூற்றாண்டில் சீனாவானது திறக்கப்பட்டதும் புராட்டஸ்டண்டு குழுவினது குடியேறலானார்கள். டீயன்சிங் உடன்படிக்கையின்படி சமயப்பொறை வழங்கப்பட்டதால் தங்கள் பணிகளில் அவர்கள் தீவிரம் காட்டலானார்கள். சீனாவின் உட்பகுதிகளிலும் செல்ல அனுமதி பெற்றதால் அவர்கள் திருச்சபைகள் பள்ளிகள், மருத்துவமனைகள், அனாதை இல்லங்கள் ஆகியவற்றைக் காட்டினார்கள். பிஷப்புகளும், பாதிரிகளும் மிகுந்த செல்வாக்கு பெற்று தங்கள் சமயத்தை பாதுகாத்துக் கொள்ள உரிமை பெற்றனர்.

### VI) புதிய கல்வி முறை

மேலை நாட்டுக் கருத்துக்கள் புற்றீசல் போல வந்து சீனாவில் குவிந்தன. இதனால் விவிலிய நூல், பிற சமய நூல்கள் மொழி பெயர்க்கப்பட்டன. இதை சமயப்பரப்புக் குழுவினர் மேற்கொண்டனர். இது புதிய கல்விமுறைக்கு வழி வகுத்தது. அகராதிகள் எழுதப்பட்டன. சமய போதனை நூல்கள் வெளிவந்தன. சீன மொழியினைக் கற்றுக் கொண்ட பின் அவர்கள் அயல்நாட்டு நூல்களை சீன மொழியிலும், சீன நூல்களை தங்கள் மொழிகளிலும் மொழி பெயர்த்தனர். மிஷின் பள்ளிகள் பல நிறுவப்பட்டன. அதன் மூலம் மேலை நாட்டுக்கல்வி அவர்களுக்கு அளிக்கப்பட்டது. லிஹாங் காங் என்பவர் மேலை நாட்டுக் கல்வியில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார். 30 மாணவர்கள் மேலைநாட்டு அறிவியல், தொழில் நுணுக்கங்களை

அறிந்து வர அமெரிக்காவிற்கு அனுப்பப்பட்டனர். இது சீனர்களின் தனிமையினை (குறிப்பாக கல்வித் துறையில்) தகர்த்தெறிந்தது எனலாம். இதற்கு முன்பே அயல்நாட்டு ஆசிரியர்களைக் கொண்ட மொழி பெயர்ப்பாளர் பள்ளி ஒன்று பீகிங்கில் இயங்கியது எனலாம். 1865-ல் அதுவே துங்வென் கல்லூரியாக மாறியது. ஆதில் அறிவியல் துறையும் இணைக்கப்பட்டது.

**ஏஜஜ) சீர்திருத்த இயக்கங்கள்**

காங்யுவையால் ஏற்படுத்தப்பட்ட ‘நூறு நாள் சீர்திருத்த இயக்கம்’ மேலை நாட்டவரின் நேரடி விளைவு என்பதை விளம்பவவும் வேண்டுமோ? சீர்திருத்தவாதிகள் மேலை நாட்டவரின் பாணியில் சீனாவை நவீனமாக்க விரும்பினார்கள்.

**முதல் சீன ஜப்பானிய போர்**

புத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலம் வரையில் ஜப்பானை ஒரு பிற்பட்ட நாடாகவே சீனா கருதி வந்தது. அந்த எண்ணம் அந்நூற்றாண்டின் பிற்பகுதியில் மாற்றப்பட்டு விட்டது என்றால் அதில் எட்டுணையும் ஐயமில்லை. மேலை நாடுகளால் ‘அவமானப்படுத்தப்பட்டு துன்பத்திற்குள்ளாக்கப்பட்டதாலும், உள்நாட்டுக் கிளர்ச்சி ஏற்பட்டு அரசை நிலைகுலையச் செய்ததாலும், ஜப்பான் தன் வலுவையும் பொலிவையும் காட்டலாயிற்று. கலத்திற்கேற்ப தன்னை மாற்றிக் கொண்டு மேலை நாடுகளின் தொடர்பையும் ஏற்படுத்திக் கொண்டு அது பெரும் சக்தி வாய்ந்த நாடாக எழுச்சி பெற்றது.

**1871-ல் ஏற்பட்ட லி.ஈடோ ஒப்பந்தம்**

மேய்ஜியின் மீட்சிக்குப்பிறகு ஜப்பான் தன்னம்பிக்கை பெற்ற நாடாக விளங்கி, சீனாவுடன் நல்லுறவினை ஏற்படுத்திக் கொள்ள விழைந்தது. வாணிபத்தில் மேலை நாடுகள் பெற்ற சலுகையைத் தானும் அங்கிருந்து பெற விருப்பம் கொண்டது. சீனர்கள் அவ்வாறு கொடுக்க மறுத்தனர். மேலும் சீனாவில் அவர்கள் தடையின்றி செல்ல தடைவிதித்தனர். சீன ஆளுநரான லிஹுங்சங் என்பவருடன் பேச்சுவார்த்தைகள் மூலம் ஒரு உடன்பாடு செய்து கொள்ள ஜப்பானிலிருந்து புகழ்வாய்ந்த கவுண்டஈடோவின் தலைமையில் குழு ஒன்று சென்றது. அவ்வாறே அந்த உடன்பாடு செய்யப்பட்டது. அதன் விதிகளாவன,

i) ஒருவருக்கொருவர் தங்கள் பகுதிகளில் ஆக்கிரமிப்பில் ஈடுபடுதல் கூடாது

ii) மூன்றாவது நாடு ஆக்கிரமிப்பில் அல்லது போரில் ஈடுபட்டால் இந்த இருநாடுகளும் உதவி செய்து கொள்ளுதல் வேண்டும்.

iii) புரஸ்பரம் தூதரகங்களை நிறுவிக் கொள்ளுதல்.

iv) ஊடன்படிக்கையில் கண்ட துறைமுகங்களில் வாணிபம் செய்யவும், சுங்கவரியினை நிர்ணயம் செய்யவும் உரிமை பெறுதல்

v) ஜப்பானிய வணிகர்களுக்கான தூதுவர்களை சீனாவில் அமர்த்துதல் கூடாது.

**லூச்சோ தீவு பிரச்சனை**

சீனாவிற்கும், ஜப்பானுக்கும் இடையிலான உறவில் 1874-ல் விரிசல் ஏற்பட்டது. அதற்குக் காரணம் லூச்சோத் தீவில் ஒரு கப்பல் தரை தட்டியபோது அதன் பிரயாணிகளை பார்மோசாவிலிருந்த காட்டுமிராண்டிகள் கொன்று விட்டனர் என்பதேயாகும். ஆத்தீவை சீனாவும்,

ஜப்பானும் தங்களுடைய திறசெலுத்தும் பகுதியென நீண்ட வருடங்களாக உரிமை கொண்டாடி வந்தன. அது மாறிமாறி இருவர் கைகளிலும் இருந்து வந்தது. அப்போது ஜப்பானிடமிருந்ததால் அது இழப்பீடு கோரியது. சீனா அதன் உரிமையை உதாசீனம் செய்ததால் இரு நாடுகளுக்கிடையில் கைகலப்பு ஏற்படும் நிலை ஏற்பட்டது. பிரிட்டன் அதில் தலையிட்டு அதை நிறுத்தியது. சர் தாமஸ் வாடு என்ற பிரிட்டிஷ் பிரதிநிதி தன் செல்வாக்கைப் பயன்படுத்தி ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ள வழி கண்டார். அதன்படி சீனா இழப்பீடு தரவும், இனிமேல் இதுபோல் நிகழ்ச்சி ஏற்படாது என்றும் அது உறுதி அளித்தது. பகைமை மறைந்தாலும் சந்தேகம் என்னும் சண்டாளன் அவ்விரு நாடுகளிடத்திலும் நன்கு புகுந்து கொண்டான். 1879-ல் ஜப்பான் லூச்சோத் தீவைத் தாக்கிப் பிடித்துக் கொண்டதால் அதன் அபாயத்தை நன்கு உணரலானார்.

**கொரியாப் பிரச்சனை**

தற்கால வரலாற்றில் ஜப்பானும், சீனாவும் மோதிக் கொள்ள நேரிட்டது. கொரியாப் பிரச்சனையால் என்றால் அது மிகையாகாது. ''சீனாவின் கொரியாக்கதை என்பது அதற்கு ஏற்பட்ட தொடர்ச்சியான பின்வாங்கலும், முடிவான அவமானமும் ஆகும்'' என்று ஒரு வரலாற்றாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

கோரியாவின் புவியியல் நிலைமை அதன் வரலாற்றை வரைந்துள்ளது.·. அது மஞ்சூரியாவிலிருந்து ஒரு ஆற்றின் மூலம் பிரிக்கப்பட்டுள்ளது. தென்கிழக்கு கொரியா ஜப்பானை நோக்கி விரிந்துள்ளது. ஜப்பானியத் தீவுகளிலிருந்து ஒரு குறுகலான கடல் அதைப் பிரிக்கிறது. ஜப்பானுக்குத் கண்டப்பாலமாக பயன்படுகிறது. ஆதன் புவியில் அமைப்பின் காரணமாக அதன் எதிர்காலம் வாழ்வு எல்லாம் அதன் அண்டை நாடுகளான சீனா, ஜப்பானுடன் பின்னிப் பிணையப்பட்டிருந்தது.

**ஜப்பானிய கொரியா கொள்கை**

ஜப்பானின் கொரியாக் கொள்கை மூன்று நோக்கங்களில் அமைந்திருந்தது. முதலாவதாக, எந்த ஒரு பகைமை நாடும் கொரியாவை பிடித்துக் கொண்டு அதைத் தளமாக அமைத்துக் கொண்டு ஜப்பானைத் தாக்க கூடாது. இரண்டாவதாக, ஜப்பான் ஒரு பேரரசை ஏற்படுத்தப் பேரவா கொண்டது. அதற்குக் கொரியா முதற்படியாக இருக்க வேண்டும் என அது விரும்பியது. மூன்றாவதாக ஜப்பான் ஒரு தொழில் வளம் நிறைந்த நாடாக வளர்ச்சி பெற்றதால் தன்னுடைய வாணிபத்திற்கும் அமிதமான மக்கள் தொகைக்குங் ஒரு இடமாக கொரியா அமையும் என அது எண்ணியது.

**ஜப்பானுக்கும் கொரியாவிற்கும் இடையிலான உடன்பாடு**

ரஷ்யா ஒரு பெரும் வல்லரசாக வளர்ந்து வருவது கொரியாவிற்கு ஆபத்து என்றும் கொரியாவை அது தன் மார்பை நோக்கி குறிவைக்கும் துப்பாக்கி போன்றது என்று ஜப்பான் கருதியது. கொரியாவை தன் கீழ் கொண்டு வர வேண்டும் என ஜப்பான் 1876-ல் ஒரு குழுவை அங்கு அனுப்பியது.. அதன்படி அவ்விருநாடுகளுக்கு இடையில் கிங்லா உடன்பாடு ஏற்பட்டது. அதனால் கொரியா துறைமுகங்களில் வாணிபம் செய்து கொள்ள உரிமையினையும் விசேஷ

உரிமைகளையும் ஜப்பான் பெற்றுக் கொண்டது. அந்த உடன்பாட்டில் கொரியா சுதந்திர நாடு என்று அறிவிக்கப்பட்டது. சீனா அதை சற்றும் கவனிக்கவில்லை.

1879ம் ஆண்டு லி.ஹுங்சங் மேலை நாடுகளுடன் உடன்பாடுகள் செய்து கொள்ளும்படி கொரியாவிற்கு ஆலோசனை கூறி னார். ஆதன் மூலம் ஜப்பானில் பீதியிலிருந்து விடுபடலாம் என்றார். லீ. மூன்றாண்டுகளுக்குள் கொரியா மேலைநாடுகளுடன் உடன்படிக்கைகள் செய்து கொண்டது.

**கொரியாவின் மாறுபட்ட அரசியல் கட்சிகள்**

கொரியாவில் இரண்டு அரசியல் கட்சிகள் இருந்தன. ஒன்று ஜப்பானிய ஆதரவுள்ள பிரிவாகும். அவர்கள் மேலை நாட்டுப்பாணியில் கொரியாவை நவீனமாக்க வேண்டுமென்று விரும்பினர். முற்றொரு பிரிவினர் பழைய நிலையே தொடரவேண்டுமென்று விரும்பினர். ஜப்பான் முன்னேற்றக் கொள்ளையாளர்களை துாண்டி தொல்லை ஏற்படுத்தலாயிற்று. 1885-ம் ஆண்டு அவ்விரு பிரிவினர்களுக்கும் சண்டை மூண்டது. அப்போது ஜப்பானும் சீனாவும் அதைத் தடுக்க முன்வரவில்லை.

**லி.ஈடோ ஒப்பந்தம் (1885)**

கொரியாவில் சிக்கலை சீராக்க ஜப்பானின் புகழ் வாய்ந்த அரசியல் நிபுணரான ஈடோ பீகிங் சென்று லியுடன் பேசலானார். 1885 ல் லி.ஈடோ ஒப்பந்தம் டியன்சிலில் கையெழுத்தாயிற்று. அது சீன-ஜப்பான் உறவு முறையில் ஒரு புதிய கட்டத்தைக் கண்டது. அந்த ஒப்பந்தத்தின்படி,

1) சீனாவும் ஜப்பானும் தங்கள் படைகளை கொரியாவிலிருந்து விலக்கிக் கொள்ள ஒப்புக் கொண்டன.
2) கொரியாவின் உள்நாட்டு விவகாரங்களில் எந்த நாடும் தலையிடக் கூடாதென ஒப்பந்தம் கூறியது. அவர்களின் கூட்டுத் தலைமையில் நடுநிலையில் கொரியாவின் படை சீராக்கப்பட வேண்டும்.
3) நெருக்கடி ஏற்படும் போது முள் அறிவிப்பின் படி இருநாடுகளும் தங்கள் படைகளை அங்கு அனுப்ப வேண்டும்.

இந்த ல-ஈடோ ஒப்பந்தமானது சீனாவிற்கு ஏற்பட்ட அரசியல் தந்திரத் தோல்வியாகும். ஏனெனில் கொரியாவின் மீது சீனாவின் அதிகாரம் ‘‘இந்த ஒப்பந்தம் உண்மையாகவே கொரியாவை சீன ஜப்பரின் பாதுகாப்பு நாடாக மாற்றிவிட்டது. சீனாவின் தனி இறைமையினை அகற்றிவிட்டது. ஜப்பான் தன் படைகளை அனுப்பும் உரிமையினை உறுதிப்படுத்திவிட்டது’’ எனலாம்.

**போருக்கான காரணங்கள்**

1885-ல’ ஏற்பட்ட லி.ஈடோ ஒப்பந்தம் அந்நாடுகளுக்கிடையில் நிலையான அமைதியினை ஏற்படுத்தவில்லை. அதன்பின் பத்தாண்டுகளில் அவைகளின் உறவு நல்ல நிலையில் இல்லை. போர் தவிர்க்க முடியாததாயிற்று. இரு நாடுகளின் படைகளும் ஆமாதிக் கொள்ளலாயின்.

**போரின் காரணங்கள்**

1) கொரியாவின் இராணுவம் அயல்நாட்டு மேற்பார்வையில் சீராக்கப்பட்டது. அப்பணியில் ரஷ்யாக்கள் ஈடுபட்டனர். அப்பணிக்கு ஈடாக அதற்கு லாசரோவ் துறைமுகம் அளிக்கப்பட்டது. அது பணியற்ற கப்பற்படைத் தளமாகும். சீனா அதற்கு எவ்வித மறுப்பும் தெரிவிக்கவில்லை. ஆனால் ஜப்பான் தன்னுடைய பாதுகாப்பிற்கு பங்கம் ஏற்படும் என்று கருதியது. 1891-ல் ஏற்கனவே ரஷ்யா, பிரான்ஸ், சைபீரியன் இருப்புப்பாதையினைக் கட்ட ஆரம்பித்தது. இராணுவ பீதியை ஏற்படுத்தியது. வளர்ந்து வரும் ரஷ்ய செல்வாக்கைத் தடுத்து நிறுத்த எதிர் நடவடிக்கைகளில் ஜப்பான் ஈடுபட்டது.

2) ஜப்பான் பொருளாதார ரீதியில் கொரியாவை நாட ஆரம்பித்தது. கொரியா வளமும நலமும் கொண்ட நாடு. நெல் ஏராளமாக விளைந்தது. உணவுப் பஞ்சத்தால் வாடிய ஜப்பானுக்குக் கொரியாவை தன் கீழ் கொண்டுவந்தால் அந்நிலையினை மாற்ற முடியும் என்று எண்ணியது. ஏற்கனவே கொரியாவின் பெரும்பகுதி இறக்குமதி வாணிபத்தை இது பெற்றிருந்தது. போர் ஏற்பட்டாலும் கூட பராவாயில்லை பொருளாதாரத்தில் உயர்ந்து காணப்படவேண்டும் என்று அது எண்ணியது.

3) ஜப்பானில் ஈடோவிற்கு எதிராக எதிர்ப்புகள் மலைபோல் பெருகின. ஆதனால் அவர் மக்களின் கவனத்தைத் திருப்ப வேண்டி போரில் ஈடுபட விழைந்தார். உள்நாட்டுத் தொல்லைகளை சமாளிக்க அயல்நாட்டுப் போரை வரவேற்றார்.

4) கோரியாவில் ஏற்பட்ட கலவரம் ஜப்பானின் வணிகத்திற்கு நீங்காக அமைந்தது. கொரியாவின் அரசியல் கட்சிகளுக்கு இடையில் ஏற்பட்ட சண்டைகளை நிறுத்தி அமைதி கண்டால் தான் தன் வாணிபம் வளமடையும் என ஜப்பான் எண்ணியது.

5) சீனா போரில் ஈடுபட தன்க்கென சில காரணங்களைப் பெற்றிருந்தது. இதுவரையும் அது கொரியாவில் அமைதிக் கொள்கையைப் பின்பற்றியது. இதனால் அது தன் இறைமையை இழக்க நேர்ந்தது. இந்த தருணத்தில்தான் அந்த கொள்கையினை சீராக்கிக் கொள்ள முடியும் என அது திட்டமிட்டது. எனவே போரில் ஈடுபட்டது.

**உடனடிக் காரணம்**

டோங்காக் கிளர்ச்சி கொரியாவின் சமயவாதிகளான டோங்காக்குள் என்பவர்கள் அரசியல் நிறுவனமாக மாறி செயல்படலானார்கள். அவர்கள் ‘கீழைநாட்டுக் கல்விக் கழகத்தவர்’ என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் இயக்கம் அயல்நாட்டவர்களுக்கும் எதிரானதாகும். அவர்கள் ஊழல் அதிகாரிகளை ஒழிக்க வேண்டும் என எண்ணினர். ஆகவே

அலுவலகங்களில் புகுந்து அவர்களைக் கொன்று குவித்தனர். அவர்களால் ஏற்படுத்தப்பட்ட கலகத்தில் ஜப்பானிய ஆதரவு பெற்ற முன்னேற்றக் கட்சியின் தலைவரான கிமாலுக்கியும் கொலை செய்யப்பட்டார். இதனால் குழப்பமும், கொந்தளிப்பும் எங்கும் பரவலாக ஏற்பட்டது. இக்கிளர்ச்சியை அடக்க முடியாமல் திணறிய கொரியா சீனாவின் உதவியை நாடியது. டீயன்சினில் ஏற்பட்ட ஒப்பந்தப்படி இதை ஜப்பானுக்கு சீனா தெரிவித்துவிட்டுத் தன் படைகளை அங்கு அனுப்பியது. சீன ஜப்பானியத' துருப்புகள் கொரியாவை வந்தடைவதற்குள் டோங்காக் கலகம் அடைக்கப்பட்டு விட்டது. கொரியாவிலிருந்து சீனா தன் துருப்புகளை விலக்கி கொள்ள மறுத்தது. ஜப்பான் அதை எதிர்த்தது. இறுதியாக ஜப்பான் 1894-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் முதல் நாள் சீனா மீது போர்தொடுத்தது.

**சீனாவின் தோல்விகள்**

சீனாவிற்கும் ஜப்பானுக்கும் ஏற்பட்ட போரில் சீனா தோற்கடிக்கப்பட்டது. ஜப்பான் வெற்றி பெற்றது. சீனா பெரிய நாடாக இருந்தும், பல ஆயிரகணக்கான வீரர்களைப் பெற்றிருந்தும் படுதோல்வி அடைந்தது. ஜப்பானின் இராணுவமும், கப்பற்படையும் நன்கு மேலைநாட்டு பாணியில் பயிற்சியினையும், ஆயுதங்களையும் பெற்றிருந்தன. மஞ்சூரியா வழியாக சீனாவை தாக்க முற்பட்டபோது மஞ்சூரிய அரசாங்கம் ஜப்பானுடன் ஒரு உடன்பாடு செய்து கொண்டது.'

**ஷிமொனோஷெகி உடன்படிக்கை**

1895-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17-ம் நாள் சீனாவிற்கும் ஜப்பானுக்கும் இடையில் ஷிமொனோஷெகி என்ற உடன்படிக்கை ஏற்பட்டது. அதன் விளைவுகளாவன,

1) கொரியாவிற்கு முழுமையான சுதந்திரம் அளிக்கப்பட்டது.

2) பார்மோசா, பெஸ்கடோரஸ் தீவு, லியோடுங் தீபகற்பம் ஆர்தர் துறைமுகம் ஆகியவை ஜப்பானுக்கு அளிக்கப்பட்டன.

3) 200 மில்லிய்ன சீன நாணயங்கள் இழப்பீடாக ஜப்பானுக்கு அளிக்கப்பட்டது.

4) மேலை நாடுகளுடன் சீனா செய்து கொண்ட உடன்படிக்கைகளைப் போல் ஜப்பானுடனான உடன்படிக்கை அமைதல் வேண்டும். அதை நன்முறையில் நடத்துதல் வேண்டும் என உறுதி அளித்தது. விசேஷப் பிரதேச உரிமைகள் அளிக்கப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டது.

5) ஷென்சி, சுங்கிங், ஹாங்சௌ ஆகிய நான்கு துறைமுகங்கள் ஜப்பானுடைய வாணிபத்திற்கு திறந்து விடப்பட்டன.

**சிறப்பு வணிக உடன்பாடு**

மேலைநாடுகள் பெற்றிராத மிகச்சிறப்பான உரிமையினை ஜப்பான் பெற்றது. 1896-ம் ஆண்டு ஜீலைத் திங்கள் பீகிங்கில் ஒரு தனி உடன்பாட்டில் ஜப்பான் கையெழுத்திட்டது. அதன்படி வாணிபம் செய்ய ஜப்பான் தங்கு தடையில்லாத உரிமைபெற்றது. தொழிற்சாலை நிறுவவும் அது உரிமை பெற்றது. அவைகளை உடன்படிக்கையில் கண்ட துறைமுகங்களில் அது செய்து வந்தது. அத்துடன் சுங்கவரியைக் கட்டிய பிறகு தன் இயந்திரங்களை அத்துறைமுகங்களில் வைத்துக்கொள்ள உரிமை பெற்றது. மேலும் சீனாவின் உட்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட ஜப்பானிய பொருள்களுக்கு எல்லா வரிகளிலிருந்தும் விலக்களிக்கப்பட்டது.

**சீன ஜப்பானியப் போரின் விளைவுகள்**

1)சீனாவின் வலிமையற்ற நிலை வெளிப்படுதல்: சீனா-ஜப்பானியப் போர் மறுபடியும் சீனாவின் வலிமையற்ற நிலையை தெற்றென எடுத்துக்காட்டி விட்டது சீனாவைத் துண்டு போடுவதற்கான பாதை நன்கு அமைக்கப்பட்டுவிட்து. பெருமைமிகு ‘‘நடுவண் பேரரசு’’ மறையத் தொடங்கியது. சீனாவின் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொள்ளும் சார்பு நாடு எதுவுமில்லை. எவ்வித ஐயப்பாட்டிற்கும் இடமின்றி மஞ்சு அரசாங்கம் திறமையற்றது, வலிமையற்றது, ஊழலானது என்பது நிரூபிக்கப்பட்டு விட்டது. தீவிரவாதிகள் மஞ்சுக்களை ஒழித்துவிட்டு குடியரசு ஒன்றை ஏற்படுத்த வேண்டுமெனக் கோரினார்கள்.

2) சீனாவில் சீர்திருத்த இயக்கம் வலுப்பெறுதல்: ஜப்பானிய முறையில் சீர்திருத்

தங்கள் நாட்டிலும் சசீர்திருத்தங்கள் நடைபெற வேண்டுமென அவர்கள் தங்கள் தோல்விக்குப் பிறகு உணரலானார்கள். புல்வேறு கட்சிகளும் பிரிவினர்களும் சீனாவில் சீர்திருத்த இயக்கங்களை ஏற்படுத்தலானார்கள். மஞ்சு அரசு தெய்வக்கட்டளையை மீறிவிட்டது என்று செய்திபரப்பி வந்தனர். முன்னேற்றக் கட்சியினர் ஜப்பானில் மெய்ஜி மீட்சியின் போது ஏற்பட்ட நவீன மயமாக்குதலை புகுத்த வேண்டும் எனக்கூறி வந்தனர்.

3)ஜப்பானில் எழுச்சி: ஜப்பான் மிக விரைவில் ஒரு வல்லரசு எழுச்சி பெற்றது. ஜப்பானின் எழுச்சியை மேலை நாட்டவர்கள் உணரலானார்கள். அது வல்லரசாக எழுச்சி பெற்றதால் சீனாவில் மேலும் ஆக்கிரமிப்பைத் தொடங்கலாயிற்று. சீனாவிடமிருந்து பெற்ற இழப்பீட்டுத் தொகையின் மூலம் தன்னுடைய இராணுவம் கப்பற்படை ஆகியவற்றை வலிவும் பொலிவும் பெற்றதாகச் செய்தது. தன் தொழில் துறையினை விரிவுபடுத்தியது. ஆசியாக் கண்டத்தில் அது மிகத் தீவிரமாக தன் விரிவாக்கும் கொள்கையினைப் பின்பற்றியது. மஞ்சூரியாவில் தாவிக்குதிப்பதற்கு கொரியா ஒரு நீண்டு விரியும் அல்லது மின் சக்தியுள்ள பலகைபோல் பயன்பட்டது.

4) மூவர் தலையீடு: சீனாவின் படுதோல்வி பயங்கர விளைவுகளை ஏற்படுத்தியது. சீனாவானது துண்டாகும் நிலைக்கு தள்ளப்பட்டது. மேலை நாடுகளான ரஷ்யா, பிரான்சு, ஜெர்மனி ஆகிய நாடுகள் ஜப்பானுக்கு லியோடுங் தீபகற்பம் கொடுக்கப்பட்டது. தூரக்கிழக்கில் அமைதிக்கு பங்கம் ஏற்படுத்தும் என்று கருதின. ஆகவே அதை லியோடுங் தீபகற்பத்தை விட்டுவிடும்படி கட்டாயப்படுத்தின. அதற்கு ஈடாக சீனாவிடமிருந்து நஷ்ட ஈட்டுத்

தொகை வாங்கித் தருவதாகக் கூறின. ஆவ்வாறே இது நடைபெற்றது. எனினும், ஜப்பானால் தன் வெற்றியின் மூலம் கிடைத்த அப்பகுதியினை விட்டுக் கொடுத்ததை சீரணிக்க முடியவில்லை. வெற்றக்கனியினை தட்டிப் பறித்துக் கொள்வதற்கு காரணமாக இருந்த ரஷ்யாவின் மீது தன் வெறுப்பை நன்கு வளர்த்துக் கொண்டது. ரஷ்யாவும் தூரக்கிழக்கில் தன் ஆதிக்கத்தினை ஏற்படுத்த முயன்றதால் அவர்களிடையே மோதல் ஏற்படுவது தவிர்க்க முடியாததாயிற்று.

5) சலுகைப் போட்டி ஏற்படுத்துதல்: இத்தோல்வி மஞ்சு வம்சத்தின் உதவியற்ற நிலையினை எடுத்துக்காட்டியது. அதனால் அயல் நாட்டவர்கள் முண்டியடித்துக் கொண்டு சலுகைகள் பெற முற்பட்டனர்.

ஆயல்நாட்டு முதலாளிகள் சீனாவைப் பல கூறுகளாக்கி குத்தகைக்கு எடுத்துக் கொண்டார்கள். பல செல்வாக்கு மண்டலங்களை ஏற்படுத்திக் கொண்டார்கள். அதன் விளைவாக இருப்புப் பாதைகள் போடப்பட்டன. சுரங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டன, ஆலைகள் ஏற்படுத்தப்பட்டன. வங்கிகள் இயங்கின. அது சீனாவை பாதிக் குடியேற்ற நாடாக மாற்றிவிட்டது.

6)உள்நாட்டுத் தொழில்கள் நசுக்கப்படுதல்: சீனாவிற்கும் ஜப்பானுக்கும் இடையில் ஏற்பட்ட உடன்பாட்டினால்ஜப்பான் அதில் கண்ட துறைமுகங்களில் ஆலைகளையும் தொழிற்சாலைகளையும் ஏற்படுத்த உரிமை பெற்றது. அதனுடைய பெரும் மூலத்தனத்தாலும், தொழில் நுணுக்கத்தாலும் உரிமைகள் பல பெற்றிருந்தாலும் சீனர்களிடத்தில் மிகுந்த செல்வாக்கினைப் பெற முடிந்தது. உள்நாட்டுத் தொழிற்சாலைகள் அயல்நாட்டுத் தொழிற்சாலைகளுடன் போட்போட முடியவில்லை. எனவே பெரும் நஷ்டம் ஏற்பட்டது.

**நூறுநாள் சீர்திருத்த இயக்கம்**

சீனாவில ஏற்பட்ட சீர்திருத்த இயக்கங்களில் நூறு நாள் சீர்திருத்த இயக்கம் மேலைநாட்டின் மாற்றத்திற்கு ஏற்ப தன்னை சரிசெய்து கொள்ள ஏற்பட்டதாகும். இது மஞ்சுக்களுக்கு எதிரான நடவடிக்கை என்றும் கூறலாம். மூற்று வாழ்க்கைக்கு ஏற்பவும், அயல் நாடுகளின் ஆக்கிரமிப்பைக் கண்டிக்கும் வகையிலும் ஏற்பட்ட எதிர்நடவடிக்கையாகும். ஆந்த தைரியமான முதல் முயற்சி யினை மேற்கொண்டவர் காங்யுவை என்வராவார். அவர் பேரரசர் குவாங்க என்பவரைத் தன் செல்வாக்கின் கீழ் கொண்டு வந்தார். அவர் 1898-ம் ஆண்டு ஜீன் திங்கள் 11-ம் நாளிலிருந்து செப்டம்பர் திங்கள் 20-ம் நாள் வரை அவ்வாறு இருந்தார். இந்த கால கட்டத்தில் ஏறக்குறைய 40 முதல் 50 ஆணைகள் வெகு விரைவில் ஒன்றன்பின் ஒன்றாக வெளியிடப்பட்டன. அவைகள் கல்வி, அரசாங்கம், நிர்வாகம் தொழில், பன்னாட்டு பண்பாட்டின் மாற்றம் சீனாவை கன்பூஷிய அரசிலிருந்து நவீன அரசாக மாற்றுவது ஆகியவைகளைப் பற்றியது எனலாம். இவ்வாறு பல துறைகளில் சீரிய மாற்றங்களைக் கொண்டு வந்தது. அந்த நூறு நாள் சீர்திருத்த இயக்கம்.

**சீர்திருத்த இயக்கம் வளர்ச்சி அடைந்தற்குரிய காரணங்கள்**

1)கிறிஸ்துவ சமயபரப்புக் குழுவினர்களின் பணிகள்: சீர்திருத்த இயக்கம் தோன்றுவதற்கு சமயபரப்புக் குழுவினரின் செயல்கள் ஓரளவிற்குக் காரணமாக இருந்தன

எனலாம். அவர்கள் பல பள்ளிகளைத் திறந்தனர். பொதுப்போதனைகள் பலவற்றை செய்தனர் நூல்நிலையங்கள் ஆங்காங்கே திறந்தனர். அருங்காட்சி அகங்கள் பலவற்றை அமைத்தனர். செய்தித்தாள்கள் வார மாத இதழ்கள் பலவற்றை வெளியிட்டனர். அவர்கள் சமயத்தைப் பரப்பியதோடு மட்டுமல்லாமல் மேலைநாட்டுக் கருத்துக்களை சீனாவில் கொண்டு வந்தனர். அவர்கள் கிறிஸ்துவ சமயம் பொதுஅறிவு ஆகியவற்றை சீன மக்களுக்குத் தரவேண்டும் என்பதற்காக ஒரு சங்கத்தை ஏற்படுத்தினர். ஆச்சங்கம் சமுதாய அரசியல் சீர்திருத்தங்களில் அதிக ஈடுபாடு காட்டியது. மேலைநாட்டு நாகரீகமானது சீனாவில் புகுவதற்கு அது பாடுபட்டது. அக்குழுவினரின் செயல்கள் சீன அறிஞர்களின் அறிவுக்கண்களை திறந்துவிட்டன. அதன் விளைவாக அவர்கள் சீனாவில் மேலைநாட்டு நிர்வாகம் உற்பத்தி முறை ஆகியவற்றைக் காண விழைந்தனர்.

2) சீனர்களின் மேலைநாட்டு ராணுவத்தின் மேன்மை:மேலை நாட்டவரின் முன்னேற்றமான இராணுவம் சிறந்த நவீனக் கருவிகளைப் பெற்றிருந்தது. அது சீனர்களை சிந்திக்கத் துாண்டியது. தொழில் நுணுக்கதால் தான் மேலை நாட்டவர் பெரும் வெற்றிகளை ஈட்டமுடிந்தது. ஆகவே அதை சீனர்கள் பயன்படுத்தத் தெரிந்து கொள்ள வேண்டுமென அவர் விரும்பினார். அவ்வாறு செய்ய முற்பட்டால் சீனாவை மேலும் துண்டு போடுவதிலிருந்து காப்பாற்றலாம் என்றார். இதன் மூலம் மேலைநாட்டுக் கருத்துக்கள் புகுந்தன. அதன் விளைவே சீர்திருத்தக் கட்சியின் தோற்றமாகும்.

4.) ஜப்பானிடம் பெற்ற அவமானகரமான தோல்வி: சீனா 1894-95 ஆண்டுகளில் நடைபெற்ற போரில் படுதோல்வி அடைந்தது. ஜப்பான் பெருவெற்றி பெற்றது. தன்னுடைய அண்டை நாடான சுண்டக்காய் ஜப்பானிடம் அது தோல்வி அடைந்தது. ஒரு அவமானகரமான செயலாகும். ஆந்த சிறிய ஜப்பான் எப்படி தன்னை நவீனப்படுத்திக் கொண்டது என்று ஆராய முற்பட்டனர். சீனர்கள் அதற்குக் காரணம் அங்கு ஏற்பட்ட மெய்ஜிமீட்சியேயாகும் என்று கருதினர். எனவே சீன சீர்திருத்த இயக்கம் நல்லாதரவினைப் பெறமுடிந்தது.

5) சீனா சிதறுண்டு போகும் அபாயம்: 1839-ம் ஆண்டிலிருந்து சீனா தோல்வி கண்டு வந்ததால் அதனுடைய வலிமையற்ற நிலையும், நிர்வகத் திறமையின்மையும், ராணுவத்தின் செயலற்ற நிலையும், நன்கு தெரியலாயிற்று. ஏற்கனவே சீனாவை பல செல்வாக்கு மண்டலங்களாகப் பரித்து மேலை நாட்டவர் எடுத்துக் கொண்டனர். அதிலிருந்து சீனாவைக் காப்பாற்ற முடியாது என்ற பீதி ஏற்பட்டது. வீழ்ச்சியின் விளிம்பில் இருக்கும் வம்சம் முழுமையாக அழிந்துவிடாமலிருக்க மேலைநாட்டு சீர்திருத்தங்களைப் புகுத்த வேண்டுமென்ற ஒரே வழிதான் இருக்கிறது என்பதை உணர்ந்தனர். அவ்வாறு செய்தால் சீனாவினுடைய அரசியல் ராணுவ நிறுவனங்களை வலிவுபெறச் செய்யலாமென எண்ணினார்.

**ஆரம்பகால சீர்திருத்தங்கள்**

1860-ம் ஆண்டில் ஏராளமான சீர்திருத்தவாதிகள் சீர்திருத்த போதனைகளைப் பரப்பினர். இந்தச் சீர்திருத்த இயக்க முன்னோடிகள் சீர்திருத்த இயக்கத்திற்கான மேலோட்டமான பணிகளைச் செய்தனர்.

1) பெங் குவை பெங்: இவர் ஆரம்பகாலத்தில் தோன்றிய சீர்திருத்தவாதியாவார். இவர் மேலை நாட்டு கணிதம், இயற்பியல், இராசாயன இயல், புவியியல் ஆகியவற்றைப் பின்பற்றினார். அவர் சீனாவில் கல்வி, தேர்வு வினாக்களின் தன்மை ஆகியவற்றை மாற்றிச் சீர்திருத்தம் செய்ய நடவடிக்கைகளை அது மேற்கொள்ள வேண்டும் என்றார். தொழில் உற்பத்தியைப் பெருக்க ஆக்கமும் ஊக்கமும் தந்தார்.

2) வாங் தவோ இவர் ஜப்பானின் மேலை நாட்டு நிறுவன முறையினை ஆதரித்தார். இவர் ஒரு தீவிரவாதியல்ல ஆனால் உபயோகமாக மேலைநாட்டுக் கூறுகளை சீன அடித்தளத்தில் படிப்படியாக ஒட்ட வைக்க வேண்டுமெனக் கருதினார்.

3) வேங் துங் ஹோ: வெங் கூட்டுறவு சீர்திருத்த முறையினை எடுத்துரைத்தார். அரசின் அடிப்படைக் கருத்துக்களாக சீனர்களின் ஒழுக்க நெறிக் கோட்பாடுகளும், தத்துவ அறிவுரைகளும் தான் அமையவேண்டுமென்றார். அதைக் கொண்டு வர மேலை நாட்டுக் கல்வி தேவை என்றார்.

4) சுாங் சி துங்: சாங் சி துங் ஒரு மிதமான சீர்திருத்தவாதியாவார். ‘அடித்தளத்திற்கு சீனக்கல்வி என்றும், நடைமுறைப்படுத்த மேலைநாட்டுக்கல்வி’’ என்றும் அவர் கருத்துக் கொண்டிருந்தார்.

**காங் யு வை**

தீவிர சீர்திருத்தங்களுக்கான முதல் பெருமுயற்சிகள் எல்லாம் காங் ஞ வையுடன் இணைந்து காணப்படுபவை எனலாம். இவர் பேராற்றல் பெற்ற ஆளுமை உள்ளவர். அவர் மேலைநாட்டு பாணியிலமைக்க அரசியல் சீர்திருத்தில் பெரும் விருப்பம் கொண்டிருந்தார். ‘‘நவீன பொருள் இயக்கம்’’ என்பதில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். அவருடைய முக்கியமான நூல் ‘‘உலகின் பொதுச் செல்வம் பற்றிய நூல்’’ என்பதாகும். ஆதில் அவர் கற்பனை உலகையே கண்டார். பின்னர் அவர் ‘கல்விச் சங்கங்கள்’ என்பதை ஏற்படுத்தினார். சீர்திருத்தம் பற்றிய விரிவுகளை அவைகள் செய்தன. மேலை நாட்டு நூல்களை அவைகள் மொழி பெர்த்தன. செய்திதாட்களை வெளியிட்டன. நூல் நிலையங்களை நிறுவின. 1898-ம் ஆண்டில் அவர் ‘தேசியப் பாதுகாப்பு சிங்கம்’ என்பதை நிறுவினார். அது ஆயிரக்கணக்கான பட்டதாரிகளை மாநில அதிகாரிகளையும் கவர்ந்தது. அதன் நோக்கங்கள் சீன மக்களைப் பாதுகாப்பது, சீனாவின் சமயத்தைப் பேணுவது, சீனாவின் திறமையையும் பகுதிகளையும் பாதுகாப்பது உள்நாட்டு நிறுவனங்களின் சீர்திருத்தங்களை மேற்கொள்ளுவது ஆகியவைகளாகும். விரைவிலேயே ‘‘பாதுகாப்புச் சங்கத்தின்’’ கிளைகள் மாநிலங்கள் தோறும் தோன்றலாயின. இதற்கிடையில் ஏராளமான சீர்திருத்த விண்ணப்பங்களை மன்னனிடம் சமர்ப்பித்தார். அவைகளில் சீனாவைச் சீர்திருத்த வேண்டிய அவசியத்தை வற்புறுத்தினார்.

அவர் தன்னுடைய ஒரு விண்ணபத்தில் கீழ்காணும் நடவடிக்கைகளைத் தொடருமாறு மன்னரை பணிவுடன் கேட்டுக் கொண்டார்.

1) முாமன்னர் பீட்டர் பேரரசர் மெய்ஜி போன்றவர்கள் செய்த சீர்திருத்தங்களைப் போல மன்னர் சீனாவில் சீர்திருத்தங்கள் செய்ய வேண்டும் என்றார். மாண்புமிகு மன்னர் அவர்கள் ரஷ்ய மாமன்னர் பீட்டரைப் போல இதயமும், ஜப்பானின் மெய்ஜியைப் போல் நிர்வாக முறையும் பெற்றுப் பின்பற்ற வேண்டும்'' என்றார்.

2) நுாட்டிலுள்ள திறமையுள்ளவர்களைப் பயன்படுத்தி நிறுவனங்களின் சீரமைப்பைத் தயார் செய்ய வேண்டும்.

3) தங்களுடைய எல்லைக்குட்பட்ட நிறுவனங்களின் சீர்திருத்தத்தினை செய்ய மாநில அதிகாரிகளை அனுமதித்தல் வேண்டும்.

4) இன்னும் காலதாமதம் செய்தால் அயல்நாட்டு ஆக்கிரமிப்பு ஏற்பட்டு அதனால் வம்சம் இறுதியாக மறைந்துவிடும் என்று அவர் கடைசியாக எச்சரிக்கை செய்தார்.

**சீர்திருத்தம் பற்றி காங்கின் கொள்கை**

1) குாங் பழமையாவதியுமல்லர். புரட்சிவாதியுமல்லர் அவர் மஞ்சு வம்சத்தை அழிக்க விரும்பவில்லை. அவர் முடியாட்சி முறையினை ஆதரித்தார். அதுவும் அரசியலமைப்பிலான முடியாட்சி அதை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கட்டுப்படுத்த வேண்டும். பழைய கன்பூஷிய பேரரசு முறை நீக்கப்படுதல் வேண்டும்.

2) சீர்திருத்தம் மெதுவாக அல்லது படிப்படியாக செய்தல் கூடாது. ஆனால் அதை உடனடியாகவும், விரைவாகவும் அறிமுகப்படுத்துதல் வேண்டும்.

3) அவர் தனிப்பட்ட சிறிய சீர்திருத்தங்களை ஆதரிக்கவில்லை. அப்போதிருந்த சமூக, அரசியல், பொருளாதார அமைப்புகளை முழுமையாகவும் மொத்தமாகவும் தீவிரமாகவும் மாற்ற வேண்டும் என்றார்.

4) சீர்திருத்தம் ஒரு கருத்தினைப் பற்றியதாக இருத்தல் கூடாது. ஆனால் அது எல்லாவற்றைப் பற்றியும் எல்லா நிறுவனங்களைப் பற்றியதாகவும் இருத்தல் வேண்டும்.

**பேரரசர் குவாங் சுவும் காங்கும்**

1889-ல் தோவேஜர் பேரரசி சூஹசி கோடைகால அரண்மனையில் ஓய்வு பெற்று தங்கியதற்குப்பின் பேரரசர் குவாங்சு நிர்வாகப் பொறுப்பினை தன் கைகளில் எடுத்துக் கொண்டார். அவர் தன்னுடைய ஆசிரியரான வெங்துங்ஹோ என்பவரின் சீர்திருத்தங் கருத்துக்களின் பால் ஈடுபாடு கொள்ளலானார். வேங் என்ற சீர்திருத்தவாதிதான் காங்கை பேரரசிடம் அறிமுகப்படுத்தினார். அப்போது "தன்னுடைய திறமையைவிட காங்கினுடையது நூறு தடைவ உயர்ந்தது" என்று கூறினாறாம். ஆழிந்துபடும் சீனாவினைக் கண்டு மனம் நொந்த மன்னர் அதிலிருந்து அதைக் காப்பாற்ற வேண்டுமானால் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்பதை உணர்ந்தார். காங்கினால் ஆட்கொள்ளப்பட்ட பேரரசர் சீர்திருத்த ஆணகைளை வெளியிடலானார். ஆந்த ஆணைகளின் விளைவாக கீழ்க்காணும் சீர்திருத்தங்களை மேற்கொள்ளப்பட்டன.

1)கல்வி:

1) 'எட்டுக் கால் கட்டுரைத்தாள்' என்ற சிவில் சர்வீஸ் தேர்வின் தாளுக்குப் பதிலாக தற்கால நிகழ்ச்சிகள் அல்லது செய்திகள் பின்பற்றப்பட்டன.

2) பீகிங்கில் பேரரசு பல்கலைக்கழகம் ஒன்று நிறுவப்பட்டது.

3) மேலை நாட்டு அறிவியலைப் போதிக் மாநில நகரங்களில் பள்ளிகள் திறக்கப்ட்டன. மாநிலத் தலைநகரங்களில் இருந்த தனிப்பட்டோர் கல்விக்கழகங்கள் கல்லூரிகளாக மாற்றப்பட்டன. மாநில உட்பிரிவின் அதாவது மாவட்ட தலைநகரங்கள் இருந்த அக்கழகங்கள் உயர்நிலைப் பள்ளிகளாகப் மாற்றப்பட்டன். மாவட்டங்களில் அவைகள் ஆரம்பப் பள்ளிகளாக மாற்றப்பட்டன.

4) மேலை நாட்டுப் பாட்ங்களுக்கு சிறப்புப் பள்ளிகள் திறக்கப்பட்டன.

5) பேரரசின் பல்கலைக்கழகத்தில் ஒரு மருத்துவப் பள்ளியும் திறக்கப்பட்டது.

6) அரசாங்கச் செய்தித்தாள் ஒன்று வெளியிடப்பட்டது.

7) அரசியல், பொருளாதாரத்தில் சிறப்புத் தேர்வுகள் நடைபெற்றன.

II) அரசியல் நிர்வாகம்

1) அவசியமற்ற பதவிகளான பேரரசு, கல்வி முறையின் மேற்பார்வையாளர், அரசு சடங்குகளை கவனிக்கும் அதிகாரி ஹோப் போ, குவாங்டுங் ஆகிய பகுதிகளின் ஆளுநர் பதவிகள் ஆகியவை நீக்கப்பட்டன.

2) முன்னேற்றவாதிகளான லியாங் சி சரோவ, லின் சு ஆகியோர் பெரும் பதவிகளில் அமர்த்தப்பட்டனர்.

3) ஏளிய நிர்வாகமுறை அமல் செய்யப்பட்டது. நிர்வாகத் திறமை வளர வழிகள் மேற்கொள்ளப்பட்டன.

4) ஆரசாங்கத்தின் திறமையை வளர்க்க தனிப்பட்ட குடிமக்களின் ஆலோசனைகள் வரவேற்கப்பட்டன.

5) வுாணிபத்தில் ஈடுபட மஞ்சுக்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டது.

III) **தொழில்**

1) இருப்புப்பாதை போடுதல், வேளாண்மைத் தொழில்கள், வணிக நடவடிக்கைள் ஆகியவை அரசாங்கத்தல் நன்முறையில் வளர்ச்சி அடைந்தன.

2) புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள் வெளிவர உற்சாகம் அளிக்கப்பட்டது.

3) மரங்கள், அடர்ந்த நல்ல சாலைகள், பூங்காக்கள் துாய்மையான சாலைகள் ஆகியவற்றைக் கொண்டு விறங்கும்படி தலைநகரம் அழகுபடுத்தப்பட்டது.

**IV) மற்றவைகள்**

**1)** தொழில் மற்றும் நிர்வாகம் ஆகிய துறைகளின் நுணுக்கங்களைக் கண்டறிய உயபு அதிகாரிகள் மேலை நாடுகளுக்கு அனுப்பப்பட்டனர்.

**2)** சமயப்பரப்புக் குழுக்கள் பாதுகாக்கப்பட்டன.

3) சீனச்சட்ட முறையை எளிமையாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தரப்பட்டது.

4) வருடாந்திர வரவு-வெலவு திட்டம் தயார் செய்யப்படுதல் வேண்டும்.

5) நிர்வாகத் திறமையினை பார்க்க ஏற்கனவே இருந்த பழைய ஆறு வாரியங்களுக்குப் பதிலாக பன்னிரெண்டு வாரியங்கள் ஏற்படுத்தப்பட்டன.

**இயக்கத்தின் தோல்விக்குக் காரணங்கள்**

சீர்திருத்த திட்டங்கள் (மிகத் தீவிரமாக பேரரசர் கொண்டு வந்த போதிலும்) பெரும் ஆர்வத்துடன் அமல் செய்யப்பட்டாலும் காங்கின் புதிய திட்ட உணர்வுகள் காணப்பட்ட போதிலும் அது தோல்வியில் முடிந்தது எனலாம். ஆதற்குரிய முக்கியக் காரணங்களாவன

1.ஆரம்ப முதலே சீர்திருத்த இயக்கத்திற்கு பெரும் எதிர்ப்பு இருந்து வந்தது. மஞ்சு அரசாங்கத்தின் அதிகாரிகளின் பதவி பறிபோகின்ற நிலை ஏற்பட்டதால், அவர்கள் அதைக் கடுமையாக எதிர்க்கலானார்கள். ஆகவே அவர்கள் பேரரசியைத் தலையிடும்படி துாண்டினர். ஏனெனில் அவர் பழமையில் பற்றுக் கொண்டவர். சீர்திருத்தவாதிகள் அவருடைய

தலையீட்டுக்குப் பயந்து ‘பழைய புத்தர்’ என்று அழைக்கப்பட்ட அப்பேரரசியைக் கைது செய்ய முயற்சி செய்தனர். ஆனால் அந்த முயற்சி தோற்றுவிட்டது. இராணுவ அதிகாரிகளின் துணைகொண்டு அவர் மீண்டும் தன்னை வலிமையாக்கிக் கொண்டார். பேரரசர் கைது செய்யப்பட்டு (1898) இறக்கும் வரை (1998) வரை சிறையில் வைக்கப்பட்டார். சீர்திருத்த இயக்கத்தின் தலைவரான காங்-யு-வை ஜப்பானுக்கு ஓட்டம் பிடித்தார். பல சீர்திருத்தவாதிகள் பிடிக்கப்பட்டு கொல்லப்பட்டனர். இவ்வாறு நூறுநாள் சீர்திருத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. இம்மாற்றத்திற்குப் பிறகு தோவேஜர் பேரரசி சீர்திருத்த ஆணைகள் எல்லாவற்றையும் செல்லாதென அறிவித்தார்.

2) அரசியல் தந்திரமற்றவர் பேரரசர். அனுபவமும் இல்லாதவர், அவரிடம் ஆக்கம் தரும் அறிவுக்கருத்துக்கள் அள்ளித் தருவதற்கு இருந்த போதிலும், திட்டமிட்டு செயல்படும் பேரரசிக்கு அவர் ஒப்பிடப்பட முடியாதவராக விளங்கினார். மேலும் பேரரசர் சிறுவனாக இருந்ததிலிருந்து அரசியால் பயிற்சி கொடுக்கப்பட்டவர். ஆகவே அவருக்கு மரியாதை கொடுத்தும் பயந்து கொண்டும் வாழ்ந்து வந்தவர் என்பதால் அவரால் செயல்பட முடியவில்லை.

3) சீர்திருத்தங்களும் காலத்திற்கு முந்தியவை: மிகவும் கற்பனையில் காணக்கூடிய கருத்துக்கள் ஒரே நாள் இரவில் எல்லாவற்றையும் மாற்ற வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களட உண்மையிலேயே இது முடியாத செயலாகும்.

சீர்திருத்தங்கள் மேல் மட்டத்திலிருந்து வந்தாலும், உயர்தலைவர்கள் கொண்டு வந்தாலும் மக்களின் மீது திணிக்கப்படும் போது அவைகளை அவர்கள் தங்கள் காலத்திற்கு முந்தியவை என்று கருத நேரிட்டது. அவர்கள் அந்த சீர்திருத்தங்களை ஏற்றுக் கொள்ளும் நிலையில் இல்லை.

4)சீர்திருத்த இயக்கங்கள் பெரும்பாலும் தென்மாவட்டங்களில் தோன்றின. ஆவைகள் குறிப்பாக மேலை நாட்டின் தொடர்பால் ஏற்பட்டவைகளாகும். எனவே அந்த இயக்கம் நாடு தழுவிய அளவில் அமையவில்லை.

5)வணிகர்கள், குடியானவர்கள், நடுத்தர மனிதர்கள் அறிஞர்கள் சீர்திருத்தங்களை ஆதரிக்கவில்லை. அவர்கள் அப்போதைய சமுதாயத்திற்கு அவைகள் தீங்கு ஏற்படுத்துபவைகளாகும் என்றனர். மேலும் அதன் மூலம் நாட்டில் குழப்பம் ஏற்படும் என்று எண்ணினர். அவர்கள் புரட்சிகரமான, சமூக, பொருளாதார மாற்றங்களைவிட அப்போதைய நெருக்கடியான பிரச்சனைகளுக்குத் தீர்வு காணவேண்டும் என விரும்பினர்.

6)சீர்திருத்த இயக்கம் தோல்வி அடைய மிக முக்கியக் காரணம் மஞ்சு அதிகார வர்க்கத்தின் மிகத் தீவிர எதிர்ப்பேயாகும். அவர்கள் தங்களுடைய அதிகாரத்திற்கும், உரிமைகளுக்கும் இச்சீர்திருத்தங்கள் பேராபத்தை ஏற்படுத்தக் கூடியவை எனக் கண்டனர். அவர்களுடைய பெரும் செல்வாக்கால் அவ்வியக்கத்தினை வெற்றி பெறாமல் செய்து விட்டனர்.

7) காங் ஒரு தத்துவ ஞானியாகவும், கருத்தியல் கோட்பாட்டின் ஆதரவாளராகவும் இருந்தார். ஆனால் அவர் ஒரு செயல்முறையில் நாட்டம் கொண்ட அரசியல் வல்லுனராக

விளங்கவில்லை எனலாம். அவருக்கு அதிகார அரசியலில் சிறிதளவு அனுபவம்தான் இருந்தது. அதன் மூலம் சீர்திருத்தங்களின் உடனடி விளைவுகளைக் காண முடியவில்லை.

8) பேரரசரும், அவருடைய சீர்திருத்தவாதிகளும் தங்களுக்கென தனியாக ராணுவத்தைப் பெற்றிருக்கவில்லை. அதனால் அவர்கள் சீர்திருத்தங்களுக்கு எதிரானவர்களை முறியடிக்க யுவான் ஷி காயின் உதவியை நாடினார். அவர் அப்போது குவாங் டங் மாநிலத்தில் இருந்தார். ஆனால் அவர் பேரரசி தோவேஜருடன் கூடிக் கொண்டு துரோகி என்பதை நிரூபித்து விட்டார்.

**சீர்தீருத்த இயக்கத்தின் முக்கியத்துவம்**

சீர்திருத்த இயக்கத்தை தோவேஜர் பேரரசி வன்முறையின் மூலம் அடக்கி ஒடுக்கினாலும் சீனாவின் பிற்கால வரலாற்றில் அது முக்கிய விளைவுகளை ஏற்படுத்தாமல் இல்லை. அவைகள் மிகச் சீரிய மாற்றங்கள் எனலாம்.

முதலாவதாக இது அமைதியான முறையில் முன்னேற்ற சீர்திருத்தங்களை முடி முதல் அடிவரை கொண்டு வருவது என்பது இயலாத காரியம் என்பதை நிரூபித்து விட்டது.

இரண்டாவதாக தோவேஜர் பேரரசியின் கீழிருந்த அனைவருமே திறமையற்றவர் என்பதை எடுத்துக்காட்டி விட்டது. அதிகாரிகளிடம் பரவலாக திறமையின்மையும் கையூட்டு பெறுவதும் மலிந்து கிடந்தது.

மூன்றாவதாக தீவிரவாதிகளின் வெற்றி பழமைவாதிகளின் நிலையினை வலிமை உள்ளதாக மாற்றிவிட்டது. அது அயல்நாட்டவருக்கு எதிரான உணர்வுகளுக்கு ஊக்கமளித்தது. அது பாக்சர் இயக்கத்தினை வளர்த்தது எனலாம்.

நான்வாவதாக சீர்திருத்தங்கள் சீனர்களுக்குப் பயன் தந்தன. மஞ்சுகளுக்கு தீங்கு ஏற்படுத்தின. அரசாங்கம் தீவிர நடவடிக்கையினை தந்தது. இதனால் சீனர்களுக்கும் மஞ்சுக்களுக்கும் இடையில் நிலவிய விரிசல் பெரிதாகி விட்டது.

இறுதியாக சீர்திருத்தவாதிகள் அமைதியான முறையில் எதையும் சாதிக்க முடியாது என்று நம்பினர். புரட்சியின் மூலமே தங்கள் விருப்பங்களை நிறைவேற்ற முடியும் என்றனர். அவர்கள் மஞ்சு வம்சத்தின் வீழ்ச்சிக்கு பின் முழுமையான சீர்திருத்தங்களை நிறைவேற்ற முடியும் என்றனர். ஆகவே டாக்டர் சென்யாட் சென்னின் தலைமையில் சீனர்கள் ஒன்று திரண்டு புரட்சிக் கொடியினை ஏந்தலானார்கள்.

**திறந்தவெளிக் கொள்கை**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சீனா தன்னுடைய கதவுகளை இறுக மூடிக்கொண்டு அயல் நாட்டவர்களின் தொடர்பிலிருந்து விடுபட்டு இருக்க விரும்பியது. அதே நூற்றாண்டின் முடிவில் அயல்நாட்டவர்கள் அங்கு புகலானார்கள். அவர்கள் அதன் கதவுகளை மற்றவர்களுக்கு மூடலானார்கள். ஆப்போது அமெரிக்கா மட்டும் ‘அவ்வாறு கதவுகளை மூடக்கூடாது கதவுகளை திறக்க வேண்டும்’ என்று கூறியது. அதன்படி சீனா அனைவருக்கும் சமமாகச் சுரண்டுவதற்கு தன் கதவுகளைத் திறந்துவிட வேண்டும், அதாவது சமமாக சலுகைகள் அளிக்க வேண்டுமென்பது குறிப்பிடப்பட்டது. இதிலிருந்து ‘சுரண்டு அல்லது

மற்றவர்களைச் சுரண்டவிடு' என்ற குறிக்கோளை இக்கொள்கை கொண்டுள்ளது என்பது புலனாகிறது.

**பங்கீட்டிலிருந்து சீனாவைக் காப்பாற்றிய சூழ்நிலைகள்**

1895-ம் ஆண்டில் ஏற்பட்ட ஷிமொனோசெகி உடன்படிக்கைக்குப் பிறகு ஐரோப்பிய வல்லரசுகள் போட்டி போட்டுக் கொண்டு சீனாவில் சலுகைகளைப் பெற முற்பட்டன. சீனா பல துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொன்றும் ஒரு வல்லரசின் கீழ் இருந்தபோதிலும், அவற்றின் செல்வாக்கு மண்டலமாக விளங்கிய போதும் சீனாவைப் பங்கு போடுவதிலிருந்து அது இவ்வுடன்படிக்கை தடுத்துவிட்டது எனலாம்.∵. சீனா இவ்வாறு பங்கீடு செய்யாமல் தடுக்கப்பட்டதற்கு முதல் காரணம் வல்லரசுகளிடையில் ஏற்பட்ட போட்டியாகும். ஆவைகளால் ஒன்று சேர்ந்து செயல்பட்டு சீனாவை தங்களுக்குள் பங்கீடு செய்ய முடியவில்லை. அயல் நாட்டவர் பெற்ற ஏராளமான சலுகைகளைக் கண்டு வெறுப்புற்ற சீனர்கள் அயல்நாட்டவருக்கு எதிராக உணர்வு பெற்று எழலானார்கள் என்பது அதற்கு மற்றொரு காரணமாகும். புாக்சர் கலகம் அவ்வாறு அன்னியருக்கு எதிரான, கிறிஸ்தவர்களுக்கு எதிரான ஒரு இயக்கமாகும். துனிப்பட்ட வல்லரசுகள் தாங்கள் வலியுறுத்தும் கொள்கையில் முட்டுக்கட்டையை சந்திக்க அமரிக்காவின் திறந்த கதவுக் கொள்கையும் 1902-ம் ஆண்டு ஆங்கிலேய ஜப்பானிய உடன்பாடும் மற்றுமிரு காரணங்களாக அமைந்தன. அத்தகைய திறந்த வெளிக் கொள்கைக்குரிய சூழ்நிலைகளை கண்டு நோக்குவது சாலச் சிறந்ததாகும்.

**அமெரிக்காவும் சீனாவும்**

1897-98ஆம் ஆண்டுகளில் ஐரோப்பிய வல்லரசுகள் சீனாவை தங்களுக்குள் பங்குபோட்டுக் கொண்டிருந்தபோது அமெரிக்கா வேறு காரியங்களில் கவனம் செலுத்திக் கொண்டிருந்தது. அதனுடைய உள்நாட்டுப் பிரச்சனைகள் அதன் கவனத்தை ஈர்த்துக் கொண்டிருந்தன. இதற்கிடையில் அது ஸ்பெயினுடன் போரில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது. 1865 முதல் 1898 வரையிலான ஆண்டுகளில் அமெரிக்காவில் பெரும் மாற்றம் ஏற்பட்டு தொழில் வளமான நாடாக மாறியது. துங்கள் நாட்டின் பொருள் உற்பத்திக்கு அயல்நாடுகளின் சந்தையைப் பிடிக்க முற்பட்டது. இந்தப் பொருளாதார ஆர்வத்தோடு அது பன்னாட்டு அரங்கிலும் பல நாடுகளின் மீதும் ஆதிக்கம் செலுத்த விழைந்தது. குறிப்பாக துாரக்கிழக்கு நாடுகளில் பிலிப்பைன் தீவுகளைப் பெறுவதில் அது கவனம் செலுத்த முற்பட்டது.

**திறந்த வெளிக் கொள்கை**

திறந்தவெளிக் கொள்கை அமெரிக்காவால் கொண்டுவரப்பட்டது. அதன்படி ஒவ்வொரு நாடும் சமமான வாய்ப்பினைப் பெறுதல் வேண்டும் என்று அது கூறியது. அப்போது ஒவ்வொரு நாடும் பெற்றிருந்த செல்வாக்கு மண்டலத்தில் வாணிப சமத்துவத்தையும் அது ஏற்றுக் கொண்டது. இக்கோட்பாடானது அமெரிக்காவின் அயல்நாட்டு அமைச்சரான ஜான்ஹே என்பவரால் கொர்டுவரப்பட்டது. ஆகையால் இது ஹேயின் கோட்பாடு என்று அழைக்கப்படுகிறது. ஆதன் முக்கிய அம்சங்களாவன,

1.சீனாவில் தன் செல்வாக்குப் பகுதியினைப் பெற்ற ஒரு வல்லரசு உடன்படிக்கை துறைமுகங்களில் தலையிடுவதில்லை என உறுதி அளிக்க வேண்டும். அது தனிப்பட்ட அதிகாரம் எதையும் காட்டக்கூடாது. குத்தகைக்குப் பெற்ற பகுதியிலும் தலையிடுதல் கூடாது.

2. செல்வாக்கு மண்டலங்களைப் பெற்ற நாடுகளுக்கிடையே துறைமுகக் கட்டணங்களிலும், இருப்புப்பாதைகளின் கட்டணங்களிலும் எவ்வித வேறுபாடும் இருத்தல் கூடாது.

3.பொருள்களின் மீது விதிக்கப்பட்ட வரிகளை வசூல் செய்யும் உரிமை சீன அரசாங்கத்திடமே இருக்க வேண்டும்.

4. ஐரோப்பிய நாடுகள் சீனாவில் ஏற்கனவே பெற்றிருந்த சலுகைகளை மதித்தல் வேண்டும்.

சுருங்கக்கூறின் திறந்தவெளிக்கொள்கை சீனாவின் திறந்த வெளிச் சந்தைக்கு உத்தரவாதம் அளித்தது. அத்துடன் எல்லா நாடுகளுக்கும் ஒரே சீரான வரிக்கொள்கை பின்பற்றப்பட்டது. மேலைநாடுகள் பெற்ற சிறப்புச் சலுகைகளில் நடுநிலையான தன்மையினைப் பெற அமெரிக்கா விரும்பியது. சீனாவில் பொருள்களை விற்பதில் மற்ற நாடுகளைப் போல் அமெரிக்காவும் ஆர்வம் காட்டியது. அமெரிக்காவின் இந்த திறந்தவெளிக் கொள்கை "தனக்குக்கூட" பேராதிக்க ஆசை உண்டு என்பதையே காட்டுகிறது என ஓவன் லாட்டிமோர் என்பவர் பொருத்தமாகக் கூறியுள்ளார்.

இக்கோட்பாடு சமமான வாய்ப்பத்திர வழி ஏற்படுத்தியது என அமெரிக்கர்கள் கூறினர். மேலும் சீனாவின் பகுதிகளைப் பாதுகாக்கும் காவலனாக இது அமைந்தது என்றும் அவர்கள் கூறியுள்ளனர். அவர்களின் கூற்று நியாயமானது என்றாலும் அவர்கள் ஒரு போதும் அதற்கேற்ப வாழவில்லை எனலாம். 'ஊருக்கே உபதேசம் உனக்கில்லை' என்பதைப் போல தான் கொண்டு வந்த கோட்பாட்டை தானே மீறி பிலிப்பைன் தீவுகளைப் பிடித்துக் கொண்டது.

**திறந்தவெளிக் கொள்கையின் உள்ளாந்த கருத்துக்கள்**

செல்வாக்கு அல்லது ஆர்வ மண்டலம், திறந்தவெளிக் கோட்பாடு என்ற இரண்டு கருத்துக்களும் அடிப்படையிலேயே மாறுபட்டவை. முரண்பட்டவை எனலாம். ஆர்வ மண்டலத்தை ஏற்படுத்துவதின் நோக்கம், இருப்புபாதைகள் கட்டவும், கனிவளங்களைத் தோண்டவும், தொழில்களைப் பயன்படுத்திக் கொள்ளவும், உரிமைகள் பெறுவதுமே ஆகும். ஆர்வ மண்டல் செல்வாக்கு மண்டலத்தில் படிப்படியாக மறைந்துவிட்டது. அது அப்பகுதியின் பொருளாதார வளர்ச்சியின் முற்றுரிமையைப் பெற அரசியல் ஆதிக்கம் பெறும் வகையில் மாறியது எனலாம். இக்கோட்பாடு வாணிபத்தில் சம வாய்ப்பு என்பதைக் கொண்டு வந்தது. இதன் மற்றொரு பயன் சீனாவின் பிரதேச ஒருமைப்பாட்டைப் பாதுகாத்ததாகும். சீனா சுதந்திரமாக இல்லாவிட்டால் மேலை நாடுகள் சமவாய்ப்பு பெற்றிருக்க முடியாது. வேறு வகையில் கூறினால் எல்லைக்குட்பட்ட செல்வாக்குப் பதிலாக கூட்டுக் கொள்கையின் மூலம் சீனாவை சுரண்டுவதை இது உறுதிப்படுத்தியது. இக்கோட்பாட்டை மீறினால் ராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடப்படவில்லை. எனவே இது ஒரு நல் விரும்பக் கொள்கையாகவே இருந்தது.

**திறந்தவெளிக் கொள்கையின் எதிரொலி**

தங்களுடைய மூலதனத்தை முதலீடு செய்வதற்கும் தங்களுடைய பொருள்களைவ ிற்பதற்கும் நல்ல சந்தையாக சீனா இருந்ததாலும் அதனை அமெரிக்காவும், பிரிட்டனும் பாதுகாக்க ஆர்வமுடன் செயல்பட்டன. இருநாடுகளும் சீனாவின் பகுதிகளைப் பெறுவதில் ஆர்வம் காட்டவில்லை. அவைகள் சீனப்பேரரசுடன் வாணிபம் செய்வதில் மட்டுமே கருத்தாக இருந்தன. பிறநாடுகள் தன்னுடன் சேர்ந்தால் பிரிட்டன் அக்கோட்பாட்டைப் பின்பற்றுவதாகக் கூறியது. பிறநாடுகள் ஒன்று சேர்ந்து கூட்டுக் கொள்கையின் மூலம் சீனாவை சுரண்ட இக்கோட்பாடு பயன்பட்டதால் அதை அவைகள் ஒத்துக்கொண்டன. ஆனால் ரஷ்யா தன் முழு ஆதரவை இக்கோட்பாட்டிற்கு நல்கவில்லை.

**திறந்தவெளிக் கொள்கையின் விளைவுகள்**

1.இக்கோட்பாட்டை ‘வல்லரசுகள் ஏற்றுக் கொண்டதால் சீனாவைப் பங்கீடு செய்வது தற்காலிகமாகத் தடுக்கப்பட்டது.

2. இதன் மூலம் அமெரிக்காவது சீனாவின் மேல் அதிக ஆர்வம் காட்டியது.

3. ஐரோப்பிய நாடுகளின் ஆக்கிரமிப்புத் திட்டங்கள் தடுக்கப்பட்டன. சீனாவின் பிரதேச ஒருமைப்பாடு பாதுகாக்ப்பட்டது.

4. அயல் நாட்டுத் தாக்குதல்களை சமாளிக்கும் எண்ணம் சீனர்களிடையே தோன்றலாயிற்று. சீன-ஜப்பானியப் போரின் மூலம் கிடைத்த பாடமே இந்த முடிவுக்குக் கொண்டு வந்தது.

இவ்வாறு இக்கோட்பாட்டினால் சீனா தன்னைப் பாதுகாத்துக் கொண்டது எனலாம்.

**பாக்சர் கலகம்**

நூறு நாள் சீர்திருத்தம் தோல்வி அடைந்த பிறகு அன்னியர்களை எதிர்த்து சீனாவில் வன்முறைக் கிளர்ச்சி ஒன்று தோன்றியது. அதுதான் பாக்சர் கலவரம் எனப்பட்டது. அன்னியர்களை சீனாவைவிட்டு விரட்டுவதற்காகவே அது ஏற்பட்டது. பல போர்களில் சீனாவிற்கு ஏற்பட்ட தோல்வி, அதன்பின் ஏற்பட்ட அவமானம், உடன்படிக்கைத் துறைமுகங்களில் அயல்நாட்டவர்களின் கொடுமை’ மேலைநாடுகள் சீனாவை பல செல்வாக்கு மண்டலங்களாகப் பிரித்துக் கொண்டது. சமயப்பரப்புக் குழுவினரின் தாங்க முடியாத செயல்கள் ஆகியவை அனைத்தும் சீனர்களின் கசப்பு உணர்ச்சியைத் தூண்டிவிட்டன. தானாகவே தோன்றிய அந்த பெயர்பெற்ற கிளர்ச்சிதான் பாக்சர் கலவரம். ‘‘இது அயல்நாட்டு பேராதிக்கத்திற்கு எதிராக ஏற்பட்ட அறிவுக்கு ஒவ்வாத, காரணமற்ற உணர்ச்சி வசப்படும் கோபமாகும்’’ என்று இமானுவேல் ஹசூ என்பவர் கூறுகின்றார்.

**பாக்சர் கலவரத்திற்கான காரணங்கள்**

**1.சமயப்பரப்புக் குழுவினரின் செயல்கள்**

i) கிறிஸ்துவ சமயப்பரப்புக் குழுவினர் சமூக, கல்வித்துறைகளில் சில பயனள்ள பணிகளைச் செய்தபோதிலும் அவர்களை சீனர்கள் நம்பவில்லை மேலும் மேலை நாட்டு

பேராதிக்கம் முன்னேற அவைகள் வழிவகுத்தன என்று கருதினார்கள். அவர்கள் அவர்களைப் பேராதிக்க வெறியர்கள் என்றும் பேராதிக்கத்தைக் கொண்டுவர பல கேடான செயல்களில் ஈடுபட்டார்கள் என்றும் கருதினார்கள். துப்பாக்கிகளுடன் திணிக்கப்பட்ட உடன்படிக்கைகளுடனனும் பாதுகாப்போடு கிறிஸ்துவ சமயம் சீனாவில் நுழைந்தது.

ii) சீனாவில் மதம் மாறியவர்கள் தங்களை உயர்ந்தவர்கள் என்றும் உரிமைபெற்ற வகுப்பினர் என்றும் கருதி வந்தனர். அவர்கள் அரசாங்கப் பணிகளிலும், நீதிமன்றங்களிலும் தனி உரிமையும், மரியாதையுமம் கோரினார். நெடுங்காலமாக வழக்கத்தில் இருந்து வந்த சீன நடைமுறைகளை அவர்கள் கடைபிடிக்கவில்லை மண்டியிட்டு வணங்கும் முறையினை அவர்கள் மறுத்தனர். சீனக் கிறிஸ்துவர்களின் இந்த நடவடிக்கைகள் பொதுமக்களின் கோபத்தைக் கிளறிவிட்டன.

iii) சீனாவின் உட்பகுதிகளில் ஏராளமான தவறான எண்ணங்கள் பரவிக் கிடந்தன. கிறிஸ்துவர்கள் கண்களைப் பிடுங்குவது, குழந்தைகளின் இருதயங்களை எடுத்துக் கொள்வது போன்ற செயல்களில் ஈடுபட்டு வந்தனர் என்றும், அவைகள் மருந்து தயார் செய்யவே அவ்வாறு செய்யப்பட்டது என்றும் மக்கள் நம்பி வந்தார்கள். இந்த நம்பிக்கைகள் ஆதாரமற்றவை என்றாலும் கிறிஸ்துவர்களுக்கு எதிரான பகையை ஏற்படுத்தியது எனலாம்.

iv)சமயப்பரப்புக் குழுவினர் மதம் மாறியவர்களின் சார்பாக நீதிமன்றங்களில் தலையிட்டனர். நீதியை நிலைகுலையச் செய்தனர். இதை அவர்கள் சாதகமாகக் பயன்படுத்திக் கொண்ட அக்குழுவினர்களுடன் தொடர்பு கொள்ளலானார்கள். ஆதனால் சட்டத்திலிருந்து தப்பிக்க தங்கள் நாட்டவர்களையே மாட்டிவைக்கலானார்கள்.

எ)சமயக்குருக்களுக்கு நீதிபதிகளுக்குக் கொடுக்கப்பட்ட மதிப்பும் மரியாதையும் கொடுக்க வேண்டுமெனக் கோரினார். இதனால் பல அதிகாரிகள் வெறுப்புற்றனர். எனவே அவர்கள் அக்குழுவினர்களுக்கு எதிராக வன்முறையினைத் தூண்டி விட்டனர்.

**2)மஞ்சு மரபின் மீது கோபம்**

i) ஜப்பானிடம் சீனா தோல்வி அடைந்தாலும், சலுகைகள் கோரியதாலும் சீனாவின் பங்கீடு தவிர்க்க முடியாததாகிவிட்டது. ‘ஏறக்குறைய எல்லா மேலைநாடுகளும் சீனாவிடமிருந்து சிலபகுதிகளைப் பெற்றன. அப்பகுதிகளில் அவைகள் தங்கள் செல்வாக்கு மண்டலங்களை ஏற்படுத்திக் கொண்டன. இது சீனாவின் ஒற்றுமைக்குப் பெரிய ஆபத்தாக இருந்தது. இச்சூழ்நிலையில் நாட்டுப் பற்று கொண்ட நல்லோர்கள் கிளர்ந்தெழுவது என்பது இயற்கையே ஆகும்.

ii) வலிமை பொருந்திய “நடுவண் பேரரசு” பெருமைமிகு இறை அரசு அல்லது தெய்வீகப் பேரரசு’ என்று கருதப்பட்ட சீனா சிறிது சிறிதாக சிதறி குடியேற்ற நாடாக உருமாறியதைக் கண்டு பெறாத சீனர்கள் எல்லையில்லா கோபம் கொண்டு மேலைநாட்டின் வரி பேராதிக்கத்தினை எதிர்க்க கிளர்ந்தெழுந்தனர்.

**3)நாட்டுக்கு ஏற்பட்ட அவமானத்தை உணர்தல்**

அரைநூற்றாண்டு காலமாக போரின் போதும், அமைதியின் போதும் அயல்நாட்டவரால் ஏற்பட்ட அவமானத்தை சீனர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. தங்கள் தன்மானம் காற்றில் பறந்து போய்விட்டதாகக் கருதினர். கடுமையும், கொடுமையும் நிறைந்த அயல்நாட்டு அமைச்சர்கள். குரூரமான தூதுவர்கள் பேராதிக்க ஆசைகொண்ட குழுவினர், தன்னலம் கொண்ட வணிகர்கள் சீனாவைக் சூறையாடினர். இந்த அநீதி பழிவாங்கும் ஆசையை அவர்களின் உள்ளத்தில் கொழுந்துவிட்டு எரியச் செய்தது.

**4)மேலை நாடுகளின் மீதான வெறுப்பு**

புாக்சர் கலகத்திற்கு மற்றொரு காரணம் பேரரசர் குவாங்குவின் மேலை மயமாக்கும் கொள்கையே எனலாம் அயல்நாட்டு நிறுவனங்களை ஏற்படுத்தியது. சீர்திருத்தத்தின் போது மேற்கொண்ட சிறிய மாற்றங்கள் ஆகியவை ஏற்கனவே இருந்த அன்னிய வெறுப்பு என்னும் தீயில் எண்ணை வார்த்தது போல் அமைந்துவிட்டன. எனவே கிளர்ச்சி மேலும் வலுவடைந்தது.

**5.அயல்நாட்டவரின் பொருளாதார ஆதிக்கம்**

ஆபினிப் போர்களுக்குப் பின் வந்த இறக்குமதிப் பொருள்களினால் நாட்டின் பொருளாதாரம் பொழிவிழந்தது. சீனாவின் பாதுகாப்பு வரிக்கொள்கையில் 5 விழுக்காடு சுங்கவரி நிர்ணயிக்கப்பட்டதன் விளைவாக சீன உள்நாட்டுத் தொழில்கள் அழிந்தன. சீனாவின் துணி விலையில் மூன்றில் ஒரு பங்கு விலைக்கு அயல்நாட்டுப் பருத்திக் துணிகள் விற்கப்பட்டன. எனவே உள்நாட்டு நெசவாளிகளும், ஜவுளி உற்பத்தியாளகளும் திவாலானார்கள். ஆயல்நாட்டுப் போட்டிக்கு ஈடுகொடுக்க முடியாமல் கைத்தொழில்கள் நலிவுற்றன. பலர் வேலையில்லாமல் அவதிப்பட்டனர். அயல்நாட்டு வாணிபம் பளர வளர அவர்கள் ஆதிக்கம் குடிக் கொண்டது. சீனச் சந்தைகளில் எங்கும் அவர்களுடைய செல்வாக்கு கொடி கட்டிப்பறந்தது.

**6)வரிச்சுமை அதிகரிப்பு**

1899-ம் ஆண்டில் சீன வாணிபத்தில் 69 மில்லியன் சீன நாணயங்கள் பற்றாக்குறை ஏற்பட்டன. இதை ஈடு செய்ய அரசு வரிகளை அதிகரிக்கச் செய்தது. மாநில வாரியாக நன்கொடைகள் வசூல் செய்யப்பட்டன. இவைகள் அனைத்தும் மக்கள் தலையில் பெரும் பளுவாக விழுந்தன.

**7)இயற்கை கோளாறுகள்**

இந்தப் பொருளாதாரத் துன்பத்தோடு இயற்கைக் கொடுமைகளும் சேர்ந்து கொண்டு வாழ்க்கையை மிகவும் மோசமாகிவிட்டன. 1852-ம் ஆண்டு மஞ்சள் நதியானது தன் போக்கை ஹோனானிலிரந்து ஷாண்டுங் என்ற இடத்திற்கு மாற்றிக் கொண்டதாலும் 1882-க்கு பிறகு அடிக்கடி வெள்ளம் ஏற்பட்டதாலும், 1898ல் மீண்டும் வெள்ளப்பெருக்கு உண்டானதாலும் மக்கள் சொல்லொன்ணாத் துன்பங்களை அடைந்தனர். ஷாண்டுங்கில் மட்டும் நூற்றுக்கணக்கான கிராமங்கள் பாதிக்கப்பட்டன. ஒரு மில்லியனுக்கு மேலான மக்கள் பாதிக்கப்பட்டன் வடசீனாவின் பெரும் பகுதியும் பீகிங்கும் 1900-ம் ஆண்டில் ஏற்பட்ட வறட்சியால் பாதிக்கப்ட்டன. பாதிக்கப்படாதவர்கள் அயல்நாட்டவர்களை நிந்தித்தார்கள்.

காரணம் என்னவென்றால் அவர்கள் புதிய சமயத்தைப் பரப்பியதின் மூலம் சீனர்களின் பழமையான கொள்கைகளையும், தெய்வங்களையும் புண்படுத்தியதாக எண்ணினார்கள்.

**8.இரகசிய சங்கங்களின் தோற்றம்**

சீனாவில் பல இரகசிய சங்கங்கள் தோன்றின. ஆவைகளில் ஒன்று 'எட்டு வரி வடிவ' சங்கமாகும். முற்றொன்று 'வெண்தாமரைச் சங்கமாகும்.

இச்சங்கங்கள் தீவிர நாட்டுப்பற்று கொண்டும், அன்னிய துவேஷமும் பெற்று விளங்கின. அன்னியர்களுக்கு எதிரான முழக்கங்களை அவைகள் எழுப்பின. ஆச்சங்கத்தினர் தங்களுடைய கைகளில் அதிகாரமும், வலிமையும் உள்ளதாகக் கூறிக்கொண்டனர். அவர்கள் இரகசியமாக மல்யுத்தம், குத்துச்சண்டை, வாட்போர், பிற உடற்பயிற்சிகள் ஆகியவற்றைச் செய்து வந்தனர்.

**பாக்சர்களின் தோற்றம்**

சீனர்களின் இரகசிய சங்கமான 'ஐ ஹோர் சுவான்' என்பதற்கு பாக்சர்கள் என்ற பெயரினை அந்நியர்கள் வழங்கினர். 'பாக்சர்கள்' என்றால் நேர்மையும் ஆமைதியும் கொண்டச் குத்துச் சண்டை வீரர்கள் என்பது பொருளாகும். இது எட்டு வரி வடிவ சங்கத்திலிருந்து தோன்றியதாகும். அவர்கள் துப்பாக்கிக் குண்டுகளை தங்கள் கைமுஷ்டி மூலம், அதாவது குத்துச்சண்டை மூலம் வெல்லலாம் என்ற நோக்கத்தினைக் கொண்டிருந்தனர். அதை மந்திரத்தின் மூலம் அடையத்திட்டமிட்டனர். அவர்கள் அதற்காக அந்திரங்களை ஓதினர். முிக உயர்ந்த சக்தியை உண்டாக்குவதற்கு பல சடங்குகள் வழிபாடுகள் ஆகியவற்றை மேற்கொண்டனர். அதன்மூலம் துப்பாக்கிகளின் வலிமையைக் குறைக்க முற்பட்டனர்.

ஆரம்பத்தில் பாக்சர்கள் மஞ்சுகளுக்கு எதிரானவர்களாகத் தோற்றமளித்தார்கள். பின்னர் அவர்களுக்கு ஆதரவாகவும், அன்னியருக்கு எதிராகவும் மாறினர். அவர்கள் அன்னியர்களை விரட்ட வேண்டும் என முடிவு செய்தனர். அத்துடன் அவர்களுடைய சீ ஆதரவாளர்களையும் அங்கிருந்து அகற்ற பாடபட்டனர்.

**கலவரத்தின் போக்கு**

கலவரத்தின் ஆரம்ப கட்டத்தில் பாக்சர்கள் மஞ்சுக்களுக்கு எதிராகவும், அன்னியர்களுக்கு விரோதிகளாகவும் செயல்பட்டனர். ஆனால் நாளடையில் மஞ்சு மரபை எதிர்ப்பதைக் கைவிட்டனர். கிளர்ச்சியின் உச்சக்கட்டத்தில் தோவேஜர் பேரரசி மஞ்சு ஆட்சியை அழியாமல் நிலை நிறுத்த ஒரு வாய்ப்பு உள்ளதைக் கண்டார். ஒரு பக்கம் அயல்நாட்டினரின் செல்வாக்கு மண்டலங்களாக நாடு பிரிவதையும், மற்றொரு பக்கம் நாட்டை மேலைமயமாகக் வேண்டுமென்ற இயக்கம் நடைபெற்று வருவதையும் அவ்வரசியார் கண்டார். சீர்திருத்த இயக்கத்தை நசுக்கிய பிறகு, எதிர்ப்பாளர்களின் கவனத்தை தன்பக்கம் ஈர்த்து அயல்நாட்டவர்களுக்கு எதிராக அமையும்படி திருப்பினார்.

அவ்வரசியார் முதலில் இரகசியமாக பாக்சர்களை ஆதரித்து வந்தார். பின்னர் வெளிப்படையாகவே ஆதரிக்கலானார். அவருடைய ஆதரவுடன் அவர்கள் மிகவும் தீவிர வன்முறையுடனும், மொழிவெறியுடனும் செயல்படலானார்கள். 1900-ம் ஆண்டில் அவர்கள்

படுகொலையில் இறங்கினர். ஷாண்டுகளில் பேரழிவு ஏற்பட்டது. அத்துடன் ஷிகிலி, ஷான்சி, மஞ்சூரியா ஆகிய இடங்களிலும் நாசவேளையில் ஈடுபட்டனர். அவர்கள் கோவில்களைக் கொளுத்தினர். கிறிஸ்துவ சமயப்பரப்புக் குழுவினர்களைக் கொன்று குவித்தனர். அவர்கள் இருப்புப்பாதைகளையும், தந்தி நிலையங்களையும் அழித்தனர். வட சீனா முழுவதும் வன்முறை தலைவிரித்தாடியது. 1900-ம் ஆண்டில் ஜீன் திங்களில் அரசாங்கம் அயல்நாட்டவர்களை எதிர்த்துப் போர் தொடுத்தது. பீகிங்கிலுள்ள அயல்நாட்டுத் தூதரகங்களை முற்றுகையிட பாக்சர்களுக்கு அரசாங்கம் அனுமதி அளித்தது. பேரரசின் ஆணை எதுவும் இல்லாததால் தென் மாநிலங்கள் போரில ஈடுபடவில்லை. இந்த விதமாக இராணுவ நடவடிக்கை வடக்கில் மட்டுமே நடைபெற்றது. அந்த முற்றுகையானது எட்டு மாதங்கள் நடைபெற்றது.

**அயல்நாட்டு இராணுவத் தலையீடு**

கலவரத்தால் பாதிக்கப்பட்ட வெளிநாட்டினர் தங்கள் கௌரவத்தையும், ரகசிய உடமைகளையும் பாதுகாக்க, ராணுவ நடவடிக்கை எடுக்க முடிவுகட்டினர். அதன் பயனாக ஜெர்மானிய தளபதி வால்டெர்சி என்பவர் தலைமையில் 18,000 பேர்களைக் கொண்ட ஒரு கூட்டுப்படை பீகிங் நகரை வந்தடைந்தது. அவர்கள் அங்கு கூட்டுப்படைகளின் கொடிகளை நாட்டினர். தோவவேஜர் பேரரசி மாறு வேடத்தில் தலைநகரிலிருந்து தப்பி ஓடினார். தன் வாழ்க்கையில் தான் செய்த பெரும் தவறுகளில் ஒன்று பாக்சர்களை ஆதரித்தது என அவர் பின்னாளில் உணரலானார். கொடூர ஆட்சியின் மூலம் அந்த பன்னாட்டுப்படை பாக்சர்களை வேட்டையாடியது.

**பாக்சர் ஒப்பந்தம்**

நீண்ட இடைவெளிக்குப் பிறகு 1901-ம் ஆண்டில் பாக்சர் ஒப்பந்தம் கையெழுத்தானது. அந்த விதிகளின் சீனா கீழ்க்கண்டவற்றை ஒப்புக் கொண்டது.

1. ஜெர்மன், ஜப்பான் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கொலை செய்யப்பட்டதற்கு அரசாங்க ரீதியில் மன்னிப்புக்கோருதல்

2. 450 மில்லியன் சீன நாணயங்களை 39 தவணைகளில் இழப்பீட்டுத் தொகையாக செலுத்துதல்

3. வுன்செயல்களில் ஈடுபட்டதற்காக பாக்சர்களின் தலைவர்களையும், அதிகாரிகளையும் தண்டித்தல்.

4. புாக்சர் கலவரம் நடைபெற்ற இடங்களில் நிர்வாகப் பொறுப’புகளுக்கான பதவிகளுக்கு நடைபெறும் போட்டித் தேர்வுகளை 5 ஆண்டுகளுக்கு நிறுத்தி வைத்தல்.

5. போர்க்கருவிகளை இறக்குமதி செய்தல் நிறுத்தப்படல்.

6. பீகிங்கில் அயல்நாட்டுத் தூதரகங்களை பாதுகாக்க நேச நாடுகளுக்கு அனுமதி அளித்தல்.

7. துாக்கூ ஆற்றின் முகத்துவாரத்திலுள்ள கோட்டையை அழித்தல்.

8. வுணிக உடன்படிக்கைகளை மறு பரிசீலனை செய்து புதுப்பித்தல். ஆயல்நாட்டு அமைச்சகத்தை ஏற்படுத்துதல்.

9. தலைநகருக்கும், கலுக்கும் இடையில் அமைந்த முக்கிய இடங்களில் ராணுவம் தங்க அனுமதி வழங்கல்.

10. ஆயல்நாட்டவர்களின் இடுகாட்டில் நினைவுச் சின்னங்களை ஏற்படுத்துதல் (கலவரத்தில் இறந்தவர்களுக்கு)

**இயக்கத்தின் தன்மை**

புாக்சா் இயக்கமானது மூன்று கட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. முதல் கட்டத்தில் பாக்சா்கள் அன்னியா்களை வெறுத்து அவா்களை விரட்ட முற்பட்டனா். அவா்கள் மஞ்சுக்களுக்கு எதிராகவும், அன்னியா்களை வெறுப்பவா்களாகவும் இருந்தனா். இரண்டாவது கட்டத்தில் அவா்கள் மஞ்சுக்களுக்கு ஆதரவாக இருந்தனா். தங்களுடைய நடவடிக்கைகளை அயல்நாட்டவா்களுக்கு எதிராக முடுக்கிவிட்டனா். இறுதிக் கட்டமான மூன்றாவதில் திறமையற்ற ஊழலான அதிகார வா்க்கத்திலிருந்தும் அதிகாரிகளிடமிருந்தும் முறையே விடுபட முயன்றனா். சுருங்கக் கூறின் இது மேலை நாட்டு செல்வாக்கிற்கு எதிரான இயக்கமாகும். மேலும் மக்களின் ஏழ்மை, துன்பத்திலிருந்து அவா்களை விடுவிக்க ஏற்பட்ட இயக்கமாகும்.

'அயல்நாட்டு பேய்களை' விரட்ட ஒரு குருட்டுத்தனமான அறியாமையில் அமைந்த தேசப்பற்றால் ஏற்பட்ட போராட்டமாகும். தேன்மாநிலங்கள் இந்த அயக்கத்தில் சேராததால் இதை ஒரு தேசியக் கலவரம் என்று அழைக்கமுடியாது. மாா்க்சீய வரலாற்றாசிரியா்கள், இந்த இயக்கமானது வளா்ச்சி பெறாத அமைப்பிலான குடியானவா்கள் சரியான நோக்கத்தோடு ஆனால் தவறான முறைகளில் நடத்திய இயக்கமாகும் என்று தற்போது கருதுகின்றனா்.

**அதன் தோல்விக்குக் காரணங்கள்**

புகழ்வாய்ந்த கிளா்ச்சியானது அரசாங்க ஆதரவு இருந்தும் தோல்வியடைந்தது என்பது மிகவும் பரிதாபத்திற்குரியதாகும்.

1. இந்தப் போராட்டமானது வட மாநிலங்களில் மட்டும் நடைபெற்றதாகும். தேன்மாநிலங்கள் இதைப் புறக்கணித்துவிட்டன. பின்னாள் கூட அவைகள் அரசின் கட்டளையை ஏற்று கிளா்ச்சியில் ஈடுபடவில்லை. அதைவிடக் கேவலமான மோசமான செயல் என்னவென்றால் அந்த மாநிலங்களின் ஆளுநா்கள் கிளா்ச்சி

ஏற்பட்டால் அதனை அடக்க அயல்நாட்டவர்களுடன் ஒப்பந்தங்கள் செய்து கெணாண்டதே எனலாம். இது வடக்கில் மட்டும் தீவிரமாக நடைபெற்றது. ஆனால் இது நாடு தழுவியதாக அமையவில்லை என்பது உள்ளங்கை நெல்லிகனிபோல் இனிது விளங்கும்.

2. சீனத்துருப்புகள் ஒருங்கிணைந்து செயல்படவில்லை. இந்த இயக்கத்திற்கு ஆதரவு தருவதில் பேராசியாரோ அரைமனதாக குறைமனதாக இருந்தார். அவர் தன் நிலையைக் காப்பாற்றிக் கொள்வதிலேயே அக்கறை காட்டினார். சீனப்படைக்கு வலிமை பொருந்திய தலைமை இல்லை. ஜீங் லூாவும் போர் நாடெங்கும் பரவுவதை விரும்பாது படைகள் அன்னியர்களுக்கு எதிராகப் பயன்படுத்த மறுத்துவிட்டார்.
3. பாக்சர்கள் குருட்டுதனமான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அவர்கள் தவறான வழிகளில் செயல்பட்டனர். ஆக்கபூர்வமான திட்டங்களை முன்வைத்து மக்களைக் கவர்ந்து இருப்பார்களேயானால் அந்தக் கிளர்ச்சியின் போக்கு வேறு விதமாக அமைந்திருக்கும். மஞ்சுக்களும் தங்கள் ஆட்சியின் வயதினை மேலும் 11 ஆண்டுகள் கூட்டியிருக்க முடியாது.
4. புாக்சர்களை நன்முறையில் தூண்டும் அளவிற்கு தலைவர்கள் அங்கில்லை. மக்களைக் கவரும் மாபெரும் தலைவர்கள் அங்கு அப்போது தோன்றவில்லை.
5. கிளர்ச்சி தோல்வி அடையக் காரணம் மேலைநாட்டு உயர்தரமான கூட்டுப்படைகளின் செயல் வேகமாகும். முிக முன்னேற்றமான போர் நுணுக்கம், துப்பாக்கிகளின் பயன், நல்ல தந்திரம் ஆகியவை அவர்களின் வெற்றிக்குப் பெரிதும் உதவின. ஆகவே மேலை நாட்டவர் மிக எளிதில் கலவரத்தை அடக்கலானார்கள்.

**இயக்கத்தின் விளைவுகள்**

1) பாக்சர் விளைவாக சீனா மேலும் அவமானப்பட்டது. பல சலுகைகளை சீனா அயல்நாடுகளுக்கு அளிக்க வேண்டியிருந்தது. பெருமம் இழப்பீட்டுத் தொகை கொடுக்க ஏற்றுக் கொண்டதால் அதன் பொருளாதாரம் நசுக்கப்பட்டது 2. பாக்சர் கலவரம் மஞ்சுக்களின் வீழ்ச்சியை விரைவுபடுத்தியது. மக்களின் வெறுப்பு நாடெங்கிலும் தோன்றி அவ்வம்சத்தை 1911-ல் பதவியிலிருந்து இறங்கியது.

2) மேலைநாடுகள் மக்கள் மனம் அறிந்து அதன்வழி செயல்படலாயின. சீனாவின் அழிவை அக்கலவரம் தடுத்து நிறுத்தியது.

3) பாக்சர்கள் மங்சுக்களை சீர்திருத்தப் பாதையில் அழைத்துச்சென்றனர். சீர்திருத்தங்கள் பெரும்பாலும் பழமையின் பாற்பட்டவையாகும். பொதுவாக ஒரு மாற்றத்தின் ஆரம்பமாக அவைகள் அமைந்தன.

## மஞ்சுக்கள் காலத்தில் ஏற்பட்ட சீர்திருத்த இயக்கம்

பேரரசி சூஹசி என்பவர் நூறுநாள் சீர்திருத்த இயக்கத்தை வெற்றி பெறாமல் செய்ததை ஏற்கனவே கண்டோம். ஆத்துடன் பாக்சர்களை தூண்டிவிட்டு தன்பதவியை எவ்வாறுநிலை நிறுத்த முயன்றார் என்பதையும் முன்பு பார்தோம். இங்கு அவர் பழமையின் பாற்பட்ட சீர்திருத்த இயக்கத்தில் கொண்ட பங்கினைக் காணலாம். ஷீன் பெங் என்ற பேரரசின் ஆசைநாயகியே சூஹ்சி என்பவர். 1861-ல் பேரரசர் இறந்தபோது பல தொடர் சர்ச்சைகளுக்கு பின் அவர் அதிகாரத்தைப்பிடித்தார். பேரரசின் சட்ட பூர்வமான மனைவியைக் கொன்று விட்டு, அவளுடைய ஐந்து வயதுச்சிறுவனைப் பதவியில் அமர்த்தி அவனுக்கு பாதுகாவலராக சூஹசி ஆட்சிபுரியலானார். ஒரு குழந்தை பேரரசருக்குப் பதிலாக மற்றொரு குழந்தைப் பேரரசர் வந்தபோது அவர்களுக்கு எல்லாம் அவர் பாதுகாவலராக இருந்து ஏறக்குறைய 10 ஆண்டுகள் ஆட்சி புரிந்து வந்தார்.

### சீர்திருத்தங்களை வெளியிடுவதற்கான சூழ்நிலைகள்

பாக்சர் கலவரத்தின் அடக்குமுறை ஒரு கசப்பான அனுபவத்தை தோற்றுவித்தது. பீகிங்கை நேசநாடுகள் கைப்பற்றிய பின் அரசியார் தொல்லைகள் பலபட்டு கழுதை வண்டியில் மாறுவேடத்தில் தப்பித்துச் சென்றார். இது போன்ற ஒரு துன்பத்தை அவருடைய வாழ்க்கையில் அவர் அனுபவித்தது இதுவே முதல் தடவையாகும். ஊண்ண உணவும், தங்க இடமும் இல்லாமல் பலநாட்கள் அவதிப்பட்டார். நாட்டை இப்படிப்பட்ட தொல்லைக்கு உட்படுத்தியதற்கு அவமானப்பட்டார். தனக்கு ஏற்பட்ட துன்பங்களுக்குக் காரணம் என்னவென்பதை உடனே புரிந்துக் கொள்ளும் அறிவுக் கூர்மை கொண்டவராக விளங்கினார். அயல்நாட்டவரின் மதிப்பையும் உள்நாட்டில் மரியாதையையும் பெற அவர் மன்னிப்புக்கோருவதும், அரசியல் சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதும் அவசியம் என எண்ணினார். வேளியில் இருந்தபோதே தன்னை நொந்து கொண்டு ஆணை ஒன்றை வெளியிடலானார். புின்னர் அரசியலமைப்பின் அடிப்படையில் சீர்திருத்தங்களைக் கொண்டு வரலானார்.

### 1)கல்விச் சீர்திருத்தங்கள்

குல்வி கற்பிக்க ஏராளமான அயல்நாட்டவர்கள் கல்வி நிறுவனங்களில் அமர்த்தப்பட்டனர். பழங்கால கன்பூஷிய அடிப்படையிலான சிவில் சர்வீஸ் தேர்வு முறைகள் தொடரப்பட்டன. ஆயிரம் ஆணடுகளாக இருந்து வந்த இம்முறை மீண்டும் புத்தொளியோடு பின்பற்றப்பட்டது. மேலைநாட்டுப் பாணியில் பொதுக் கல்வியானது முற்றிலும் சீர்திருத்தப்பட்டது. 1907-ம் ஆண்டிலிருந்து பெண்கள் கல்விக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கப்பட்டது. கல்வி அமைச்சகம் ஒன்று நிறுவப்பட்டது. நாடெங்கிலும் ஆயிரக்கணக்கான பள்ளிகள் திறக்கப்பட்டன. 1910-ம் ஆண்டில் 89,000 ஆசிரியர்களைக் கொண்ட 57,000 பள்ளிகள் இருந்தன. மேலை நாடுகளுக்கும் ஜப்பானுக்கும் மாணவர்கள் படிக்கச் சென்றனர். சிவில் சர்வீஸ் தேர்வின் முக்கியப் பாடமான எட்டுக்கால் கட்டுரை’ நீக்கப்பட்டு தற்கால செய்திகள் அதிகம் சேர்க்கப்பட்டன.

**2)சமூகச் சீர்திருத்தங்கள்**

1902-ம் ஆண்டில் சீர்திருத்த ஆணைகள் வெளியிடப்பட்டு சீனர்களுக்கும் மஞ்சுக்களுக்கும் இடையில் நிலவிய கலப்புத் திருமணத்திற்கு இருந்த தடை நீக்கப்பட்டது. பெண்களின் கால்களைக் கட்டிப்போடும் பழக்கம் அறவே நீக்கப்பட்டது.

வுல்லரசுகளின் உதவியுடன் அபினி இறக்குமதி செய்வது தடை செய்யப்பட்டது. உள்நாட்டில் அபினி தயார் செய்வதும், கணிசமான அளவுக்குக் குறைக்கப்பட்டது.

**3)நிர்வாகச் சீர்திருத்தங்கள்**

ஆவசியமற்ற அலுவலகங்கள் நீக்கப்பட்டன. புதிய அலுவலகங்கள் திறக்கப்பட்டன. சுங்கிலி ஏமன் என்ற அலுவலகத்திற்குப் பதிலாக அயல்நாட்டுத் தூதரகம் அமைக்கப்பட்டது. வாணிபம், இராணுவ பயிற்சி, காவல்துறை, கல்வி ஆகியவற்றுக்கு அமைச்சகங்கள் நிறுவப்பட்டன.

**4)ராணுவ சீர்திருத்தங்கள்**

இருப்புப்பாதைகள் கட்டுவது, ஆய்த உற்பத்திக் கிடங்குகளை ஏற்படுத்துவது, கனிவளங்களைத் தோண்டுவது ஆகியவை நடைபெற்றன. நிர்வாக இயந்திரம் செவ்வனே செயல்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. துன்புறுத்துதல் பிற கொடுமையான தண்டனைகள் ஆகியவை அறவே நீக்கப்பட்டன. பயனற்ற அதிகாரிகளின் பதவிகள் அகற்றப்பட்டன. ஏராளமான பொருளாதாரத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட போதிலும் முன்னேற்றம் மெதுவாகவே நடைப்பெற்றது. அதற்குக் காரணம் அதிகாரிகளின் மாறுபட்ட போக்கே எனலாம்.

**6.அரசியல் சீர்திருத்தங்கள்**

1904-05ம்' ஆண்டுகளில் ஏற்பட்ட ரஷ்ய-ஜப்பானியப் போரின் விளைவாக சீனாவில் அரசியல் சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. அரசியல் அமைப்பின்படி அமைந்த ஜப்பானிய அரசு வல்லாட்சியின் பால் அமைந்த ரஷ்யாவை தோற்கடித்தது. ரஷ்ய சீன நாடுகள் ஜப்பானிடம் தோல்வி கண்டது. இத்தகைய சீர்திருத்திற்கு வழி வகுத்தது. ஜப்பானில் நிலவிய அரசாங்க முறைதான் வலுவானது. துங்களுக்கு ஏற்றது என்று அவர்கள் உணரலானார்கள்.

குாங்யூவையின் சீடரான லியாங், சிவோ போன்ற சீர்திருத்தவாதிகளால் அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் ஆக்கம் பெற்றன. லியாங் என்பவர் ரூசோ, மாண்டஸ்கியூ போன்றவர்களின் தத்துவங்களில் பயிற்சி பெற்றவராவார். அவர் ஜப்பானிலிருந்து பல சஞ்சிகைகளும் சீனாவின் இளம் அறிவு ஜீவிகளைக் கவர்ந்தன. அவர் தன்னுடைய பிரச்சாரத்தின் மூலம் அரசியல் சீர்திருத்தங்களுக்கான சூழ்நிலைகளை உருவாக்கினார். அவர் அரசியல் செய்திகளை அறியும் சங்கம் ஒன்றை நிறுவி, பொறுப்புள்ள அமைச்சரவை அரசாங்க முறைக்கு திட்டமிட்டார்.

தோவேஜர் பேரரசு அதிகாரத்தை மக்களுடன் பகிர்ந்து கொள்வதில் தயக்கம் காட்டியபோதிலும், அயல்நாடுகளுக்கு அதிகாரிகள் அடங்கிய ஒரு குழுவை அனுப்பி அத்தகைய சீர்திருத்தங்களைக் கண்டுவர வற்புறுத்தப்பட்டார்.

**7)1908-ம் ஆண்டு அரசியலமைப்பு**

இங்கிலாந்து ஜெர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகளின் அரசியலமைப்புப் பற்றிஅ ங்கு சென்று வந்த குழுவின் அறிக்கையினை ஆராய்ந்து இறுதியில் சீனர்கள் ஜப்பானிய முறையைப் பின்பற்றலாயினர். 1908-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட அரசாங்கம் பேரரசருக்கு ஏராளமான அதிகாரங்களை வழங்கியது. அவர் மட்டும் தான் சட்டங்களைச் செய்யலாம். பாராளுமன்றத்தைக் கூட்டவோ ஒத்தி போடவோ அவருக்கு அதிகாரமுண்டு. போரினை அறிவிக்கவும் அமைதி உடன்பாடு செய்து கொள்ளவும் அவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. அனைவருக்கும் பேசவும் கருத்துக்களை தெரிவிக்கவும் கூட்டம் கூடவும் சுதந்திரம் வழங்கப்பட்டது. அந்த அரசியலமைப்பின்படி இருசபைகள் கொண்ட ஒரு பாராளுமன்றத்திற்கு வகை செய்யப்பட்டது. நாடு தழுவிய பிரச்சனையை மட்டும் அது விவாதிக்கும் மாநில விஷயங்களில் தலையிட அதற்கு அதிகாரம் இல்லை. அதைப்போலவே வரவு செலவுத் திட்டத்தில் அதன் அதிகாரம் எல்லைக்குட்பட்டதாகும்.

ஒன்பது ஆண்டுகளில் படிப்படியாக இந்தத் திட்டமானது செயல்பட வேண்டுமென பேரரசி தோவேஜர் விரும்பினார். முல் கட்டத்தில் மாநில சட்டமன்றங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 1917-ம் ஆண்டில் அந்த அரசியலமைப்பானது முழுமையாகப் பின்பற்றப்பட்டது.

ஆரசியலமைப்புத் திட்டங்கள் மிகவும் சொற்பமானவையாகும். தாராளவாதிகளும், புரட்சிவாதிகளும் அதில் பெரிதும் ஏமாற்றமடைந்தனர். பேரரசருக்கு அதிக அதிகாரம் வழங்கியதை சீர்திருத்தவாதிகள் விரும்பவில்லை. அவர்கள் மக்கள் பங்கேற்கும் அரசியலமைப்பிற்குட்பட்ட முடியாட்சினை விரும்பினர். ஆதற்கு மாறாக அது மஞ்சசுக்களின் அதிகாரங்களை அதிகப்படுத்தியது. இவ்வாறு பரவலான ஏமாற்றம் நாட்டில் இருந்து வந்தது.

1908-ம் ஆண்டு பேரரசரும், பேரரசியும் சேர்ந்தாற்போல இறந்து விட்டனர். இக்கட்டான நேரத்தில் பேரரசி தோவேஜர் இறந்தது வலிமை பொருந்திய திறமையான ஒரு பேரரசியை அரசியல் வானிலிருந்து அகற்றியது போல அமைந்து விட்டது. அவள் மிகவும் தற்பெருமையும், கடுமையும், விடாப்பிடியும் கொண்டவள். ஆனால் எல்லாவற்றிக்கும் மேலாக 'பழைய புத்தர்' என்று அழைக்கப்படும் அப்பேரரசி சக்தி வாய்ந்த ஆளுமையைப் பெற்றிருந்தார். வம்ச வீழ்ச்சி என்னும் நீண்ட கதையில் அவளுடைய பெருமைமிகு வாழ்க்கை ஒரு முக்கிய சோக்கதையாக அமைந்து விட்டது.

**மஞ்சுக்களின் வீழ்ச்சி**

படிப்படியாக மாற்றங்களைக் கொண்டுவர வேண்டுமென நினைத்த பேரரசியின் வாழ்வு குறுகியதாகிவிட்டது. தீவிரவாதிகள் மஞ்சுக்களின் நேர்மையை சந்தேகித்து அவர்களது ஆட்சியை மாற்ற வேண்டும், மக்களின் அரசாங்கம் ஒன்று ஏற்படுத்த வேண்டும் என்றும் கோரினார்கள். குாகிதத்தில் சீர்திருத்தம் கொண்டு வருவது எதையும் செய்யாது என்பது தொளிவாயிற்று. நாட்டில் பரவலான குழப்பம் கொந்தளிப்பு ஆகியவற்றாலும், உள்நாட்டுப் போராலும் அந்த மஞ்சு வம்சமானது 1811-ம் ஆண்டு புரட்சியினால் தூக்கி எறியப்பட்டது.

**சீர்திருத்த இயக்கத்தின் மதிப்பீடு**

தன்னுடைய தற்கால வரலாற்றில் சீனா 1901 முதல் 1911 வரையிலான ஆண்டுகளில் பெரும் இக்கட்டான சூழ்நிலைகளில் ஒன்றை அனுபவித்தது. அதனுடைய அரசாங்கம் சீர்திருத்தங்களின் மூலம் சிக்கல்களை களைய முயற்சித்தது. அந்த புதிய சீர்திருத்தங்கள் சீனர்களின் பண்டைய வழக்கங்களை அடிப்படையிலேயே மாற்றக்கூடியவைகளாக இருந்தன. அவைகளை அமல்படுத்தியதால் இருபதாம் நூற்றாண்டின் புரட்சிக்கு ஆக்கம் ஏள்பட்டது. எனினும் அச்சீர்திருத்தங்களால் அந்த வம்சத்தைக் காப்பாற்ற முடியவில்லை. நவீனமயமாதல் என்னும் கோட்பாடு கன்பூஷிய நிலையினை அறவே நீக்கிவிட்டது.

சீர்திருத்தங்களை செய்ய வேண்டுமென்ற முயற்சி இக்காலத்தில் வெறும் காகித அளவிலேயே, அதாவது ஏட்டளவிலேயே இருந்தது. அவைகளை அமலாக்கும் அளவிற்கு ஒரு வலுவான மைய அரசாங்கம் இல்லை. படிப்படியான சீர்திருத்தங்களின் மூலம் மஞ்சுக்கள் தங்கள் ஆட்சியை நிலைநாட்டிக் கொள்ள முயன்றனர். மக்களுக்கு ஆலோசனைக் கூற உரிமை கொடுத்துவிட்டு உண்மையான அதிகாரத்தை தாங்கள் வைத்துக் கொள்ளலாமென நம்பினர். ஜப்பானைப் போலவே சமுதாய அமைப்பின் அடிப்படையையும், அரசியல் தத்துவத்தையும் அப்படியே வைத்துக் கொள்ள எண்ணினர். ஆனால் அவைகள் தற்கால அரசியல் சீர்திருத்தங்களுக்கு ஒத்து வரவில்லை. பழமைக்கும் புதுமைக்கும் ஒரு பாலம் ஏற்படுத்த சீனாவில் நல்ல தலைவர்கள் இல்லை. நெருக்கடி தாங்கமுடியாமல்தான் மஞ்சுக்கள் சீர்திருத்தங்கள் செய்ய முன்வந்தனர். தாமதித்து செய்ய முற்பட்டதால் ஒரு சில சீர்திருத்தங்களையே அவர்களால் செய்ய முடிந்தது.

‘தோவேஜரின் திட்ட முக்கியமாக படாடோபமாக இருந்தது. ஆனால் அதில் பொளும் இல்லை, சாதிக்கும் உறுதிமொழியும் இல்லை. மூன்று நிலையான செயல்கள் மேற்கொள்ளப்பட்டன. அவைகள் 1.சிவில் சர்வீஸ் தேர்வுகளை ஒழித்தல் 2. நவீனப் பள்ளிகளை ஏற்படுத்தல் 3. மாணவர்களை அயல்நாடுகளுக்கு அனுப்புவது என்று இமானுவேல் ஹசு என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

**தோவேஜர் பேரரசி**

புழைய புத்தர் என்று அழைக்கப்பட்ட தோவேஜர் பேரரசி ஷீன் பெங் என்ற பேரரசரின் ஆசைநாயகி ஆவார். ஷீன் பெங் 1851 முதல் 1861 வரை ஆட்சி புரிந்தவராவார். 1861-ம் ஆண்டில் ஜொஹோல் என்ற இடத்தில் அவர் இறந்த போது தோவேஜர் ஆட்சியைப்பிடிக்கும் திறமையைப் பெற்றிருந்தார். தந்திரத்தின் மூலம்’ கைப்பற்றிய ஆட்சியை, தான் 1908-ல் இறக்கும்வரையில் ஏறக்குறைய 48 ஆண்டுகாலம் பராமரித்து வந்தார். அவருடைய ஆட்சிக்காலத்தில் துங்சி, குவாங்சு என்ற இரு சிறார்கள் பேரரசர்களாக இருந்து வந்தனர். அவர்களுக்கு அம்மையார் பாதுகாப்பாளராக இருந்து வந்தார். மஞ்சு அரச அவையில் அவர் வலிமை பொருந்தியவராவார். அவர் விக்டோரியா மகாராணியாரைவிட அதிக அதிகாரத்தைப் பெற்றிருந்ததாகக் கூறப்படுகிறது.

**அவருடைய கொள்கைகளும் கோட்பாடுகளும்**

அறிவு நுட்பமும், முடிவு எடுக்கும் மனப்பாங்கும் அவர் அறியாமையில் இல்லாமல் இல்லை. ஆனால் அடிப்படையிலேயே அவர் அறியாமையில் உழன்றவர்,பழமைவாதி, குறுகிய மனபாங்கு உள்ளவர், சுயநலமிக்கவர், தன் நாடு, தன் வம்சம் ஆகியவற்றைவிட தன்னுடைய நலமே பெரிதெனக் கொண்டவர். கன்பூஷியத் தத்துவத்தில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர். சமூக அரசியல் செயல்களில் அந்தத் தத்துவத்தைப் பயன்படுத்தி தன் நிலையினை உயர்த்திக் கொள்ளலானார். அவர் அனைவரின் மனப்பாங்கினையும் எளிதில் அறியும் திறமை கொண்டவர். ஆனால் குள்ள நரித்தந்திரம் கொண்டவர். எதையும் தோயத்தோடு நோக்கும் பக்குவம் பெற்றனர். அவர் எப்போது தன் அதிகாரத்தையும் நிலையையும் வெளிப்படையாக காட்டிக்கொள்ளவில்லை. தன்னுடைய நம்பிக்கைக்கு உரியவர்களின் துணையுடன் திரைமறைவில் இருந்து கொண்டு தன் காரியங்களை செய்து முடிக்கும் ஆற்றல் கொண்டவர். தன்னுடைய அதிகாரத்திற்கும், செல்வாக்கிற்கும் எப்போதாவது ஆபத்து என்றால் மிக வரைந்து செயல்பட்டதோடல்லாமல் தீங்கான வழிவகைகளைக் கொண்டு அவற்றைச் சமாளிக்க தயங்கியதும் இல்லை. அவர் எதையுத் ஆராய்ந்து முடிவு எடுக்கும் மனப்பாங்கு உள்ளவர் எனினும் அவர் படிக்காதவர் என்பது குறிப்பிடதக்க குணவியல்பாகும்.

**1861-ல் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையில் அவருடைய பங்கு**

1861-ம் ஆண்டில் ஜொஹேலில் தஞ்சம் புகுந்த பேரரசர் ஷீன் பெங் இறந்து போனார். அவருடைய மனைவிக்கு வாரிசு எதுவும் இல்லை. அவருடைய ஆசைநாயகியான சூஹ்சி என்பவருக்கு ஒரு ஆண் குழந்தை உண்டு பேரரசர் இறப்பதற்கு முன்பு அவருடைய வாரிசாக அந்த ஆறுவயதுச் குழந்தை நியமிக்கப்பட்டான். அப்போது பாதுகாவலர் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டு அது அவனுடைய

குழந்தைப் பருவத்தில் ஆட்சி புரிந்து வந்தது. ஆனால் சூஹ்சி இளவரசன் சூங் என்பவருடன் சேர்ந்து கொண்டு திடீர் புரட்சியில் இறங்கி பாதுகாவலர் குழுவினை துாக்கி எறிந்தாள். ஆதன்பின் அவளும் குங்கும் இணைந்து பகர ஆளுநர்களாக இருந்து வந்தனர். அவ்விருவரும் பட்டுத் திரையின் பின்னால் இருந்து கொண்டு அரச காரியங்களை கவனித்து வந்தனர். நாளடையில் சூஹ்சியே அரசின் உண்மையான தலைவராக விளங்கினாள். சுதித் திட்டத்திலும், தந்திரத்திலும், வல்லவரான சூஹ்சி 1881-ல் வாரிசு அரசியை கொலை செய்துவிட்டு எல்லா அதிகாரங்களையும் கைப்பற்றி கொண்டாள் என்ற ஒரு கருத்தும் நிலவுகிறது. பேரரசர் சிறுவனாக இருந்ததால் ஏறக்குறைய பதினாறு ஆண்டுகள் அரச காரியங்களை நன்கு நிர்வகித்து எல்லாவற்றையும் எளிதில் கைப்பற்றி வலிமை பெற்று விளங்கலானாள்.

**தன்வலிமைப்படுத்தும் இயக்கத்தில் அவரது மனோநிலை**

துங்சி காலத்திய தன்வலிமைப்படுத்தும் இயக்கத்தினை சூஹ்சி ஆதரித்தார். அவர் சீனாவை நவீன அரசாக மாற்ற வேண்டும் என்பதற்காக ஆதரிக்கவில்லை. அவர் பழமையைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காகவும் தன்பதவியை பாதுகாத்து கொள்ள வேண்டும்

என்பதற்காகவும் ஆதரித்தாரே அன்றி வேறில்லை. உள்நாட்டுக் கிளர்ச்சியினை அடக்கி அயல்நாட்டுப் போராதிக்கத்தைக் கட்டுப்படுத்தவே அவர் அவ்வாறு செய்தார். முழுமையான மாற்றத்திற்குப் பதிலாக ஓரளவு சீர்திருத்தம் ஏற்பட்டால் போதும் என்று எண்ணினார்.

**1875-ல் ஏற்பட்ட போசின் வாரிசில் தலையீடு**

பேரரசர் துங்சி என்பவர் தன்னுடைய 14 ஆண்டுகால ஆட்சியில் 11 ஆண்டுகள் இளமைப்பருவத்தினராக இருந்தார். மீதமுள்ள இரண்டு ஆண்டுகள் திறமையற்றவராகக் காணப்பட்டார். 1873-ம் ஆண்டில் தன் நேரடி ஆட்சியினை நடத்திய போது தன் தாயின் தலையீட்டால் சோர்வடைந்தார். கோடைக்கால அரண்மனையை மீண்டும் கட்ட எண்ணிக் கொண்டிருந்த போது அவர் காலமானார். ஆப்போது அவருக்கு 19 வயது துங்சியின் இக்குறுகிய ஆட்சிகாலம் ஒரு சோகக்கதையாக அமைந்து விட்டது. அவர் வாரிசு இல்லாமல் இறந்து போனார். ஆனால் அவரது மனைவி கருவுற்றிருந்தாம் எனவே வாரிசு உரிமையில் சிக்கல் ஏற்பட்டது. சூஹ்சி மீண்டும் பகர ஆளுநராகப் பொறுப்பேற்கும் வாய்ப்பு வந்ததைக் கண்டார். பேரரசின் பொறுப்பிற்கு தக்க வயது அடைந்த இளைஞன் தேர்ந்தெடுக்கப்பட்டால் பகர ஆளுநர் என்ற பேச்சுக்கு இடமிருக்காது. ஆதனால் புதிய ஆட்சியாளரும் ஒரு இளைஞனாக இருக்க வேண்டும் என எண்ணினார். பேரரசிக்கு குழந்தை பிறக்கும் வரையில் இதைத் தாமதப்படுத்தலாம் என இளவரசர் குக்கின் ஆலோசனையை சூஹ்சி நிராகரித்தார். இருபத்தேழு இளவரசர்கள் கூடியிருந்த அவையில் அவர் தன் விருப்பத்தை சர்வாதிகார முறையில் வெளியிட்டார். அந்தச் சிறுவன்தான் நான்கு வயதான குவாங்சு என்பவன் மீண்டும் அந்த இருவரும் அவனுக்கு பகர ஆளுநர்களாக விளங்கி வந்தனர். அவன் 1887-ல் உற்ற வயது அடைந் போது தன் நேரடி ஆட்சிக்கு தடை ஏற்பட்டதை அவன் உணர்ந்தான். எனினும் இரண்டு ஆண்டுகளில் அவன் ஆட்சி செய்யும் கலையினை அவரிடமிருந்து கற்றுக் கொண்டான். 1889-ல் தான் குவாங்சு ஆட்சிப் பொறுப்பு முழுவதையும் ஏற்றுக் கொண்டார்.

**சூஹ்சியும் நூறுநாள் சீர்திருத்தமும்**

குாங் யு வையினால் பெரிதும் கவரப்பட்ட பேரரசர் குவாங் சு நூறுநாள் சீர்திருத’தங்களை வெளியிடலானார். கன்பூஷியக் கோட்பாட்டின் அடிப்படையிலான பத்தாம் பசலி அரசை தற்கால அரசாக மாற்ற ஏராளமான ஆணைகள் வெளியிடப்பட்டன. புதிய நிர்வாக முறையினை ஏற்படுத்தா அவசியமற்ற பதவிகள் நீக்கப்பட்டன. அதன் விளைவாக மஞ்சு பிரபுக்கள் தங்கள் பதவிகளையும் செல்வாக்கையும் இழந்தனர். சிவில் சர்வீஸ் தேர்வில் பின்பற்றப்பட்ட ‘எட்டுக்கால் கட்டுரை’ யானது நீக்கப்பட்டது. இதனால் முழுமையாக கன்பூஷிய செல்வாக்கு நிர்வாகத்திலிருந்து அகற்றப்பட்டது. பாதிக்கப்பட்ட அதிகாரிகள் தோவேஜர் பேரரசியை நாடித் தலையிடச் செய்தனர். அவரே பழமைவாதியாகையால் எல்லாச் சீர்திருத்தங்களையும் எதிர்க்கலானார்கள். ஆனால் அவர் எதிர்ப்பாளர்கள் கை ஓங்க வேண்டும் என வாளாவிருந்தார். அவரது தலையீட்டால் பீதி கொண்ட சீர்திருத்தக்காரர்கள் அவரை கைது செய்ய முயற்சி செய்தனர். ஆனால் அம்முயற்சி தோல்வி அடைந்தது.

1861-ம் ஆண்டிலிருந்து 37 ஆண்டுகள் பேரரசி தோவேஜர் அரசின் முழு ஆதிகாரம் பெற்று விளங்கினார். அவருடைய நம்பிக்கைக்கு உரியவர்கள் பங்கு பெற்றிருந்த பெரும்

அவையின் முடிவுகள் அரசியாருக்கு அப்போதைக்கப்போது தெரிவிக்கப்பட்டது. அவரது பார்வையிலிருந்து எதுவுமே தப்பியது கிடையாது. ஏந்த கன்பூஷியக் கோட்பாட்டின் அடிப்படையில் தன் பதவியும்செல்வாக்கும் பதிந்திருந்ததோ அது வேரோடு பிடுங்கப்பட்ட போது அவர் ராணுவத்தின் துணை கொண்டு மீண்டும் அப்பதவிக்கு வரலானார். அவர் பேரரசின் அரண்மனையை சூறையாடி சீர்திருத்த பத்திரங்களைத் தூக்கி எறியலானார். பேரரசர் கடும் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருப்பதால் தான் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக் கொள்வதற்கு முன்வந்ததாக வெளிப்படையாகவே வெளியிட்டார். இவ்வாறு மூன்றாவது முறையாக அவர் நிர்வாகப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டார். பேரரசின் தோட்டத்தில் அமைந்திருந்த ஒரு சிறிய தீவில் பேரரசர் கைதியாக வைக்கப்பட்டார். திடுதிப்பென்று சீர்திருத்த இயக்கமும் முடிவு பெற்றது.

**பாக்சர் கலவரத்தில் அவரது பங்கு**

ஆரம்பத்தில் பாக்சர் கலவரம் மஞ்சுக்களுக்கும், அயல்நாட்டவர்களுக்கும் எதிராக ஆரம்பிக்கப்பட்டது. அக்கலவரத்தினர் மஞ்சுக்களைப் பதவியிலிருந்து அகற்ற வேண்டும் என்றும், அவர்கள் இறைவன் விருப்பபடி ஆட்சியை நடத்தவில்லை என்றும் கூறினர். ஆனால் பேரரசி சாமர்த்தியமாக அவர்களுக்கு உதவி செய்து அவர்களை அயல்நாட்டவர்களுக்கு எதிராக முடுக்கி விடலானார். ஒரு பக்கம் அயல் நாட்டவரின் செல்வாக்கு மண்டலங்களாக நாடு பிரிந்து செல்வதைக் கண்டார். மற்றொரு பக்கம் சீர்திருத்த இயக்கங்களால் நாடு மேலைமயமாதலை அவர் கண்டார். பீகிங்கிலிருந்த அயல்நாட்டு தூதர்கள் மிகவும் மோசமாக நடந்து வந்தனர். அவர்கள் செயல்களால் ஏமாற்றம் அடைந்த அவர் பாக்சர்களை அவர்கள் பக்கம் திருப்பலானார். அவர்களுடைய மாயவித்தைகளிலும், தந்திரங்களிலும் நம்பிக்கை கொண்ட அவர் பாக்சர்களுக்கு நல்லாதிரவினையும், ஆசியையும் ரகசியமாக நலகினார். பின்னர் வெளிப்படையாக அவர்களை ஆதரிக்கலானார். பேரரசியின் ஆதரவு பெற்ற பாக்சர்கள் மிகத் தீவிர நடவடிக்கையில் இறங்கினார். குறுகிய காலத்தில் வடசீனா முழுவதும் வன்முறை தலைவிரித்தாடியது. 1900-ம் ஆண்டு ஜீன் திங்களில் அயல்நாடுகளை எதிர்த்து அரசாங்கம் போரில் ஈடுபட்டது. பீகிங்கிலிருந்த அயல்நாட்டுத் தூதர்களை முற்றுகையிடும்படி பாக்சர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இதைக் கண்ட அந்நாடுகள் கூட்டுப்படையொன்றை ஜெர்மன் தளபதி லால்டர்சி என்பவர் தலைமையில் உருவாக்கினார். அதில் 18,000 துருப்புகள் இருந்தன. அந்தக் கூட்டுப்படை சீனாவை அடைந்து டியன்சின் நகரைக் கைப்பற்றியது. பீகிங்கில் தங்கள் கொடியை நாட்டியது. பேரரசி தோவேஜர் மாறுவேடத்துடன் அங்கிருந்து ஓட்டம் பிடித்தார். தான் செய்த அரசியல் தவறுகளில் ஒன்று பாக்சர்களை ஆதரித்தது என்று அவர் பின்னாளில் உணரலானார்.

**சீனாவை சீர்திருத்த முயற்சித்தல்**

பாக்சர் கலவரம் அவருக்கு ஏற்பட்ட ஒரு கசப்பான அனுபவமாகும். வரலாறு காணாத அளவுக்கு அழிவைத் தேடித்தந்ததற்கு அவர் வெட்கமும் வேதனையும் அடைந்தார். அயல்நாட்டினரால் ஏற்பட்ட அவமானத்தை நீக்க முற்பட்டவருக்கு மேலும் அவமானமும் மலைகுனிவும் ஏற்பட்டன. இறுதியில் சீனாவை சீர்திருத்தங்கள் மூலம் நன்னிலைக்குக்

கொண்டுவர விரும்பினார். தன் பதவியையும், செல்வாக்கையும் காப்பாற்றிக் கொள்ள அதுதான் ஒரே வழி என எண்ணினார். ஆதன்படி சீர்திருத்தங்களை வெளியிடலானார். அவருடைய சீர்திருத்தங்களில் கல்வி, ராணுவம், கப்பற்படை, அரசாங்க அமைப்புமுறை, அபினியை ஒழித்தல் போன்ற பலவித துறைகள் இடம் பெற்றன. கறைபட்ட வீட்டைத் தூய்மைப்படுத்தும் வகையில் இவைகள் எல்லாம் அமைந்திருந்தன. சமூக பொருளாதார அமைப்பில் அவர் மேற்கொ்ட சீர்திருத்தங்கள் மிகவும் சொற்பமானவை. ஆவைகள் பிரமிக்கத்தக்க முன்னேற்றம் எதையும் கொண்டுவலவில்லை. எனவே அவருடைய சீர்திருத்தங்கள் சாதனைகள் அற்ற வெறும் வெற்றுவேட்டு என்றால் அது மிகையாகாது.

**அவருடைய மரணம்**

தன்னுடைய 73வது வயதில் தோவேஜர் நோய்வாய்பட்டார். மூன்று மாதங்களுக்குள்ளாகவே அவர் (1908-ம் ஆண்டில்) மரணம் அடைந்தார். அவருடைய மரணத்திற்கு முதல் நாள் பேரரசர் குவாங்சு என்பவரும் மாண்டு போனார். அவருக்கு அரசி சூ ஙஹி தான் இறப்பதற்கு முன் விஷம் வைத்ததாகக் கூறப்படுகிறது.

**அவருடைய வெற்றிக்குக் காரணங்கள்**

ஒரு பெண் எப்படி அப்படிப்பட்ட அதிகாரத்தையும், செல்வாக்கையும் பெற்றிருந்தார் என்றும் அதிகாரிகள் ஏன் அவரை எதிர்க்காமல் கீழ்ப்படிந்து நடந்து வந்தனர் என்றும் கேள்வி எழலாம். அவருடைய வெற்றிக்குக் கீழ்காணும் அவருடைய தந்திர வழிகளே காரணங்களாயிருந்தன.

1. அவர் எல்லா மஞ்சுக்களையும், வம்சவழிச் சட்டங்களையும் முன்மாதிரிகளையும் பின்பற்றச் செய்தார். அரச குடும்பத்தினரை நன்கு கவனித்து வந்தார். அவர்களுக்கான சட்டங்கள் தன்முறையில் பின்பற்றப்பட்டன. குற்றவாளிகள் கடுமையாக தண்டிக்கப்பட்டனர்.

2. ஆட்சியாளரும், ஆட்சி செய்யப்படுவோரும் கன்பூஷியக் போட்பாடுகளை நன்முறையில் பின்பற்றச் செய்தார். அத்துடன் மக்கள் பின்பற்ற வேண்டிய கடமைகள் வலியுறுத்தப்பட்டன.

3. சேங்-குவே-பென், லி ஹங்கங், யுவான் ஷி கே போன்ற திறமையான சீன அதிகாரிகளின் ஒத்துழைப்பு அவருக்கு இருந்தது. அவர்களுக்குப் பெரும் பதவி கொடுத்து அவர் போற்றினார். அதே சமயத்தில் அவர்களைக் கண்காணிப்பில் வைத்திருந்தார்.

4. இளம் சிறார்களைப் பதவியில் அமர்த்திவிட்டு தான் பகர ஆளுநராக இருந்தார். அரசாங்கத்தைக் தன் கைகளில் எடுத்துக் கொண்டார்.

5. கோள்கையில் நிலையில்லாத, செயல்களில் நம்பிக்கைத் துரோகமுடைய அவர் பதவியில் நீடித்து இருந்தார் என்பது அரிய செயலேயாகும். சூலத்தின் தேவைக்கேற்ப அவர் ஊக்குவிக்கப்பட்டார். புகழப்பட்டார். ஊழலில் ஈடுபடலானார். தான் விரும்பியதைக் கேட்டுப் பெறலானார்.

மேற்கண்ட செயல்களால் அவர் சீனாவை அரை நூற்றாண்டு காலம் ஆண்டு வரலானார்.

## அலகு - 2

### 1911-ம் ஆண்டுப் புரட்சி

மஞ்சு வம்சம் ஏறக்குறைய 267 ஆண்டுகள் சீனாவை ஆண்டு வந்தது. அவ்வம்சம் 191-ம் ஆண்டு வரை ஆட்சி செய்து வந்தது. அவ்வம்சம் வலிவும் பொலிவும் பெற்றிருந்தாலும் அதன் இறுதிக்காலத்தில் அது வலிமையற்று, திறமையற்றுக் காணப்பட்டது. 19-ம் நூற்றாண்டின் மத்தியில் அவ்வம்சம் பல சிக்கலான பிரச்சனைகளை சந்திக்க வேண்டியிருந்தது. அங்கு கொருளாதாரச் சீர்குலைவும், அதிகார வர்கத்தின் திறமையின்மையும் ஒருங்கே காணப்பட்டன. அதற்கும் மேலாக அயல்நாட்டவரின் ஊடுருவல் வேறு ஏற்பட்டது. இச்சூழ்நிலைகள் சீனாவின் சமூக பொருளாதார, அரசியல் அமைப்புகளில் தீவிர மாற்றங்களை ஏற்படுத்தின. எனினும் மஞ்சு வம்சத்தின் அழிவு தவிர்க்க முடியாததாயிற்று.

**1911-ம் வருட புரட்சிக்கான காரணங்கள்**

**1)பொருளாதாரக் காரணங்கள்**

1911-ம் ஆண்டில் ஏற்பட்ட புரட்சிக்கு அடிப்படைக் காரணங்கள் பொருளாதாரக் காரணங்களாகும். 1911-ம் ஆண்டிற்கு முந்தைய 29 ஆண்டுகளில் மக்கள் தொகை பெருமளவிற்குப் பெருகியது. 1885-ல் 77 மில்லியன்களாக இருந்தது. 1911-ல் 430 மில்லியன்களாக அதிகரித்தது. மக்கள் தொகைப் பெருக்கத்திற்கு ஏற்ப உணவுப்பொருள் உற்பத்தி அதிகரிக்கவில்லை. மைய மாநிலங்களில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் 1910-11ம் ஆண்டுகளில் நிலவிய சாதாரண உணவு நிலைமையும் பாதிக்கப்பட்டது. ஏழு மாநிலங்களில் வறட்சிவேறு ஏற்பட்டது. லட்சோப லட்சம் மக்கள் பட்டினியாலும் பசியாலும் வாடினர். பலர் மாண்டனர். இயற்கையிலேயே மக்கள் மனதில் வெறுப்பு ஏற்பட்டது. மஞ்சூரியாவிற்கும் சீனாவில் மக்கள் தொகை குறைந்து காணப்பட்ட இடங்களுக்கும் பலர் குடியேறிதன் விளைவாக நிலைமை சற்று சீராகியது. ஆனால் பஞ்சம் புரட்சி ஏற்படுவதற்கு போதுமானதாக அமைந்தது என்றால் தில் எவ்வித ஐயப்பாடும் இல்லை.

முற்றொரு பொருளாதாரக் காரணம் நிதி நிலைமையாகும். ராணுவத்தைச் சீராக்கியதாலும், இருப்புப்பாதைகளை கட்டியதாலும், புதிய கல்வி நிறுவனங்களை ஏற்படுத்தியதாலும் அரசாங்கத்தின் செலவுகள் அதிகரித்துக் கொண்டே இருந்தன. அத்துடன் சீ-ஜப்பானியப் போர், பாக்சர் கலவரம் ஆகியவற்றின் மூலம் ஏற்பட்ட இழப்பீட்டுத் தொகையினைக் கட்ட வேண்டி இருந்தது. அதன் விளைவாக வரிகள் மிகவும் அதிகமாயின. புதிய வரிகள் விதிக்கப்பட்டன. வரிச்சுமை தாங்கமுடியாத அளவிற்கு அதிகமானது. இதனால் மஞ்சு வம்சத்தை வெறுத்தனர். அவர்கள் மீது அதிருப்தி கொண்டனர்.

**2)புரட்சிக் கருத்துக்களின் எழுச்சி**

பொருளாதாரச் சீர்குலைவு மக்கள் மனதில் புரட்சிக் கருத்துக்களை புகுத்தின. நூறு நாள் சீர்திருத்தக் காலத்திலிருந்தே ஒரு புரட்சிக் கட்சி இயங்கி வந்தது. அது காங் யு வையின் தலைமையில் டோக்கியோவில் இயங்கி வந்தது. அவருடைய சீடராக லியாங் சி சலோவும் இருந்து வந்தார். அவர்கள் அரசியலமைப்பின் அடிப்படையிலான முடியாட்சிக்

கோட்பாட்டை பரப்பி வந்தனர். அங்கு டாக்டர் சன் யாட் சென்னரல் மஞ்சு வம்சத்திற்கு எதிராகஒரு புரட்சி இயக்கம் ஏற்படுத்தப்பட்டது. 1095-ம் ஆண்டில் டாக்டர் சென் ‘‘துங் மெங் ஹுய்’’ என்ற நட்புறவுக் கழகம் என்பதை ஏற்படுத்தினார். அக்கழகம் புரட்சிக்குக் காரணமாக அமைந்தது.

தன் சங்கத்தின் கோட்பாடுகளைப் பரப்ப டாக்டர் சென் நாடெங்கிலும் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். யாங்சிக்குத் தெற்கே இருந்த பல சங்கங்களுடன் அவர் தொடர்பு கொண்டிருந்தார். மஞ்சுக்களுக்கு எதிரான கூறுகள் கொண்ட ஒரு புதிய வடை நிறுவப்பட்டது. டாக்டர் சென் புரட்சியில் ஆற்றிய பங்கு உண்மையிலேயே அளவிடற்கரியதாகும். முக்களின் வெறுப்பை வெற்றிகரமான புரட்சியாக மாற்றியவர் டாக்டர் சென்தான். மற்றொரு புரட்சியின் மையம் மாணவர்கள் வெளிநாடு சென்று படிக்கலானார்கள். வெளிநாடுகளிலிருந்து திரும்பியவர்கள் தங்கள் நாட்டில் வேலையில்லாதது கண்டு வேதனை அடைந்தனர். அவர்கள் மிகவும் நொந்து கொண்டனர். அயல்நாட்டு அனுபவத்தாலும் பயிற்சியாலும் புரட்சி இயக்கத்திலும் ஆர்வம் கொண்டனர்.

**3)புரட்சிக் கட்சிகளின் எழுச்சி**

268 ஆண்டுகள் ஆட்சி செய்த மஞ்சு வம்சத்தின் மீதான வெறுப்பு எப்போதும் மறையவில்லை. மாறவில்லை. இரகசிய அமைப்புகளில் புரட்சியின் கருவானது நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கொண்டே வந்தது. இரகசிய சங்கங்கள் பல தோன்றி அவ்வம்சத்தை தூக்கி எறியலாயின. ஆவை

1) மூன்று நிலப்பிரப்புக்களின் கிளர்ச்சி
2) விண்ணும் மண்ணும் இணைந்த சங்கத்தின் (விண்ணுலகும் பூவுலகும்) எழுச்சி
3) வெண்தாமரையினரின் கிளர்ச்சி
4) தைபிங் கிளர்ச்சி ஆகியவைகள் மஞ்சுக்களுக்கு எதிராக ஏற்பட்ட முக்கிய கிளர்ச்சியாகும்.

**4)சமயபரப்புக் குழுவினரின் பங்கு**

சுமயப்பரப்புக் குழுவினர் நிறுவிய பள்ளிகள் புரட்சிக்கு எவ்வாறு வித்திட்டன என்பதை இங்கு இயம்பாமல் இருக்க முடியாது. ஆப்பள்ளிகளில் மேலைநாட்டு மக்களாட்சிக் கோட்பாடுகள் கற்பிக்கப்பட்டன. அதனால் முன்னேற்றக் கருத்துகள் அவர்களுடைய மனதில் பற்றிக்கொண்டன. அறிவுள்ள மாணவர்களில் பலர் வெளி நாடு சென்று படிக்கலானார்கள். ஆங்கு அவர்கள் மேலை நாட்டு தாராள நோக்குள்ள நிறுவனங்களின் தொடர்பினை பெற்றனர்.

**5)சீனாவிலிருந்து வெளியேறிய சீனர்களின் பணிகள்**

சீனாவிலிருந்து மேலை நாடுகளுக்குக் குடிபெயர்ந்தவர்கள் பல தொல்லைகள்பட்டனர். 1880-1890ம் ஆண்டுகளில் அமெரிக்கா ஒரு சட்டத்தின் மூலம் சீனர்களின் குடியயேறத்தை தடுத்து நிறுத்தியது. அமெரிக்காவில் தங்களுக்கு இடமில்லை என அறிந் அவர்கள் ஹவாய், பிலிப்பைன், மலேயா ஆகிய நாடுகளின் பக்கம் திரும்பினர். ஆங்கு குடியேறிவர்களின் எண்ணிக்கை 21.'.2 மில்லியன்களாகும். அவர்கள் புரட்சிக்குக் காரணமாக விளங்கினார்கள. மேலை நாடுகளிலிருந்து திரும்பியவர்கள் மேலைநாட்டுக் கருத்துக்களோடு வந்தனர்.

அவைகளைத் தங்கள் நாட்டில் பரப்பினர். இவ்விதமாக அவர்களைப் புத்துணர்வு பெறச் செய்தனர்.

**6)நவீன செய்திப் போக்குரத்தும் பத்திரிக்கைகளும்**

வளர்ச்சி பெற்ற செய்திப் போக்குவரத்தும், தபால்தந்திகளும், இருப்புப்பாதைகளும் இன்னபிற சாதனங்களும் நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் மிக விரைவாகப் புரட்சிக் கருத்துகளைப் பரப்ப பயன்பட்டன. அத்துடன் சீனர்களின் அச்சுப்பொறிகளும் ஏராளமான புரட்சிக் கருத்துக்கள் கொண்ட பத்திரிக்கைகளை வெளியிடலாயின. ஆவைகள் புதிய கருத்துக்களைத் தாங்கி நாடெங்கிலும் பவனிவந்தன.

**7)மாநில அதிகாரிகளின் மாறான போக்கு**

**மா**நில அதிகாரிகள் மையத்திற்கு ஒத்துழைப்பு தராமல் எப்போதும் தொல்லை கொடுத்து வந்தனர். மைய அரசாங்கத்தின் வலுவற்ற தன்மையைப் புரிந்து கொண்டு தங்கள் விருப்பம் போல் செயல்படலானார்கள். ஐமய-மாநில உறவுகளில் விரிசல் ஏற்படக் காரணமாக இருந்தது. அயல் நாட்டவர்களுக்கு இருப்புப்பாதை கட்டிக் கொள்ள அனுமதி தந்நததுதான் என்பது இங்கு நோக்குதல் வேண்டும். மாநில அதிகாரிகள் தங்கள் பகுதிகளில் பெரும் செல்வாக்கு வேண்டுமென விரும்பினர். அவர்கள் மையத்தின் பொறுப்பற்றத் தன்மையினால் புரட்சியாளர்களின் பக்கம் சாயலானார்கள்.

**8)மைய அரசின் வலிமையின்மை**

சீனா நிலப்பகுதிகளின் அடிப்படையில் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இத்தகைய நிலப்பரப்பு அதன் வலிமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் ஏற்பட்ட கேடாகும். ஆப்பகுதிகளின் தலைவர்களும் நெருக்கடியான காலங்களில் கூட மைய அரசிற்கு ஒத்துழைக்கவில்லை. உதாரணமாக அபினிப் போர்களின் போது ஒருங்கிணைந்த இராணுவம் எதுவும் இல்லை. அப்போரினால் பாதிக்கப்படாத மாநிலங்கள் தனித்து நின்றன. அதைப்போலவே சீன-ஜப்பானியப் போரிலும் நேரடியாக பாதிக்காத மாநிலங்கள் இது லிஹுங்சங்கின் தனிப்பட்ட செயல் என்று கருதின. இந்த விதமாக ஒவ்வொரு பகுதியும் மாநிலமும் தங்கள் காரியத்தைதான் கவனித்தன. நாட்டின் ஒருங்கிணைப்பை கருத்தில் கொள்ளவில்லை.

**9)நிர்வாகச் சீர்கேடு**

மஞ்சுக்கள் சிவில் நிர்வாகத்தில் நல்ல முறைகளைப் புகுத்தவில்லை. பேரரசின் அதிகாரம் நாடு முழுவதிலும் பயன்படுத்தப்படவில்லை. முதலாவதாக மைய மாநிலங்களுக்கு இடையில் ஒத்துழைப்பு இல்லை. இரண்டாவதாக மாநிலங்களுக்கும் தல நிர்வாகங்களுக்கும் ஒத்துழைப்பு இல்லை. ஆகவே ஒவ்வொரு தலப்பிரிவும் தனித்து இயங்கலாயிற்று. மையத்தில் அதிகாரிகள் அனைவருமே திறமையற்றவர்களாகவும், ஊழல் பேர்வழிகளாகவும் காணப்பட்டார்கள். மஞ்சு வம்சம் இக்கேடுகளை கட்டுப்படுத்தத் தவறிவிட்டது. அதனால் மக்கள் அதை தூக்கி எறிய விரும்பினர்.

**10)சீர்திருத்தங்களுக்கு மாறான போக்கு**

மஞ்சுக்கள் வல்லாட்சியாளர்களாக இருக்க விரும்பினார்கள். ஆதனால் பாராளுமன்ற நிறுவனங்களுடன் அவர்கள் தங்கள் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள விரும்பவில்லை. அவர்கள் முன்னேற்றமான சீர்திருத்தங்களை அறவே புறக்கணித்தனர். நல்ல வழியிலோ அல்லது கெட்டவழியிலோ எல்லாச் சீர்திருத்த இயக்கங்களையும் ஒழிக்க முற்பட்டனர். தைபிங் கிளர்ச்சி, நூறுநாள் சீர்திருத்த இயக்கம், பாக்சர் கலவரம் ஆகியவை மக்கள் மனதில் புதிய எழுச்சியனை ஏற்படுத்தின. மஞ்சுக்கள் அவைகளை அடக்கி ஒடுக்கினர். காலம் ஒரு நாள் நல்ல சீர்திருத்தங்களுக்கு வழிவகுக்கும் என்பதை அவர்கள் உணரவில்லை. அந்தக் காலம் தாமதித்து வந்தபோது சூழ்நிலையின் தேவையினை அது நிறைவேற்றவில்லை என்பதை உணர்ந்தனர்.

**11)மஞ்சுக்கள் அயல்நாட்டினர்**

18-ம் நூற்றாண்டு முழுவதும் இரகசியசங்கங்கள் மஞ்சுக்களை தூக்கி எறிய வேண்டுமென தெற்கில் கிளர்ச்சி செய்து வந்தன. மஞ்சுக்கள் சீனர்களல்லர். அவர்கள் மங்கோலிய இனத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் எப்போதும் சீனர்களுக்கு ஆதரவாக நடந்ததில்லை. ஆகவே அவர்களை சீனர்கள் அயல்நாட்டவர்கள் என்றும் அரியனையை அபகரித்தவர்கள் என்றும் கருதி வந்தனர்.

**12)மேலை நாட்டுக் கருத்துக்களின் தாக்கம்**

மஞ்சு வம்சத்தின் வீழ்ச்சிக்கு மிக முக்கியமான காரணம் சீனாவில் ஏற்பட்ட மேலைநாடுகளின் செல்வாக்கின் விளைவுகளே ஆகும். சீனார்கள் மேலைநாட்டினரை நாகரீகமற்றவர்கள் என வெறுத்தனர். ஆனால் அதே சமயம் அவர்களுடைய ராணுவத் திறமையினையும், தாராளக்கருத்துக்களையும், நிறுவனங்களையும் கண்டு ஆச்சரியப்பட்டனர். மேலைநாட்டுக் கருத்துக்களான மக்களாட்சி, சுதந்திரம், மனித உரிமைகள் விடுதலை ஆகியவை சீனர்ககளை பெரிதும் கவர்ந்தன. உடன்படிக்கைத் துறைமுகங்களில் மேலைநாட்டுக் கருத்துக்களும் செயல்களும் ஆக்கம் பெற்றன. இவைகள் பேரரசின் இணை ஆணையை செயலற்றதாக ஆக்கிவிட்டது. கன்பூஷியக் கோட்பாட்டில் அமைந்த மக்கள் கடமை, இனப்பிரிவு ஆகியவை பின்னுக்குத் தள்ளப்பட்டன. தங்கள் செயலிலும், எண்ணத்திலும் பழமையையும் பிற்போக்குத்தன்மையையும் கொண்ட மஞ்சு ஆட்சியாளர்கள் காலத்திற்கேற்ப செயல்படவில்லை. அயல்நாட்டவரிடம் அவர்கள் பன்முறை தோல்வியுற்றது. அவர்களின் வலிமையற்ற நிலையினை வெளிப்படுத்தியதோடு புரட்சிக்கும் வழிவகுத்தது எனலாம்.

**13)மேலைநாடுகளி பொருளாதார ஆதிக்கம்**

மேலைநாடுகளால் சீனா பலசெல்வாக்கு மண்டலங்களாக பிரிக்கப்பட்டது என முன்னரே கண்டோம். துங்களுடைய செல்வாக்குப் பகுதியில் அவைகள் கனிவளங்கள், இருப்புப்பாதைகள் ஆகியவற்றை ஏற்படுத்திக் கொண்டன. அப்பகுதியை அந்நாடுகள் தங்கள் குடியேற்ற இடமாகக் கருதிக் கொண்டு சுரண்ட ஆரம்பித்தன. இவ்வாறு செய்ததால் கைத்தொழில்கள் நசுக்கப்பட்டன. மேலும் அந்நாடுகள் அப்பகுதிகளை தங்கள் உற்பத்திப்பொருள்களுக்குச் சந்தையாக மாற்றிக் கொண்டன. வேலையிழந்த கைத்தொழில

வினைஞர்களுக்கு வேலைக் கொடுத்து அவர்களை மேம்படுத்த மஞ்சு அரசாங்கத்தால் முடியவில்லை. நாட்டைத் தொழில் மயமாக்கத் தவறியதோடு மட்டுமில்லாமல் நாட்டின் வளங்களைத் தங்குதடையின்றி பயன்படுத்தி கொள்ள அயல்நாட்டவர்களை அனுமதித்தனர்.

**14)தோவேஜரின் சிறப்பும் தலைமையின்மையும்**

நாட்டிற்கு வலிமையும் திறமையும் கொண்ட தலைமை தேவைப்பட்டபோது தோவேஜர் இறந்துவிட்டார். அதனால் நாட்டில் அரசியல் தலைமைக்குப் பஞ்சம் ஏற்பட்டது. பேரரசியிடம் பல குறைகள் இருந்தபோதிலும் அவர் உயிருடன் இருக்கும்வரையில் புரட்சிக்காரர்களை அடக்கி ஒடுக்கும் ஆளுமையைப் பெற்றிருந்தார். அதே சமயத்தில் பேரரசர் பொறுப்பிலிருந்த பொம்மை மன்னரும் இறந்துவிட்டார். இதனால் அரசியலில் வெற்றிடம் ஏற்பட்டு நிலைமை மோசமானது தலைமை இல்லாது தவித்த வம்சம் புரட்சிக்குப் பலியாகிவிட்டது.

**15)ஜப்பானிடம் சீனா கண்ட தோல்வி**

சீனாவின் வல்லாட்சிக்கு சீன-ஜப்பானியப் போர் மரண அடி கொடுத்தது. பெரிய நாடான சீனா சிறிய நாடான ஜப்பரினட் தோல்வி அடைந்தது. அரசியலமைப்பில் அமைந்த அரசாங்கத்தின் திறமையையும், வலிவையும் நிரூபித்துக் காட்டியது. ஜப்பரினய முன் உதாரணம் பாராளுமன்ற அரசாங்கத்தின் வலிவையும் பொலிவையும் எடுத்துக் காட்டியது. ஆகவே ஜப்பானின் பாதையில் சீனா செல்ல ஆரம்பித்தது. சீர்திருத்தங்கள் அனைத்துக்கும் மஞ்சுக்கள் எதிர்ப்பாக இருந்ததால், அவர்களை தூக்கி எறிந்தாலொழிய அரசியலமைப்புச் சீர்திருத்தங்களை செயலாக்க முடியாததென உணர்ந்தனர்.

**16) அவமானகரமான தோல்வியும் திணிக்கப்பட்ட உடன்படிக்கைகளும்**

மேலைநாடுகிளடம் சீனா படுதோல்வி கண்டது. அத்தோல்விகளால் நாட்டுக்கு அவமானம் ஏற்பட்டதோடு அவர்களால் திணிக்கப்பட்ட உடன்பாடுகளுக்கு ஒப்புதல் அளிக்க வேண்டி இருந்தது. அவ்வாறு உடன்படிக்கைகள் திணிக்கப்பட்டதால் சீனா பல பகுதிகளை இழந்தது. அந்த உடன்படிக்கைகள் அவர்களுடைய சுதந்திரத்திற்கு இரும்பு வேலிபோல அமைந்தன. எனவே மஞ்சு அரசாங்கம் மக்களின் நம்பிக்கையையும் ஆளும் உரிமையையும் இழந்தது.

**17)ரஷ்ய-ஜப்பானியப்போர்**

1905-ம் ஆண்டில் ஜப்பான் ரஷ்யாவை வெற்றி கண்டதால் சீனா அதன்பாதையில் செல்லவிரும்பியது. ஜப்பானின் வெற்றி சீனர்களுக்கு தேசிய உணர்வை ஊட்டியதோடல்லாமல் மஞ்சுக்களுக்கு எதிரான வெறுப்பினையும் ஏற்படுத்தியது.

**18)புரட்சிக்கான உடனடிக் காரணம்**

இருப்புப்பாதையை தேசியமயமாக்கும் அரசாங்கத்தின் கொள்கையானது ஏற்கனவே புரட்சிபாதையில் இருநந்தவர்களுக்கு அவசியமான தீப்பொறியை ஏற்படுத்தியது எனலாம். 1911-ம் ஆண்டு தனிப்பட்டவர்கள் இருப்புப்பாதை கட்டும் உரிமைகளை அரசாங்கம் தேசியமயமாக்கியது. இது அயல்நாட்டுக்கடனை 6 மில்லியன் பவுணகள் அதிகரிக்க மேற்கொண்ட நடவடிக்கையாகும். ஆந்நியப்பண உதவியுடன் புரட்சிக்காரர்களை நசுக்கவே

அரசாங்கம் இவ்வாறு செய்வதாகக் கருதப்பட்டது. இதை எதிர்த்து ஒரு ஊர்வலம் சென்றபோது வைஸ்ராய் தலைவர்களைக் கைது செய்யும்படி ஆணையிட்டார்.

அத்துடன் கூட்டத்தினர் மீது துப்பாக்கிப் பிரயோகமும் செய்யப்பட்டது. 1911-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 10ம் நாள் தற்செயலாக ஹாங்கௌவிலிருந்த ரஷ்யரின் இல்லம் ஒன்றின் மீது வெடிகுண்டு வீசப்பட்டது. இச்செயல் புரட்சியாளர்களின் நடவடிக்கைகளை வெளிக்காட்டியது. அடக்குமுறைக்கு அஞ்சிய புரட்சிவாதிகள் வெளிப்படையாக புரட்சியில் இறங்கினர்.

**புரட்சியின் தன்மையும், முக்கியத்துவமும்**

புரட்சியின் மிக முக்கியத் தனமை, அது மஞ்சுக்களுக்கும், பழமைக்கும், அந்நியர்களுக்கும் எதிர்ப்புக் கொள்கை கொண்டதாகும். ஆதில் தேசிய உணர்வும் ஆழமாகப் பதிந்து காணப்பட்டது.

1911-ம் ஆண்டுப்புரட்சி சீனாவில் மஞ்சு ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தது. வெளிப்படையாகவே அதற்கு (அந்த வம்சத்திற்கு) சீனாவை ஆட்சி செய்யும், ஒழுக்க அடிப்படையிலான அல்லது நேர்மையான தகுதி இல்லை என்பது புலனாயிற்று. திறமையற்ற, ஊழலான, அழந்துவிடுகின்ற மஞ்சுக்களைப் போன்ற வம்சமானது விரைவில் அழந்துவிடும் என்பது தவிர்க்க முடியாதது.

1911-ம் ஆண்டுப்புரட்சி வாக்குறுதியளித்தபடி ஒளிமயமான காலத்தைக் கொண்டுவராவிட்டாலும், அதனால் எதிர்காலத்தில் அதிகமான முக்கியத்துவம் ஏற்படாமல் இல்லை. கன்பூஷிய அமைப்பிற்கு முடிவு கட்டப்பட்டது. இரண்டாயிரம் ஆண்டுகளாக சீனா முதலையைப் போல் விடப்படியாகப் பற்றிக் கொண்டியருந்த பழமைக் கொள்கைகளை விட்டுவிட்டது. பழைய கட்டுப்பாடுகளை நீக்கிக்கொண்டு தன்னை நவீன உலகத்தோடு தொடர்புபடுத்திக் கொண்டது. டாக்டர்கள் சன் யாட்சௌின் துங் மெங் ஹாய், கோமன்டாங் காட்சியாக மாற்றப்பட்டு அதன் மூலம் சீனா முழுவதும் சியாங்கே ஷேக்கின் தலைமையில் ஒன்றுபடுத்தப்பட்டது.

சீனாவின் மிகப்பொரும் தலைவர்களில் ஒருவரான டாக்டர் சன் யாட்சென்னின் ஆற்றல்மிகு கைவண்ணத்தால் உருவாக்கப்பட்டது தான் இரத்தம் சிந்தாத 1911ம் ஆண்டுப்புரட்சியாகும். அவருடைய மூன்று கொள்கைகளான மக்களாட்சி, தேசியம், சமதர்மம் சீனாவின் எதிர்கால அமைப்பிற்கு வழிவகுத்தது.

1911-ம் ஆண்டுப்புரட்சி வெறுத்து ஒதுக்கப்பட்ட மஞ்சு வம்சத்தின் ஆட்சிக்கு முடிவுகட்டி குடியாட்சியை துவக்கி வைத்தது. இவ்வாறு அது முடியாட்சிக்குப் பதிலாக அரசியலமைப்புக்குட்பட்ட ஆட்சியினைக் கொண்டுவந்தது. அது மக்களின் இறைமையினை வெளிப்படுத்தியது. சமுதாய ரீதியில் அப்புரட்சியானது பழமைக்குப் பகைவனாகும்., பழைய தொடர்புகள் துண்டிக்கப்பட்டு புதிய உலகத்திற்கு அடி எடுத்து வைத்தது. சீனா அயல்நாட்டுக் செல்வாக்கு, கன்பூஷிய அமைப்பு எல்லாம் விடை கொடுத்து அனுப்பப்பட்டன.

1911-ம் ஆண்டுப் புரட்சியின் மற்றொரு முக்கியத் தன்மை தேசிய உணர்வின் எழுச்சியாகும். ஆந்நியர் ஊடுருவல், சுரண்டப்படும் நலை ஆகியவை அவர்கள் மீது ஏற்கனவே

வெறுப்பை ஏற்படுத்தின. இந்தப் புரட்சி எரிகின்ற நெருப்பில் எண்ணெய் வார்ப்பதுபோல் அமைந்து விட்டது. இத்தகைய சூழ்நிலைக்கு சீனர்கள் கொண்டு வரப்பட்டதற்கு காரணம் அவர்களுடைய தேசிய உணர்வே எனலாம்.

**யுவான் ஷி கே**

சீனக் குடியரசின் முதல் குடியரசுத் தலைவர் யுவான்ஷி கே ஆவார். அப்பதவிக்கு வருவதற்கு முன்பு பல பதவிகளை வகித்தார். அவர் கொரியாவின் கடைசி வைஸ்ராய் ஆவார். சீன-ஜப்பானியப் போருக்குப்பின் சீனாவில் ஒரு புதிய ராணுவவத்தை ஏற்படுத்தியவர் அவரே. மஞ்சுக்களை அரியணையிலிருந்து அகற்றியவரும் அவரே. 1911-ம் ஆண்டில் ஏற்பட்ட அமைதியான புரட்சிக்கும் அவர் காரணமாக விளங்கினார். அவர் ஒரு பேராசைக்காரர். அவர் குடியரசின் தலைமைப் பொறுப்பினை ஏற்றப்போதிலும் அவர் மனத்தளவில் குடியரசுக் கொள்கையினைப் பெற்றிருக்கவில்லை. அவர் வடபுலத்திலிருந்து வந்த ஒரு ராணுவவீரர். ஆரசியல் தந்திரி. குறுகிய மனம் கொண்டவர், பழமையில் பற்றுக் கொண்ட அதிகாரி. அவர் புதிய கருத்துக்களைக் கொண்டிருந்தும் பழமைக்கு முதலிடம் அளித்தார். சந்தர்ப்பவாதி. ஆரசியல் துறையில் ஆர்வமும், உண்மையில் ஆதாயமும் தேட விரும்புபவர்.

**யுவானின் ஆரம்பகால அரசியல் வாழ்வு**

யுவான் கொரியாவின் சீனப்பிரதிநிதியாக 1882-ம் ஆண்டில் லி ஹங் சங் என்பவரால் நியமிக்கப்பட்டார். அத்துடன் அவருக்குக் கொரியாவின் ராணுவத்திற்குப் பயிற்சி அளிக்கும் பொறுப்பும் அளிக்கப்பட்டது. அவர் ஜப்பானின் திட்டங்களை வெற்றிகரமாக முறியடிப்பதிலும், கொரியாவின் அரசவையில் ஜப்பானிய செல்வாக்கைக் கட்டுப்படுத்துவதிலும் திறம்பட செயல்பட்டார்.

முதல் சீன-ஜப்பரினயப் போருக்குப் பின் அவர் டியன்சினிலிருந்த 7000 மனிதர்களுக்குப் பயிற்சி அளிக்கும் ராணுவ அதிகாரியாக அமர்த்தப்பட்டார். சீர்திருத்த இயக்கத் தலைவர்கள் அவருடைய உதவியை நாடியபோது அவர் பிற்போக்குவாதியின் தலைவரான ஜுங் லூ என்பவருக்குக் காட்டிக் கொடுக்கும் கயவராக மாறினார்.

பாக்சர் கலவரத்தின் போது அவர்கள் அரசவையின் ஆதரவு பெற்றிருந்ததால் தனித்து நின்றார். ஆனால் அக்கலவரத்தை அடக்க முயற்சி செய்து மேலை நாட்டவர்களின் நல்ல எண்ணத்தைப் பெற விரும்பினார். அதனால் புரட்சிக்குப் பின் அவர் ராணுவப் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு பீகிங்கிற்கு மாபெரும் ஆலோசகர் பதவிக்கு மாற்றப்பட்டார். அங்கு அவர் அயல்நாட்டு அமைச்சராகப் பணியாற்றினார். பேரரசர் குவாங்சுக்கு எதிராக தோவேஜர் செய்த சதித்திட்டத்தில் அவர் பங்கு பெற்றதாக பெரும் புரளி ஏற்பட்டது. மேலும் அவரைப் பதவிக்கு வராமல் செய்யவும் பாடுபட்டார்.

**மஞ்சு அரசாங்கத்தில் உயர் அதிகாரத்தைப் பெறுதல்**

1909-ம் ஆண்டில் அவர் அதிகாரத்திலிருந்து நீக்கப்பட்டார். அத்துடன் அரசாங்கத்திலிருந்தும் வெளியேற்றப்பட்டார். 1911-ம் ஆண்டுப் புரட்சியின் போது மஞ்சு வம்சத்திற்கு ஏற்பட்ட வாழ்வா அல்லது சாவா என்ற மரணப் போராட்டத்தின் காலக்கட்டத்தில்

அவர் மீண்டும் அழைக்கப்பட்டு ஹோப்பே, ஹானான் ஆகிய இடங்களின் கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். அப்பதவியை ஏற்றுக் கொள்வதற்கு அவர் சில நிபந்தனைகளை விதித்தார். அந்த நெருக்கடியான கட்டத்தில் மஞ்சு அரசாங்கம் அவர் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. யுவான் கடற்படை, இராணுவம் ஆகியவற்றின் பேரரசு ஆணையாளராக அமர்த்தப்பட்டார். அதற்கு அடுத்த திங்களில் அவர் பேரமைச்சரானார்.

**யுவானின் நோக்கங்கள்**

யுவாங் மஞ்சு வம்சத்தை பாதுகாக்க வேண்டுமென விரும்பினார். அதுவும் அரசியல் அமைப்பு அடிப்படையிலான முடியாட்சியாகத் திகழ வேண்டுமென எண்ணினார். ஆட்சியாளர்கள் இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமானால் அதற்குப் புரட்சியின் முன்னேற்றம் அவசியம் என்றார். எனவே தன் படையினரைப் புரட்சிக்காரர்கள் மீது ஒரு போதும் ஏவியதில்லை. இதற்கிடையில் புரட்சிக்காரர்கள் நான்கிங்கைக் கைப்பற்றித் தங்கள் தலைநகராக ஆக்கிக் கொண்டார்கள்.

**அமைதிப் பேச்சு வார்த்தைகள்**

தன்னுடைய தலைசிறந்த இராணுவத்தின் பக்க பலத்தினால் யுவான் புரட்சிவாதிகளிடம் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடலானார். லி யுவான் ஹாங் என்பவர் புரட்சி மாநிலங்களிலிருந்து ஒரு பிரதிநிதிகள் குழுவை அழைத்து வந்தார். அயல்நாட்டிலிருந்து அப்போது சீனாவுக்கு திரும்பி வந்த டாக்டர் சென் தற்காலிகத் தலைவராகப் பொறுப்பேற்றார். பேரரசுக் கொள்கையினரும் குடியரசுவாதிகளும் நிதிப்பற்றாக்குறைவால் துன்பப்பட்டுக் கொண்டிருந்ததால் இருசாரரும் இணைய முற்பட்டனர். நாடு ஒன்றுபட நல்லாட்சி மலர நாட்டைவிட்டு மஞ்சுக்களை விரட்ட டாக்டர் சென் தாமாகவே முன்வந்து பதவியிலிருந்து விலகி யுவானை தலைவராக்க விரும்பினார்.

**உடன்பாடு ஏற்படுதல்**

1912-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 12-ம் நாள் மஞ்சுவம்சம் பதவியிலிருந்து விலகியது. பேரரசர் தன்னுடைய அதிகாரத்தை நான்கிங்கின் அரசிடம் மாற்றுவதற்குப் பதிலாக யுவானிடம் மாற்றினார். பேரரசருக்கு உதவிப்பணம் தரவும் உறுதி அளிக்கப்பட்டது. அரண்மனை பாதுகாவலர்களை வைத்துக் கொள்ள அவர் அனுமதிக்கப்பட்டார். மஞ்சுக்களின் தனிப்பட்ட சொத்துக்களையும் அவர்களுடைய மூதாதையர்களின் கோவில்களையும் பாதுகாக்க வழி செய்யப்பட்டது.

மஞ்சுக்கள் பதவி விலகிய பின் டாக்டர் சென் தலைவர் பதவியிலிருந்து விலகி, ஒன்றுபட்ட சீனாவின் தலைவராக யுவானை இருக்கச் செய்தார். யுவானின் செயல்களை புரட்சிவாதிகள் சந்தேகப்பட்ட போதிலும் கூட அவரை அகற்றுவதற்கு அவர்களால் தொடர்ந்து போராட முடியவில்லை.

**கோமின் மாங்குடன் மோதல்**

**வ**லிமைப்பெற்ற குடியாட்சியினால் தான் சீனாவின் பிரச்சனைகளைத் தீர்க்க முடியும் என யுவான் நம்பினார். ஆகையால் தன்னுடைய தலைவர் பதவியை அடிப்படையாக

வைத்துக் கொண்டு புதிய வம்சத்திற்கு வழிகோலலானார். இந்த எண்ண்ங்களை யுவான் பெற்றிருந்ததாலட அவருக்கும் சன் யாட்சென்னுக்கும் பகைமை ஏற்பட்டது. இராணுவ வலிவும் பொலிவும் பெற்று விளங்கிய பீகிங்கைத் தலைநகராக அடைய யுவான் விரும்பினார். ஆனால் பொறுப்பேற்ற போது அவர் நான்கிங்கிலிருந்து ஆட்சி செய்வதாக ஒப்புக் கொண்டார். அவர் தேசிய அவையை நாடி தலைநகரை பீகிங்கிற்கு மாற்ற முயன்றபோது அவரது செயல்கள் ராணுவ வல்லாட்சிக்கு வழிவகுக்கும் என புரட்சிவாதிகள் ஐயம் கொண்டனர். சன் யாட்சென், அவரது கோமின்டாங் கட்சி ஆகியவற்றின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் யுவான் தன்வழியில் செல்லலானார். பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, ஜெர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகளின் வங்கியாளர்களின் உதவியுடன் யுவான் கடன் திரட்ட முற்பட்டார். இதை டாக்டர் சென்னின் கட்சி விரும்பவில்லை. அந்தக்கடன் மூலம் அவர் நிதித்துறையில் பெரும் அதிகாரத்தைப் பெற்றார். தென் சீனாவில் சிவில், ராணுவத் துறைகளில் மிகமுக்கியமான பதவிகளில் தன்னுடைய மனிதர்களை அமர்த்தினார். இச்செயல்கள் புரட்சிவாதிகளின் ஐயத்தை உறுதிப்படுத்தி விட்டன. 1913-ம் ஆண்டில் ஒரு கிளர்ச்சி ஏற்பட்டது. யுவானைப் பதவியிலிருந்து துாக்கி எறியுங்கள் என தன்னுடைய ஆதரவாளர்களிடம் கூறினார் டாக்கடர் சென். ஆனால் அக்கிளர்ச்சிஅ டக்கப்பட்டது. கோமின்டாங் கட்சியின் மிக முக்கியத் தலைவர்கள் ஜப்பானில் தஞ்சம் புகுந்தனர்.

**அரசியலமைப்பு ஒப்பந்தம்**

1934-ம் ஆண்டில் கோமின்டாங் கட்சிஅ டக்கப்பட்டதுடன் சீனாவின் முதல் குடியரசு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. யுவான் மேலும் வலிமையோடு விளங்கலானார். அவர் தவறான முறையில் மீண்டும் தலைவராகப் பத்து ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் தேசிய சபையைக் கலைத்தார். அதன் இடத்தில் ஆலோசனை கூற அரசியல் அவையை ஏற்படுத்தினார். வந்த புதிய அரசியலமைப்பின்படி தலைவர் ஏராளமான அதிகாரத்தைப் பெற்றார். அதை கேலியாக “புகழ் பெற்ற அரசியலமைப்பு” என்று அழைத்தார். உண்மையாகவே 1914-ம் ஆண்டு ஏற்பட்ட அரசியலமைப்பு ஒப்பந்தம் தலைவரை வல்லாட்சியாளராக மாற்றியது. வி ஹாங் சாங் என்பவர் கூற்றுப்படி 1914-ம் ஆண்டு மே திங்கள் வெளியிடப்பட்ட அரசியல் அமைப்பு ஒப்பந்தத்தினால் தலைவர் சகல அதிகாரங்களையும் பெற்று வல்லாட்சியாளராக மாறினார். தலைவர் தேர்தலுக்காக புதுப்பிக்கப்பட்ட சட்டங்களின்படி யுவான் டிசம்பர் திங்களில் வல்லாட்சியாளராக வாழ்நாள் முழுவதும் பதவி வகிக்க வழி ஏற்பட்டது” என்பது உண்மையேயாகும். துன் பதவியை வலிமைப்படுத்திக் கொண்டு அவர் மக்களின் பேச்சு சுதந்திரத்தையும் கருத்துச் சுதந்திரத்தையும் வெகுவாகக் குறைத்தார்.

**மங்கோலியாவில் கிளர்ச்சி**

சீனாவில் ஏற்பட்ட குழப்பமான சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு ரஷ்யாவானது மங்கோலியாவில் பிரிந்து செல்ல முயன்றது. சீனக் குடியரசிற்கு எதிராக ஏற்பட்ட சுதந்திர இயக்கங்களில் இதுவே முதலாவதாகும். ஊள் மங்கோலியாவில் சீனர்கள் ஆக்கிரமிப்பு மூலம் குடியேறியதை மங்கோலியப் பிரபுக்கள் வெறுத்தனர். ரஷ்ய உதவியுடன் மங்கோலியர்கள்

உர்கா என்ற இடத்தில் சுதந்திர அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தினார்கள். முங்கோலியாவின் வெளிப்பகுதிகளில் சுயாட்சியை யுவான் அங்கீகரிக்க வேண்டியிருந்தது.

**திபெத்தில் கிளர்ச்சி**

மங்கோலியாவைப் பின்பற்றி திபெத்திலும் கிளர்ச்சி ஏற்பட்டது. திபெத்தியர்கள் தங்கள் நாட்டிலிருந்து சீனப்படைப் பிரிவனை விரட்டி அடித்தனர். தாங்களும் விடுதலை பெற வேண்டும் என்று கிளர்ச்சி செய்தனர். அவ்வாறே விடுதலை பெற்றதாக அறிவித்துக் கொண்டனர். திபெத்தில் தன் அதிகாரத்தை நிலை நாட்ட யுவானால் முடியவில்லை. ஆகவே அவர் மூவர் மாநாட்டில் கலந்து கொண்டு ஒரு உடன்பாட்டிற்கு ஒப்புக் கொண்டார். அதில் பிரிட்டன், சீனா, திபெத் ஆகிய மூன்று நாடுகள் கலந்து கொண்டன. அம்மாநாடு 1914-ம் ஆண்டு நடைபெற்றது. அந்த உடன்பாட்டின் விதிகளின்படி,

1) திபெத்தின் மேற்குப் பகுதிக்கு தன்னாட்சி வழங்கப்பட்டது.
2) லாசாவில் சீனா தன்னுடைய தூதரை வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டது.
3) கிழக்கு திபெத்தில் சீனாவின் அதிகாரம் நிலைநாட்டப்பட்டது.

**யுவானின் முடியாட்சிக் கனவு**

குடியரசுத் தலைவர் பதவியுடன் யுவான் திருப்தி அடையவில்லை. அவர் மன்னராக முடிவு செய்தார்.

உள்நாட்டுத் தொல்லைகளைப் பொருட்படுத்தாமல் யுவான் புதிய வம்சம் ஒன்றை ஏற்படுத்துவதில் முன்னோக்கிச் சென்றார். தன்னுடைய உண்மையான ராணுவத்தின் ஆதரவும், அமைதியான குடியானவர்களின் ஒத்துழைப்பும் அவருக்குக் கிடைத்தது. குடியாட்சியில் அதிருப்தி அடைந்த கன்பூஷிய அமைப்பிலான அதிகாரிகள் முடியாட்சியை நிலைநாட்ட ஆதரவு அளித்தனர். மேலை நாட்டவர்களும் தங்களின் செல்வாக்கை நிலைநாட்டிக் கொள்ள யுவானின் வலிமையைப் பயன்படுத்திக் கொள்ள நினைத்தனர். ஆதலால் அவர்களும் அவருடைய முடியாட்சியை ஆதரிக்கலானார்கள். இவ்வாறு ஆதரவு இருந்ததால் அவர் 1916-ம் ஆண்டில் அரியணை ஏற முடிவு செய்தார். ஐரோப்பா முதல் உலகப்போரில் ஈடுபட்டிருந்த நேரத்தில் யுவான் பீகிங்கில் மாவட்டப் பிரதிநிதிகளின் மாநாட்டைக் கூட்டினார். அப்பிரதிநிதி யுவானின் ஆதரவாளர்களானதால் அவர்கள் முடியாட்சியை ஆதரித்தார்கள். அந்தப் பிரதிநிதிகள் யுவானை மன்னராக இருக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். யுவான் அதை ஏற்றுக் கொண்டார்.

**ஜப்பானின் 21 கோரிக்கைகள்**

1914-ம் ஆண்டில் முதல் உலகப்போர் ஏற்பட்டபோது ஐரொப்பிய நாடுகள் எல்லாம் அதில் ஈடுபட்டன. சீனா நடுநிலைமை வகிக்க முயற்சித்தது. ஆனால் அது இறுதியில் போரில் ஈடுபடும்படி கட்டாயப்படுத்தப்பட்டது.

மஞ்சுக்களுக்குப் பின் யுவான் முடிமன்னராக விரும்பினார் என்பதை ஏற்கனவே கண்டோம். ஆனால் புரட்சிவாதிகள் அதை எதிர்த்தனர். அதன் விளைவாக உள்நாட்டில் தொல்லைகள் ஏற்பட்டன. யூனானில் புரட்சி ஏற்பட்டது. யுவான் அதை அடக்க ஒரு படையை அனுப்பினார். அவர் முயற்சியில் வெற்றி காண இயலவில்லை. மற்ற மாநிலங்களிலும் அது

பரவியது. குியாங்சியின் ஆளுநர் ஒரு புரட்சியைத் துவக்கினார். பல மாநிலங்கள் தங்கள் விடுதலையை அறிவித்தன. நிலைமை கட்டுக்கடங்காமல் சென்றது. இச்சூழ்நிலையில் ஜப்பான் தன்னுடைய புகழ் வாய்ந்த 21 கோரிக்கைகளை சீனா மீது திணித்தது. ஷாண்டுங்கின் ஜெர்மானிய குத்தகையப் பகுதியினை ஜப்பான் எடுத்துக் கொண்டது. யுவானால் இந்த ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. 1915-ல் ஆண்டு ஜனவரித் திங்கள் அக்கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன. சீனா இவைகளை ஏற்றுக் கொண்டால் அது ஜப்பரின் குடியேற்ற நாடாக மாறிவிடும். ஜப்பரின் உதிவி போரின் போதுமேலைநாடுகளுக்குத் தேவைப்பட்டதால், அவைகள் வாளா இருந்துவிட்டன. இந்தச் சூழ்நிலையில் சீனா ஒன்றுபட்டு தலைவர் பின்னால் செல்ல முற்பட்டது. யுவான் சிலவற்றை ஏற்றுக் கொண்டார். சிலவற்றை விவாதத்திற்குப் பின் ஏற்றுக் கொள்ள தள்ளிவைத்தார். சிலவற்றை ஏற்றுக் கொள்ள மறுத்தார்.

**அந்தக் கோரிக்கைள் 5 வகைப்படும்**

1) ஷாண்டுங் மாநிலத்தைப் பற்றியது.
2) தேற்கு மஞ்சூரியாவைப் பற்றியது.
3) ஹுன் யே-பிங் குழுமத்தைப் பற்றியது.
4) சீனத் துறைமுகங்களைப் பற்றியது
5) பிற கோரிக்கைள் (நாலாவிதமானவை)

இந்தக் கோாரிக்கைகள் ஜப்பானிய அமைச்சர் கியோகி என்பவரால் சமர்ப்பிக்கப்பட்டன. சிலவற்றை ஏற்றுக் கொள்வதைத் தவிர யுவானுக்கு வேறு வழியில்லை. இச்செயலை சீனர்கள் வெறுத்தனர். ஜப்பானியப் பொருள்களைப் பகிஷ்காரம் செய்வதும் ஆர்ப்பாட்டம் செய்வதும் நடைபெற்றன.

**யுவானின் திட்டங்கள் தோல்வி அடைதல்**

**த**ன் பதவியைத் தக்க வைத்துக் கொள்ள அவர் ஜப்பானின் ஒத்துழப்பை நாடினார். ஆனால் ஜப்பான் யுவானின் முடியாட்சியை ஆதரிக்கவில்லை. அதற்கென இருந்த ஆக்கிரமிப்புக் கொள்கையில் அது ஆர்வம் காட்டியது. இதற்கிடையில் நாட்டில் அமைதி, ஒழுங்கு சீர்கெட்டது. பல மாநிலங்கள் தங்கள் விடுதலையை அறிவித்தன. புரட்சிக்காரர்கள் மென்மேலும் செல்வாக்குப் பெற்றனர். 1915-ம் ஆண்டு மே திங்கள் 12-ம் நாள் விடுதலைப் பெற்ற மாநிலங்களின் பிரதிநிதிகள் காண்டனில் ஒன்று கூடினர். அவர்கள் தாங்கள் குடியாட்சி ஒன்றை நிறுவியதாக அறிவித்தனர். அப்புதிய குடியரசு வலிமையற்றதாயிருந்ததால் அயல் நாடுகளில் ஆதரவு கிட்டவில்லை.

யுவான் இக்கட்டான நிலையில் தள்ளப்பட்டார். மைய ஆட்சியும் வலிமை குன்றி காணப்பட்டது. அங்கு வெளிநாட்டு ஆபத்தும் உள்நாட்டுக் குழப்பமும் குடி கொண்டது. சிக்கலான நேரத்தில் பல மாநிலங்கள் சுதந்திரம் பெற்றதோடு,யுவானுக்கு நெருக்கமான தளபதிகளான துவான்-சிஜுயி, பென்குவோ சாங் பிரிந்து சென்றனர். ஆதரவாளர்களால் ஏமாற்றப்பட்டு அவமானம், வெறுப்பு, துன்பம் இவைகளால் ஆட்கொள்ளபட்ட யுவான் திடீரென

1619-ல் இறந்து போனார். முடியாடசிக் கோட்பாட்டின் வேடிக்கையான துன்பியல் நாடகம் திடீரென முடிவுக்கு வந்தது.

## டாக்டர் சன்யாட் சென்

டாக்டர் சன் யாட்-சென் நவீன சீனாவின் தந்தை என்று கருதப்படுகின்றார். இவர் சீனர்களின் வாழ்வில் சீரிய மாற்றங்களை ஏற்படுத்த விரும்பிய புரட்சி சீர்திருத்தவாதியாவார். டாக்டர் சென் தன் வாழ்நாள் முழுவதையும் புரட்சிக்காக அர்ப்பணித்தவர். சீனர்களின் விடுதலைக்காகவே வாழ்ந்து இறந்தவர் எனலாம். தேசிய ஒருமைப்பாட்டின் அடையாளச் சின்னமாக அவர் விளங்கினார்.

**இளமை வாழ்க்கை**

டாக்டர் சன்-யாட்-சென் 1886-ம் ஆண்டில் ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்தார். அவர் குழந்தையாக இருந்த காலத்திலேயே தைபிங் கிளர்ச்சியின் கதைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டார். அவர் மனதில் அவைகள் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தின. அவர் தன் இளமைக்காலத்தில் ஹோனாலூலு என்ற இடத்தில் கல்வி பயின்றார். பின்னர் ஹாங்காங்கில் படித்து டாக்டர் பட்டம் பெற்றார். அவர் அலைஸ் நினை மருத்துவ மனையில் பணி புரிந்தபோது அவரது புரட்சிக் கருத்துக்கள் நல்லதோர் வடிவம் பெற்றன. தனியாக மருத்துவப் பணிபுரிந்தபோது அவர் புரட்சிவாதியாகவே மாறினார். குல்விமுறையினை மாற்றினால் தான் தேசிய ஐக்கியத்தைக்கொண்டுவரமுடியும் என உணர்ந்தார். சீனாவை சீர்திருத்த பல கல்வி பொருளாதாரச் சீர்திருத்தங்களைச் செய்ய ஆலோசனை கூறினார். மஞ்சு ஆட்சியாளர்கள் அவைகளை செவிமடுக்கவில்லை. நாளடைவில் அவர் முடியாட்சிக்கு எதிர்ப்பாளராகவும் தேசியக் குடியரசுவாதியாகவும் மாறினார்.

**சிங்-சுங்-ஹுய்**

1894-ம் ஆண்டில் டாக்டர் சென் சிங்-சுங்-ஹுய் என்ற சீன மறுமலர்ச்சிக் கழகத்தை ஏற்படுத்தினார். 1895-ல் அவர் காண்டனில் முதல் கிளர்ச்சியினை ஆரம்பித்தார். ஆனால் அது அடக்கப்பட்டது. அவர் இங்கிலாந்துக்கு ஓடினார். அங்கு அவர் கைது செய்யப்பட்டார். லண்டனிலிருந்த சீனத்தூதகரத்தில் காவலில் வைக்கப்பட்டார். பின்னர் அவர் விடுதலையானார். டுாக்டர் சென்னின் நடவடிக்கைகளுக்கு ஹோனாலூலு, யோ கோஹாமா என்ற இரு இடங்களில் இருந்த சீன மறுமலர்ச்சிக் கழகத்தின் கிளைகள் மைய இடமாக விளங்கின. பாக்சர் கலவரத்தை ஒரு வாய்ப்பாகத் தன் புரட்சிக்குப் பயன்படுத்திக் கொண்டார். ஆனால் அந்தக் கலவரம் அடக்கப்பட்டுவிட்டது அவர்பால் அனுதாபம் கொண்டனர். விரைவிலேயே அவர் சீனாவின் புரட்சித் தலைவராகக் கருதப்பட்டார்.

**துங்-மெங் ஹுய்**

மஞ்சு அரசாங்கம் சீர்திருத்தங்கள் பற்றி எண்ணிக் கொண்டிருந்த போது சன் யாட் சென் புதிய புரட்சி இயக்கமான துங் மெங் ஹுய் என்பதை ஆரம்பித்தார். 1905-ம் ஆண்டில் புரட்சியை ஆதரிக்கும் அனைவரும் இந்த இயக்கக் கொடியின் கீழ் திரண்டனர். அச்சங்கம் சீனக்குடியரசுக் கருத்தை பரப்பும் பணியில் ஈடுபட்டது. டோக்கியோவிலிருந்து வெளிவந்த

‘‘மக்களின் செய்தித்தாள்’’ புதிய கட்சியின் புரட்சிக் கருத்துக்குப் பெரும் விளம்பரம் செய்தது. டாக்டர் சென் ஒரே புரட்சியில் மூன்று வளைவை காண முற்பட்டார்.

1) மஞ்சு வம்சத்தையும் பேரரசு நிறுவனங்களையும் தேசியப்புரட்சி மூலம் தூக்கி எறிவது.
2) குடியரசையும் மக்கள் இறைமையையும் மக்களாட்சிப் புரட்சி மூலம் ஏற்படுத்துவது.
3) சுமூகப் புரட்சிமூலம் நில உரிமைகளை சமமாக்குவது, முதலாளித்துவத்தின் கேடுகளை அழிப்பது.

துங் மெங் ஹூ என்ற அமைப்பை ஏற்படுத்தியது சீனப்புரட்சியின் ஒரு மைல் கல்லாகும். துற்கால அரசியல் கட்சியைப் போல ஒன்றிய மைய அமைப்பிற்கு அது வழி அமைத்தது. நாட்டிலிருந்த புரட்சிகரமான, முன்னேற்றமான சக்திகளுக்கு அது ஊக்கமளிப்பதாக விளங்கி வந்தது. ஆகவே அதை ‘‘சீனப்புரட்சியின் தாய்’’ என்று அழைத்தனர்.

கட்சியிலிருந்து உறுப்பினர்களிடம் வரையறுக்கப்பட்ட கருத்தோ, மக்களாட்சிக் கொள்கையின்பால் நம்பிக்கையோ இல்லாததால் அந்த அமைப்பானது வலிமையற்றுக் காணப்பட்டது.

சென்னின் புரட்சிக் கட்சியின் முதல் மாநாடு பிரஸ்ஸல்ஸ் நகரில் கூடியது. அநாகரிகமானவர்களான மஞ்சுக்களை விரட்டியடிப்பதற்கும், சீனாவை சீனர்களிடம் அளிப்பதற்கும், குடியரசை உருவாக்குவதற்கும் உறுப்பினர்கள் உறுதி பூண்டனர். டாக்டர் சென், இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ் ஆகிய இடங்களில் தங்கியிருந்தார். நீண்ட நாட்கள் அயல்நாடுகளில் இருந்தபோது அங்கு பயின்று கொண்டிருந்த சீன மாணவர்களைத் தன் கட்சியில் சேருமாறு கேட்டுக் கொண்டார். ஐரோப்பிய நாடுகளில் கட்சியின் கிளைகள் அமைக்கப்பட்டன. ஆனால் ஜப்பான் புரட்சியின் மைய இடமாக அமைந்தது. 1905-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் கட்சிக்கென ஒரு அரசியல் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. டாக்டர் சென் அதன் பொது இயக்குநராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**முக்களின் மூன்று கொள்கைகள்**

டாக்டர் சென் ஐரோப்பாவில் இருந்தபோது தன்னுடைய கொள்கைகளை உருவாக்கினார். அரசியலமைப்பில் அமைந்த முடியாட்சியை அவர் ஆதரிக்க விரும்பினார். எனினும் பல சீர்திருத்தங்கள் செய்யுமாறு விண்ணபங்கள் மூலம் கேட்டுக் கொண்டார். ஆனால் அந்த விண்ணப்பங்கள் வீணாயின. புரட்சி மூலம்தான் சீனா வலுவுள்ள நாடாக மாறமுடியும் என்றார். ஆகவே குடியாட்சிக் கோட்பாட்டைப் பரப்பலானார். அவரது கோட்பாடுகள் மக்களின் மூன்று கருத்துக்களைத் தழுவி நின்றன. அவைகள் ‘சான்மின் சூ’’ என்ற தேசியம், மக்களாட்சி, மக்கள் நலன் (சமதார்ம்) ஆகியவையாகும்.

ை) தேசியக் கொள்கைகள்: அவரது மூன்று கொள்கைகளில் முதலாவது தேசியமாகும். சீனாவானது மணல் கயிரைப் போன்று தனித்தனியாகப் பிரிந்து காணப்பட்ட சிறுதுகள்களாகும். ஆனால் அந்தக் கயிறு தேசியம் எனற சிமெண்டினால் சேர்ந்தாலொழிய வலிமை பெறாது என்றார். ஆகவே சீனாவின் பழைய பண்காட்டு ஐக்கியத்திற்கு வழிகாட்டியது. அது அனைத்து சீனர்களையும்

எவ்வித புவியியல், இன, பிற வேறுபாடில்லாமல் ஒன்றாக்க வேண்டும் என விரும்பினார். அவரது தேசியக் கோட்பாடானது சீனர்கள், மஞ்சுக்கள், மங்கோலியர்கள், திபெத்தியர்கள், பிற சிறுபான்மையோர் ஆகியோரைத் தழுவியிருந்தது. அவரது தேசியம் பேராதிக்கக் கோட்பாடு குடியேற்ற ஆதிக்கம் ஆகியவற்றிக்கு எதிரானதாகும். அது அன்னிய மஞ்சு ஆட்சியை அகற்ற ஏற்பட்டதோடு அன்னியர்களின் பிடியிலிருந்து விடுபட ஏற்பட்டது என்றால் சாலப் பொருந்தும்.

ii)மக்களாட்சிக் (ஜனநாயகம) கொள்கைகள்: டாக்டர் சென்னின் இரண்டாவது கோட்பாடு ஜனநாயமாகும் அவரது மக்களாட்சிக் கொள்கை மேலைநாட்டின் முறைகளையும் பண்டைய சீனர்களின் கருத்துக்களையும் பின்பற்றி எழுந்ததாகும். முக்களின் இறைமையின் அடிப்படையில் வலுவான மைய அரசாங்கம் அமைய வேண்டுமென விரும்பினார். அரசியல் மன்றம், சட்டமன்றம், நீதிமன்றம் ஆகியவற்றின் மூலம் அரசியல் அதிகாரங்கள் செயல்பட வேண்டும் என்றார். அத்துடன் அவைகளும் முறையான தேர்வுகளையும் தணிக்கை முறைகளையும் பின்பற்ற வேண்டும் என்றால் அவர் மக்களை மூன்று பிரிவாகப் பிரித்திருந்தார். அவைகள் முறையே 1. தலைவர்கள் 2) அவர்களைப் பின்பற்றுபவர்கள் 3) பொதுவான ஆதரவாளர்கள் (கீழ்மட்டத்திலுள்ளவர்கள்) மக்களின் நான்கு உரிமைகளைப் பின்பற்ற வேண்டுமென்றார். அவைகள் தொடக்கம், பொதுவாக்கெடுப்பு, தேர்தல் திரும்பி அழைத்தல் ஆகும். அரசியல் மன்ற அல்லது நிர்வாக சட்ட, நீதி, கட்டுப்படுத்தும் தேர்வுசார்பான அதிகாரங்கள் அரசாங்கத்தின் ஐந்து அதிகாரங்களாகும்.

முழுமையான ஜனநாயகத்தை அடையும் நோக்கத்தில் டாக்கடர் சென் படிப்படியான மாற்றங்களைக் கண்டார். முதலாவதாக ராணுவத்தின் கட்டுப்பாடு இருக்க வேண்டும், இரண்டாவதாக மக்கள் தங்கள் அதிகாரங்களைப் பயன்படுத்த பயிற்சி பெறுதல் வேண்டும், இறுதியாக மக்கள் தங்கள் அதிகாரங்களைச் செலுத்த தயார் செய்து கொள்ள வேண்டும் என்று அவர் கூறினார்.

iii)டாக்டர் சென்னின் மூன்றாவது கோட்பாடு மக்கள் நலன் ஆகும். இங்கு நாம் பண்டைய சீனர்களின் கற்பனைக் கருத்தான ‘உழுபவனுக்கு நிலம்’ என்பதை எண்ணிப் பார்த்தல் வேண்டும். இந்தக் கொள்கையானது இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவைகள் 1. சுமமான நிலப்பங்கீடு 2) மூலதனக்கட்டுப்பாடு ஆகும். டாக்டர் சென் மார்க்ஜின் உலகியல் கோட்பாட்டையும், வர்க்க போராட்டத்தையும் ஆதரிக்கவில்லை. ஆகையால் தனிப்பட்ட சிலரின் கைகளில் மூலதனம் சேர்வதைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டார். கோமின்டாங் கட்சியின் முதல் மாநாடு ‘மக்கள் நலன்’ என்ற கொள்கையை வெளியிட்டது. “நாங்கள் இக்கொள்கையைப் பின்பற்றக் காரணம் சமமான நிலப் பங்கீட்டுக்காகதான்” என்றனர். வங்கி கப்பல் கட்டும் தொழில் ஆகியவற்றை அரசு எடுத்துக் கொள்ள வேண்டும்

அவ்வாறு செய்தால் நாட்டின் பொருளாதார வாழ்வு சில முதலாளிகளின் கைகளில் போகாது'' என்றனர்.

**டாக்டர் சென்னும் யுவானும்**

தென்சீனாவில் நான்கிங்கை தலைநகராக கொண்டு டாக்டர் சென் ஒரு குடியரசை நிறுவினாா. வுட சீனாவில் பீகிங்கில் யுவான் ஷி கே ஓர் அரசை நிறுவினார். மஞ்சுக்களைப் பதவியிலிருந்து விலகும்படிக் செய்தால் தான் 'யுவானுக்கு ஒன்றுபட்ட சீனாவின் தலைவர் பதவி அளிப்பதாக கூறினார். யுவான் அந்த திட்டத்தை ஏற்றுக் கொண்டார். அதன்படி டாக்டர் சென் 1912-ல் தன் பதவியை துறந்தார். மஞ்சுக்கள் அரியரணயிலிருந்து விலகியதும் யுவான் புதிய குடியரசின் முதல் தலைவரானார். 1912-ம் ஆண்டில் டாக்டர் சென் துங் மெங்-ஹுயுடன் பிற புரட்சி அமைப்புகளை இணைத்து கோமின்டாங் கட்சி என்ற அரசியல் கட்சியை அமைத்தார். இவ்வாறு எழுந்த ஒன்றுபட்ட கோமின், டாங் கட்சி மக்களின் மூன்று கொள்கைகளுடன் வலிவு பெற்று சிறப்புற்று விளங்கியது. யுவான் தன் வார்த்தையைக் காப்பாற்றவில்லை. குடியரசுக் கொள்கைக்கு அவர் மதிப்பு அளிக்கவில்லை. அவர் முடியாட்சியின் பாதையில் முன்னோக்கிச் சென்றார். டாக்டர் சென் இதை எதிர்த்தார். அதனால் இதை எதிர்த்து புரட்சியில் இறங்கினார். 1916-ல் யுவான் இறந்து போனார். சீனா போர்த் தளபதிகளின் கைகளில் போய்ச் சேர்ந்தது.

**டாக்டர் சென்னும் 1911-ம் ஆண்டுப்புரட்சியும்**

செக்குவான் மாநிலத்தில் இருப்புப்பாதைகளை தேசியமயமாக்கியது புகழ் பெற்ற 1911-ம் ஆண்டுப்புரட்சியை ஏற்படுத்தியது. பேரரசின் அரசாங்கம் அந்த இருப்புப்பாதை போராட்டத்தை அடக்க முற்பட்ட போது யாங்டிசி பள்ளத்தாக்கின் மையத்தில் ஒரு முக்கிய நிகழ்ச்சி ஏற்பட்டது. 1911-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 9-ம் நாள் ஹாங்சௌவில் வெடிகுண்டு தயார் செய்து வெடிக்கப்பட்டது. இது புரட்சிக்காரர்களின் வேலை என்பது அம்பலமாயிற்று. அத்துடன் அவர்களின் ரகசிய வேலைகள் வெளிவந்தன. காவல் துறையினரின் சோதனையில் பல புரட்சிக்காரர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களுடைய முக்கிய ஆவணங்களும், ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில் புரட்சிக்காரர்கள் அரசாங்கத்திற்கு எதிராக உடனடியாகப் புரட்சியிலிறங்கினர். அவர்கள் பேரரசின் தளபதியான லி யுவான் ஹங் என்பவரைத் தலைமையேற்கும்படி துாண்டினர். குறுகிய காலத்தில் மூன்றுவூஹான் நகரங்களான ஹான்யாங், ஹான்கௌ, வூசாய் ஆகியவை கிளர்ச்சிக்காரர்களின் கைகளில் விழுந்தன. அந்த இடங்களிலிருந்து புரட்சி யாங்டிசியின் தெற்குப் பகுதியில் மிக வேகமாகப் பரவலாயிற்று.

புரட்சி ஏற்பட்ட போது டாக்டர் சென் அயல்நாட்டில் இருந்தார். உடனே அவர் தாயகம் திரும்பினார். வரும் வழியில் டிஷ் அரசாங்கத்தின் ஆதரவையும் பெற்றார். டிசம்பர் திங்கள் 25-ம் நாள் சீனா வந்து சேர்ந்தார். நான்கு நாட்களுக்குப்பிறகு மாநில பிரதிநிதிகளால் அவர் சீனக் குடியரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். டாக்டர் சென்னின் 27 ஆண்டு காலப் போராட்டத்திற்குப்பிறகு பின் வாழ்வின் நெடுநாளையக் கனவு வெற்றிகரமாக நனவானதைக் கண்டார்.

**சோவியத் ரஷ்யாவுடனான உறவு**

குடியாட்சிக் காலத்தில் டாக்டர் சென் அயல்நாட்டுப் பேராதிக்கம், கட்சியின் ஒற்றுமையின்மை, உள்நாட்டுச் சிக்கல் ஆகியவற்றால் அல்லல்பட்டார். அத்துடன் அவர் தப்பிக்கவும் முடியாமல் அவைகளைத் தீர்க்கவும் முடியாமல் துன்பப்பட்டார். அச்சமயத்தில் போல்ஷ்விக் புரட்சி புத்தொளியையும், தூண்டுதலையும் அவருக்கு அளித்தது. ஆகவே சோவியத் தன் நோக்கத்தை நீட்டியபோது அவர் அதைப்பற்றிக் கொண்டார். 1922-ம் ஆண்டு சோவியத் அரசாங்கம் அடால்ப் ஜோபே என்பவரை அதன் பிரதிநிதியாக சீனாவிற்கு அனுப்பியது. டூாக்டர் சென்னுக்கும் ஜோபேவுக்கும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி சீனாவிற்குப் பொதுவுடைமை ஏற்றதன்று என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சீனாவிற்கு ஆலோசர்களை அனுப்பி உதவி செய்வதாகவும், தன் பழைய சலுகைகளை உதறிதள்ளுவதாகவும் ரஷ்யா கூறியது. ரஷ்யா உதவியுடன் அது கட்சி ஒற்றுமையை நிலை நாட்டியது. தேசிய ஐக்கியத்தையும், அதன் புனரமைப்பையும் ஏற்படுத்த அது வலுவான அமைப்பு ஒன்றை நிறுவ முற்பட்டது. 1923-ம் ஆண்டில் சோவியத் நாடு மிகவும் அனுபவம் வாய்ந்த அரசியல் தந்திரியான போரோடின் என்பவரை சென்னின் தேசியக் கட்சியைச் சீரமைக்க அனுப்பியது. துற்போது சீனப்பொதுவுடைமை கட்சிக்கும் கோமின்டாங் கட்சிக்கும் ஒற்றுமை ஏற்படுத்தப்பட்டது. போரோடின் செல்வாக்கால் அவர் மூன்று புதிய கொள்கைகளை வெளியிட்டார். அவைகளாவன.

1) சோவியத் ரஷ்யாவுடன் நட்பு
2) சீனப் பொதுவுடைமை கட்சியின் உறவுகள்
3) தொழலாளர்கள், குடியானவர்கள் ஆகியோரின் இயக்கத்திற்கு ஆதரவு

**காண்டனின் தென்சீனக் குடியரசை ஏற்படுத்துதல்**

யுவான் இறந்த பிறகு டாக்டர் சன் யாட் சென் மீண்டும் ஒரு ராணுவ ஆட்சியைக் காண்டனில் 1917-ல் ஏற்படுத்தினார். அது யாங் டிசி நதியின் தென்பகுதி முஜவதையும் உள்ளடக்கி இருந்தது. விரைவிலேயே சென்னுக்கும் அவரது ராணுவத் தளபதிகளுக்கும் இடையில் வேறுபாடு ஏற்பட்டது. அவர் ஷாங்காண் என்னுமிடத்தில் அடைக்கலம் புக நேரிட்டது. பின்னர் அவர் காண்டனைக் கைப்பற்றினார். அரசாங்கத்தையும் புதுப்பித்தார். உள்நாட்டுத் தொல்லைகளாலும் தன் அதிகாரிகளின் கீழ்படியாத் தன்மையாலும் அல்லல்பட்ட சென் மேலைநாடுகளின் ஆதரவை நாடினார். அவர்களோ போர்த் தளபதிபளை தட்டிக் கொடுத்து கொண்டியிருந்தனர்.

**அவரது மரணம்**

காண்டனில் தன் அரசாங்கத்தை நிலைநாட்டியப்பின் அவர் தன் கவனத்தை வடபகுதியில் திருப்பி சீனாவை ஒன்றுபடுத்த முற்பட்டார். 1924-ல் பெங் என்ற போர்த்தளபதி பீகிங்கைக் கைப்பற்றி ‘சென்’னை சீனாவை ஐக்கியப்படுத்தும் மாநாட்டிற்கு வரவழைத்தார். அவரது உடல் நலம் பாதிக்கப்பட்டிருந்தாலும் அங்கு கலந்து கொள்ளச் சென்றார். ஆனால் அவர் எதையும் சாதிப்பதற்கு முன் உடல் நலம் மிகவும் குன்றி 1925-ல் இறந்து போனார்.

## இருபத்தோரு கோரிக்கைகள்

சீனாவின் பொருளாதார வளத்தின் மீதும்’, அரசியல் இறைமையின் மீதும் வெளிப்படையாக குறி வைக்கப்பட்ட ஆக்கிரமிப்பு அம்பாக ‘இருபத்தோரு கோரிக்கைகள்’ சீனா மீது ஜப்பான் அமைந்திருந்தன. இந்த கோரிக்கைகளினால் சீனா மீது ஜப்பான் தன் பேராதிக்கத்தைத் திணிக்கும் செயலைக் காண முடிந்தது. உள்நாட்டுச் சிக்கலாலும், யுவானின் அரசியல் சந்தர்ப்பவாதங்களாலும் உலகப் போரின் பீதியினாலும் சீனாவின் நிலைமை மிகவும் மோசமாகத் தென்பட்டது. இச்சூழ்நிலையில் ஜப்பான் சீனாவில் நுழைந்து ஆதாயம் தேட முற்பட்டது.

**ஜப்பானிய 21 கோரிக்கைகள் சீனாவிடம் வைக்கப்படுவதற்குரிய சூழ்நிலைகள்**

1914-ம் ஆண்டு முதல் உலகப் போர் ஏற்பட்டது. அதில் ஐரோப்பிய நாடுகள் பலவும் ஈடுபட்டன. ‘‘சீனா நடுநிலைமை வகிக்க முயற்சித்தது. இறுதியில் அது போரில் ஈடுபடும்படி கட்டாயப்படுத்தப்பட்டது. ‘‘சீனாவில் ஆதிக்கம் செலுத்த ஜப்பான் இப்போரை பயன்படுத்திக் கொள்ளும்’’ என்று ஒரு சமயம் யுவான் குறிப்பிட்டார்.

மஞ்சுக்களுக்குப் பின் அரியணை ஏறி முடியாட்சியை நிலை நாட்ட வேண்டுமென்று யுவான் திட்டமிட்டிருந்தார் என்பதை ஏற்கனவே கண்டோம். புரட்சிவாதிகள் முடியாட்சியை மீண்டும் கொண்டுவருகதை எதிர்த்தார்கள் அதன் விளைவாக உள்நாட்டுத் தொல்லைகள் ஏற்பட்டன. யூனானில் புரட்சி வெடித்தது. யுவான் அதை அடக்க படை ஒன்றை அனுப்பினார். ஆனால் அவர் அம்முயற்சியில் வெற்றி பெற வில்லை. மற்ற மாநிலங்களும் அதைப் பின்பற்றின. டயாங்சியின் ஆளுநரும் புரட்சியை ஆரம்பித்தார். பல மாநிலங்கள் தங்கள் விடுதலையை அறிவித்தன. நிலைமை கட்டுக்கடங்காமல் சென்றது. இந்தக் குழப்பமான சூழ்நிலையில் ஜப்பான் தன்னுடைய புகழ் பெற்ற 21 கோரிக்கைகளை வெளியிட்டது.

1914-ம் ஆண்டு திங்கள் ஜப்பான் ஜெர்மனியின் குத்தகைப் பகுதியான ஷாண்டுங்கை எடுத்துக் கொண்டது. இந்த ஆக்கிரமிப்பை யுவானால் தடுக்கமுடியவில்லை. 1915-ம் ஆண்டு ஜனவரித் திங்களில் சீனா மீத ஜப்பான் தன்னுடைய 21 கோரிக்கைகளை வைத்தது. அக்கோரிக்கைகளை சீனா ஏற்றுக் கொள்ளுமேயானால் அது ஜப்பானின் குடியேற்ற நாடாக் கருதப்படும் என்பது திண்ணம். ஜப்பரின் உதவி தேவை என்பதால் போரின் போது மேலைநாடுகள் அவ்விஷயத்தில் தலையிடவில்லை. இந்த சமயத்தில் சீனா ஒன்றுபட்டு தன் தலைவர் பின்னால் செயல்படலாயிற்று. அக்கோரிக்கைள் விபரம் பின்வருமாறு,

1. ஷாண்டுங்கில் இதுவரை ஜெர்மனி அனுபவித்து வந்த உரிமைகளை ஜப்பான் அனுபவிக்க சீனா ஒப்புதல் அளிக்க வேண்டும்.
2. ஷாண்டுங்கிலிருந்த முக்கிய துறைமுகங்களையும், நகரங்களையும் ஜப்பானுக்குத் திறந்து விடப்பட வேண்டும்.
3. லியோடுங், டெ்யரான், உள் மங்கோலியா ஆகிய இடங்களில் ஜப்பான் பெற்றிருந்த உரிமைகள் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

4. ஹோப்பேயிலிருந்த ஹான்யே மிங்கின் இரும்பு எஃகுத் தொழிறசாலை, சியாங்சிலிருந்த பிங்ஷியாங் நிலக்கரி சுரங்கத் தொழிற்சாலை ஆகியவற்றில் ஜப்பான் பங்குபெற சீனா ஒப்புதல் அளிக்க வேண்டும்.
5. சீனக் கடங்கரையிலிருந்து துறைமுகம் எதுவையும் வேறு எந்த நாட்டிற்கு குத்தகைக்கு விடக்கூடாது.
6. சீனாவின் அரசியல், நிதி, ராணுவத்துறைகளில் ஜப்பரின் ஆலோசகர்கள் இடம் பெற வேண்டும்.
7. சீனாவில் முக்கிய நகரங்களில் இருந்த காவல்துறை சீ-ஜப்பானிய மேற்பார்வையில் வைக்கப்படுதல் வேண்டும்.
8. சீனாவின் ஆயுத உற்பத்திச் சாலையை இரு நாடுகளும் இணைந்து கவனித்தல் வேண்டும்.
9. வூச்சுங்கிலிருந்து நான்சாங் வரையிலான இருப்புப்பாதைக்கான செலவு நிதியை அளிக்கும் உரிமையை ஜப்பானுக்கு அளிக்க வேண்டும்.
10. ஷாண்டுங்கிலுள்ள முக்கிய இடங்களில் ஜப்பானியர்கள் வாணிபம் செய்யவும், தங்கி வாழவும் சீனா அனுமதி தருதல் வேண்டும்.
11. ஆர்தர் துறைமுகம், தெற்கு ம‘சூரியா ஆகியவற்றின் குத்தகைக்காலம் 99 ஆண்டுகள் நீடிக்கப்படுதல் வேண்டும்.
12. தேற்கு மஞ்சூரியா, உள்மங்கோலியா ஆகிய இடங்களில் உள்ள ஜப்பரினியர்கள் குத்தகைக்கு நிலம் பெறவும், சொந்தமாக நிலம் வாங்கவும் உரிமை பெறுதல் வேண்டும்.
13. தேற்கு மஞ்சூரியா, உள்மங்கோலியாவின் கிழக்குப் பகுதி ஆகிய இடங்களில் ஜப்பானியர்கள் தங்கு தடையின்றி செல்லவும் வாணிபம் செய்யவும் சுதந்திரம் அளிக்கப்படுதல் வேண்டும்.
14. தேற்கு மஞ்சூரியா, உள்மங்கோலியாவின் கிழக்குப் பகுதி ஆகிய பகுதிகளின் வரிப் பாதுகாப்பிற்கு எதிராக மூன்றாவது நாட்டில் கடன் வாங்கும் போது சீன அரசாங்கம் ஜப்பானிய அரசாங்கத்திடம் ஆலோசனை செய்ய வேண்டும்.
15. சீனாவின் உட்பகுதிகளில் உள்ள ஜப்பானிய மருத்துவமனைகள், திருச்சபைகள், பள்ளிகள் ஆகியவைகள் நிலம் பற்றுக் கொள்ள உரிமை வழங்கப்படுதல் வேண்டும்.
16. ஜப்பானியர்கள் புத்தமதத்தைப் பரப்ப சீனர்கள் ஒப்புதல் தரவேண்டும்.
17. தேற்கு மஞ்சூரியா, உள் மங்கோலியாவின் கிழக்குப்பகுதி ஆகிய இடங்களில் இருந்த ஜப்பரினியர்களின் சுரங்க உரிமைகளை சீனா ஏற்றுக் கொள்ள வேண்டும.
18. மேற்கண்ட இரண்டு இடங்களில் ஜப்பானிய ஆலோசர்களின் உதவியை சீனா நாட வேண்டும் என அது கோரியது.
19. ஜப்பானின் அனுமதியின்றி சீனா ஹான்-யே-பிங் கம்பெனியின் உரிமைகளையும், சொத்துக்களையும் விற்கக் கூடாது.

20. ஆதன’ அனுமதியின்றி கம்பெனியின் வெளியில் 1ான்-யே பிங்கின் சொந்த கனிவளங்கள் செயல்படக்கூடாது.
21. புகின் என்ற இடத்தில் ஜப்பான் இருப்புப்பாதை கட்டுவதையும் கனிவளங்களைப் பயன்படுத்திக் கொள்வதையும் சீனா அனுமதிக்க வேண்டும்.

**கோரிக்கைகளின் தன்மை**

1. ஷாண்டுங்கைப் பற்றியது
2. மஞ்சூரியா, உள் மங்கோலியாவைப் பற்றியது
3. ஹான்-யே பிங் கம்பெனியைப் பற்றியது. சீனாவும் ஜப்பானும் இணைந்து செயல்படுதல் வேண்டும்.
4. சீனத்துறை முகங்களை குத்தகைக்கு விடுவது சார்பாக சூன்றாவது நாடு அங்கு வருதல் கூடாது
5. நாலாவிதமானவை-சீனாவின் உள்நாட்டு நிர்வாகத்தில் ஜப்பானின் ஆதிக்கம்.

முதல் நான்கு பிரிவில் உள்ளதை சீனா ஏற்றுக் கொண்டால் அதனுடைய சுதந்திரமும் ஒற்றுமையும் பாதிக்கப்படாது. ஆனால் நவீன பேராதிக்கம் என்ற பெயரில் ஜப்பான் செல்வாக்குப் பெற வாய்ப்பு ஏற்படும். ஐந்தாவது பரிவில் உள்ளது. சீனாவின் நிர்வாகத்தை இழக்கும் நிலையை ஏற்படுத்தும் என்பது புலப்பட்டது. சீன அரசியல், நிதி, ராணுவத்துறைகளில் ஜப்பானிய ஆலோசர்களை நியமிப்பது முக்கிய இடங்களில் சீன-ஜப்பானிய கூட்டுறவில் காவல் துறையினைக் கண்காணிப்பது, ஜப்பானிடமிருந்து குறிப்பிட்ட போர்க்கருவிகளை வாங்குவது (50 சதவீகிதம் அல்லது அதற்கு மேல்) ஆயுதச்சாலைகளைக் கூட்டாக மேற்பார்வையிடுவது ஆகியவை இக்கோரிக்கைகளில் அடங்கும். சீனாவின் ஆயுத ராணுவ அமைப்புகளில் ஜப்பான் மேலாதிக்கம் பெற வகை செய்தது. தன்னை ஒரு மூன்றாம் தரநாடாக மாற்றும் அளவிற்கு கோரிக்கைகள் அமைந்திருப்பதை எந்தவொரு நாடும் ஒத்துக் கொள்ளாது.

**ஜப்பானிய வற்புறுத்தல்**

முதல் உலகப்போர் ஏற்பட்டதன் விளைவாக ஜப்பானின் தொழில்கள் வளமடைந்தன. அதன் விளைவாக தொழிற்சாலைக்கு கச்சாப்பொருள்கள் தேவைப்பட்டதோடு, உற்பத்திப் பொருள்களுக்குச் சந்தையும் தேவைப்பட்டது. அப்புதிய தொழிற்அதிபர்களும், வாணிப மேதைகளும் தங்கள் கோரிக்கைளை நிறைவேற்றும்படி ஜப்பானியத் தலைவர்களை வற்புறுத்தினர். ஆதனால் ஒகுமாவின் தலைமையிலான ஜப்பானிய அரசாங்கம் 21 கோரிக்கைகளை தயார் செய்து அளித்தது.

அக்கோரிக்கைகளை வைத்து யுவானை வற்புறுத்தியது. ஜப்பரினய அரசாங்கம் முதலாவதாக ராணுவ படையெடுப்புக்கு பயந்து யுவான் ஒப்புக் கொள்ளும் நிலைமைக்குத் தள்ளப்பட்டார். இரண்டாவதாக புரட்சிவாதிகளுக்கு ஜப்பானிய ஆதரவு கிட்டுவிடுமோ என யுவான் பயந்து கொண்டார். சீனா ஒரு அரசாக நீடிக்கும் நிலைக்கும், யுவான் ஷிகே ஆட்சியாளராக இருப்பதற்கும் ஜப்பானால் ஆபத்தும் பயமும் ஏற்பட்டது. அதே நேரத்தில்

அவருடைய சொந்த குடும்பத்திற்கும், அவருக்கும் ஆபத்து ஏற்படாமல் உயர்வதற்கு ஆதரவு என்னும் கையூட்டையும் வழங்கியது ஜப்பான்.

**சீன எதிர்ப்பு**

ஜப்பானின் 21 கோரிக்கைகளைக் கேள்வியுற்ற சீன மக்கள் சீற்றம் கொண்டனர். இயற்கையாகவே ஜப்பானியர்களை எதிர்க்கலாயினர். சேய்தித்தாள்கள் அக்கோரிக்கைகளை புறக்கணித்தன. ஜப்பானிய எதிர்ப்பு உணர்ச்சியைத் தூண்டின. ஜப்பரினய ஆபத்தை எதிர்க்க யுவானுக்கு 19 ஆளுநர்கள் ஆதரவு நல்கினர். அவர்கள் அதைத் தடுக்க முற்பட்டனர். தேசிய மீட்சி நிதி திரட்டப்பட்டது. தங்களைத் தயார் செய்து கொள்ள எல்லோரும் நிதி அளித்தனர். நாடெங்கிலும் போராட்டங்கள் நடைபெற்றன. ஜப்பானியப் பொருள்கள் பகிஷ்காரம் செய்யப்பட்டன. ஜப்பானிலிருந்து சீன மாணவர்கள் தாயகம் திரும்பினர்.

**யுவானின் கீழ்ப்படிதல்**

ஜப்பானிய வற்புறுத்தலை தடுக்க எல்லாக்கட்சிகளும் யுவானின் தலைமையில் அணி திரண்டன. எந்த ஒரு இராணுவத் தாக்குதலையும் சீனாவால் சமாளிக்க முடியாதென யுவான் உணர்ந்தார். தூரக்கிழக்கு நாடுகளில் வல்லரசு சமநிலையைப் பராமரித்து வந்து ஜப்பானின் ஆக்கிரமிப்பை உண்மையாக தடை செய்த ஐரோப்பிய வல்லரசுகள் ஐரோப்பா கண்டத்தில் ‘வாழ்வா அல்லது சாவா? ஏன்ற போராட்டத்தில் ஈடுபட்டிருந்தன. யுானின் நிலையும் ஆட்டம் கண்டிருந்தது.

சில கோரிக்கைகளையாவது ஏற்றுக்கொள்ளாமல் இருக்க முடியாது என யுவான் உணர்ந்தார். 1915-ம் ஆண்டு மே திங்கள் ஜப்பான் வலியுறுத்தல் தாங்காமல் முதல் 4 பிரிவுகளில் கண்ட கோரிக்கைகளை அவர் ஏற்றுக் கொண்டார். ஐந்தாவதைத் தள்ளிவைத்தார். சட்டமன்றத்தின் ஆலோசனையில்லாமல் அவர் ஜப்பானுடன் ஓர் உடன்பாடு செய்து கொண்டார். இறுதி ஒப்பந்தத்தில் ஐந்தவாது பிரிவிலுள்ள கோரிக்கைகள் பிறகு ஆலோசிக்கப்பட வைக்கப்பட்டது. முழுமையும் நிராகரிப்பதில்லை என முடிவு செய்யப்பட்டது. எனினும் தலைக்கு மேல் உள்ள கத்தியைப் போல் ஜப்பரின போராபத்து உண்டு என்பது தொடர்ந்து காணப்பட்டது.

**யுவான் கீழ்ப்படிந்ததால் ஏற்பட்ட விளைவு**

எதிர்பாராத அழிவினால் ஏற்படும் பயத்தையும் அதன் விளைவாக தேசியம் வெடித்து எழும்நிலையினையும்’’ இருபத்தோரு கோரிக்கைகள் ஏற்படுத்திவிட்டன’ என்று இமானுவேல் சூ என்பவர் குறிப்பிட்டுள்ளார். முக்களை இச்செய்தி வெகுவாக பாதித்தது. ‘எரிகின்ற நெருப்பில் எண்ணெய் வார்ப்பது போல்’ இது அமைந்துவிட்டது. ‘ வெளியில் பெரும் வல்லரசுகளை எதிர்ப்பது உள்நாட்டில் துரோகிகளை வெளியேற்றுவது’ என மக்கள் உறுதி பூண்டனர். ஜப்பானை திருப்திப்படுத்த யுவான் மேற்கொண்ட கொள்கையை சீன மக்கள் எதிர்த்தனர். வெறுத்தனர். யுவானின் செல்வாக்கு வெகுவாகக் குறைந்தது. அவரது வலிமையற்ற நிலை மக்களுக்குப் புலப்பட்டது. மக்கள் அவர் மீது கொண்டிருந்த நம்பிக்கையை இழந்தனர்.

சீனர்கள் மீது ராஜதந்திர வெற்றியை ஜப்பான் பெற்ற போதிலும் அதன் ஆக்கிரமிப்புப் பசி தீரவில்லை.

**சீனாவும் முதல் உலகப்போரும்**

1914-ம் ஆண்டில் முதல் உலகப்போர் ஏற்பட்டது. சீனா அப்போது உள்நாட்டுச் சிக்கல்களாலும், குழப்பத்தினாலும் தவித்துக் கொண்டிருந்தது. ஜப்பானும், சீனாவும் நேரடியாகப் போரில் ஈடுபடவில்லை என்றாலும் அவைகளுடைய தேசிய நலன்களைப் பாதுகாத்துக் கொள்ள போரில் ஈடுபடுத்தப்பட்டன.

நேசநாடுகளும், அச்சு நாடுகளும் சேர்ந்து கொண்டு சீனாவைச் சுரண்டுதலுக்கு இரையாக்கி விட்டன. போர்க்காலத்தில் யுவான் ஷி கே நடுநிலைமை வகித்தார்.

சீனாவின் நடுநிலைத் தன்மை மதிக்கப்படும் என்ற உறுதிமொழியை அமெரிக்க உதவியுடன் சீனா முயற்சி செய்து பெற்றது. ஜெர்மனியைத் தவிர வேறு எந்த நாடும் சீனாவின் வேண்டுதலை ஒத்துக் கொள்ளவில்லை.

**ஷாண்டுங் தீபகற்பத்தை ஜப்பான் கைப்பற்றுதல்**

'பழம் நழுவி பாலில் விழுந்தது' போல முதல் உலகப்போர் ஜப்பானுக்கு ஒரு வரப்பிரதமாக அமைந்தது. தன்னுடைய ஆதிக்கத்தை சீனாவில் விரிவுபடுத்த ஜப்பான் முற்பட்டது. முக்கிய மேலை நாடுகளுக்கு இடையில் நடைபெற்ற ஒரு தற்கொலைப் போராட்டமாக முதல் உலகப்போர் ஜப்பானின் கண்களுக்குத் தெரிந்தது என்று கீட்டன் குறிப்பிட்டுள்ளார். ஆப்போது ஜப்பான் அமைதியாக தன் வலிமையும் பொலிவையும் பெற்றது என்றும், தூரக்கிழக்கில் நல்லதோர் நிலையினை அது பெற்றது என்றும், அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். ஆதன்படி ஜப்பான் கிரேட் பிரிட்டனின் நட்பு நாடாகப் போரில் ஈடுபட்டது. பின்னர் ஜெர்மனிக்கு எதிராகப் பொரில் ஈடுபட்டது. அது ஜெர்மனிக்கு இறுதி எச்சரிக்கையை விடுத்தது. அத்துடன் சீன ஜப்பானிய நீர்ப்பகுதியிலிருந்து அது தன் படைகளை விலக்கிக் கொள்ள வேண்டும் என்றது. கியாசௌவை ஜப்பானிடம் திருப்பித் தரும்படி கூறியது. ஷாண்டுங் பகுதியைக் கைப்பற்றும் பொருட்டு ஜப்பானியப் படைகள் சீனப்பகுதிகள் வழியாகச் சென்றதன் மூலம் அவைகள் சீனர்களின் நடுநிலையினை மீறியும் பன்னாட்டுச் சட்டங்களுக்குப் புறம்பாகவும் நடந்து கொண்டன. தூரக்கிழக்கில் அமைதியைப் பேணவே ஜெர்மனியுடன் மோதுவதாக ஜப்பான் கூறியது. இறுதியில் ஷாண்டுங் சீனாவிடம் ஒப்படைக்கப்படும் என்று கூறின. ஆனால் இவைகள் எல்லாம் வெறும் கண்துடைப்பே. ஜப்பான் ஷாண்டுங்கை சீனாவிற்குத் திருப்பி அளிக்கவில்லை. அப்பகுதியில் அது தன் ஆதிக்கத்தை நிலை நாட்டிக்கொண்டது. யுாவன்ஷிகேயினால் அதை எதிர்ப்பதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியவில்லை.

**இருபத்தோரு கோரிக்கைகள்**

ஆனால் இரு நாடுகளுக்கிடையிலான உறவுகளில் கசப்பு ஏற்படலாயிற்று. ஷாண்டகளிலிருந்து ஜப்பான் வெளியேறுவதற்குப் பதிலாக சீனா மீது 21 கோரிக்கைகளை திணித்தது. அந்தக் கோரிக்கைகள் மிகவும் கடுமையானவை, வெற்றி பெற்ற நாடு தோல்வியுற்ற

நாட்டின் மீது சுமத்துவதைப் போல அவைகள் அமைந்திருந்தன. அந்த கோரிக்கைகள் 5 வகைகளைச் சார்ந்திருந்தன. ஷாண்டுங்கை குத்தகையாகப் பெறுவதில் ஜப்பான் முற்றுரிமை பெற விரும்பியது. ஜப்பான் சீனாவின் பெரும் கனிவளங்கள் கொண்ட குழுமத்தை சீன-ஜப்பானிய கூட்டுறவு குழுமமாக மாற்ற விரும்பியது. சீனக்கடற்கரைப் பகுதியில் அது வேறு எந்த நாட்டிற்கும் எப்பகுதியையும் குத்தகைக்கு விடக்கூடாது. தெற்கு மஞ்சூரியாவிலும், உள்மங்கோலியாவிலும் ஜப்பானியர்கள் சொத்து வைத்துக் கொள்ள உரிமை பெற்றனர். இது மட்டுமல்ல, ஜப்பானிய அரசியல், நிதி ராணுவத்துறைகளின் ஆலோசகர்கள் சீனாவில் இடம் பெற்றனர். மேலும் சீன ஜப்பானிய கூட்டுக்காவல் துறையினர் சீனாவின் முக்கிய நகரங்களில் காவல் பணியினைக் கவனிக்கலாயினர்.

மேலை நாடுகளில் அமெரிக்காவைத் தவிர எல்லா நாடுகளுமே போரில் ஈடுபட்டிருந்ததால், ஜப்பரின் ஆக்கிரமிப்பைத் தடுக்க எதுவும் செய்ய முடியவில்லை. இறுதியாக 6வது பிரிவின் கீழிருந்த கோரிக்கைகள் பின்னால் கவனிக்க வேண்டி தள்ளி வைக்கப்பட்டது. சில மாறுதல்கள் செய்து முதல் நான்கு பிரிவிலுள்ள கோரிக்கைகளை யுவான் ஏற்றுக் கொண்டார். இந்த உடன்படிக்கைகள் தெற்கு மஞ்சூரியா, உள்மங்கோலியாவின்கிழக்குப்பகுதி, ஷாண்டுங் ஆகிய இடங்களில் ஜப்பானின் மேலாதிக்கம் ஏற்பட வழி செய்தன.

**சீனா போரில் இறங்குதல்**

1916-க்கும் 1917க்கும் இடையில் நேசநாடுகள் படுதோல்வி கண்டன. பல போர் முனைகளில் ஜெர்மானியர்கள் பெரும் வெற்றி பெற்றனர். 1916-ம் ஆண்டில் பிரான்சும்,பிரிட்டனும் ஏராளமான சீனத் தொழிலாளர்களை ராணுவத்தில் சேர்த்து பயிற்சி கொடுத்தன. மேலை நாட்டுத் தலைவர்களின் உற்சாகமான உறுதி மொழிகளால் தூண்டப்பட்ட சீனர்கள் அமைதி மாநாட்டில் இடம் கிடைக்கும் என்று எதிர்பார்த்த சீனர்கள் ஆவல் கொண்டு 1917-ல் அச்சு நாடுகளுக்கு எதிராக போரில் ஈடுபட்டனர். சீன போரில் ஈடுபட்டதால் உள்நாட்டுச் சிக்கல் ஏற்பட்டது. பீகிங்கை ஆண்டு வந்த ராணுவத் தளபதி துவானுக்கும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இடத்தைப் பெற்றிருந்த கோமின்டாங் கட்சியினருக்கும் போராட்டம் நடைபெற்று வந்தது. துவானின் நோக்கங்களை சந்தேகித்து, அவர் நேச நாடுகளுடன் பேரம் பேசியதை கோமின்டாங் கட்சியினர் எதிர்த்தனர். எப்படியிருந்த போதிலும் இறுதியாக துவானின் கட்சியினர் வெற்றி பெற்றனர்.

**சீனா போரில் ஈடுபட்டதால் ஏற்பட்ட விளைவுகள்**

போர் நடைபெறும் இடங்களுக்குத் தேவையான வீரர்களை பொறுக்கி எடுப்பதற்கு ஒரு லட்சத்து எழுபத்தைந்தாயிரம் சீனக் கூலி ஆட்களை அனுப்ப அனுமதி தந்தது. சீனா உள்நாட்டுக் சிக்கலில் உழன்று கொண்டிருந்ததால் போரில் தீவிரமாக ஈடுபட இயலவில்லை. அது போரில் ஈடுபட்டதால் கீழ்க்காணும் நன்மைகளை அடைந்தது.

1) தனக்குச் சாதகமாக சுங்கவரி மாற்றத்தினைப் பெற்று கொண்டது.
2) பாக்சர் கலவரத்தின் போது ஒத்துக்கொண்ட இழப்பீட்டுத் தொகை குறிப்பாக ஜெர்மனிக்கும், ஆஸ்திரியாவிற்கும் செலுத்தப் படாத தொகை நீக்கப்பட்டது.

அத்துடன் அவைகளுக்குச் செலுத்த வேண்டிய தொகையானது ஐந்தாண்டுகளுக்கு நிறுத்தி வைக்கப்பட்டது.

3) டியன்சின் ஹான்கௌ ஆகிய இடங்களில் ஜெர்மன் பெற்றிருந்த சலுகைகளை சீனா எடுத்துக் கொண்டது.

4) ரஷ்ய-மஞ்சூரிய இருப்புப்பாதையில் நேசநாடுகள் பெற்றிருந்த ஆதிக்கத்தில் சீனாவும் பங்கு பெற்றது.

5) அமைதி மாநாட்டில் இடமளிப்பதாக சீனாவுக்கு உறுதி அளிக்கப்பட்டது.

**சீனாவும் அமைதி மாநாடும்**

போரின் முடிவில் ஏற்பட்ட பாரிஸ் அமைதி மாநாட்டில் கலந்து கொள்வதற்கு சீனா தன் பிரதிநிதிகளை அனுப்பியது. அவர்கள் பீகிங், காண்டன் அரசாங்கங்களிலிருந்து சென்றனர். ஷாண்டுங்கிலிருந்த முந்தைய ஜொமன் சொத்துக்களை சீனாவிற்கு அளிக்க வேண்டுமென்று சீனப்பிரதிநிதிகள் வற்புறுத்தினர். ஆத்துடன் அயல்நாட்டுத் துருப்புகளை விலக்கிக் கொள்ள வேண்டும் என்று சுங்கவரியில் தன்னாட்சி உரிமை அளிக்கப்படவேண்டும் என்றும் அவர்கள் வற்புறுத்தினர். ஷாண்டுங்கை சீனாவுக்கு மீண்டும் அளிக்க வேண்டும் என்று அமெரிக்கா மட்டும் தான் கூறியது. சீனாவின் மற்ற கோரிக்கைகள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஏனெனில் அவைகள் மாநாட்டிற்கு அப்பாற்பட்டவை என்பதேயாகும்.

**சீனாவின் கோரிக்கைகளை நிராகரித்தல்**

அமைதி மாநாட்டில் சீனா இரண்டு தொல்லைகளைச் சமாளிக்க வேண்டியிருந்தது. முதலாவதாக சீனாவில் எந்தவொரு மைய அதிகாரமும் இல்லை. அங்கு இரண்டு அரசாங்கங்கள் ஒன்று பீகிங்கிலும், மற்றொன்று காண்டனிலும் செயல்பட்டு வ்ந்தன. ஆகவே சீனா அமைதி மாநாட்டிலட தன் நாட்டுக்கு என்று எதையும் பேசமுடியவில்லை. இரண்டாவதாக ஜப்பான் போரின் போது ஒரு வல்லரசாக எழுச்சி பெற்றது. ஜப்பானின் கடற்படைத் தளங்களைப் பயன்படுத்திக் கொள்வதில் நேசநாடுகள் மிகவும் பாதுகாக்கப்படும் என்று ஐரோப்பிய நாடுகள் அதற்கு இரகசியமாக வாக்குக் கொடுத்திருந்தன. ஆகவே அமெரிக்காவைத் தவிர மற்ற எல்லா நேசநாடுகளும் ஜப்பானை ஆதரித்தன. பின்னால் அமெரிக்காவும் அந்த நாடுகள் பக்கம் சேரலாயிற்று. இவ்வாறு ஜப்பான் ஷாண்டுங்கின் உரிமையினை எல்லா நாடுகளின் அனுமதியுடன் பெற்றுக் கொண்டது. இதை சீனா ஏற்றுக் கொள்ளவில்லை. தங்கள் நாட்டிற்கு ஏற்பட்ட பெரிய துரோகமாக அதைக் கருதியது. சீனா. இச்செய்தி சீனாவிற்கு எட்டியதும் நாடே கொந்தளித்தது. ஜப்பானுக்கு எதிரான கிளர்ச்சி ஏற்பட்டது. பீகிங்கில் கலகம் ஏற்பட்டது. ஜப்பரினயப் பொருள்கள் பகிஷ்கரிக்கப்பட்டன. வெர்சேல்ஸ் உடன்பாட்டில் சீனா கையெழுத்திட மறுத்தது. அப்போது ஜெர்மனியுடன் அது ஓர் உடன்பாடு செய்து கொண்டது. அது தன் உரிமைகளை சீனாவிற்கு விட்டுக் கொடுத்தது. சீன ஜெர்மனிய உடன்பாடு ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும். சுமமான முறையில் சீனாவுடன் உடன்பாடு செய்து கொண்ட ஒரே ஐரோப்பியா நாடு ஜெர்மனியாகும்.

## மே நான்காம் நாள் இயக்கம்

பாரிஸ் அமைதி மாநாட்டில் சீனாவிற்கு பெரும் ஏமாற்றம் ஏற்பட்டது. அவர்களது நம்பிக்கை தகர்க்கப்பட்டது. எனவே அவர்கள் அதிருப்தி அடைந்தனர். ஷாண்டுங் பிரச்சனையில் சீனாவை மேலைநாடுகள் ஏமாற்றிய செய்தி அவர்களுக்கு 1919-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30-ம் நாளில் எட்டியது. அதன் விளைவாக நாடிடங்கிலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. எதிர்ப்பு ஏற்பட்டது. அது பொது மக்களின் கோபத்தைக் கிளறியது. தேசிய உணர்ச்சியைத் தூண்டியது. மேலைநாட்டின் மீது ஏமாற்றத்தை ஏற்படுத்தியது. வெர்சேல்ஸ் முடிவுகளைக் கொண்டு துரோகிகளை எதிர்த்து ஆயிரக்கணக்கான மாணவர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். ஜப்பானியப் பொருள்களை பகிஷ்காரம் செய்தார்கள். கிளர்ச்சிக்காரர்களை அடக்க அரசாங்கம் முயற்சி செய்தது. ஆனால் அது 'எரிகின்ற நெருப்பில் எண்ணெய் வார்ப்பது போல அமைந்துவிட்டது.

**இயக்கத்திற்கான காரணங்கள்**

1. மஞ்சு வம்சத்தின் வீழ்ச்சிக்குப் பின் நாட்டின் நிலைமையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. இராணுவத் தளபதிகள் பலர் ஆட்சியைப் பிடித்தனர். அவர்கள் மக்களின் நலன் கருதாமல் ஆட்சி செய்து வந்தனர். ராணுவத்தினர் பல கிராமங்களில் கொள்ளையடிப்பதிலும், நாசவேலைகளிலும் இறங்கினர். நாட்டில் அமைதி இல்லை. இதனால் மக்கள் மனக்கசப்படைந்தனர்.
2. வசதியான செல்வம் மிக்க மக்கள் மேலும் வசதியும் செல்வமும் பெற்று வாழ்ந்தனர். ஏழை மக்கள் பெரும் துன்பம் அடைந்தனர். அதிகாரிகளிடத்தில் ஊழலும் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தும் செயலும் காணப்பட்டன. குடியானவர்கள் வரியின் கொடுமையில் உழன்று கொண்டிருந்தனர். சிலரிடம் நிலமும் செல்வமும் குவிந்திருந்தால், குடியானவர்கள் வேலை தேடி நகரத்துக்குச் செல்லலானார்கள்.
3. போரின் போது பொருளாதார வளர்ச்சிக்கு சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஏராளமான ஜவுளி ஆலைகள் ஏற்படுத்தப்பட்டன. ஒரு மைய வங்கி ஏற்படுத்தப்பட்டது. வணிக வங்கிகள் பல ஏற்படுத்தப்பட்டன. 'பல புதிய தொழிற்சாலைகள் நிர்மாணிக்கப்பட்டன. ஆனால் சீனர்களுக்கு ஏற்றுமதி வாணிபத்தை கட்டுப்படுத்தும் உரிமை இல்லை. அயல்நாட்டு வணிகர்களிடமிருந்து கடும் போட்டியினை சமாளிக்க வேண்டியிருந்தது. சீன மக்கள் தங்கள் பொருளாதாரத்தைக் கட்டுபடுத்தினால் தான் தங்கள் வாழ்வு வளமடையும் என்று கருதினர்.
4. சீனாவில் தொழிலாளர்களின் பணிநிலை மிகவும் துன்பமயமானதாக அமைந்திருந்தது. அத்துடன் அவர்கள் அபினிபழக்கத்தையும், பிற கெட்ட பழக்கங்களையும் கொண்டிருந்தனர். போரின் போது அவர்கள் பிரான்சின் தொழிலாளர்களின் தொடர்பினைப் பெற்றார்கள். அவர்களே நன்கு அமைக்கப்பட்டு

நல்ல நிலையில் இருந்தார்கள். இது சீனத் தொழிலாளர்களிடத்தில் ஒரு புத்துணர்ச்சியினை ஏற்படுத்தியது.

5. இவ்வியக்கத்தின் முக்கிய ஆதாரம் மாணவர்களாவர். அவர்கள் அறிஞர்களாலும், சிந்தனையாளர்களாலும் வெகுவாகத் துாண்டப்பட்டார்கள். மேலை நாட்டு நாகரிகத்தை நிராகரிப்பதால் தங்களுக்கு ஏதும் அனுகூலம் இல்லை என்றனர். பழைய நாகரிகத்தையும் புதிய நாகரிகத்தையும் இணைத்து விளங்குகின்ற சீன நாகரிகமே தங்களுக்குத் தேவை என்றனர். பல செய்தித்தாள்கள் தோன்றின. அவைகளில் மிகவும் செல்வாக்கு பெற்றுத் திகழ்ந்தது 'புதிய இளமை' யாகும். இது 1915-ம் ஆண்டு சென்-து-சியு என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. சமூக அரசியல் புரட்சியில் சென்-து-சியு பெரும் பங்காற்றினார். அவர் பழைய கன்பூஷியகக் கருத்துக்களை அறவே நிராகரித்தார். புதிய கருத்துக்களை பரப்பலானார்.
6. பாரீஸ் அமைதி மாநாடும் வெர்சேல்ஸ் உடன்படிக்கையும் புரட்சியின் உடனடிக் காரணங்களாக அமைந்தன. ஷாண்டுங்கில் ஜப்பானின் ஆதிக்க ஏற்படுத்தும் உரிமையினை வெர்சேல்ஸ் விதி வலியுறுத்தியது. இது சீனர்களுக்கு ஏற்பட்ட பலத்த அடியாகும்.

**இயக்கத்தின் போக்கு**

1919-ம் ஆண்டு மே திங்கள் நான்காம் நாள் பீகிங்கில் மூவாயிரம் மாணவர்கள் ஒரு கிளர்ச்சியினை ஆரம்பித்தனர். துரோகிகளை தண்டிக்க வேண்டும் என்றும், ஜப்பானிய பொருள்களை பகிஷ்காரம் செய்ய வேண்டும் என்றும் குரல் எழுப்பிக் கொண்டு ஊர்வலமாகச் சென்றனர். அவர்கள் ஜப்பானின் 21 கோரிக்கைகளை ரத்து செய்ய வேண்டும் எனக் கோரினர். ஆந்த மாணவர்களின் ஊர்வலம் அமைச்சர்களின் இல்லங்களில் புகுந்து நாசமாக்கிய
போது வன்முறையாக மாறியர். சீன அரசாங்கம் அடக்கு முறைககளை கட்டவிழ்த்து விட்டது. மாணவர்கள் சுற்றி வளைக்கப்பட்டனர். எனவே கிளர்ச்சி பல இடங்களில் பரவலாயிற்று. கோபம் கொண்டிருந்த மக்கள் மாணவர்களுக்கு ஆதரவு நல்கினர். தொழலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். ஜப்பானியப் பொருள்கள் பகிஷ்காரம் செய்யப்பட்டன. நாடெங்கிலும் வன்முறையின் அலைகள் எழுச்சியுற்றன. அந்தச்சமயத்தில் புகைவண்டித் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யப் போவதாகப் பயமுறுத்தினர். இது அரசாங்கத்தை ஆட்டம் காண வைத்தது. கைது செய்யப்பட்ட மாணவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். ஜப்பானிய ஆதரவு பெற்ற அரசாங்கம் பதவி விலகியது. ஆந்த மாணவர்களின் கிளர்ச்சி தான் மே நான்காம் நாள் இயக்கம் என்று அழைக்கப்பட்டது.

## வாஷிங்டன் மாநாடு

### வாஷிங்டன் மாநாடு கூடியதற்கான காரணங்கள்

### 1.அமெரிக்கவிற்கும் ஜப்பானுக்கும் இடையிலான போட்டி

ஆமெரிக்கா தூரகிழக்கில் தன்னுடைய பங்கிற்கு ஹவாய், பிலிப்பைன் தீவுகள் ஆகியவற்றைப் பிடித்துக் கொண்டது. அதன் மூலம் சீனச் சந்தையில் இடம் பெற முற்பட்டது. அதன் தொழில்கள் அங்கு நன்கு வளர்ச்சி அடைந்ததால் தூரக்கிழக்கில் அதற்கு சந்தை தேவைப்பட்டது. ம‘ஞ்சூரியாவில் ஜப்பான் செல்வாக்கு பெற்றதை அமெரிக்கா மிகவும் வெறுத்தது. திறந்தக்கதவுக் கொள்கைக்கு முரணாக ஜப்பான் சீனாவின் மீது ஆக்கிரமிப்புக் கொள்கையினைத் தொடர்ந்து மேற்கொண்டிருந்தது. ஆங்கிலேய ஜப்பானிய உடன்பாட்டினால் அமெரிக்கா ஜப்பானைத் தட்டிக் கேட்க முடியவில்லை. 1917-ம் ஆண்டில் ஏற்பட்ட போல்ஷ்விக் புரட்சியின் மூலம் பொதுவுடைமை ஆட்சி ரஷ்யாவில் ஏற்பட்டு முதலாளித்துவ நாடுகளுக்குப் பொது ஆபத்தாக விளங்கியது. இந்த ஆபத்து அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளை திகைக்க வைத்ததால் அவைகள் இரண்டும் லான்ஷிஹ்-இ உடன்பாட்டைச் செய்து கொண்டன. அதன்படி புவியியல் அடிப்படைசீனாவில் ஜப்பானிய நலன்கள் பாதுகாக்கப்படும் என்று அமெரிக்கா ஒப்புக் கொண்டது. ஆனால் ஏற்கனவே ஜப்பானிய முன்னேற்றத்தை அமெரிக்கர்கள் விரும்பவில்லை. ஆகவே லான்ஷிநி-இஜி ஒப்பந்தத்தை கூடிய விரைவிலேயே முடித்துக் கொள்ள வேண்டுமென்று அவர்கள் எண்ணினர். ரஷ்ய உள்நாட்டில் போரின் போது சைபீரியாவை ஜப்பான் ஆக்கிரமித்தது. அமெரிக்காவை அதிர்ச்சியுறச் செய்தது. ஆகவே ஜப்பானின் ஆதிக்கப் பேராசையினை தடுத்து நிறுத்த ஒன்றுட்ட மாநாட்டைக் கூட்ட வேண்டுமென அமெரிக்கா கருதியது.

### 2.ஆங்கிலேய-ஜப்பானிய உடன்பாட்டின் முறிவு

1902-ம் ஆண்டில் ஏற்பட்ட ஆங்கிலேய-ஜப்பானிய உடன்பாட்டினை முறித்துக் கொள்ள இங்கிலாந்து சந்தர்ப்பத்தை எதிர் நோக்கி இருந்தது. அந்த உடன்பாடு முதன் முதலில் ரஷ்யாவிற்கு எதிராக முடுக்கி விடப்பட்டது. பின்னர் ஜெர்மனிக்கு எதிராக திருப்பப்பட்டது. 1920ல் ரஷ்யாவும், ஜெர்மனியும் வீழ்ச்சியுற்றவுடன் ஆங்கிலேய-ஜப்பானிய உடன்பாட்டின் பயன் முடிந்தது போல் தோன்றியது.

இதை ஜப்பான் அமெரிக்காவிற்கு எதிராகப் பயன்படுத்த முற்பட்டதால் ஆங்கிலேய-அமெரிக்க உறவில் விரிசல் ஏற்படும் வாய்ப்பு ஏற்பட்டது. எனவே இங்கிலாந்து அந்த ஒப்பந்தத்தை கைவிட விரும்பியது. மேலும் பிரிட்டிஷ் டொமினியன்களும் ஆஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளும் அந்த உடன்பாட்டிலிருந்து இங்கிலாந்தை விலக்கிக் கொள்ளத் தூண்டின. மேலும் ஆசியாவில் ஜப்பரினயப் பொருளாதார ஆதிக்கத்தைக் கண்டு அவர்கள் வெறுப்புற்றனர். இந்தவிதமாக பிரிட்டனும் ஒரு பன்னாட்டு மாநாட்டைக் கூட்டி அந்த உடன்பாட்டிற்கு முற்றுப்புள்ளி வைக்க விரும்பியது.

**3.ஜப்பானிய கருத்து**

ஆங்கிலேய-ஜப்பானிய உடன்பாடு முறிந்து போனால் தான் தனித்து விடப்பட்டு விடும் என்று ஜப்பான் உணர்ந்தது. ராணுவ ஆட்சியில் அது பெற்றிருந்த நம்பிக்கை தடுமாற்றம் கொள்ளலாயிற்று. மின் செய்தோ கட்சியானது தொழில் வளத்தில் நாட்டம் கொண்டிருந்ததால் ஆக்கியரமிப்புக் கொள்கையின் வேகத்தை கட்டுப்படுத்த முற்பட்டது. அதே நேரத்தில் சீனர்கள் ஜப்பானியப் பொருள்களைப் பகிஷ்காரம் செய்தது, அவசியமற்ற சைபீரியப் பிரச்சினை ஆகியவை அதன் நிதி நிலைமையை மிகவும் பாதித்தன. இச்சூழ்நிலைகளால் ஜப்பான் வாஷிங்டன் மாநாட்டில் கலந்து கொண்டு தன் பிரச்சனைகளை அரச தந்திர ரீதியில் தீர்த்துக் கொள்ளலாம் என்று எண்ணியது.

**4.சீனரின் எதிர்பார்ப்பு**

முதல் உலகப்போருக்குப்பின் சீனாவிற்கு பெரும் ஏமாற்றம் ஏற்பட்டது. வெர்சேல்ஸ் உடன்பாடு, 21 கோரிக்கைகள் ஆகிய நிகழ்ச்சிகள் சீனர்களின் நாட்டுப்பற்றைத் தூண்டிவிட்டன. நாடெங்கிலும் ஏற்பட்ட போரட்டம் மே நான்காம் நாள் இயக்கத்திற்கு வழிவகுத்தது. இதனால் மேலை நாடுகள் மீது சீனா கோபம் கொண்டது. ஆகவே பன்னாட்டு மாநாட்டின் மூலம் சீனாவின் அநீதி நீக்கப்படும் என்று கருதப்பட்டது.

**வாஷிங்டன் மாநாடு**

அமெரிக்காவின் முயற்சியால் வாஷிங்டன் மாநாடு கூட்டப்பட்டது. போருக்கு முன் வலிவும் பொலிவும் பெற்றிருந்த நான்கு வல்லரசு நாடுகளான பிரிட்டன், பிரான்ஸ், ஜப்பான், இத்தாலி ஆகியவைகளுடன் துராக்கிழக்கு நாடுகளில் நிதி, நில் பெற ஆர்வம் கொண்டிருந்தத பிற நாடுகளான சீனா, நெதர்லாந்து, போர்ச்சுக்கல் பெல்ஜியம் ஆகியவை அமரிெக்காவால் மாநாட்டிற்கு அழைக்கப்பட்டன. பொதுவுடைமை நாடான ரஷ்யா அழைக்கப்படவில்லை. மேலே கூறப்பட் ஒன்பது நாடுகளும் வாஷிங்டனில் ஒரு மாநாட்டில் கூடின. ஆவைகள் 1921-ம் ஆண்டு நவம்பர் திங்கள் முதல் 1922-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் வரை பல தொடர் கூட்டங்களில் கூடிப்பேசின.

**மாநாட்டில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள்**

வாஷிங்டன் மாநாடு உடன்படிக்கைகளில் முடிவு பெற்றது. மாநாட்டிற்கு அப்பால் இரண்டு தனித்தனி உடன்படிக்கைகள் ஏற்பட்டன. அதில் முடிவான உடன்படிக்கைகளையும் அங்கு பின்பற்றிய தீர்மானங்களையும் சுருக்கமாக காண்போம்.

நான்கு வல்லரசுகளின் உடன்படிக்கை: பிரிட்டன், அமெரிக்கா, ஜப்பான், பிரான்ஸ் ஆகிய நான்கு நாடுகளும் இவ்வுடன்படிக்கையில் கையெழுத்திட்டன. துாரக்கிழக்கு நாடுகளின் பிரச்சனைகளைத் தீர்க்க இந்த நான்கு நாடுகளும் சேர்ந்த முடிவு எடுக்க வேண்டும் என்று ஒப்புக் கொண்டன. பொதுவான விஷயங்களில் அமெரிக்காவும் ஈடுபட்டு ஆலோசனை கூற வழி செய்யப்பட்டது. ஆங்கிலேய-ஜப்பானிய உடன்பாடும் லான்ஷிஹ் இஷி ஒப்பந்தமும் இந்த நான்கு வல்லரசுகளின் உடன்பாட்டால் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டன.

ஐந்து வல்லரசுகளின் கடற்படை உடன்படிக்கை முதல் உலகப்போர் ஆரமபத்தில் அமெரிக்காவும் ஜப்பானும் கப்பற்படையினைப் பெருக்குவதில் போட்டி போட்டுக் கொண்டிருந்தன. இது இரண்டு நாடுகளுக்குமே அழிவைத்தரும் செயலாகும். இந்த ஐந்து வல்லரசுகளின் ‘கப்பற்படை உடன்படிக்கை’ கடற்படைகளின் போட்டிக்கு முற்றுப்புள்ளி வைத்தது. அந்த உடன்படிக்கை பெரும் கப்பல்களின் எடையினை டன் அளவு முறையில் நிர்ணயம் செய்தது.

ஒன்பது வல்லரசுகளின் உடன்படிக்கை சீனாவைப் பற்றியதாகும். இந்த உடன்படிக்கையினால் அந்த வல்லரசுகள் சீனாவின் ஆதிபத்திய உரிமைகளை மதிக்க வேண்டும் என்றும், திறந்த கதவுக் கொளகையினைப் பின்பற்ற வேண்டும் என்றும், தனிஉரிமைகள் பெறும் எண்ணத்தில் சீனாவின் நிலையினைப் பயன்படுத்துவது இல்லை என்றும், அது தன்னை சீரமைத்துக் கொள்ள அனுமதிக்கப்படவேண்டும் என்றும் ஒப்புக்கொண்டன. ஆனால் ஏற்கனவே சீனா செய்து கொண்ட உடன்படிக்கையிலிருந்து விடுவிக்க இந்த உடன்படிக்கை ஒன்றும் செய்யவில்லை. எனினும் சீன-மக்களின் உணர்ச்சிகளை அதுவும் தேசிய உணர்வுகளை நிறைவேற்றவும், சீனாவின் இறைமையினைப் பேணவும் மேற்கொண்ட நல்லதோர் முதல் நடவடிக்கையாகும்.

சீன-ஜப்பானிய உடன்படிக்கை: வாஷிங்டன் மாநாட்டிற்கு வெளியே சீனாவும்-ஜப்பானும் ஷாண்டுங் பிரச்சனையைத் தீர்த்துக் கொள்வது என்று முடிவு செய்தன. இரண்டு நாடுகளும் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டன. அதன்படி சீனாவிற்கு ஷாண்டுங்கை திருப்பிக் கொடுக்க ஜப்பான் ஒப்புக்கொண்டது. மேலும் சீனா ஜப்பான் செய்த முன்னேற்றத்திற்கான ஈட்டுத்தொகையை அதற்கு அளிப்பதாக ஒப்புக் கொண்டது. ஆனால் ஜப்பான் தன்னுடைய 21 கோரிக்கைகளை நீக்கிக் கொள்ள மறுத்துவிட்டது.

**மற்ற உடன்படிக்கைகள்**

மேலும் சில உடன்படிக்கைகளை சீனா வல்லரசுகளுடன் செய்து கொண்டது. அவைகள் அதற்கு பயனள்ளவையாக அமைந்தன.

1. ஒரு ஒப்பந்தத்தின் மூலம் சீன அஞ்சலகத் துறைகள் மீதிருந்த அந்நிய ஆதிக்கம் ஒழிக்கப்பட்டது.
2. வானொலி நிலையங்கள் உட்பட்ட பல செய்தித் தொடர்பு சாதனங்களை நியாய விலைக்கு விற்க அயல்நாடுகள் ஒப்புக் கொண்டன.
3. சகவிகித காப்பு வரியினை நிர்ணயித்துக் கொள்ளும் உரிமை சீனாவிற்கு அளிக்கப்பட்டது.
4. விசேஷப் பிரதேச உரிமைப் பிரச்சனையை சீராக்க ஒரு குழுவை நிர்ணயிக்க அந்நாடுகள் ஒப்புக் கொண்டன.
5. நிலைமை சீரானப்பின் பாக்சர் ஒப்பந்தத்தின் மூலம் அயல்நாடுகள் அங்கு வைத்திருந்த தங்கள் படைகளை விலக்கிக் கொள்ள ஒப்பு கொண்டன.

## கோமின்டாங் கட்சியின் எழுச்சியும் வீழ்ச்சியும்

**கட்சியின் எழுச்சி:**

1911-ம் ஆண்டுப் புரட்சியினை வெற்றிகரமாகக் கொண்டு வந்த துங் மெங் ஹுய் என்ற ரகசிய அமைப்பிலிருந்து, எழுச்சி பெற்றதுதான் கோமின்டாங் கட்சி எனலாம். மஞ்சு வம்சம் தூக்கி எறியப்பட்டபின் டாக்டர் சன் யாட் சென் இத்துடன் பிற இரகசிய சங்கங்களை இணைத்து 'தேசிய மக்கள் கட்சி' அல்லது கோமின்டாங் என்பதை ஏற்படுத்தினார். யுவான்ஷிகேதன் செல்வாக்கை நிலைநாட்டுவதைக் கண்டு கோமின்டாங் கட்சி அவரை முதல் பாராளுமன்ற கூட்டத்தில் கடுமையாக எதிர்த்தது. யுவானுடனான போராட்டத்தின் ஆரம்பத்தில் டாக்கடர் சென் குறைந்த வெற்றியைப் பெற்றார். இறுதியாக கோமின்டாங் கட்சி பீகிங் அரசாங்கத்திலிருந்து விடுபட்டு சீனக் குடியரசை காண்டனில் நிறுவியது. ஆதன் தலைவராக டாக்டர் சென் விளங்கினார்.

**தேசிய கட்சியின் தோற்றத்திற்கான காரணங்கள்**

இக்காலத்தில் கோமின்டாங் கட்சியின் எழுச்சிக்கு சில சாதகமான சூழ்நிலைகள் ஏற்பட்டன. முதல் உலகப்போர் 21 கோரிக்கைகள், 1917-ம் ஆண்டு ரஷ்யப் புரட்சி பாரீஸ் மாநாட்டில் ஏற்பட்ட ஏமாற்றம் ஆகிய அனைத்தும் வலுவான தேசப்பற்றை ஏற்படுத்தின. நாட்டுப்பற்று கொண்ட ஏராளமான மாணவர்கள் அக்கட்சியில் சேர்ந்தன. 1920-ம் ஆண்டில் கோமின்டாங் கட்சியுடன் பிற அரசியல் நிறுவனங்களும் நெருங்கி வர ஆரம்பித்தன. சோவியத் நாட்டின் புரட்சியினைப் பின்பற்றி சீன அறிஞர்கள் சீனப் பொதுவுடைமைக் கட்சியினை ஏற்படுத்தினார்கள். ரஷ்யர்களும் அதை விரும்பினார்கள். ஏனெனில் கோமின்டாங் கட்சியின் மூலம் பொதுவுடைமைக் கோட்பாட்டைப் பரப்பிக் கொள்ளலாம் என்பதே அதற்குக் காரணமாகும்.

**சோவியத் ரஷ்யாவுடன் கூட்டு**

ஆரம்பத்தில் கோமின்டாங் கட்சி சோவியத் ரஷ்யாவுடன் மாறுபட்ட கருத்தினைக் கொண்டிருந்தது. கட்சியின் ஒரு பிரிவு மாஸ்கோவின் செயலை விரும்பவில்லை. மற்றொரு பிரிவினர் அதைப் பெரிதும் ஆதரித்தனர். சீனத்தேசியவாதிகள் பேராதிக்கக் கோட்பாட்டிற்கு எதிராக இருந்த மாஸ்கோவின் நிலையினைப் பெரிதும் ஆதரித்தார்கள். நாட்டுப் பற்றுள்ள சீனர்கள் மஞ்சூரியாவை ஜப்பான் கபளிகரம் செய்யும் செயலை ரஷ்யா எதிர்ப்பது கண்டு அதன்பால் ஈடுபாடு கொண்டனர். மேலை நாடுகள் பலவற்றை அண்டி உதவி கோரிய டாககடர் சென் உதவி கிடைக்காமல் போகவே ரஷ்யாவிற்கு சென்று உதவிக்கோரினார். ஆப்போது அது மனமார அவரை வரவேற்றது. அயல்நாட்டினரை எதிர்த்து அவர் போராடியதை ரஷ்யா பெரிதும் பாராட்டி, உதவி செய்ய முன் வந்தது. அப்போது அவர் ''நாங்கள் இனிமேல் மேலைநாடுகளைப் பார்க்க வேண்டியதில்லை: நாங்கள் ரஷியாவின் பக்கம் திரும்பியுள்ளோம்'' என்று கூறினார்.

**கோமின் டாங்கின் அமைப்பு**

ரஷ்யா அரசுதந்திர, ராணுவக் குழு ஒன்றை சீனாவிற்கு அனுப்பியது. ஆதன் தலைமை ஆலோசகராக மைக்கேல் போரோடின் விளங்கினார். அவர் ஆலோசனையின் படி ரஷ்யப்பொதுவுடைமைக் கட்சியினைப் போல் கோமின்டாங்கும் மாற்றி அமைக்கப்பட்டது. அரசியல் ஆணையாளர்கள் அமர்த்தப்பட்டனர். கட்சியின் பால் கடுமையான ஒழுக்கம் வலியுறுத்தப்பட்டது. கட்சிக்கு ஓர் ராணுவம் அமைக்கப்பட்டது. விளம்பரத்துறை ஒன்று அமைக்கப்பட்டது. சோவியத்நாட்டின் தூண்டுதலின் பேரில் கோமின்டாங் கட்சி நாட்டில் ஏகாதிபத்திய எதிர்ப்பு, சமுக பொருளாதார, விவசாயத் தொழிலாளருக்கான சீர்திருத்தங்கள் ஆகியவற்றைப் பின்பற்றியது.ႉ. இந்த இரண்டு கருத்துக்களும் கோமின்டாங் கட்சியினை வலுவாக்கின. ஆனால் அதை பொதுவுடைமைக் கட்சியிடமிருந்து வேறுபடுத்திக் காட்ட முடியவில்லை.

**முதல் மாநாடு**

கோமின்டாங் கட்சியின் முதல் மாநாடு 1924-ல் கூடியது. கட்சியின் அரசியல் கோட்பாடுகளாக டாக்டர் சென்னின் மூன்று கொள்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. கோமின்டாங் கட்சி அதன் அறிக்கையில் மூன்று கொள்கைகளைக் கூறியது. அவைகளாவன,

1. சோவியத் நாட்டினுடனான கூட்டு
2. சீனப் பொதுவுடைமையுடனான கூட்டு
3. உழைப்பாளிகளையும், குடியானவர்களையும் ஆதரித்தல் குடியான விவசாயிகளையும், நகரத் தொழிலாளர்களையும் புரட்சியை ஆதரிக்கும்படி அது கேட்டுக்கொண்டது. அயல்நாட்டுக் கொள்கையில் உடன்படிக்கை நாடுகள் அனுபவித்து வந்த பிரதேசமைக் கட்சி, தான் பெற்றிருந்த சிறந்த நிர்வாகத்திலும் வலிமையான பிரச்சார இயந்திரத்தாலும் செல்வாக்கு பெற்று விளங்கியது.

**சியாங் கே ஷேக்**

டாக்கடர் சென் இறந்த பிறகு கோமின்டாங் கட்சியினை மூவர் நடத்தி வந்தனர். அவர்களில் வாங் சிங்-வெய் என்பவர் இடது சாரிகளின் தலைவராவார். போரோடின் என்பவர் ரஷ்ய ஆலோசகராவார். அவர் கட்சியின் தலைவராவார். மூவரில் இளைஞரான சியாங் மிகவும் திறமையான ராணுவத் தலைவராவார்.

**சீனாவை ஐக்கியப்படுத்துதல்**

சோவியத் ரஷ்யாவிலிருந்து திரும்பியதும் சியாங் கே-ஷேக் வாம்போவா ராணுவக் கழகத்தின் தலைமைப் பொறுப்பினை ஏற்றார். அக்கழகம் கோமின்டாங் கட்சியின் அதிகாரிகளுக்குப் பயிற்சி அளித்து வந்தது. டாக்டர் சென் இறந்தவுடன் கோமின் டாங் கட்சியின் தானைத் தளபதியாக சியாங் பொறுப்பேற்றார். சியாங் ஒரு மிதவாதி. அவர் எப்போதும் தீவிரக் கொள்கையில் நாட்டம் கொண்டவர் இல்லை. கட்சியில் முன்னிலைக்கு வரும் அளவுக்கு நல்ல திறமையினைப் பெற்றிருந்தார்.

1925-ம் ஆண்டு அவர் குவாங்டுங், குவாங்சி ஆகிய இருபகுதிகளையும் கோமின்டாங் கட்சியின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார். 1926-ம் ஆண்டில் சியாங் யாங்டிசழ

பள்ளத்தாக்கின் ராணுவத்தளபதிகளை முறியடித்து சிறப்புமிகு வெற்றி கண்டார். தேசியப்படை பெற்றிருந்த உன்னதமான பயிற்சியினால் தான் இத்தகைய வெற்றி கிடைத்தது எனலாம். நூட்டின் ஐக்கியம் சியாங்கினால் இரண்டு கட்டங்களில் அடையநேர்ந்தது. முதலாவது கட்டத்தில் தேசியப்படை ஹான்கௌ நகரைப் கைப்பற்றியது. தேசியவாதிகளின் தலைநகரமானது காண்டனிலிருந்து அங்கு மாற்றப்பட்டது. இரண்டாவது கட்டத்தில் தேசிய படையானது 1928-ம் ஆண்டில் ஜீன் திங்களில் பீகிங்கில் நுழைந்தது.

**பொதுவுடைமைவாதிகளின் செல்வாக்கு வளர்தல்**

இதற்கிடையில் கோமின்டாங் இரண்டு பிரிவாக பிரிந்தது. அப்படிப் பிரிந்தவர்கள் வலதுசாரிகள், பொதுவுடைமை வாதிகள் சலுகைகளை ரஷ்யா நீக்கியது. விஷேப் பிரதேச உரிமைகளையும் நீக்கியது. மாஸ்கோவின் பயிற்சி பெற்ற தளபதி ஷியாங்கே ஷேக்கின் தலைமையில் வாம்போவா என்ற இடத்தில் இராணுவக்கழகம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

**அரசியலமைப்பினை உருவாக்குதல்**

கட்சிக்கான அரசியலமைப்பை முதல் மாநாடு உருவாக்கியது. அதில் மைய செயற்குழு ஒன்று நிறுவப்பட்டது. அக்குழு அதிகாரத்தின் மையமாகவும், பொறுப்புள்ளதாகவும் விளங்கியது. அக்குழு ஒரு கட்சி அரசாங்கத்தின் கருவாக இருந்து வந்தது. இவ்வாறு கோமின்டாஙடகின் சர்வாதிகாரம் எழுச்சி பெற்றது. ஆனால் அது சாதாரண முறையில் அமைக்கப்பட்ட ஒரு நிறுவனமாகும். ஆதில் பல பிரிவுகள் காணப்பட்டன. அதில் வலது சாரி தேசியவாதிகள் இருந்தனர். அவர்கள் அரசியலில் தேசியத்தையும் வலுவான அரசையும் உருவாக்க வேண்டுமென விரும்பினார்கள். மேலும் மிதவாத தாராளவாதிகள் அதில் இருந்தனர். அவர்கள் சமூக பொருளாதார சீர்திருத்தங்களை விரும்பினர். இவ்வாறு பலபிரிவினர் அந்நிறுவனத்தில் இருந்ததால் இறுதியில் கோமின்டாங் கட்சி வலிமை குன்றலாயிற்று.

**கட்சி பிளவுப்படல்**

பொதுவுடைமை கட்சி வளர்ச்சி பெற்றதன் காரணமாக 1924-ம் ஆண்டு கட்சியில் பிளவு ஏற்பட்டது. மிதவாதிகள் ஷாங்காய் பகுதிக்குச் சென்றனர். அங்கு அவர்கள் ‘வெண்மை கோமின்டாங் என்பதை ஏற்படுத்தினர். அது காண்டனில் இருந்த சென்கட்சிக்கு எதிர்ப்பு அணியாகும். ஆனால் சன்யாட்சென் உயிருடன் இருக்கும் வரையில் தான் பிளவைத் தடுக்க முடிந்தது.

**டாக்டர் சென்னின் இறப்பு**

1925-ம் ஆண்டு டாக்டர் சென் இறந்து போனார். அவர் இழப்பு பேரிழப்பாகும். ஆதன் பின் இரண்டு ஆண்டுகளில் பேராதிக்க பேராபத்தும், நாட்டை ஐக்கியப்படுத்த ஏற்பட்ட ராணுவ நடவடிக்கையும் கோமின்டாங்கை ஒன்றுபடுத்தின. பொதுவுடைமை எனப்பட்டனர். இது சீனவரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும். பொதுவுடைமை வாதிகளின் கிளர்ச்சி பிரபுக்களுக்கு எதிராக குடியானவர்களைத் துாண்டிவிட்டது. தொழிற்சங்கங்களில் பொதுவுடைமை வாதிகளின் கை ஓங்கியிருந்தது. அவர்கள் முதலாளித்துவத்தைச் சாடினர். முதலாளித்துவப் பிரபுக்களும் செல்வந்தர்களான நடுத்தரவர்க்கத்தினரும் இதைக்கண்டு

அச்சமுற்று அவர்களைத் தடுக்க முற்பட்டனர். அவர்கள் சியாங்கை மலைபோல் நம்பினர். ஆவரிடம் ராணுவ அதிகாரம் இருந்தது. எனவே தீவிரவாதிகளை அவரால் அடக்க முடியும் என்று அவர்கள் எண்ணினர். முதலாளிகளும், பிரபுக்களும் சியாங்கை நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொண்டனர். சீனப்புரட்சியின் முதன்மையான தலைவனாக ஆகலாம் என்ற பேரவாவில் அவர் இடது சாரிகளை ஒடுக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

**ஆதிக்கப்போட்டியில் சியாங்கின் வெற்றி**

1827-ல் கட்சியில் இறுதிப்பிளவு ஏற்பட்டது. கோமின்டாங்கின் இடதுசாரிகளும், பொதுவுடைமை வாதிகளும் சீன தேசியவாதிகளின் புரட்சியை சமூகப்புரட்சிக்கு அழைத்துச் சென்றனர். பொதுவுடைமைவாதிகளின் மிகத் தீவிரப் பிரச்சாரமானது நாடெங்கிலும் வேலைநிறுத்தம், கலகம் ஆகியவற்றை தோற்றுவித்தது. அவர்கள் சியாங்கை பதவியிலிருந்து அகற்றவும் முற்பட்டனர். ஆனால் சியாங்கிற்கு ஹாங்காய் நகரின் பெரும் செல்வந்தர்களின் துணை கிட்டியது.

இதற்கிடையில் இடதுசாரிகளின் தலைவர் வாங்கிற்கும், பொதுவுடைமை வாதிகளுக்கும் சண்டை ஏற்பட்டது. கோமின்டாங்கை பொதுவுடைமை வாதிகள் கைப்பற்ற முயற்சிக்கிறார்கள் என்று அறிந்த வாங் அவர்களை வாகான் என்ற இடத்திலிருந்து வெளியேற்றலானார். லூாங் சியாங்குடன் சேர்ந்து கொண்டு பணியாற்றியதால், சியாங் 1928-ல் கோமிங்டாங்கின் தலைவரானார்.

1928-ம் ஆண்டு ஜீன் திங்களில் சியாங் தன்னுடைய வடமுனைப் படையெடுப்பை முடிப்பதில் முனைந்து நின்றார். சஜயாங்கின் தலைமையிலான தேசியப்படை பீகிங்கைக் கைப்பற்றியது. பீகிங்கை ஆண்டு வந்த சாங் சோலின் ஓட்டம் பிடிக்கலானார். இறுதியில் அவர் ஒரு புதிரான வெடிகுண்டு விபத்தில் கொல்லப்பட்டார். அவர் இறந்தபின் அவரது மகன் (மூன்று கிழக்கு மாநிலங்களை ஆண்டு வந்தார்) ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டு கோமின்டாங் கொடியை ஏற்றுக் கொண்டார். இவ்வாறு சீனாவானது சியாங்கே ஷேக்கின் ராணுவ நடவடிக்கை மூலம் ஒன்றுபடுத்தப்பட்டது.

**நூான்கிங் அரசாங்கம்**

சியாங்கே ஷேக் நான்கிங்கை தமது கோமின்டாங் அரசின் தலைநகராகக் கொண்டார். அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் உள்ளிட்ட பன்னிரெண்டு மேலைநாடுகள் நான்கிங் அரசாங்கத்தை அங்கீகரித்தன. அந்தப் புதிய குடியரசானது டாக்டர் சென்னின் முதலாவது கோட்பாடான தேசியம் என்பதை அடைவதில் வெற்றி பெற்றது. இரண்டாவது கொள்கையை உடனடியாகச் செயல்படுத்துவதாக கோமின்டாங் கட்சி அறிவித்தது. அக்கொள்ளை தான் மக்களாட்சியாகும். முக்கள் நலம் பேணுதல் என்ற மூன்றாவது கொள்கையை அதற்குப்பின் அமல் செய்வதாக அறிவித்தது.'

**கோமின்டாங்கிற்கும் பொதுவுடைமை வாதிகளுக்கும் இடையில் ஏற்பட்ட போராட்டம்**

**த**ளபதிகளின் ஆட்சி ஆரம்பத்ததிலிருந்து வேறு எந்த அரசாங்கமும் நான்கிங் அரசாங்கத்தைப் பொல சீனாவின் பெரும் பகுதிகளை தன்கீழ் கொண்டுவரவில்லை எனலாம். குாப்புவரியில் தன்னாதிக் மீட்சி, விஷேசபிரதேச உரிமைகளை ஒழித்தல் ஆகியவற்றை

பெற்றதன் விளைவாக தேசியப் பெருமை பெருகியது. ஆனால் நான்கிங் அரசாங்கம் உள்நாட்டு அரசியல் குழப்பத்தில் முழ்கியது சீனப் பொதுவுடைமைக் கட்சியின் வளர்ச்சி அதற்கு ஆபத்தாக விளங்கி வந்தது. நகரங்களில் பரவிய பொதுவுடைமை கோட்பாடுகளை நசுக்க கோமின்டாங்கால் முடிந்தது. ஆனால் உட்பகுதிகளில் பொதுவுடைமையினர் வலிவோடும் பொலிவோடும் விளங்கலானார்கள். யூங்டிசிக்குத் தெற்கே மத்திய சியாங்சியில் மாவோவின் தலைமையில் சோவியத் குடியரசை நிறுவ அவர்கள் முற்பட்டனர். அறிவாளிகளும், குடியானவர்களும் அவர்பக்கம் அலையென திரண்டுவந்தனர். பொதுவுடைமைவாதிகள் உயர்ந்த ஊதியம் பெறவும் தங்கள் பணி நிலையினை சீராக்கிக் கொள்ள பலவும் பல சங்கங்களை நிறுவினர். அவர்கள் பெரும் நிறுவினர். அவர்கள் பெரும் நிலப்பரப்புகளைப் பறிமுதல் செய்து நிலமற்றவர்களுக்கு பகிர்ந்து அளித்தனர். அவர்களது கட்டுபாட்டுக்குள் இருந்த இடங்களில் நிலவரி குறைந்தது. கூட்டுப் பண்ணை முறையைப் புகுத்தினர். இந்த நல்ல சீர்திருத்தங்கள் பொதுவுடைமைவாதிகளின் செல்வாக்கை மென்மேலும் வளர்த்தன. குடியானவர்களும், தொழிலாளர்களும் வனச்செஞ்சேனையை உருவாக்க உதவினர். ‘‘புரட்சியின் பாதையில் சென்று ஆயுதங்கள் ஏந்தி, பல பகுதிகளைக் கைப்பற்றி மக்களின் புரட்சிக்சக்தியினை பாதுகாத்து பரப்ப முற்பட்டது’’ என்பது மாவோவின் குறிப்புகளிலிருந்து புலனாகிறது.

**நீண்ட நடைப்பயணம்**

சீனப் பொதுவுடைமையினை முறியடிக்க, கோமின்டாங் அவர்களின் மைய இடமான சியாங்சியைத் தாக்கியது. பொதுவுடைமைவாதிகள் தோற்கடிக்கப்பட்டு விரட்டியடிக்கப்பட்டனர். இதுதான் நீண்ட நடைப்பயணத்தின் தொடக்கமாகும். துங்களைச் சூழ்ந்து கொண்டிருந்த கோமின்டாங்கின் படைகளை எதிர்த்துப் போராடி ஏறக்குறைய 6000 மைல்கள் சீன தென்மேற்குப் பகுதியில் பல இடர்பாடுகளுக்கு இடையில் பல இடங்களில் சண்டையிட்டுஅவர்கள் பின்னோக்கிச் சென்றனர். இறுதியாக அவர்களில் சொல்லொன்னாத் துன்பங்களுக்கு உள்ளாகிப் பிழைத்த 20,000 பேர் மாவோவின் தலைமையில் 1935-ல் ஷென்சியின் வடபகுதியில் வந்து சேர்ந்தனர். அங்கு அவர்கள் தங்கள் நிலையினை வலிமைப்படுத்திக் கொண்டு நெருங்கி வந்த ஜப்பானிய ஆபத்தையும் முறியடிக்க முற்பட்டனர். நீண்ட நடைப்பயணம் உண்மையிலேயே ஒரு மாபெரும் சாதனையாகும். அதற்று மாவோவின் தலைமையே காரணம் ஆகும். சியாங் செஞ்சேனையை அழிப்பதில் தோல்வியே கண்டார். இதுவே அவர் நிலைமையை சீர்குலையச் செய்தது.

**ஜப்பானிய ஆக்கிரமிப்பு**

சீனாவில் வலுவான அரசாங்கம் ஏற்படுவதை ஜப்பான் விரும்பவில்லை. அவ்வாறு ஏற்பட்டால் தன் பொருளாதாரத்திற்கு அது தீங்காக முடியும் என எண்ணியது. துன் பொருளாதார ஆதிக்கத்தைக் காத்துக்கொள்ள ஜப்பான் 1931-ல் மஞ்சூரியாவைக் கைப்பற்றியது. அதற்குப்பின் அது சீனாவின் வடகிழக்குப் பகுதிகளை பிடிக்கப் போவதாக பயமுறுத்தியது. இச்சூழ்நிலையில் சியாங் முன்னெச்சரிக்கையாக செயல்படலானார். ஜப்பானுடன் மோத கோமின்டாங் விரும்பவில்லை. ஆகவே அவர் 1933-ம் ஆண்டு மே

திங்களில் தோங்கு ஒப்பந்தம் செய்து கொண்டார். அதன்படி போர் நிறுத்தம் ஏற்பட்டது. சீனப்பெருஞ்சுவர் வரை விலகிப் போவதாக ஜப்பானிய துருப்புகள் ஒப்புக்கொண்டன. இந்த சமரசக் கொள்கையானது சீன தேசிய வாதிகளுக்குபபிடிக்கவில்லை.

**அரசியல் ஐக்கியத்திற்கான முயற்சி – சியான் நிகழ்ச்சி**

சீனப்பொதுவுடைமையினர் ஜப்பானை தந்திரமான முறையில் 1932-ல் தாக்க முற்பட்டனர். அந்தசமயத்தில் சியாங் பொதுவுடைமையினரை நசுக்க முற்பட்டார். ஜப்பானை முறியடிக்க வேண்டி இருப்பதால் உள்நாட்டுப் போரைத் தவிர்த்து பொதுவுடைமையினரை அடக்குவதை நிறுத்தக் கோரினர். சியாங் அவர்களது கோரிக்கையை ஏற்கவில்லை. அத்துடன் தேசியவாதிகள் நாட்டின் பாதுகாப்பிற்காக கொண்டு வந்த கருத்தினையும் ஒதுக்கித் தள்ளினர். வேளிப்படையான தந்தி, கடிதம் ஆகியவற்றின் மூலம் செங்காவலர்கள் நாட்டின் பாதுகாப்பை வலியுறுத்தினர். அவர்களது பிரச்சாரத்தை உதறி தள்ளிவிட்டு சியாங் அவர்களை நசுக்கும் பொருட்டு சியான் என்ற இடத்திற்குச் சென்று ஷென்சியிலுள்ள அவர்களது பகுதிகளை அழிக்க முற்பட்டார். 1936-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் அன்று சியாங், சியான் என்ற இடத்தில் தன்நாட்டு மக்களால் பிடிபட்டு சிறையில் அடைக்கப்பட்டார். அவர்கள் அவரை பொதுவுடைமையினரின் நாட்டுப் பாதுகாப்பிற்கான கருத்தை ஏற்றுக் கொள்ளும்படியும் ஜப்பானை முறியடிக்க ஒன்று சேர வேண்டும் என்பதை ஒத்துக் கொள்ளும் படியும் வற்புறுத்தினார். சியாங்கின் உயிர் ஆபத்தில் இருந்தது. மா-சே-துங் சுமுகமான பேச்சில் ஈடுபட சூ என் லாய் என்பவரை சியானுக்கு அனுப்பினார். ஓர் ஒப்பந்தமானது கொண்டு வரப்பட்டது. அதன்படி மாவோவின் பொதுவுடைமைப் படைகள் தேசிய அரசாங்கத்தின் கீழ்க் கொண்டு வரஓ ப்புக் கொள்ளப்பட்டது.

வன்முறையில் தற்போதுள்ள அரசாங்கத்தை வீழ்த்தி சோவியத் பாணியிலான அரசாங்கத்தை ஏற்படுத்துவதையும் அவர்கள் கைவிட்டு விட்டதாக அறிவித்தனர். 1936-ம் ஆண்டு கிறிஸ்துமஸ் நாளன்று சியாங் விடுவிக்கப்ட்டார். நான்கிங் அரசாங்கம் ஜப்பானை முறியடிக்க முழு முயற்சியினை எடுத்துக் கொண்டது. அத்துடன் அது சமூக பொருளாதாரச் சீர்திருத்தங்களையும் மக்களாட்சியினையும் அளிப்பதாக வாக்குறுதி அளித்தது.

பொதுவுடைமை வாதிகளுக்கும் சியாங்கிற்கும் ஏற்பட்ட இந்த ஒப்பந்தத்தை சீனர்கள் வரவேற்றனர். இந்த இரண்டு கட்சிகளும் மீண்டும் இணைந்தன. இது சீனப்புரட்சியில் ஒரு புதுசகாப்பதத்தை துவக்குவதாக மாவோ கூறினார். ஆனால் அந்த ஐக்கியம் இரண்டே ஆண்டுகள் தான் நீடித்தது. அப்போது 1937-ல் ஏற்பட்ட சீன-ஜப்பானியப் போரில் நன்கு எதிர்த்து நிற்க முடிந்தது.

**1937-45 வரையிலும் நடைபெற்ற சீன-ஜப்பானிய போர்**

சியாங் அந்த ஒப்பந்தப்படி நடந்து ஜப்பானை கடுமையாக எதிர்த்தார். கோமின்டாங்-பொதுவுடைமை வாதிகளின் கூட்டால் ஜப்பானுக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. அந்த ஐக்கியத்தினை முறியடிக்க அது முற்பட்டது. பொதுவுடைமையிலிருந்து விடுபட ஜப்பான் சியாங்கிற்கு உதவ முன்வந்தது. ஆனால் சியாங் தன் நாட்டுப்பற்றுக்கும், நாட்டிற்கும் குந்தகம் ஏற்படாமல் உண்மையாக நடந்து கொண்டார். ஆகவே ஜப்பானியப்படையெடுப்பாளர்களை கடுமையாகத்

தாக்கினார். ஜப்பானியர்கள் வேகமாக முன்னேறி பல நகரங்களையும், சீனாவின் பெரும்பகுதிகளையும் கைப்பற்றினர். துலைநகரம் வீழ்ந்தது. அரசாங்கம் சுங்கிங்கிற்குப் பின்வாங்கியது. போரின் போது அமெரிக்கா பிரிட்டன் ஆகிய நாடுகளிடமிருந்து சீனா தாராள உதவியினைப் பெற்றது. அந்த ஜப்பானுடனான போர் இரண்டாம் உலகப்போருடன் இரண்டாக கலந்துவிட்டது.

**கோமிடாங்கின் வீழ்ச்சி**

கோமின்டாங் அரசாங்கம் ஜப்பானை எதிர்த்து திறம்படச்செயல்பட்டது. நாட்டின் புனரமைப்புக்கும் அது மிகவும் பாடுபட்டது. போரின் துவக்கத்தில் சில சீர்திருத்தங்களைச் செய்ததோடு கோமின்டாங் கட்சியின் அரசாங்கம் வலிமைகுன்றிக் காணப்பட்டது. திறமையற்று காணப்பட்டது. ஊழல் மலிந்து காணப்பட்டது. ஆங்கிலேய அமெரிக்க உதவியைச் சார்ந்திருந்தது. ஏகாதிபத்திய வாதிகளின் கைப்பாவையாக சியாங் மாறிவிட்டார் என்று பொதுவுடைமை வாதிகள் பிரச்சாரம் செய்ய இது பயன்பட்டது. தகுந்த நேரத்தில் சீர்திருத்தங்கழள மேற்கொள்ளாததால் கோமின்டாங் பேராதரவு தேடிக் கொள்ளத் தவறிவிட்டது. ராணுவ நடவடிக்கைகளாலும், அடக்கு முறைகளாலும் தன் காலத்தை கழித்தது. அலுவலங்களில் புரையோடிக் கொண்டிருந்த ஊழலை அறவே ஒழிக்க முடியவில்லை. இவைகள் எல்லாம் அதன் பொறுமைக்கு சிறுமை தந்தன. இறுதியாக ஜப்பான் நேசநாடுகளால் தோற்கடிக்கப்பட்டாலும் போருக்குப் பின் கோமின்டாங் சிதறி சின்னாபின்னமாகி காணப்பட்டது.

**கோமின்டாங்கின் வீழ்ச்சி**

1940-ம் ஆண்டில் பொதுவுடைமையின் 8வது 4வது வழிப்பாதை ராணுவத்தினரை மஞ்சள் நதி தீரத்திலிருந்து வெளியேறும்படி ஆணையிட்டார் சியாங். இதனைப் பொதுவுடைமையினர் புறக்கணித்தனர். பொதுவுடைமை ராணுவத்தினரை அங்கிருந்து அகற்றிவிட்டு ஜப்பானிடம் சரணடைய சதி செய்கிறார் சியாங் என்று அவர்கள் குறை கூறினர். 1943-ம் ஆண்டில் செப்டம்பரில் கோமின்டாங்கின் மைய செயற்குழு கூடி கொதுவுடைமைவாதிகளுடான வேறுபாடுகளை நீக்கிக் கொள்ள தீர்மானம் நிறைவேற்றியது. 1947-ம் ஆண்டில் தளபதி மார்ஷல் பொதுவுடைமைவாதிகளுக்கும், தேசியவாதிகளுக்கும் இடையில் ஏற்படவிருந்த உள்நாட்டுப்போரை தவிர்க்க முற்பட்டார். ஆனால் மார்ஷல் தன் பணியில் தோற்றுப் போனார். ஊள்நாட்டுப்போர் தோன்றியது. அதில் பொதுவுடைமை வாதிகள் வெற்றி பெற்றனர். சியாங் பார்மோசாவிற்கு பின்வாங்கினார். இவ்வாறு சீனாவில் கோமின்டாங்கின் ஆட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

**தேசியவாதிகள் தோல்விக்கு காரணங்கள்**

1) **எட்டு ஆண்டுகால ஜப்பானியப் போர்:** தேசிய வாதிகளின் தோல்விக்கு மிக முக்கிமான காரணம் எட்டு ஆண்டு கால ஜப்பானிய போராகும். ஆதனால் அரசாங்கம் இராணுவ, நிதி, உணர்வு பூர்வ ரீதியில் களைப்படைந்து விட்டது. அதன் மோசமான விளைவுகள் பொதுவுடைமைவாதிகளுடன் மோதிய போதும் தொடர்ந்து காணப்பட்டன.

2) ராணுவத்தின் நிலை: தேசியவாதிகளின் ராணுவம் இளைப்பும், சலிப்பும் அடைந்து காணப்பட்டது. ஜப்பானியப் போரில் ஏற்கனவே களைப்படைந்த அவர்கள் ஓய்வும், அமைதியும் பெற விரும்பினார்கள்.

3) பணவீக்கமும் பொருளாதார நலிவும்: காகிதப்பணம் நிறைய வெளியிட்டதன் விளைவாக பண வீக்கம் ஏற்பட்டது. பணவீக்கமும், நிதி நிர்வாகச்சீர்கேடும் நூற்றுக்கணக்கான ஆயிரகணக்கான சீனர்களின் வாழ்வை நாசமாக்கியது. அவர்கள் ஒட்டு மொத்தமாக அரசாங்கத்தை எதிர்க்கலானார்கள்.

4) பொதுமக்களின் மதிப்பையும் நம்பிக்கையும் இழத்தல்: ஊழலான அரசாங்க அதிகாரிகள் அரசாங்கத்திற்குக் கேடாக நடக்கலானார்கள். ஆதைப்புறக்கணிக்கலானார்கள். எனவே அவர்கள் மக்களின் நம்பிக்கையை இழந்தனர். மதிப்பை இழந்தனர்.

5) அமெரிக்க உதவி சமரசம் ஆகியவற்றின் தோல்வி: ஜார்ஜ் மார்ஷல் இரு பிரிவினரையும் சமரசம் செய்ய முயன்று தோல்வி கண்டார். அவரது கொள்கைகளுக்கும், கோட்பாடுகளுக்கும் பெருத்த இடைவெளி இருந்ததல் அவரால் அதை இணைக்க முடியவில்லை. அமெரிக்காவால் தேசிய அரசாங்கத்தைப் புறகணிக்கவும் முடியவில்லை. சீனாவிலிருந்து வெளியேறவும் முடியவில்லை. ஆனால் கட்டுப்பாடான ஓரளவு உதவியினைச் செய்தது. பாதியளவு அங்கிருந்து வெளியேறியது என்ற இந்த அரைமனதுடனான தயங்கிய செயலானது தேசியவாதிகளுக்கு உதவியாக அமையவில்லை.

6) சமூக பொருளாதாரச் சீர்திருத்தங்களை நிலைநாட்டல்: சமூக பொருளாதாரச் சீர்திருத்தங்களை செவ்வனே மேற்கொள்ளாதது அவர்களின் வீழ்ச்சிக்கு வழி அமைத்து எனலாம். தொடர்ச்சியான உள்நாட்டுப் போராலும், சண்டைகளாலும் தேசியவாதிகள் சீரதிருத்தங்களைப் புறகணித்தனர். அத்துடன் டாக்டர் சென்னின் “உழுபவனுக்கு நிலம்” என்ற கொள்கை ஏட்டளவில் மட்டுமே இருந்து வந்தது. இத்தகைய காரணங்களால் தேசியவாதிகள் தோல்விகண்டனர்.

1. **சியாங் கே-ஷேக்**

**சியாங்கின் இளமை வாழ்க்கை**

1887-ம் ஆண்டில் செக்கியாங் மாநிலத்தில் ஒரு எளிய குடும்பத்தில் சியாங் பிறந்தார். நாடு இக்கட்டான கட்டத்தை கடந்த போது சியாங் தன் இளமை வாழ்க்கையைக் கடந்த சென்றார். அப்போது நாடு அயல்நாட்டு ஆதிக்கத்தில் கட்டுண்டு கிடந்தது. வலிவும், பொலிவும்

பெற்ற அயலநாட்டுப்படை பாக்சர் கலவரத்தை அடக்கியது அவரது மனதில் பசுமரத்தாணி போல் பதிந்தது. அவர்கள் பயன்படுத்திய ஆயுதங்கள் நுணுக்கங்கள் ஆகியவற்றை அறிய அவர் ஆவல் கொண்டார். ஆகவே ராணுவத்தில் சேர முடிவு செய்தார். அவர் ராணுவக் கல்வியினை முதலில் சீனாவில் பயின்றார். பின்னர் ஜப்பானிலும் சோவியத் நாட்டிலும் பயின்றார். அவர் சன் யாட் சென்னின் உண்மையான சீடராவார். நம்பிக்கையான தொண்டராவார்.

**சீனா ஐக்கியமடைதல்**

கோமின்டாங் ராணுவ அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிக்கும் வாம்போவா ராணுவக் கழகத்தின் தலைவராக சோவியத் ரஷ்யாவிலிருந்து திரும்பியதும் பொறுப்பேற்றார். டாக்டர் சென் இறந்ததும் கோமின்டாங் ராணுவத்தின் தளபதியானார். அவர் ஒரு சீரான கொள்கையினைப் பின்பற்றும் ஒரு மிதவாதி தீவிரவாதி அல்லர். குட்சியல் நல்லதோர் பொறுப்பினை அடைய அவர் அரசியல் தந்திரத்தைப் பயன்படுத்தினார்.

1925ம் ஆண்டில் அவர்குவான்டுங், குவாங்சி ஆகிய மாநிலங்களை கோமின்டாங்கின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தார். யாங்சிய் பள்ளதாக்கின் போர்த்தளபதிகள் மீத அவர் 1926-ல் பெரும் வெற்றி கொண்டார். இதற்குக் காரணம் தேசியப்படைகள் பெற்றிருந்த சிறந்த பயிற்சியும் நல்ல போர்த்திறனும் எனலாம். அவர் இரண்டு கட்டங்களில் சீனாவின் ஐக்கியத்தை கொண்டு வந்தார். முதலாவதாக தேசியவாதிகள் ஹான்கௌவைப் பிடித்து, காண்டனிலிருந்து தலைநகரை மாற்றினார். இரண்டாவது கட்டத்தில் தேசியப்படைகள் 1928-ல் பீகிங்கில் புகுந்தன.

**பொதுவுடைமைச் செல்வாக்கின் வளர்ச்சி**

இதற்கிடையில் கோமின்டாங் கட்சி இரண்டாகப் பிரிந்து வலசுசாரி பொதுவுடைமைக் கட்சிகளாக மாறின. சீனவரலாற்றில் இது ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும். பொதுவுடைமையினரின் போராட்டம் விவசாயிகளை நிலப்பரப்புகளுக்கு எதிராகக் கிளர்ந்தெழச் செய்தது. அவர்கள் முதலாளிதுவத்தை முறியடிக்க முற்பட்டனர். செல்வந்தர்கள் பீதிக் கொண்டு பொதுவுடைமை வாதிகளை அடக்க வேண்டும் என்று சியாங்கை நாடினர். ஆவரிடம் ராணுவ அதிகாரம் இருந்ததால் அவரால் பொதுவுடைமையினரை அடக்க முடியும் என எண்ணினர். நிலப்பிரபுக்களும் முதாலாளிகளும் அவரை தூண்டி செயல்பட வைத்தனர். சியாங்கும் சீனப்புரட்சியின் முழு முதல் தலைவராக ஆக வேண்டும் என்ற அவா கொண்டிருந்தார்.

**அதிகாரப் போராட்டத்தில் சியாங்கின் வெற்றி**

1927-ம் ஆண்டில் இறுதியாக கட்சியில் பிளவு ஏற்பட்டது. இடதுசாரிகளும் பொதுவுடைமைவாதிகளும் சீன தேசியவாதிகளின் புரட்சியினை சமூகப் புரட்சியாக மாற்றினர். தீவிரப்பிரச்சாரத்தால் பொதுவுடைமைவாதிகள் நாடெங்கிலும் வேலைநிறுத்தங்கள், கிளர்ச்சிகள் ஆகியவற்றை ஏற்படுத்தினர். அவர்கள் சியாங்கை அதிகாரத்திலிருந்து நீக்கவும் முற்பட்டனர். ஆனால் சியாங்கிற்கு ஷான்காய் நிதிமுதலைகளின் பேராதரவு இருந்தது.

இதற்கிடையில் இடதுசாரித் தலைவரான வாங்கிற்கும் பொதுவுடைமை வாதிகளுக்கும் சண்டை ஏற்பட்டது. அவர்கள் கோமின்டாங்கின் தலைமையினை எடுத்துக் கொள்வார்களோ என்ற பயத்தால் அவர்களை வூஹானிலிருந்து வெளியேற்ற முற்பட்டார். வாங்சியாங்குடன் சேர்ந்து செயல்பட்டதால் சியாங் 1928-ம் ஆண்டு ஜனவரித் திங்களில் கோமின்டாங்கின் தலைவரானார்.

1928-ம் ஆண்டு ஜீன திங்களில் சியாங் வடபகுதிப்படையெடுப்பை முடித்துக் கொள்ள வேண்டி தன் கவனத்தைச் செலுத்தினார். சியாங்கின் தலைமையிலான தேசியவாதிகளின் படை பீகிங்கைப் பிடித்தது. பீகிங் அரசின் தலைவரான சாங்சோலின் ஓட்டம் பிடித்தார். இறுதியில் அவர் வெடிக்குண்டு விபத்துக்குள்ளாகி மாண்டார். அவர் இறந்தபிறகு அவரது மகன்கள் மூன்று மாநிலங்களை தன் கீழ் வைத்திருந்தார். அவர் சியாங்குடன் சமரசமாகி கோமின்டாங்கின் கொடியினை ஏற்றுக் கொண்டார். இந்த விதமாக சீனா சியாங்கே ஷேக்கின் ராணுவ ஆட்சியால் ஒருங்கிணைக்கபட்டது. நான்கிங் சீனாவின் தலைநகரமாக்கப்பட்டது.

**நூன்கிங் அரசாங்கம்**

பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ் உள்ளிட்ட 12 மேலைநாடுகள் நான்கிங் அரசாங்கத்தை அங்கீகரித்தன. அந்தப் புதிய குடியரசு டாக்டர் சென்னின் முதலாவது கோட்பாடான தேசியம் என்பதை அடைய முற்பட்டது. உடனடியாக இரண்டாவது கொள்கையான மக்கள் வாழ்க்கை நலன் என்பதை அடையும் என்றது.

**சியாங்கின் வெற்றிக்கான காரணங்கள்**

1928-ம் ஆண்டில் சியாங் சீனாவின் உண்மையான ஆட்சியாளரானார். அவர் புரட்சிப் படையின் தளபதியாக விளங்கினார். போர்த் தளபதிகள் எதிர்ப்பை முறியடித்தார். அவரது ராணுவதந்திரத்தால் கோமின்டாங் இடதுசாரியினரையும், பொதுவுடைமை வாதிகளையும் இணைத்தார். ஏற்கனவே சியாங்கே ஷேக்கிற்கு ஷாங்காயில் வியாபாரியாகவும் தரகராகவும் இருந்த அனுபவம் உண்டு. அவர் ஒரு உண்மையான இராணுவ வீரர் அவர் தொழிலே ராணுவ வீரர் தொழிலாகும். அவர் ஜப்பான், சோவியத் ரஷ்யா ஆகிய நாடுகளிடம் பெரும் தொடர்பு கொண்டிருந்தார். வால்போவாவின் ராணுவக் கழகத்தலைவர் என்ற முறையில் அவர் புரட்சி ராணுவக் கழகத்தலைவர் என்ற முறையில் அவர் புரட்சி ராணுவ அதிகாரிகளுக்கு நன்கு பயிற்சி கொடுத்தார். இதனால் தன் வீரர்களின் நன்மதிப்பினைப் பெற்றார். திருமணம் அவரது பெருமையானது மேலும் அதிகமானது. இக் காரணங்களால் சியாங் கூட்டுப்படைகளின் நிகரற்ற தலைவராக விளங்க முடிந்தது.

**சமமற்ற உடன்படிக்கைகளை விலக்கி கொள்ளுதல்**

மேலைநாடுகள் சீனா மீது பல சமமற்ற உடன்படிக்கைகளைத் திணித்தன. சீனர்கள் அவற்றை எதிர்த்தனர். அவைகளிலட விசேஷப் பிரதேச உரிமை, காப்பு வரியினை நிர்ணயிக்க தன்னுரிமை இல்லாமை ஆகிய இரண்டையும் அவர்கள் வெறுத்தனர். சியாங் இதற்கெல்லாம் முடிவு கட்ட முற்பட்டார். 1928-ம் ஆண்டு ஜீலை திங்களிலட நான்கிங் அரசாங்கம் அறிவித்த உடன்படிக்கைகளின் காலக்கெடு முடித்தவுடன் அவைகள் நீக்கப்பட்டு விட்டதாக அறிவித்தார். அதற்குப் பதிலாக புதிய ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

மேலைநாடுகள் புதிய சூழ்நிலையினைப் புரிந்து கொண்டு சீனாவிற்கு காப்புவரித் தன்னுரிமையினை அளித்தன. 1930-ம் ஆண்டில் 9 நாடுகள் தங்கள் விசேஷப்பிரதேச உரிமைகளை விட்டுக் கொடுத்தன. அதிலிருந்து அயல்நாட்டுச் சட்ட மீறல்காரர்கள் சீனாவின் சட்டங்கள் மூலம் சீன நீதிமன்றங்களில் விசாரிக்கப்பட்டனர்.

**கோமின்டாங்கிற்கும் பொதுவுடைமை வாதிகளுக்கும் இடையிலான போராட்டம்**

போர்த் தளபதிகளின் ஆட்சி ஏற்பட்டதிலிருந்து வேறு எந்த அரசாங்கமும் பெற்றிராத அளவுக்கு நான்கிங் அரசாங்க சீனாவின் பெரும் பகுதியினைப் பெற்று விளங்கியது. காப்பு வரியில் தன்னாட்சி, விசேஷப் பிரதேச உரிமைகளை முடிவுக்குக் கொண்டு வந்தது. சீனாவின் பெருமையினைப் பெருகிடச் செய்தது. நான்கிங் அரசாங்கத்தில் உள் அரசியல் பூசல் காணப்பட்து. தேசிய அரசாங்கத்திற்கும் பொதுவுடைமையினருக்கும் போராட்டம் ஏற்பட்டது. நகரங்களில் இருந்த பொதுவுடைமையினரின் செல்வாக்கைத் தான் அவர்களால் நசுக்க முடிந்தது. ஆனால் கிராமப்புறங்களில் அவர்கள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தது. அவர்கள் மத்திய சியாங்கிலும் யாட்சிகின் தெற்குப் பகுதியிலும் மா சே துங்கின் தலைமையில் சோவியத் அமைப்பில் குடியரசை ஏற்படுத்தினர்.

**நீண்ட நடைப் பயணம்**

சீனப் பொதுவுடைமையினரை அடக்குவதற்காக அவர்களத மைய இடமான சியாங்கியை கோமின்டாங் கட்சியினர் தாக்கினார்களா. பொதுவுடைமைவாதிகள் தோற்கடிக்கப்பட்டு துரத்தப்பட்டனர். அதுதான் ‘நீண்ட நடைபயணத்தின்’ ஆரம்பமாகும். கோமின்டாங்கின் படையினை முறியடித்துக் கொண்டு அவர்கபள் 6000 மைல்களைக் கடந்து வரவேண்டியதாயிற்று. சொல்லொண்ணாத் துன்பங்களை தாங்கி அவர்கள் மாவோவின் தலைமையில் (20,000 பேர்) 1935-ல் ஷென்சிலட வந்து சேர்ந்தனர். அந்தப் பகுதியிலட அவர்கள் தங்கள் புரட்சி களத்தை அமைத்தனர். ஆக்கிரமிப்பானரான ஜப்பானியர்களையும் முறியடிக்க முற்பட்டனர். உண்மையிலேயே இந்த ‘நீண்ட நடைப்பயணம்’ மாபெரும் சாதனையாகும். மாவோவின் தலைமைக்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும். செஞ்சேனையை முறியடிப்பதில் சியாங் தோல்வி கண்டார். அதுவே இறுதியாக அவரது நிலைமையை சீர்கேடான நிலைக்குத் தள்ளிவிட்டது.

**ஜப்பானியர் ஆக்கிரமிப்பு**

சீனாவில் வலுவான அரசாங்கம் ஏற்படுவதை ஜப்பான் விரும்பவில்லை. 1931-ம் ஆண்டில் ஜப்பான் மஞ்சூரியாவைக் கைப்பற்றியது. அதன்பின் அது வடகிழக்கு சீனப்புதிகளையும் கைப்பற்ற முயற்சித்தது. அப்போது ஜப்பானை எதிர்த்து நிற்பது ராணுவ அரசியல் ரீதியில் இயலாத காரியம் என்பவை சியாங் எண்ணினார். ஆகவே அவர் 1935-ம் ஆண்டு தேங்கு ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டார். அதன்படி போர் தற்காலிமாக நிறுத்தி வைக்கப்பட்டது. ஜப்பானுடனான அமைதிக் கொள்கையை தேசியவாதிகள் விரும்பவில்லை.

**அரசியல் ஒற்றுமைக்கான முயற்சியான நிகழ்ச்சி**

1632-ம் ஆண்டு பொதுவுடைமை வாதிகளால் நடத்தப்பட்டு வந்த சீனசோவியத் குடியரசு ஜப்பானுடன் தந்திரமான வழியில் போரிட முற்பட்டது. அப்போது சியாங்

பொதுவுடைமையினரை நசுக்க முற்பட்டார். ஜப்பானியரை விரட்ட சீனர்கள் ஒன்றுபட வேண்டும் என சியாங்கிற்கு பொதுவுடைமையினர் கூறினர். ஆதை சியாங் புறக்கணித்தார். தேசியவாதிகளின் அதே கோரிக்கையையும் அவர் ஏற்கவில்லை. வெளிப்படையான கடிதங்கள் தந்திகள் மூலம் ஐக்கியத்திற்காக செஞ்சேனையினரின் பிரச்சாரம் வீறுக்கொண்டது. அதைப் பொருட்படுத்தாமல் சியாங் பொதுவுடைமையினரை நசுக்கும் திட்டத்தை முடிவாக்க சியானுக்குச் சென்றார். சியாங் என்பது ஷென்சியிலுள்ள செஞ்சேனையரின தளமாகும். 1936-ம் ஆண்டில் சியாங் சிறைப்பிடிக்கப்ட்டார். இவ்வாறுதன் நாட்டுமனிதர்களால் கைதியாக்கப்பட்டார். ஜப்பானை முறியடிக்க இரு தரப்பினரும் இணைந்து செயல்படும் பொதுவுடைமையினரின் திட்டத்தை ஏற்றுக் கொள்ளுமாறு வற்புறுத்தினர். சியாங்கின் உயிர் அப்போது ஆபத்தில் இருந்தது. மாவோ-சூ என் லாய் என்பவரை அனுப்பி சமரசம் ஏற்பட்டது. மாவோவின் படைகள் சியாங்குடன் இணைந்து போரிட்டு ஜப்பானை விட்டுவது என்று முடிவு செய்யப்பட்டது. வன்முறையை அகற்றி சோவியத் முறையிலான அரசாங்கம் ஏற்படுத்தும் எண்ணத்தையும் கைவிடுவது என்பதை அவர்கள் ஒப்புக் கொண்டனர். 1936-ம் ஆண்டு கிறிஸ்துமஸ் நாளன்று அவர் விடுதலை செய்யப்பட்டார். விரைவில் கோமின்டாங்குகளுக்கும் கம்யூனிஸ்டுகளுக்கு மிடையில் உடன்பாடு ஏற்பட்டது. இரு கட்சியினரும் இணைந்து ஜப்பானை எதிர்த்துப் போராட முடிவு செய்தனர்.

**1937-45ல் நடைபெற்ற சீன ஜப்பானியப் போர்**

சியாங் ஜப்பானியரை எதிர்ப்பதில் முழு முயற்சியுடன் ஈடுபட்டார். கோமின்டாங்கும், பொதுவுடைமையினரும் இணைந்தது கண்டு ஜப்பான் அதிர்ச்சி அடைந்தது. அந்த ஒற்றுமையைக் குலைக்க அது பெரும்முயற்சி எடுத்துக் கொண்டது. பொதுவுடைமையினரை நசுக்க ஜப்பானும் அவருக்கு ஆதரவு அளிப்பதாகக் கூட அறிவித்தது. ஆனால் சியாங் தன் தேசப்பற்றுக்கு துரோகம் ஏற்படாவண்ணம் உண்மையாக நடந்து கொண்டார். அவர்களைக் கடுமையாக விரட்ட முற்பட்டார். ஆனால் ஜப்பானியர்கள் மிக வேகமாக முன்னேறி பல நகரங்களையும், சீனாவின் பல பகுதிகளையும் பிடித்துக் கொண்டனர். தலைநகரம் வீழ்ந்தது. சுங்கிங் என்ற இடத்திற்கு அரசாங்கம் பின்வாங்கியது. போரின் போது சீனாவானது இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளழடமிருந்து தாராளமாக உதவியைப் பெற்றது. அப்போது ஜப்பானும் இரண்டாம் உலகப் போரில் கலந்து கொண்டது.

**கோமின்டாங் வீழ்ச்சி**

கோமின்டாங்கினர் ஜப்பானையும் எதிர்த்து நாட்டையும் புனரமைப்பு செய்ய வேண்டும் என்று முடிவு செய்தனர். போரின் ஆரம்பத்தில் சில சீர்திருத்தங்களை செய்த பின் அந்த அரசாங்கம் வலிமையற்று திறமையற்று ஊழல் மலிந்து காணப்பட்டது. அது ஆங்கிலேய-அமெரிக்கா முகாமைப் பெரிதும் சார்ந்திருந்தது. பொதுவுடைமையினர் தங்கள் பிரச்சார பீரங்கி மூலம் சியாங் ஆங்கிலேய, அமெரிக்காவின் கைப்பாவையாக மாறிவிட்டார் என்பதை மக்களுக்கு அறிவித்தனர். கோமின்டாங்கும் காலத்தோடு உகந்த சீர்திருத்தங்களைச் செய்ய தவறிவிட்டது. கோமின்டாங் தன் பிடியை அடக்கு முறையாலும் இராணுவ முறையாலும் தக்க வைக்க முயன்றது. அலுவலகங்களில் மலிந்து கிடந்த ஊழலை வேர் அறுக்க அது

தவறிவிட்டது. இவைகள் எல்லாம் அதன் பெருமையினை மிகவும் குறைத்து விட்டது. நேச நாடுகளால் ஜப்பான் இறுதியாகத் தோற்கடிக்கப்பட்டாலும் கோமின்டாங் அடிபட்டு வேதனை அடைந்து போரிலிருந்து வெளிப்பட்டது என்பது வெள்ளிடைமலை.

**பொதுவுடைமையிடைருனான வேறுபாடுகளும் கோமின்டாங்கின் வீழ்ச்சியும்**

கோமின்டாங்கிற்கும், பொதுவுடைமையினருக்கும் இடையில் இரண்டாண்டு களுக்குப் பின் வேறுபாடுகள் தலையெடுத்தன. தேசியத்துடன் சீர்திருத்தங்களை இணைந்து பொதுவுடைமையினர், விவசாயிகளின் பெரும் ஆதரவைப் பெற்றனர். வட்டி விகிதங்களின் குறைப்பு, நிலங்களைப் பறித்து நிலமற்றோர்க்குப் பகிர்ந்தளித்தல், பிற பொருளாதாரச் சீர்திருத்தங்கள் ஆகியவையும் அவர்களது பெருமையை உயர்த்தின. பொதுவுடைமையினர் கிராமபுறங்களில் தங்களது கொரில்லாத் தளங்களை ஏற்படுத்தினர். ஆதன்மூலம் பல பகுதிகளை விடுவித்தனர்.

கோமின்டாங் அடக்குமுறையினை அவிழ்த்து விட்டது. பொதுவுடைமை கட்சியிலிருந்து சாங்குவோ, தவோ என்ற தலைவர் விலகியதால் 1938-ல் மூன்று முக்கிய மக்கள் அமைப்புகள் வன்முறையால் அடக்கப்பட்டன. சியாங் சீனக் கம்யூனிஸ்டுகளை ஏற்றுக் கொள்ள மனம் ஒப்பவில்லை. அவர் கீழ்க்காணுமாறு குறிப்பிட்டார். ஜப்பானியர் தோல் வியாதியைப் போன்றவர்கள்'' பொதுவுடைமையினர் இருதய நோய் போன்றவர்கள் மாவோ அதற்குச் சரியான முறையில் எதிர்ப்புத் தெரிவிக்க முற்பட்டார்.

1940-ம் ஆண்டில் சியாங் பொதுவுடைமையினரின் 8வது வழி ராணுவம், புதிய 4வது வழி ராணுவம் ஆகியவற்றை மஞ்சள் நதிக்கு வடக்கே அகன்று செல்ல ஆணையிட்டார். அவர்கள் அதைப் புறகணித்தனர். இவ்வாறு செய்வதன் மூலம் அவர் ஜப்பானிடம்' சரணடையப் போகிறார் எனக் குறை கூறினர். 1943-ம் ஆண்டு செப்டம்பர் திங்களில் கோமின்டாங்கின் மத்திய செயற்குழு ஒரு தீர்மானம் கொண்டுவந்தது. அதன்படி பொதுவுடைமையினருடனான வேறுபாடுகளை களைவது என்று முடிவு செய்யப்பட்டது. 1947-ம் ஆண்டில் தளபதி மார்ஷல் அதைத் தடுக்க முற்பட்டார். அவரது முயற்சி தோல்வியில் முடிந்தது. உள்நாட்டுப் போர் ஏற்பட்டது. சியாங் தோல்வி அடைந்தார். பொதுவுடைமையினர் வெற்றி பெற்றனர். சியாங் பார்மோசாவிற்குச் சென்றார். இவ்வாறு சீனாவில் கோமின்டாங்கின் ஆட்சி முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

**சீனப் பொதுவுடைமைக் கட்சி**

1917-ம் ஆண்டில் ரஷ்யாவில் ஏற்பட்ட போல்ஷ்விக் புரட்சி சீன அறிஞர்களைப் பெரிதும் பாதித்தது. 1918-ம் ஆண்டு பீகிங் பல்கலைக் கழகப் பேராசிரியர்களான விதவோ, சவோ, சென்துசியு ஆகியோர் முதலில் மார்க்சீயக் கோட்பாட்டை ஆராயும் குழுவிளை ஏற்படுத்தினார்.இரண்டாண்டுகளுக்குப் பின் 1920-ம் ஆண்டில் செப்டம்பர் திங்களில் சென்து, சியு என்பவர் சோவியத் நாட்டின் செயல்களில் உதவியால் சீனப் பொதுவுடைமைக் கட்சியினை ஏற்படுத்தினார். மா சேதுங், லி சவோ-சி, சூ என்லாய், சூ தே ஆகியோர் அக்கட்சியினை ஆரம்பித்தவர்களில் முக்கியமானவர்கள் ஆவார்கள்.

**தொடக்ககால வரலாறு**

தொழிலாளர் நல அரசை ஏற்படுத்துவது தான் சீனப் பொதுவுடைமைக் கட்சியின் முக்கிய நோக்கமாகும். இது ரஷ்யப் பொதுவுடைமைக் கோட்பாட்டைப் போன்றதாகும். ஆரம்பகாலத்தில் அப்பொதுவுடைமைக் கட்சி மாஸ்கோவுடன் நெருங்கி தொடர்பு கொண்டிருந்தது. ரஷ்யர்களின் சொற்படி அக்கட்சி சீனாவிலிருந்த கோமின்டாங்கின் நட்புறவுடன் 1923 முதல் 1927 வரை இருந்து வந்தது. அப்போது அது தன் உறுப்பினர்களின் எண்ணிக்கையினை அதிகமாக்கிக் கொண்டு வலிவும், பொலிவும் பெற்று விளங்கியது. கட்சியை நக்கு வளர்த்துக் கொண்டது. செஞ்சேனையையும் அது ஏற்படுத்திக் கொண்டது. சியாங் கே ஷேக்கின் தேசியப் படைகள் திடீரென்று சீனப் பொதுவுடைமையினைத் தாக்கியதால் அக்கட்சியினருக்கும் கோமின்டாங் கட்சிக்கும் பிளவு ஏற்பட்டது.

**ரஷ்யப் பொதுவுடைமையினரின் ஏற்றம் (1931-27) அல்லது ஆதிக்கம்**

1921லிருந்து 1927 வரை சீனப்பொதுவுஜடமையினரின் வளர்ச்சியில் ரஷ்யப் பொதுவுடைமையினரின் ஆதிக்கம் அதிகம் தலைகாட்டியது. அதற்கு ‘கோமின்டாங்’ செல்வாக்கு என்று பெயர். அதன் செயலரான வாதின்ஸ்கி பொதுவுடைமைககட்சி தோன்றுவதற்கு சென்னுக்கு மிகவும் உதவி செய்தார். சோவியத் புரட்சிக்குப் பின் ரஷ்யா தனித்து விடப்பட்டது. அது மேலைநாட்டினரின் பேராதிக்கத்திற்கு எதிராக அணிசேர்க்க விரும்பியது. ஆப்போது மேலை நாட்டவரின் எதிர்ப்பு உணர்ச்சி சீனாவில் மிகுந்து காணப்பட்டது. ஆகவே ரஷ்யர்கள் சீனப் பொதுவுடைமையினை கோமின்டாங்குடன் சேர்ந்து மேலைநாட்டவரை எதிர்க்க துாண்டியது. முதல் பத்து ஆண்டுகளில் சீனப்பொதுவுடைமையினர் அவ்வளவு நல்ல வெற்றிகளைப் பெறவில்லை எனலாம். ஆதன் பின்மார்க்சீயக் கோட்பாட்டைப் பயின்றவர்கள் புரட்சிவாதிகளாக மாறினர். அவர்கள் தங்களுக்கென ஒரு படையினை ஏற்படுத்திக் கொண்டனர்.

**மா சே துங்கின் எழுச்சி**

1927-ம் ஆண்டிலிருந்து 1930-ம் ஆண்டுவரை பொதுவுடைமைக் கட்சி பல கிளர்ச்சிகளில் ஈடுபட்டு தோல்வி கண்டது. 1927-ம் ஆ:டு ஆகஸ்டு திங்கள் பொதுவுடைமைக் கட்சி ஒரு ராணுவப் புரட்சி ஒன்றை ஏற்படுத்தியது. அதைத் தொடர்ந்து ஹுனானில் குடியானவர் புரட்சி ஒன்றும் ஏற்பட்டது. அது மா சே துங்கின் தலைமையில் நடைபெற்றது. அவைகள் தோல்வியில் முடிந்தன. மாசேதுங் கியாங்சிங்கிற்கு வந்து சேர்ந்தார். அங்கு சீன சோவியத்தை ஏற்படுத்தினார். சூ தேயின் உதவியால் கியாங்சியில் செஞ்சேனை உருவாக்கப்பட்டது. அந்த கரடு முரடான பகுதியிலிருந்து மிக உயர்ந்த கோமின்டாங்கின் படைகளை மாவோ எதிர்க்கலானார். 1934-ம் ஆண்டில் அவர் கியாங்சியிலிருந்து ஷென்சிவ ந்தடைந்தது வரை பல இன்னல்களையும், இடர்பாடுகளையும் அடைந்தார். மா சே துங்கும் அவருடன் சேர்ந்த 70,000 ஆதரவாளர்களும் ஏறக்குறைய 6000 மைல்களை கடக்கும் வரை பல இடங்களில் போரிட்டு தொல்லைகள் பல அடைந்து அங்கு வந்து சேர்ந்தனர். இந்த நிகழ்ச்சி தான் புகழ் பெற்ற ‘நீண்டநடைப் பயணம்’ என்று அழைக்கப்படுகிறது. முா சே துங்

இவ்வாறாக கட்சியின் தலைமையித்தை ஷென்சிக்கு மாற்றினார். அப்போது அவர் கட்சியின் நிகரற்ற தலைவராக விளங்கினார்.

**பொதுவுடைமையினர் ஆட்சியின் ஆரம்பகாலம்**

நாட்டின் விடுதலைக்கு கோமின்டாங்குடன் பொதுவுடைமையினர் இணைந்து செயல்படவேண்டும் என்ற ரஷியரின் சொற்படி அவர்கள் செயல்பட்டனர் என்பதை முன்னரே கண்டோம். 1927-ம் ஆண்டில் பொதுவுடைமைக்கட்சியும் கோமின்டாங்கும் பிரிந்து நின்றன. கோமின்டாங் பொதுவுடைமைவாதிகளை நசுக்க முற்பட்டது. ஆகவே அவர்கள் யூனான், சியாங்கி ஆகிய மலைப்பகுதிகளில் தஞ்சம் புகுந்தனர். அங்கு அவர்கள் விவசாயக் கூட்டமைப்புகளை ஏற்படுத்தினர். பெரும் நிலச்சுவான் தாரர்களின் நிலங்களைப் பறிமுதல் செய்தனர். அவர்கள் அதைப் பகிர்ந்தளித்தனர். விலைகள் கட்டுப்படுத்தப்பட்டன. விலைகள் குறைக்கப்பட்டன. இராணுவத்திற்கு இளைஞர்கள் சேர்க்கப்பட்டனர். அவர்களைக் கொண்டு செஞ்சேனை உருவாக்கப்பட்டது. விடுதலை பெற்ற பகுதிகளில் சட்டமன்றங்களை ஏற்படுத்தினர். வாக்கு மூலம் அதன் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்கள் ஷென்சிக்கு வந்தடைந்தவுடன் சில சீர்திருத்தங்களை மேற் கொண்டனர். சீரான வரி விதிப்புக்கொள்கையைப் பின்பற்றினர். வுாடகை, கடன்முறைகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டன. கட்டுப்பாடு ஒழுங்கு நல திட்டம் ஆகியவற்றின் மூலம் அவர்கள் வடமேற்கு சீனாவை தங்களின் கீழ் கொண்டுவந்தார்கள்.

**புதிய மக்களாட்சிக் கோட்பாடு**

மா சேதுங் ஷென்சியின் போராட்டக்களத்திலிருந்து தன்னுடைய புதிய மக்களாட்சிக் கோட்பாட்டை உருவாக்கினார். சீனா முழுமையான சமதர்ம ஆட்சிக்குத் தயாராகவில்லை என்பதை மாவோ உணர்ந்தார். அரசுக்குத் சொந்தமான தனிப்பட்ட கூட்டுறவு முறையிலான நிறுவனங்கள் இணைந்த கலப்புப் பொருளாதாரத்தை அவர் வெளியிட்டார். கட்சியின் கூட்டு அரசாங்கத்தை அவர் வெளியிட்டார். அதாவது அதில் தொழிலாளர் குடியானவர்கள் நடுத்தரமக்கள் ஆகியோர் பங்கு பெறுதல் வேண்டும் என்றார். அதுவே புதிய மக்களாட்சிக் கோட்பாடாகும் நாளடைவில் நிலமானிய நடுத்தரவர்க்கக் கூறுகள் அகற்றப்பட்டுவிடும் என்றார். அடுத்த கட்டத்தில் முழுமையான சமதர்மம் ஏற்படுத்தப்படும் என்றார். அங்கும் தொழிலாளர்களின் வர்க்கம் நல்லமுறையில் அமையாததால் இந்தச்சீரான திட்டங்களை அவர் மேற்கொண்டார். சன்யாட் சென்னின் மூன்று கோட்பாடுகளின் மறுபதிப்புத் தான் ‘‘புதிய மக்களாட்சிக் கோட்பாடு’’ என்று மா-வோ கூறினார். இக்கோட்பாட்டிற்கு மக்களிடமிருந்து மகத்தான வரவேற்பு கிடைத்தது.

**ஜப்பானின் ஆக்கிரமிப்பு**

1931-ம் ஆண்டில் ஜப்பான்-வஞ்சூரியா மீது படையெடுத்த போது சீனர்கள் ஜப்பானியர்களை வெறுத்தனர். ஆகவே இந்த ஜப்பானிய எதிர்ப்பு உணர்ச்சியைப் பயன’படுத்திக் கொண்டு சீன பொதுவுடைமையினர் 1932-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் அதன் மீது போர் தொடுத்தனர். அவர்கள் பல கூட்டங்களில’ ஜப்பானிய எதிர்ப்பு உணர்வைத்

தூண்டினர். நாடெங்கிலும் அவர்கள் மீதான வெறுப்பு பரவலாயிற்று. ‘‘ஜப்பானியர்களுக்கெதிரான சீனர்களின் ஐக்கியம்’’ என்ற கோஷத்தை மாவோ எழுப்பினர் ஜப்பானியர்களை முறியடிக்க பொதுவுடைமையினர் கோமின்டாங்குடன் ஒத்துழைத்தனர். ஆகையால் சியாங் கே ஷேக் பொதுவுடைமைவாதிகளை நசுக்கிய பிறகே ஜப்பானை முறியடிக்க வேண்டுமென முடிவு செய்தார். சியானில் சிறை வைக்கப்பட்டு உயிருக்கு ஆபத்து வந்ததை உணர்ந்த பிறகே ஷேக் அவர்களது ஒத்துழைப்பை ஏற்றுக் கொண்டார். போர் நடைபெற்ற போதுகூட அவர்களிடையே நிலவிய உறவு சுமுகமாக இல்லை.

ஜப்பானியர்கள் பல இடங்களைப் பிடித்து முன்னேறிய போது கோமின்டாங் பொதுவுடைமை ஆகிய கட்சிகளின் படைகள் பின்தங்கியே இருந்தன. கொரில்லா தந்திரத்தைப் பின்பற்றிய பொதுவுடைமையினர் ஜப்பானியர்களுக்கு எல்லையில்லாத் தொல்லைகளைத் தந்தனர். அதன்மூலம் பல வெற்றிகளை எட்டினர். அப்போது தேசிய கொரில்லாப் படையினரையும் தங்களுடன் அவர்கள் சேர்த்துக் கொண்டனர். ஜப்பானியர்கள் சரணடைந்தபோது விடுதலை பெற்ற பகுதிகள் பொதுவுஜடமையினர் வசம் சேர்ந்தது.

**செஞ்சேனையின் வளர்ச்சி**

சியாங்கின் ஆட்சியில் செஞ்சேனை நன்கு சீரமைக்கப்படும் என்ற காரணத்தால் செஞ்சேனை தேசியப்படைகளுடன் ஒத்துழைத்தது. இத்தகைய உறவினிடையே கூட அது தன் தனித்தன்மையினை நிலைநாட்டி வந்தது. சூதேயின் தலைமையில் அடிப்படையினர் அரசியல் அறிவு பெற்றனர். நல்ல திறமையினையும் பெற்றனர். அப்படை மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவை முறையே,

1) ஒழுங்கான இராணுவம்
2) நன்கு பயிற்சி பெற்ற கொரில்லாப் படைகள்
3) விவசாயிகளின் இராணுவம்

ஆகும். போரின் முடிவில் அப்படையினரின் எண்ணிக்கை மூன்று மில்லியன்களாகும். ஜப்பானியர் சரணடைந்தபோது ஏற்பட்ட வெற்றிடத்தை அவர்கள் நன்கு அமைக்கப்பட்ட இராணுவம், திறமையான கட்சி இயந்திரம், நிலப்பங்கீடு, நிலச்சீர்திருத்தம் ஆகிய கவர்ச்சியான சீர்திருத்தங்களைப் பெற்று நிரப்பினர்.

**உள்நாட்டுப் போர்**

கோமின்டாங், பொதுவுடைமையினரின் கூட்டை சீனர்கள் வரவேற்றனயர். ஆனால் அவர்களிடையே சந்தேகம் குடிகொண்டிருந்தது. மஞ்சூரியாவை வென்றபின் ஜப்பானியர்களட 1937-ம் ஆண்டில் முழுமையான படயெடுப்பில் ஈடுபட்டனர். அனைத்து முக்கிய நகரங்களும், செய்தித் தொடர்பு நிலையங்களும் ஜப்பானியர்கள் முன் விழுந்தன. 1938-ம் ஆண்டில் சியாங்கின் தலைமையில் மக்களின் அவை நிறுவப்பட்டது. அதன்படி ஜப்பானியர்களை விரட்டுவது, தேசியச்சீரமைப்பு மேற்கொள்வது என்பது முடிவு செய்யப்பட்டது. அதனால் பயனேதும் விளையவில்லை. பொதுவுடைமையினர் அவ் அவையை தங்களின் கட்சிப் பிரச்சாரத்துக்குப் பயன்படுத்துகின்றனர் என்று அவர்கள் அவரைக் குறை கூறினர். இவ்வாறு மாறிமாறிக் குறை கூறிக் கொண்டனர். 1939-ல்இரண்டு கட்சிகளுக்கும் இடையில்

வெளிப்படையான மோதல் ஏற்பட்டது. 1941-ம் ஆண்டு ஜனவரியில் திடீரென கோமின்டாங் கட்சியினர் தென்அன்வெயில் இருந்த பொதுவுஜடமைக் கட்சியினரைத் தாக்கினர். அதில் 5000 செஞ்சீனர் படுகொலை செய்யப்பட்டனர். ஜப்பானின் தோல்வி தவிர்க்க முடியாது என்பதை உணர்ந்த இருதரப்பினரும் மோதிக் கொள்ளலானார்கள்.

ஜப்பான் மீது சோவியத் நாடு போர் அறிவிப்பு செய்தவுடன் சூ தே ஜப்பான் கைப்பற்றிய பகுதிகளை கைப்பற்றும்படி செஞ்சேனைக்கு ஆணையிட்டார். சியாங் அதை விலக்கிக் கொள்ளுமாறு சூ-தேவுக்குக் கூறினார். அது வெளிப்படையாக பொதுவுடைமையினர் அதிகாரத்தைக் கைப்பற்றும் வழி என்று அவர் கூறினார். சூ-தே சியாங்கின் ஆணையை செவிமடுக்கவில்லை. அது இருதரப்பினரும் மோதலைக் கொண்டு வந்தது. இவ்வாறுஅ சீனா உள்நாட்டுப் போரில் சிக்கியது.

**பயனற்ற அமெரிக்கத் தலையீடு**

பியர்ஸ் துறைமுக நிகழ்ச்சிக்குப் பின் அமெரிக்கா பசிபிக்கில் போரிட்டுக் கொண்டிருந்தது. ஜப்பானுடன் சீனா போரில் ஈடுபட்டபோது அமெரிக்கா சீனாவிற்கு ஏராளமான உதவியினைச் செய்து வந்தது. நாட்டின் புனரமைப்புக்கு அவ்விரு தரப்பினரின் போர் முயற்சியை அமெரிக்கா ஊக்குவித்தது. அமெரிக்காவானது அவர்களின் ஒற்றுமைக்குப் பாடுபட்ட போதும் மோதலைத் தவிர்க்க முடியவில்லை.. கோமின்டாங்கும், பொதுவுடைமையினரும் அடிக்கடி மோதிக் கொண்டனர். தேசிய அரசாங்கம் பொதுவுடைமைவாதிகளை முழுமையாக விரட்ட முற்பட்டது. அமெரிக்க அதிபர் ட்ரூமன் என்பவர் தளபதி மார்ஷலை சீனாவிற்கு சமரசம் செய்ய அனுப்பினார். மார்ஷல் இருதரப்பினரையும் பேச்சு வார்த்தைக்குக் கூட்டினாலும் பயனேதும் விளையவில்லை. தேசிய வாதிகள் எந்தவிதச் சலுகைகளையும் பொதுவுடைமையிருக்கு அளிக்க முன்வரவில்லை. சியாங்கிற்குத் தொடர்ந்து அமெரிக்க உதவி கிட்டும் என உறுத அளிக்கப்பட்டது. அவர் கடுமையான நடவடிக்கையினை மேற்கொள்ளலானார். சியாங்கின் சீனா உருக்குலைய ஆரம்பித்தது. பொருளாதார அரசியல் குழப்பம் காரணமாக சீனா மிக வேகமாக அழிவை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. ‘‘கோமின்டாங் உட்பூசல்களின் உறைவிடம்’’என்பதை அமெரிக்க சமரசவாதிகள் கண்டனர். பொதுவுடைமை வாதிகள் 10 ஆண்டு உள்நாட்டுப் போருக்குப் பின்பும் பொதுவுடைமையினர் 7 ஆண்டு ஜப்பானியப் படையெடுப்பிற்குப் பின்பும் வாழ முடிந்தது. அதற்குக் காரணம் பொது மக்களின் ஆதரவே எனலாம். வுலிமையில் நம்பிக்கையும், தொடர்ச்சியான அமெரிக்க உதவியும் பெற்றிருந்தும் தேசிய வாதிகளால் வெற்றி காணமுடியவில்லை. பொதுவுடைமைவாதிகள் அவர்களை எதிர்த்து உறுதியாக நிற்கமுடிந்தது. இவ்வாறு மார்ஷல் பணி தோல்வியில் முடிந்தது.

**பொதுவுடைமையினரின் வெற்றி**

அமெரிக்க அணு குண்டுகள் வீசப்பட்டு ஹிரோஷிமா, நாகசாகி நகரங்கள் நாசமாக்கபட்ட பின் ஜப்பான் 1945-ம் ஆண்டு ஆகஷ்டுத் திங்களில் சரணடைந்தது. ஜப்பானால் விடப்பட்ட நிலப்பகுதிகளை எடுத்துக் கொள்வதில் தேசியவாதிகளும், பொதுவுடைமைவாதிகளும் போட்டி போட்டனர்இ மஞ்சூரியாவிலும், அவ்விரு தரப்பினருக்கும்

பகைமை மூண்டது. போட்டியின் ஆரம்பகட்டத்தில் நன்கு பயிற்சி பெற்ற இராணுவ வீரர்களைப் பெற்றிருந்ததால் தேசியவாதிகளி பல வெற்றிகளைப் பெற்றனர். அவர்கள் வடமேற்கு சீனா, ஷென்சியிலுள்ள பொதுவுடைமையினர் தலைமையிலான யூனான் ஆகியவற்றைப் பிடித்துக் கொண்டனர். எனினும் பொதுவுடைமையினரின் ஒற்றுமை ஒழுங்கை அவர்களால் குலைக்க முடியவில்லை. நகரங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட அவர்கள் கிராமங்களில் பிடிப்பை ஏற்படுத்திக் கொண்டனர். அங்கெல்லாம் தேசியப்படைகளுக்குத் தொல்லைகொடுக்கலானார்கள். அவர்களின் செய்திப் போக்குவரத்தைத் துண்டித்தனர். செஞ்சேனை அல்லது செம்படை தற்போது 'மக்களின்படை' என்று அழைக்கப்பட்டது. அது வலிவோமுட் பொலிவோடும் போரிட்டது. அமெரிக்க உதவிகிட்டிய போதும் கூட அவர்களால் பொதுவுடைமையினரின் நிலையான தாக்குதலுக்கு முன் நிலைத்து நிற்க முடியவில்லை. அவர்களது பல இலாணுவப் பிரிவுகள் பொதுவுடைமையினரின் முன் சரணடைந்தன. விரைவிலேயே அவர்கள் சீனாவின் பெரும்பகுதிக்கும், ஹெய்னான் என்ற பகுதிக்கும் தலைவரானார்கள். 1950-ம் ஆண்டில் எஞ்சியிருந்த தேசியப்படைகள் பார்மோசாவிற்குக் குடியேறின.

**கோமின்டாங்கின் வீழ்ச்சிக்குக் காரணங்கள்**

ஜப்பானின் வீழ்ச்சிக்குப் பின் தேசியவாதிகள் சீனாவை ஆண்டனர். அவர்களது ஆட்சியில் தன்னலமும் ஊழலும், லஞ்சமும் தாண்டவமாடின. குிராமப்புற நிலப்பிரப்புக்கள் மிகவும் சுய நல நோக்கோடு செயல்பட்டனர். நல்ல சீர்திருத்தங்கள் கொண்டுவரத் தவறிவிட்டனர். ஏழைமக்களுக்கு அவர்கள் ஏதும் செய்யவில்லை. நிலச்சுவான்தாரர்களின் ஆதரவால் அது நிர்மூலமாயிற்று என்றால் அது மிகையாகாது. மேலும் அதனால் கோமின்டாங் முன்னேற்றமற்ற, அறிவாளிகளுக்கு மாறான கட்சியாக மாறிவிட்டது.

அதற்குமாறாக பொதுவுடைமைவாதிகள் மிக உயர்ந்த இராணுவ அமைப்பைக் கொண்டிருந்தனர். நல்ல தந்திரத்தைக் கையாண்டனர். சிறப்புமிகு சீர்திருத்தங்களை மேற்கொண்டனர். இவற்றிற்கெல்லாம் முத்தாய்ப்பு வைப்பது போல் நல்ல தலைமை இருந்தது. அது சீன மக்களை நன்கு துாண்டி எழுச்சிபெறச் செய்ய ஏதுவாக இருந்தது.

## அலகு - III

## இரண்டாம் சீன ஜப்பானியப் போரும் இரண்டாம் உலகப் போரும்

1931-ம் ஆண்டில் ஜப்பான் மஞ்சூரியாவைக் கைப்பற்றிய பின் இரண்டு நாடுகளுக்கும் இடைணில் மோதல் ஏற்பட்டது. நன்கு சீரமைக்கப்படாத தலைவர்கள் அற்ற சீனர்கள் அயல்நாட்டவரின் ஆக்கிரமிப்பை கடுமையாக எதிர்ப்பதில் முனைந்து நின்றனர். ஜப்பானிலும் இராணுவத் தளபதிகள் வெற்றி பெற்றனர். அதன் விளைவாக சீன ஜப்பானியப் போர் ஏற்பட்டது. 1941-ம் ஆண்டில் ஜப்பான் பெர்ல் துறைமுகத்தைத் தாக்கிய போது அப்போர் இரண்டாம் உலகப்போருடன் இரண்டறக் கலந்துவிட்டது. இப்போர் ஜப்பானியர்களால் ஒரு நிகழ்ச்சி என்றே அழைக்கப்படுகிறது.

**போரின் காரணங்கள்**

1) ஜப்பானியர்கள் சீனா மீது போர் தொடுக்கக் காரணம் அதன் திறமையின்மையும், அங்கு நிலவிய உள்நாட்டுச் சிக்கலும் ஆகும். எனவே ஜப்பான் சீன மண்ணில் வன்முறையில் பன்முறை தாக்க முற்பட்டது.
2) சியாங் கே-ஷேக்கின் செயல்கள் ஜப்பானியருக்குச் சாதகமாக அமைந்தன. அவர் ஜப்பானியப் படையெடுப்பை தோல் மீது காணப்படும் ஒரு மரூஉ போன்றும், பொதுவுடைமையினரின் ஆபத்தை இருதயத்தில் உள்ள ஒரு நோய் போன்றும் கருதினார். ஆகவே அவர் ஜப்பானியருடன் தொங்கு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டார். இது மஞ்சூரியாவை மறைமுகமாக எடுத்துக் கொள்ளச் செய்த ஒப்பந்தமாகும்.
3) மஞ்சூரியாவில் வெற்றி பெற்றதால் ஜப்பான் மேலும் உற்சாகம் கொண்டு தைரியத்துடன் செயல்பட முற்பட்டது. ஜப்பானிய இராணுவ வீரர்கள் இவ்வெற்றியினால் பெருமிதம் கொண்டு அரசியல்வாதிகளை மேலும் ஆக்கிரமிப்பில் ஈடுபடும்படித் தூண்டினர். பன்னாட்டு அமைப்பு எதுவும் அதைத் தடுக்க முடியாததால் ஆக்கிரமிப்பில் அவர்கள் ஈடுபட்டனர்.
4) ஐரோப்பாவின் அச்சு நாடுகள் பக்கம் ஜப்பான் சேர்ந்து இருந்ததால் அவர்களது ஆக்கிரமிப்பு எண்ணம் அதற்கு ஏற்பட்டதில் வியப்பில்லை. மேலும் அது பொதுவுடைமை எதிர்ப்பு அணியில் சேர்ந்திருந்ததால் இயற்கையாகவே அதை எதிர்ப்பதில் துணிந்து நின்றது.
5) ஜப்பானியருக்கு எதிரான வளர்ந்து வரும் எதிர்ப்பு உணர்வு ஜப்பானிய அரசாங்கத்தை தொல்லைக்கு உள்ளாக்கியது செஞ்சேனையின் பிரச்சாரமும், அதன் கொரில்லாப் போர் முறைகளும் அவர்களை வெறுப்புக்கு உள்ளாக்கியது. இறுதியாக தேசிய ஐக்கிய முன்னனி உருவாக்கப்பட்டது. ஜப்பானுக்கு பீதியை ஏற்படுத்தியது. இது வலிமை அடைவதற்குள் அழிக்க வேண்டுமென ஜப்பான் எண்ணியது.

6) அவ்விரு நாடுகளுக்குள் பகைமை வளர சீனாவின் நடவடிக்கைகள் சிலவும் காரணமாகும். குவாங்டுங் மாநிலத்தில் ஒரு ஜப்பானிய மருந்து வியாபாரி கொல்லப்பட்டார். ஹாங் கௌ என்ற இடத்தில் தூதரகக் காவலாளி கொலை செய்யப்பட்டார். ஜப்பானிய தூதரகத்தில் வெடிகுண்டுகள் வைக்கப்பட்டது கண்டுபிடிக்கப்ட்டது. சீனர்களால் ஜப்பானிய மாலுமிகள் ஷாங்காய் என்னுமிடத்தில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

7) உடனடிக் காரணம்:- லூ-கௌ-சியா நிகழ்ச்சி:- குவாங்டுங் படையிலிருந்து இனம் ஜப்பானிய அதிகாரிகள் லூ-கௌ-சியாவில் (மார்க்கோபோலோ பாலம்) நிகழ்ச்சியை உருவாக்கினார்கள். ஆந்த இடம் பீகிங் நகருக்கு மேற்கே பத்துக்கல் தொலைவில் உள்ளது. அந்த நிகழ்ச்சி 1937-ம் ஆண்டு ஜீலையில் நடைப்பெற்றது. அதனால் சீனப்படையில் சலசலப்பு ஏற்பட்டது. 1901-ல் ஏற்பட்ட பாக்சர் ஒப்பந்தப்படி ஜப்பானும் வடசீனாவில் மார்கோ போலே பாலத்திற்கு அருகில் தன் படைகளை நிறுத்தியது. ஒரு சிப்பாயைக் காணவில்லை என்ற வதந்தியில் ஜப்பானியர்கள் சீனப்படைப்பிரிவில் தேட முற்பட, சீனர்கள் மறுக்க, ஜப்பானியர்கள் நகரத்தைக் குண்டுகள் வீசி தகர்க்க இருநாடுகளுக்குமிடையில் பிரகடனம் செய்ய போர் மூண்டது.

**போரின் போக்கு (1937-1941)**

1.ஆரம்பகட்டம்:- போரில் ஆரம்பத்தில் ஜப்பானியர்களட பீகிங்கிற்கு அருகிலுள்ள முக்கிய இடங்களைக் கைப்பற்றிக் கொண்டனர். ஒன்றிய சீனா அவர்களது எதிர்ப்பை தைரியமாக சமாளித்தது. பொதுவுடைமையினர் உட்பட எல்லா அரசியல் கட்சிகளும் சியாங் தலைமையில் ஒன்று திரண்டனர். அவர்கள் ‘வடக்கு தெற்கு என்ற பேதமில்லை, வயதானவர் இளைஞர் என்ற பாகுபாடில்லை. எல்லோரும் கடும் ஒழுக்கத்துடன் அரசாங்கத்தின் வழிப்படி நடக்க வேண்டும்’’ என்று கூறினர். நவீன மயமாக்கப்பட்ட ஆயுதங்களை கொண்டிருந்த ஜப்பானை எதிர்ப்பது சீனர்களுக்கு பெரும் சோதனையாகவே இருந்தது. பீகிங் நகரைத் தாக்க ஜப்பானியர்கள் முற்பட்டார்கள். அதன் விலைமதிப்பற்ற கலைசட செல்வங்களை காப்பாற்ற சீனர்கள் பெரிதும் கஷ்டப்பட்டனர்.

2) ஷாங்காயில் இரண்டாம் முனை: ஆகஸ்டு திங்களில் ஷீாங்காய் நகரில் ஜப்பான் இரண்டாம் போர் முனையினைத் திறந்தது. அது சீனாவில் நிதிவசதி பெற்ற இடமாகும். ஆதன் பொருளாதார வசதியை நசுக்கிவிட முடிவு செயது அவ்வாறு செயல்பட்டது.

3)நான்கிங்கைக் கைப்பற்றுதல் (1937): மிக வீராவேசத்துடன் சீனர்கள் ஷாங்காயைக் காப்பாற்றிய போதிலும், ஜப்பான் அதை மீறி நான்கிங் நுழைவாயில் வரை முன்னோக்கிச் சென்றது. அந்த தலைநகரானது டிசம்பர் திங்களில் வீழந்தது. அதன் வீழ்ச்சியைத் தொடர்ந்து 10,000 பேர் வன்முறையில் கொன்று குவிக்கப்பட்டனர். அதுதான் ‘‘நான்கிங்கின் கற்பழிப்பு’’ அல்லது நான்கிங்கை சூறையாடுதல்’’ என்று பெயர்.

4. வடசீனாவைக் கைப்பற்றுதல்: வடக்கில் சீனர்கள் மஞ்சன் நதிக்குத் தெற்குபகுதி வரையில் துரத்தி அழிக்கப்பட்டனர். நான்கிங்கிலிருந்து ஒரு ஜப்பானியப்படைவ டக்கு நோக்கிச் சென்று டியன்சினை அடைந்தது. அந்நகரம் கைப்பற்றப்பட்டது.

5) வூஹான், காண்டனின் வீழ்ச்சி (1938-39): அடுத்து பெரும் போர் வூஹானில் நடைபெற்றது. அது டிசம்பர் திங்களில் 1938-ம் ஆண்டில் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து 1939-ம் ஆண்டு அக்டோபர் திங்களில் காண்டன் வீழந்தது.

6) வூஹான் வீழ்ச்சி முதல் பெர்ல் துறைமுகம் தாக்கப்பட்டது வரை: அடுத்த கட்டத்தில் ஜப்பானியர்கள் பல நகரங்களைப் பிடித்துக் கொண்டனர். போக்குவரத்து செய்தித் தொடர்புகளைத் துண்டித்தனர். இது கிழக்கு சீனாவில் உள்ள இடங்களில் நடைபெற்றது எனினும் சீனர்கள் அழிக்கும் கொள்கையினையும், கொரில்லாப்போா முறைகளையும் பின்பற்றினர்.

7) பொம்மை அரசாங்கத்தை ஏற்படுத்துதல்: இதில் வெற்றி கண்டபோதிலும் ஜப்பானியர்கள் போரில் வெற்றி அடைய முடியவில்லை. டோக்கியோ இறுதியாக குழப்பத்தில் தள்ளப்பட்டது. வெற்றி கண்ட இடங்களில் பொம்மை அரசாங்களை ஏற்டுத்த முற்பட்டது. 1937-ல் மங்கோலிய தன்னாட்சி அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தியது. வாங்சிங்வெய் என்ற துரோகியின் உதவியுடன் நான்கிங்கில் சீனர்களின் சீர்திருத்த அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டது.

8) கிழக்கு ஆசியாவில் புதிய மாற்றம் (அ) கோட்பாடு: ஜப்பானியர்ளின் அரசியல் பொருளாதார ஆதிக்கத்தை ஏற்படுத்திய பேரமைச்சர் கோனோயி ''கிழக்கு ஆசியாவில் புதிய கோட்பாட்டை''ஏற்படுத்தினார். இது ஒரு வகையில் 'ஜப்பானிய மன்றோ கோட்பாடு' என்று பெயர் பெற்றது. இதன் நோக்கம் ஆசிய நாடுகளின் ஆதிக்கத்தை ஏற்படுத்துவதே ஆகும்.

**பொதுவுடைமையினருக்கும் கோமின்டாங்கிற்கும் இடையிலான வேறுபாடுகள்**

சீக்கிய முன்னனி திறம்பட செயல்பட மக்களின் அரசியல் அவை ஒன்று நிறுவப்பட்டது. பொதுவுடைமையினரும் கலந்து கொண்ட பொதுவான முன்னணி அதுவேயாகும். சீனச் செஞ்சேனை எட்டாவது வழுப்படை என்று மாற்றி அமைக்கப்பட்டது. அது தேசியவாதிகளின் பொறுப்பில் விடப்பட்டது. இரண்டு பிரிவினருக்கும் இடையில் நிலவிய பொறாமை, பயம், தவறான எண்ணம் ஆகியவற்றால் கருத்து வேறுபாடுகள் தோன்றின. ஆகவே ஐக்கிய முன்னணி பெயரளவில் செயல்பட்டது. போரின் எஞ்சிய காலம் முழுவதும் பொதுவுஜடமையினருகடகும் கோமின்டாங்கிற்கும் இடையில் ஏற்பட்ட தகராறைத் தீர்க்க முடியவில்லை.

**தூாரகிழக்கில் 2வது உலகப்போருக்கான நிகழ்ச்சிகள்**

தூாரகிழக்கு அரங்கில் 2ம் உலகப்போர் நடைபெறுவதற்குக் காரணம் ஜப்பானின் போரதிக்க பசியே எனலாம். ஏற்கனவே ஜப்பான் ரோல்-பெர்லின்-டோக்கியோ அச்சின் உறுப்பினராகும். அது ஜெர்மனி, இத்தாலியுடன் சேர்ந்து கொண்டு கம்யூனிச எதிர்ப்பு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டது. 1830-ம் ஆண்டு செப்டம்பர் திங்களில் கம்யூனிச எதிர்ப்பு ஒப்பந்தம் இராணுவ ஒப்பந்தமாக மாற்றப்பட்டு அமெரிக்காவிற்கு எதிராக முடுக்கிபிடப்பட்டது. ஐரோப்பாவின் எல்லா வல்லரசுகளும் 'வாழ்வா சாவா என்ற போரில் ஈடுபட்டிருந்த போது

அமெரிக்கா மட்டும் தூரக் கிழக்கில் ஆர்வம் காட்டியது. அதுததான் ஜப்பானின் ஆதிக்க ஆசைக்கு அணை போட்டு தடுக்க முற்பட்டது எனலாம். இந்தோசீனாவை ஜப்பான் கைப்பற்ற முற்பட்ட போது அதைக் கண்டித்தது. அதன் மூலம் ஜப்பான் அமெரிக்காவின் இறக்குமதி சரக்குகளுக்கு கட்டுப்பாடுகள் விதித்தது. குறிப்பாக இரும்பு எஃகு இயந்திரச்சாலைகள் அதில் அடங்கும். சீனா அமெரிக்காவின் உதவி பெறும் வகையில் விலவார மசோதா திருத்தப்பட்டது. இதனாலட ஜப்பானுக்கும் அமெரிக்காவிற்கும் இடையில் தகராறு ஏற்பட்டது. உடனடியாக ஜப்பான் அமெரிக்காவினுடான வாணிப ஒப்பந்தத்தை நிராகரித்தது. ஆகவே அமெரிக்காவும் தன் நாட்டிலிருந்த ஜப்பானிய சொத்துக்களை விலக்கிக் கொள்ள ஆணையிட்டது. அதே நேரத்தில் இரு சாராரும் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டனர். ஆனால் ஜப்பான் ஹவாயஜலிருந்த அமெரிக்கக் கப்பற்படைத் தளமான பெர்ல் துறைமுகத்தைத் தாக்கி அழுத்தது. அதுவே அமெரிக்கா மீது போர் தொடுப்பதற்கான அறிவிப்பாகும். இவ்வாறு தூரக்கிழக்கில் 2-ம் உலகப்போர் ஆரம்பமாயிற்று.

**சீனாவும் நேச நாடுகளும்**

1937-ம் ஆண்டு ஜீலைத் திங்களில் போர் ஆரம்பித்தது 1944-ம் ஆண்டு டிசம்பர் திங்களில் பெர்ல் துறைமுகத்தினை ஜப்பான் தாக்கியது வரையில் சீனா தனித்தே போரிட்டது. அது பிற நாடுகளின் அனுதாபத்தையும், தார்மீக ஆதரவையும் பெற்றது. மேலை நாடுகளிலிருந்து சிறுசிறு கடன் தொகைகளைப் பெற்று வந்தது. 1939-ம் ஆண்டில் செப்டம்பர் திங்களில் ஐரோப்பாவில் போர் ஏற்பட்ட போது போரில் திருப்பம் ஏற்பட்டது. ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகியவை ஜப்பானை முறியடிக்க முற்பட்டன. அமெரிக்க ஜப்பானிய உறவில் விரிசல் ஏற்பட்ட போது சீனா அதற்கு உதவ முன்வந்தது.

ஜப்பான் பெர்ல் துறைமுகத்தைத் தாக்கியதால் சீனப் போரிலும் மாற்றம் ஏற்பட்டது. ஆங்கிலேயே-அமெரிக்கப் படைகள் ஜப்பானை முறியடிக்க முற்பட்டன. ஜப்பானும் அவர்களுக்கு எதிராக அச்சு நாடுகள் பக்கம் சேரலாயிற்று. ஆகவே போர் ஆசியாவிலும் பரவியது. இவ்வாறு போர் உலகம் முழுவதிலும் ஆக்கிரமிப்புக்கும், சர்வாதிகாரத்திற்கும் எதிராக நடைபெறலாயிற்று.

**இரண்டாவது உலகப்போரில் சீனாவின் பங்கு**

1941-ம் ஆண்டு உலகம் முழுவதிலும் பரவிய போர் சீனாவிற்கு அவ்வளவாக நலம் பயப்பதாக இல்லை. அதற்குரிய காரணங்களாவன:

1) சீனாவிற்கு உடனடியாக உதவி செய்வதாக பிரிட்டனும், அமெரிக்காவும் உறுதியளித்த போதும் அவைகளால் அதைச் செய்ய முடியவில்லை. அவர்களது போர்த் தந்திரத்தின்படி ஐரோப்பிய அரங்கு போரில் முதலிடம் பெற்றது. அவர்களது முழுக்கவனமும் அங்கு செலுத்தப்பட்டது. ஜப்பானின் பிடியில் சிக்கிய சீனாவின் இக்கட்டான நிலையும் அவர்களுக்குத் தெரியும். அவர்களால் ஏதும் ஏதும் செய்ய முடியாத நிலை. எனினும் உதட்டளவு உதவியே செய்ய முடிந்தது.
2) 1941-ம் ஆண்டில் ரஷ்யாவும், ஜப்பானும் ஆக்கிரமிப்பு இல்லாமல் இருக்க ஓர் உடன்பாடு செய்து கொண்டன. ஆகவே வெளிப்படையாக சீனாவிற்கு உதவ அது

முன் வரவில்லை. ஜப்பானுடன் எந்தவொரு மோதலும் இல்லாமல் இருக்க ரஷ்யா மிகவும் எச்சரிக்கையாகவே செயல்பட்டது.

3) சீனாவின் கடலோரப் பெரும்பகுதிகள் ஜப்பான் வசம் ஆனதாலும், பசிபிக் தீவுகளும் அதன் வசம் இருந்ததாலும் நேச நாடுகள் சீனாவிற்கு உதவி செய்யத் திணறின.
4) சீனாவைத் தொடர்புபடுத்திய எல்லா கடற்கரை வழிகளும் மூடப்பட்டன. அமெரிக்காவின் விமானங்கள் இமயமலையைத் தாண்டி ஓரளவு உதவி செய்து வந்தன. பின்னர் புகழ் வாய்ந்த ‘‘லேடோ சாலை’’ கட்டப்பட்டது. அதன் மூலம் சீனாவிற்கு உதவி அளிக்கப்பட்டது.
5) 1945-ம் ஆண்டில் அமெரிக்கா 500 மில்லியன் டாலர் உதவியினை சீனாவிற்கு அனுப்பி வைத்தது. அமெரிக்கப் போர் அமைச்சர் கூறியது போல ‘‘நாங்கள் செய்த உதவியின் மூலம் சீனர்கள முழுமையான ஆக்கிரமிப்பைத் தடுத்திடவும் இனிமேல் தடுக்கவும் முடிந்தது.’’ என்பது உண்மையேயாகும்.
6) ஜோசப் ஸ்டில்வெல் என்ற அமெரிக்க மொழி அதிகாரி பீகிங்கிலிருந்து சுங்கின் என்ற இடத்திற்கு அனுப்பப்பட்டார். அவர் சியாங்கின் இராணுவத் தலைமையதிகாரியாகப் பணியாற்றினார்.
7) இரண்டாவது உலகப்போரில் சீனா பாதுகாப்பு முனையிலே இருந்து வந்தது. அது வெற்றிகரமாக ஜப்பானின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்தியது. அதன் தலைமையகம் சுங்கிங்கிற்கு மாற்றப்பட்டது. ஜப்பானின் கவனம் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் பக்கம் திரும்பியதால் சீனா தற்காலிகமாக ஜப்பானிய கடும் தாக்குதலிருந்து விடுபட்டது.
8) இக் காலகட்டத்தில் கோமின்டாங் கட்சிக்கும் சீன பொதுவுடைமைக் கட்சிக்கும் இடையில் நல்லுறவு நிலவவில்லை. அவைகளுக்கு இடையில் பொறாமை, சந்தேகம், பயம் குடிகொண்டதால் ஜப்பானுக்கு எதிராக நன்கு செயல்பட முடியவில்லை.
9) 1943-ல் ஏற்பட்ட கெய்ரோ மாநாட்டில் சியாங்கே ஷேக் அதிபர் சூஸ்வெல்ட்டுடனும், பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சில் உடனும் தூரக்கிழக்கின் போர்த் தந்திரம் பற்றி ஆராய்ந்தார். கெய்ரோ அறிவிப்பு முதன் முதலில் ஜப்பானை எவ்வித நிபந்தனையுமின்றி சரண் அடையும்படி கோரியது. மேலும் 1834-ம் ஆண்டிலிருந்து இது வரையில் ஜப்பான் ஆக்கிரமித்த பகுதிகள் திருப்பி அளிக்கப்பட வேண்டும் என்றது.
10) 1945-ம் ஆண்டில் ஏற்பட்ட போர்ஸ்டம் அறிவிப்பு ஜப்பானை ‘‘பணிந்து போ’’ இல்லையேல் அழிந்து போவாய்’’ என்றது. ஜப்பான் அதைச் செவிமடுக்காததால் முதல் அணுகுண்டு ஆகஸ்டு திங்கள் 6-ம் நாளில் ஹீரோமாஷிமாவின் மீது வீசப்பட்டது. இரண்டு நாட்கள் கழித்து ரஷ்யா போரில் ஈடுபட்டது. ஆகஸ்டு 9-ம்

நாள் இரண்டாவது அணுகுண்டு நாகசாகியில் வீசப்பட்டது. ஆகஸ்டு 14-ம் நாளில் ஜப்பானியப் பேரரசர் நிபந்தனையின்றி சரண் அடைந்தார். சரணடைந்த கையொப்பமானது டோக்கியோ வளைகுடாவில் அமெரிக்காவால் மிஸெளரியில் (கப்பலின் பெயர்) பெறப்பட்டது.

**போரின் விளைவுகள்**

1) மேலை நாடுகளின் நெருக்கடியிலிருந்தும் பொருளாதாரக் கட்டுப்பாட்டிலிருந்தும் சீனா விடுபட்டது. விஷேசப் பிரதேச உரிமைகள் பற்றிய உடன்படிக்கைகளும் அகற்றப்பட்டன. ஐ.நாவில் அதற்கு இடமளிக்கப்பட்டது. பாதுகாப்பு அவையில் இடம்பெற்றதோடு ''ரத்து அதிகாரத்தையும்'' இது பெற்றிருந்தது.
2) போரில் தீவிரமாக ஈடுபட்டிருந்த தேசிய அரசாங்கம் நிலை குலைந்ததால் அதன் எதிர்ப்புகளை குறிப்பாக போருக்குப் பின் சமாளிக்க முடியவில்லை எனலாம்.
3) சீனாவின் பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம் அதிகமாகிக் கொண்டே சென்றது. அதனால் பணவீக்கம் ஏற்பட்டது. அது இராணுவத்தைப் பாதித்தது. நிர்வாகம் சீர்குலைந்தது. மக்கள் வாழ்க்கையைப் பாதித்ததது. நடுத்தரவர்க்கத்தினர் பாதிக்கப்பட்டனர்.
4) எட்டு ஆண்டுகள் துன்பப்பட்டதால் மக்கள் உள்ளம் சோர்ந்தனர். அவர்கள் அமைதியைத் தவிர வேறு எதையும் நாடவில்லை.
5) தீர்க்கப்படாத பொதுவுடைமையினர் சிக்கல் மீண்டும் தலைதூக்கியது. அவர்களது பொது எதிரியான ஜப்பான் முறியடிக்கப்பட்டதால் மீண்டும் போட்டி, பொறாமை தலை தூக்கியது. மாவோவின் தலைமையில் பொதுவுடைமையினர் கோமின்டாங்கை எதிர்த்தும் போரிட்டனர். அதன் விளைவு உள்நாட்டுப் போராகும். அது பொதுவுடைமையினரின் வெற்றியில் போய் முடிந்தது.

## சீனாவில் பொதுவுடைமையினரின் ஆட்சி

**சீன மக்கள் குடியரசு**

கோவின்டாங்கின் வீழ்ச்சிக்குப் பிறகு பொதுவுடைமைக் கட்சி சீனமக்கள் குடியரசை 1949-ல் ஏற்படுத்தியது. அந்தப் புதிய அரசாங்கம் மூன்று பிரிவுகளைக் கொண்டிருந்தது. அவை 1. சீன மக்களின் அரசியல் ஆலோசனை மாறாடு பற்றிய சட்டங்கள் 2) மக்களின் மத்திய அரசாங்கம் பற்றிய மூலச்சட்டங்கள் 3) சீன மக்களின் அரசியல் மாநாடு பற்றிய பொதுவான திட்டம், இவைகள் எல்லாம் 1934-ம் ஆண்டு செப்டம்பர் திங்களில் ஏற்பட்ட அரசியலமைப்பின் போது மாற்றப்பட்டன. அக்கட்சியின் உள்நாட்டுக் கொள்கை எச்சரிக்கையின்படி நடைபெற வழி செய்யப்பட்டது.

சீன மக்களின் குடியரசின் அதிகாரத்தையும், பொதுவுடைமையினரின் வெற்றிகளையும் ஒருங்கிணைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. உடனடி நடவடிக்கைகள் ஏதும் இல்லை. உபரி நிலங்கள், வீரர்கள், விவசாயக் கருவிகள் பறிமுதல் செய்யப்பட்டன. சிறு விவசாயிகளும், உரிமையாளர்களும் பாதிக்கப்படவில்லை. தொழில் துறையில் முந்தைய

அரசாங்கச் சொத்துகள் மட்டும் தேசியமயமாக்கப்பட்டன. நாட்டில் வாடகை குறைக்கப்பட்டது. நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. பிற நலன் பயக்கும் செயல்கள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறு மக்களின் மனத்தைக் கொள்ளை கொண்டனர். அதே நேரத்தில் வணிகர்களும், வசதியான குடியானவர்களும் துன்பம் ஏதும் அனுபவிக்கவில்லை.

**1) நிலச்சீர்திருத்தங்கள்**

சீனப்பிரபுத்துவத் தொல்லையிலிருந்து விடுபட சீனக் கம்யூனிஸ்டு அரசாங்கம் தீவிர விவசாயப் புரட்சியில் ஈடுபட்டது. 1950ம் ஆண்டில் விவசாயச் சீர்திருத்த சட்டம் ஒன்றை அரசாங்கம் கொண்டு வந்தது. அதன் மூலம் நிலம் பறிக்கப்பட்டது. நிலமானிய முறை ஒழிக்கப்பட்டது. நிலமற்றோர்க்கு விவசாயக் கருவிகள் அளிக்கப்பட்டன. 1952-ம் ஆண்டு இறுதியில் 300மில்லியன் குடியானவர்களுக்கு ஏறக்குறைய 700 மில்லியன் மௌநிலங்கள் பகிர்ந்தளிக்கப் பட்டன. ஒரு மௌ என்பது 116 ஏக்கர் நிலமாகும்.

**2) விவசாயச் சீர்திருத்தமும், கூட்டமைப்பும் (அ) அரசாங்கப் பொதுவுடைமை**

உணவில் தன்னிறைவு கொள்ள வேண்டும் என்ற முக்கியக் குறிக்கோளை அரசாங்கம் மேற்கொண்டது. சோவியத் நாட்டில் இருப்பது போன்று கூட்டுறவு முறையில் விவசாயம் செய்ய ஆவல் கொண்டது. நிலத்திட்டம் மூன்று கட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. அவைகளாவன, ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்வது, உற்பத்தியாளர் கூட்டுறவு: அரசாங்கப் பொதுவுடைமை முதல் கட்டத்தில் விவாசாயிகள் உற்பத்தியில் கட்டுப்பாட்டினைப் பெற்றிருந்தனர். அதைப் போலவே நுகர்வு, விற்பனை ஆகியவற்றிலும் ஆதிக்கம் பெற்றிருந்தனர். உழைப்பை தற்காலிகமாகப் பெற்றனர். அடுத்த கட்டத்தில் விவசாயக் கருவிகளும், உழைப்பும் உற்பத்தியின் பெருக்கத்திற்கும், திட்டத்திற்கும் பயன்படுத்தப்பட்டன. குடியானவர்கள் வேண்டும் போது விலகிக் கொள்ள உரிமை இருந்தது. இறுதிக் கட்டத்தில் குடியானவர்கள் நல உரிமையினை இழந்தனர்.விரும்பும் போது விலக நடைமுறை உரிமை பெற்றிருந்தனர். தீவிரச் சீர்திருத்த நடவடிக்கைகள் எடுக்கவும் முயன்றனர்.

**3.பொருளாதார வளர்ச்சி**

பொதுவுடைமை அரசாங்கம் பண வீக்கத்தைப் போக்கி நிதி நிலைமையினைச் சீராக்க முயற்சிகள் எடுத்துக் கொண்டது. நிதிநிலைமையஜனைச் சீராக்க பொதுவுடைமையினர் 1949-ம் ஆண்டு மே திங்களில் மக்களின் காகிதப் பணத்தை வெளியிட்டனர். புழக்கத்திலிருந்து அயல் நாட்டு நாணயமுறை தடை செய்யப்பட்டது. விலைகள் ஊதியம் ஆகியவை சமுரமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்க ஊதிய முறை புகுத்தப்பட்டது. பண்டங்கள் பறிமாறிக் கொள்ள போக்குவரத்து முறைகள் நிலைநாட்டப்பட்டன. விவசாய, தொழில்துறை, வணிக சார்பானவைகளைச் சார்ந்த விற்பனைவரி, வருமானவரிக்கான புதிய வழி முறை புகுத்தப்பட்டது. இந்த நடவடிக்கைகளால் 1957-ல் பணவீக்கம் கட்டுப்படுத்தப்பட்டது. அரசாங்க வரவு செலவுத் திட்டமும் சமமாக்கப்பட்டது.

**4)கம்யூன் அல்லது நகராட்சிப் பிரிவு**

1958-ம் ஆண்டில் அரசாங்கம் அப்போதிருந்த சமூக பொருளாதார அமைப்பினை கம்யூன்கள் என்ற ஆட்சிப் பிரிவுகளை ஏற்படுத்தி மாற்ற முயன்றது. கம்யூன்கள் சீனப் பொதுவுடைமைச் சமுதாயத்தின் அடிப்படைப் பிரிவுகளாகும். ஒரு ஆண்டுக்குள்ளாக 24000 கம்யூன்கள் ஏற்படுத்தப்பட்டன. அதில் 500 மில்லியன் மக்கள் இருந்தனர். ஏராளமான சிறு சிறு கூட்டுறவுப் பண்ணைகளை ஒருங்கிணைத்தன் மூலம் இந்த கம்யூன்கள் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டன. அவை ஓராயிரத்தலிருந்து பத்தாயிரம் வரையிலான குடும்பங்களுக்கு வேண்டிய எல்லாவற்றையும் கவனித்து வந்தன. அவைகள் நிர்வாகத்தின் அடிப்படை அமைப்புகளாகவும் செயல்பட்டன. அவைகளை அறிமுகப்படுத்தியதால் உடனடியாக விவசாய உற்பத்தி அதிகரிக்கவில்லை. ஒரே இரவில் திடீர் மாற்றம் ஏதும் நிகழவில்லை. சிலர் அதை எதிர்க்கவும் செய்தனர். இதற்கு காரணம் தனித்தன்மை ஒடுக்கப்பட்டதும் கம்யூன்களில் வாழ்க்கை கடும் கட்டுப்பாடாக இருந்ததுமேயாகும்.

**5)தொழில் மயமாதலும் அரசம்**

சீனாவில் ஏற்பட்ட புதிய அரசாங்கம் தொழில் மயமாக்குதலுக்கு முக்கியத்துவம் கொடுத்தது. ஆரம்பத்தில் மென்மையான கொள்கையைப் பின்பற்றியது. அதாவது தனிப்பட்டோர் முதலீடு இடம் பெற்றது. ஆட்சி வலிமை பெற்றவுடன் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட’டன. நாளடைவில் அரசின் திட்டத்திற்கும் ஆதிக்கத்திற்கும் அந்த தனிப்பட்டோர் முயற்சி வழிவிட்டது. 1953-ம் ஆண்டு முதல் ஐந்தாண்டு திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. அது தன் குறிக்கோளை அடைந்ததால் உற்சாகம் கொண்ட திட்ட அமைப்பாளர்கள் மேலும் பல திட்டங்களைத் தீட்டீனர். பல துறைகளில் பல குறைகள் காணப்பட்டாலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் தொழில் துறையில் ஏற்பட்டது என்பதை எவரும் மறுப்பதற்கில்லை.

6)பெரும் முன்னோக்கித் தகவல் இயக்கம் (1958)

ஆரசாங்கம் பொருளாதாரத்தை மேல்நாடு அடையச் செய்ய ‘‘பெரும் முன்னோக்கித் தவகல் இயக்கம்’’ கொர்டுவரப்பட்டது. இரும்பு மின்சாம் நிலக்கரி ஆகியவைகளின் உற்பத்தியை அதிகரிக்க அந்த இயக்கம் எண்ணம் கொண்டது. அளவுக் குறிக்கோள் நிர்ணயிக்கப்பட்டது. தொழில் உற்பத்தியில் ஒவ்வொருவரும் பங்குபெற வற்புறுத்தப்பட்டனர். அதன் விளைவாக 1958-ம் ஆண்டில் 600000 உலைகள் ஏற்படுத்தப்பட்டன. அந்த ஆண்டு இறுதிக்குள் இயந்திரக்கருவிகள் மூன்று மடங்காகவும் நிலக்கரியும் எ.்.கும் இரண்டு மடங்காகவும் எண்ணெய் 50 சதவிகிதமும் மின்சாரம் 40 சதவிகிததும் அதிகரித்தது.

**7)பண்பாட்டுப் புரட்சி**

**ப**தினைந்து ஆண்டுகளுக்குப்பின் பொதுவுடைமையினரின் ஆட்சி நன்கு ஏற்பட்டும் கூட மக்கள் ஓரளவு சுதந்திரத்தை குறுகிய காலம் வரை பெற்றிருந்தது வியப்பேயாகும். 1957-ம் ஆண்டு மாவோ ‘‘நூறு மலர்கள் மலரட்டும்: நூறு புதுக்கருத்துகள் அல்லது சிந்தனைகள் உதயமாகட்டும்’’ என்ற கோஷத்தை முழக்கினார். மாவோ ‘‘சிந்தனைப் பண்பாடு,

பழக்கவழக்கம் ஆகியவை போராட்டத்தின் மூலம் பிறக்க வேண்டும்: போராட்டம் தொடர்ந்து நடைபெற்று பழைய கால எல்லையினை அடையும் வரை தொடர வேண்டும்'' என்று கூறினார். இந்த அறிவிப்பால் அதை சிலர் குறை கூற முற்பட்டனர். 1958-ம் ஆண்டில் ஒரு பெரும் புரட்சிகரமான கிளர்ச்சியானது ஏற்பட்டது. அது பழைய கருத்துக்கள், பழைய பண்பாடு, பழக்க வழக்கங்களை எதிர்து ஏற்பட்ட தாகும். இதுவே பண்பாட்டுப் புரட்சியாகும். ஆப்புரட்சியினை மாவோ நன்கு பயன்படுத்திக் கொண்டு திருத்தம் அல்லது மாற்றம் வேண்டுவோர், சந்தர்ப்பவாதிகள், இகழ்பவர்கள் ஆகியோரை அதிகாரத்திலிருந்து இறக்கினார். பொதுவுடைமைக் கட்சியின் மத்தியக்குழு ஒரு கோட்பாட்டை வெளியிட்டது. அதன்படி மக்களை நம்பு: அவர்களைக் சார்ந்திரு: அவர்களது முயற்சிக்கு மதிப்பளி: பயத்தை போக்கு: அமைதியின்மையைக் கண்டு அஞ்சாதே என்பது வெளியிடப்பட்டது. பண்பாட்டுப் புரட்சியில் புரவலரும், பாதுகாவலரும் மாவோவே எனலாம். மாணவர் பிரிவின் செங்காவலர்கள் பழைய உலகை தலைகீழாக மாற்று என்று கோஷமிட்டனர். மாவோவின நீண்டநாள் நண்பர்களில் பலரின் பதவி பறிப்போயின. துணைத் தலைவரான லியு சவோ-சி பதவியிறக்கம் செய்யப்பட்டார். பெங்சென் அரசியல் திரைவானிலிருந்து மறைந்தொழிந்தார்: பண்பாட்டுப் புரட்சி முழுமையான செங்காவலர் கிளர்ச்சியாக மாறியது. மீண்டும் மாவோவின் அதிகாரத்தை நிலைநாட்டியது. பெரும் புரட்சி அலைகள் பூர்ஷீவாப் பாணியின் கலை, இலக்கியத்தை அடித்துச் சென்று சமதர்ம தொழிலாளர் நல கலை இலக்கியத்தை கொண்டு வந்தது என்று கூறப்படுகிறது. மாவோவின் ''முன்னோக்கித்தாவல்'' இயக்கத்தினை கிண்டல் செய்த பழைய பாணி அறிஞர்கள் கசையடிக்கு ஆளாகி அனைவரும் பார்க்கும் வண்ணம் பொது இடங்களில் வைக்கப்பட்டனர்.

**8)சமுக உளஇயல் நிலைகளை கட்டுப்படுத்துதல்**

குறிப்பிட்ட நோக்கங்களை அடையவேண்டுமானால் மாவோவின் கருத்துப்படி மக்கள் இயக்கம் செயல்படவேண்டும். அவ்வியக்கத்தின் மூலம் கட்சியும், அரசாங்கமும் தங்கள் தேசியக்கொள்கையினை செயல்படுத்த முடிகின்றது. செய்திப் போக்குவரத்தில் முற்றுரிமை, பாதுகாப்பு ஆகியவற்றைப் பெற சமுதாயத்துடன் இணைத்து செயல்பட்டாலும் காற்றுப்புகா வண்ணம் இருக்கச் செய்கின்றன.

கும்யூனிசத்தின் கீழ் இயங்கிய புதிய சமுதாயம் புதியபாணியில் அமைந்த வாழ்க்கையை உருவாக்க முனைந்தது. அத்துடன் சமுதாயத்தில் மனிதன் சமதர்ம நோக்கில் வாழ வேண்டும் என எண்ணம் கொண்டது.

சீன வரலாறு கண்டிராத அளவுக்கு மக்கள் அமைப்புகள் மூலமும், இரகசிய காவல்துறையின் மூலமும், செய்திதொடர்பு, மனமாற்ற முயற்சிகள் ஆகியவற்றின் மூலமும் அரசாங்கம் மக்களை கட்டுப்படுத்தி, சமுதாயத்தை மாற்றுவதில் வெற்றி கண்டது. ஒரு காலத்தில் தனித்தன்மை கொண்டிருந்த சீன சமுதாயம் உலகிலேயே கடுமையான நெறியினைப் பின்பற்றும் சமுதாயமாக மாறியது என்றால் அது மிகையாகாது.

## மா-சே-துங்

பொதுவுடைமை இயக்கத்தின் தோற்றம் மா-சே-துங்கின் தனிப்பட்ட வாழ்க்கையோடு பிணைந்து காணப்பட்டதாகும். மா-சே-துங்கின் உருவமும் அதாவது தோற்றமும், அவரது ஆளுமையும் 1920 முதல் 1976 வரை சீனாவை ஆட்டிப் படைத்தது எனலாம். சீன முன்னேற்றத்திற்கு காரணம் மாவோவின் தனித்தன்மை கொண்ட, மிகச் சீரிய பங்கு என்றால் அதில் எட்டுனையும் ஐயமில்லை.

**இளமைப் பருவம்**

மாவோ ஹீனான் மாநிலத்தில் 1893ம் ஆண்டில் பிறந்தார். பிறவிலேயே அவரிடம் கிளர்ந்தெழும் மனப்பாங்கு காணப்பட்டது. அவர் தன் தந்தையை எதிர்த்தார். தன் ஆசிரியர்களை எதிர்த்தார். தானே படித்து அறிவு பெறலானார். சூங்காவில் தன் படிப்பை முடித்துக்கொண்டு அவர் பீகிங்கை வந்தடைந்தார். அங்குள்ள பீகிங் பல்கலைக்கழகத்தின் நூல் நிலையத்தில் எளிய எழுத்தாளராகப் பணிப்புரிந்து வந்தார்.

**அவரது இளமைக்கால அரசியல் வாழ்வு**

அவர் முதலாவதாக டாக்டர் சன்யாட் சென்னின் புரட்சி அமைப்பால் கவரப்பட்டு ஈர்க்கப்பட்டார். பின்னர் ரஷ்யாவின் போல்ஷ்விக் புரட்சி பற்றி கேள்விப்பட்டார். பின் மார்க்சீயக் கோட்பாட்டின் செல்வாக்கால் உந்தப்பட்டார். சீனப்பொதுவுடைமையினைத் தோற்றுவித்தவர்களில் அவரும் ஒருவராவார். 1921-ம் ஆண்டில் அவர் சீனப்பொதுவுடைமைக் கட்சியினை தன் உற்ற நண்பர்களுடன் துவக்கினார். ஆரம்பத்தில் அது கோமின்டாங்குடன் தொடர்பு கொண்டிருந்தது. பின் அவர் கட்சியோடு இரண்டறக் கலந்து காணப்பட்டார். அதிலிருந்து அவர் பெருகைமிகு நிலைக்கு உயர்த்தப்பட்டார்.

**முதல் கிளர்ச்சி**

பொதுவுடைமைவாதிகளுக்கு 1927-ம் ஆண்டு ஒரு இக்கட்டான ஆண்டாகும். அதே சமயத்தில் அது மாவோவின் அரசியல் வாழ்வில் ஒரு திருப்பு மையமாகும். வூான் என்ற இடத்தில் பொதுவுடைமைவாதிகளுக்கு எதிராக ‘‘வெண்மைப் பயங்கரம்’’ கட்டவிழ்ந்து விடப்பட்டது. ஆயிரக்கணக்கான பொதுவுடைமையுனர் கருணையின்றி கொன்று குவிக்கப்பட்டனர். மாவோவின் கருத்துப்படி பொதுவுடைமையினர்,‘‘பயப்படவில்லை வெற்றிக்கொள்ளவில்லை, தொல்லைபடுத்தப்படவில்லை என்பது போன்று இரத்தக்கறைகளைத் துடைத்துக்கொண்டு மீண்டும் எழுந்து நின்றார்கள். மாண்டவர்களைப் புதைத்தார்கள்: சண்டையினைத் தொடர்ந்து நடத்தினார்கள்.

1927ம் ஆண்டில் சீனப் பொதுவுடைமைக் கட்சி விவசாயிகளைக் கிளர்ந்து எழும்படி ஒரு சிறப்பு மாநாட்டைக் கூட்டியது. கிராமப்புற விவசாயிகளின் பால் மிக்க ஆர்வம் கொண்ட மாவோ ஹீனான் கியாங்கி பகுதிகளில் சீன சோவியத்துக்களை ஏற்படுத்தினார். அதே ஆண்டு இலையுதிர்க் காலத்தில் அவர் ‘‘அறுவடைக் கிளர்ச்சி’’யினை ஆரம்பித்தார். அது தோல்வியில் முடிந்தது. ஆனால் கட்சிவ ட்டாரத்தில் அது அவருக்கு நற்பெயரை ஏற்படுத்தியது.

பின்னர் சூ தேயின் உதவியால் புகழ்மிக்க ‘‘செஞ்சேனை’’யை அமைத்தார். அது சீனாவில்பொதுவுடைமையினை ஏற்படுத்த பெரும் பங்காற்றியது. 1930-ம் ஆண்டில் அப்பகுதியில் மட்டும் ஏறக்குறைய 15 இடங்களில் செஞ்சேனையின் தளங்கள் நிறுவப்பட்டன. அக்காலத்தில் அவரது மற்றொரு சாதனையாக விளங்கியது. ‘‘கியாங்சியிலுள்ள சூய்சின்னில் கிராமப்புறத் தொழிலாளர்களின் மைய அரசாங்கத்தை’’ நிறுவியதாகும். 1931-ம் ஆண்டு முடிவில் சீனப்பொதுவுடைமைக் கட்சி மாவோவின் தலைமையில் சீன சோவியத் குடியரசை ஏற்படுத்தியது.

**நீண்ட நடைப்பயணம் (1931)**

1930-க்கும் 1932க்கும் இடையில் கோமின்டாங்கட்சி நான்கு படையெடுப்புகளை ஹீனாய், கியாங்சி தளங்களுக்கு எதிராக நடத்தியது. ஜெர்மனியின் பயிற்சி பெற்ற அவர்களது படைகள் செஞ்சேனையால் தோற்கடிக்கப்பட்டன. செஞ்சேனை கொரில்லாப் போர் முறையில் திறமை பெற்று விளங்கியது. அவரது தந்திர முறைகள் பின்வரும் நான்கு கோஷங்களில் காணப்படுகின்றன.

1) பகைவர்கள் முன்னோக்கி வரும்போது நாம் பின்வாங்குவோம்.
2) பகைவர்கள் நின்று தாக்கும்போது அவர்களைத் தொல்லைப்படுத்துவோம்.
3) பகைவர்கள் சண்டையைத் தவிர்க்கும் போது அவர்களை தொடர்வோம்.
4) பகைவர்கள் புறமுதுகு காட்டும்போது அவர்களைத் தொடர்வோம்.

1938-ம் ஆண்டில் ஐந்தாவது படையெடுப்பு நடைபெற்றது. அது அவர்களது பொருளாதாரத்தை நசுக்கவே அனுப்பப்பட்டது. அரை மில்லியனுக்கு மேலாக படைவீரர்கள் கலந்து கொண்டனர். 400 போர் விமானங்கள் சலந்து கொண்டன. செஞ்சேனையினர் ஒரு கூண்டுக்குள் அடைப்பட்டது போல ஒரு இரும்பு வளையம் போன்ற பொருளாதார தடைக்குள் சிக்குண்டு தவித்தனர். அதை உடைத்தெறியும் திறன் பெற்றிருந்தார் மாவோ. ஆத்தடையை மீறி புகழ் பெற்ற நீணட நடைப்பயணத்தை அவர் தொடங்கினார். அதில் 85,000 வீரர்களும், 15,000 அரசாங்கக் கட்சி அலுவலர்களும் கலந்து கொண்டனர். அவர்கள் கியாங்சி தளத்திலிருந்து மேற்கு நோக்கி பின் வடக்குப்பக்கம் திரும்பி இறுதியாக ஷென்சியின் பெரும் சுவர் உள்ள தென்பகுதியில் வந்து சேர்ந்தனர்.

**மாவோவின் எட்டு அம்சக் கொள்கை**

செஞ்சேனையினர் தங்கள் நீண்ட நடைப்பயணத்தில் எட்டு அம்சக் ொகள்கையைப் பின்பற்றினர். ஆவைகளாவன,

1) பயன்படுத்தப்பட்ட பொருளுக்கு மாற்றுப் பொருளை வைத்தல்
2) பாயைச் சுருட்டி குடியானவர்களிடம் ஒப்படைத்தல்
3) மனிதாபிமானத்துடன் முடிந்த உதவியைச் செய்தல்
4) கடன் வாங்கிய பொருள்களைத் திருப்பித் தருதல்
5) நாசமான பொருள்களை மீண்டும் கொணர்தல்
6) குடியானவர்களிடம் எல்லாவற்றிலும் உண்மையாக நடந்து கொள்ளல்

7) தாங்கள் வாங்கிய எல்லாப் பொருள்களுக்கும் பணம் செலுத்துதல்
8) துப்புரவாக இருத்தல், மக்கள் வசிக்கும் இல்லங்களுக்கு வெகு தொலைவில் கழிப்பிடங்களை அமைத்தல்.

**ஜப்பானியர்களுக்கு எதிராக தேசிய ஐக்கிய முன்னணி**

ஜப்பானியரை எதிர்ப்பதில் செஞ்சேனையினர் மிக்க தீவிரம் காட்டினர். அவர்களது கோஷங்களாவன:

''வடபுலம் சென்று ஜப்பானியருக்கு எதிராகப் போரிடுங்கள்''

''ஐக்கிய முன்னணியை அமையுங்கள்''

''ஜப்பானை தடுத்து நிறுத்துங்கள்''

''சீனர்கள் சீனர்களுக்கு எதிராக சண்டையிக் கூடாது''. ஆகவே சியான் நிகழ்ச்சியில் அவர்கள் ஒற்றுமை மனப்பான்மையினைக் காட்டி கோமின்டாங் கட்சியுடன் இணைந்து அவர்கள் ஏவல்படி நடக்கலானார்கள். ஆதன் விளைவுதான் ஜப்பானுக்கு எதிரான தேசிய ஐக்கிய முன்னணியாகும்.

**உள்நாட்டுப் போர் (1945-49)**

ஜப்பான் சரணடைந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து மீண்டும் பொதுவுடைமையினருக்கும் கோமின்டாங்கினருக்கும் பொறாமை போட்டி ஏற்பட்டது. மீண்டும் சீனாவில் உள்நாட்டுப் போர் குடி கொண்டது. அதில் மாவோ பிரமிக்கதக்க வெற்றியினைப் பெற்றார். கோமின்டாங்கினார் தோல்வி கண்டனர். அவர்கள் சீனாவை விட்டு வரட்டப்பட்டனர். இறுதியில் அவர்கள் தைவானில் தஞ்சம் புகுந்தனர். 1949-ம் ஆண்டு அக்டோபர் திங்களில் சீனமக்கள் குடியரசு ஏற்படுத்தப்பட்டது.

**மாவோ சீன மக்கள் குடியரசின் தலைவராதல்**

**அவரது கொள்கைகள்**

1) புதிய மக்களாட்சி: மாவோவின் புதிய மக்களாட்சிக் கோட்பாட்டின்படி சீனாவின் புதிய அரசியலமைப்பு நிறுவப்பட்டது. அரசாங்கமும் அதன்படி நடத்தப்பட்டது. பேராதிக்கத்திற்கு எதிரான நிலமானியக் கொள்கைக்கு மாறான மக்களின் தொழிலாளர்களின் கூட்டால் வல்லாட்சி நிறுவ சிபாரிசு செய்யப்பட்டது.
2) நுறு மலர்கள் மலரட்டும்: இத்தகைய கோஷத்தினால் மாவோ மக்களுக்கு குறுகிய காலத்துக்குப் பேச்சு சுதந்திரம் அளித்தார்.
3) நிவர்த்திக்கும் இயக்கம்: இதன் மூலம் அடங்கி வாழ்வதையும் பழமைக்கு மாறான செயல்களையும் நிவர்த்திக்க முற்பட்டார். கட்சியில் நல்லதோர் பற்றினையும் இலக்கியத்தில் தொடர்பினையும் பெற விழைந்தார்.
4) புதிய புரட்சிக் கொள்கைகள்: இரண்டுக் கட்ட புரட்சிக்கருத்தும் குடியானவர் இயக்கமும் அவரால் வலியுறுத்தப்பட்டன. சமூக செயல்கள் போராட்டம், போட்டி, மோதல் மூலமே செயல்படுத்தப்படும் என்றார்.

சமதர்மமம் உள்ள காலம் வரையில் போராட்டத் தொடர்ந்து நடைபெறும் என்றார் மாவோ. ‘‘துப்பாக்கிகளின் மூலமே அரசியல் அதிகாரம் வளரும்’’ என்றார் அவர். அதன்மூலம் அவர் ஆயுதப்படைக்கும் வன்முறைக்கும் முக்கியத்துவம் அளித்தார்.

**பண்பாட்டு புரட்சி**

சீனாவில் தோன்றிய பாட்டாளி மக்களின் மாபெரும் பண்பாட்டுப் புரட்சி பெரிதொரு சமூக, அரசியல், கலாச்சார மாறுதலாகக் கருதப்படுகிறது. 1963-ல் எழுத்தாளர்கள், கலைஞர்கள் ஆகியோரைக் குறை கூறியதன் மூலம் ஏற்பட்ட சிறு பொறி விரைவில் பெரும் தீயாக மாறி எஞ்சியிருந்த முதலாளித்துவ சமூகப் பண்பாடுகளை எரித்து சாம்பலாக்கி சீனாவை மாவோ சிந்தனை மலர்ப்பூங்காவாக மாற்றியது. 1949-ல் ஏற்பட்ட அரசியல் புரட்சியைத் தொடர்ந்து 1963ல் சமூகப் புரட்சி ஏற்பட்டு அரசியல் மாற்றங்கள் சமுதாய மாற்றங்களுக்கு வழி வகுத்தது. அதாவது அரசியலில் ஏற்படுத்தப்பட்ட சோஷலிஸம் சமுதாயத்தின் அடித்தளத்திலும் ஊடுருவி அங்குள்ள பூர்ஷுவா பழக்க வழக்கங்களையும் சிந்தனைகளையும் அடியோடு ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டிருப்பதாகப் பறை சாற்றப்பட்டது. அதே சமயத்தில் மாவோவின் அரசியலில் எதிரிகளை ஒழித்துக் கட்டுவதையும் மாவோவின் கோட்பாடுகளை நிலை நாட்டுவதையும் உண்மை நோக்கங்களாக கொண்டிருந்தது.

**பண்பாட்டுப் புரட்சி தோன்றிய சூழ்நிலைகள்**

1.பெரும் முன்னோக்கிக் காவல் மற்றும் கம்யூன் இயக்கங்களின் தோல்வி: பெரிய விளம்பரங்களுடன் தொடங்கப்பட்ட பெரும் முன்னோக்கித் தாவல் (புசநயவ டுநயி குழசறயசன) இயக்கம் தோல்வியில் முடிந்தது. அதன் குறி இலக்குகள் எட்டாக் கனியாகவே இருந்தன. உறுதியான நம்பிக்கையுடனும் உயரிய இலட்சியத்துடனும் தொடங்கப்பட்ட கம்யூன்களும் உருப்படியான பலன்களைத் தரவில்லை. துரிதமாக சோஷலிச இலட்சியத்தை அடைந்து விடலாம் என்ற துடிப்புடன் போடப்பட்ட குறுக்கு வழிகள் குழப்பத்தில் முடிவுற்று, ஏமாற்றங்களும் அவ நம்பிக்கைகளுமே மிஞ்சின. ஆதனால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளையும், அரசியல் அதிருப்திகளையும் மறைப்பதற்கும் மறக்கடிப்பதற்கும் புதியதொரு ‘‘கோஷம்’’ தேவைப்பட்டது.

2.மாவோவின் கொள்கைகளிலும், தலைமையிலும் ஏற்பட்ட ஏமாற்றம்: இந்த குழப்ப சூழ்நிலைகளைக் கண்ட சில உயர்மட்டத் தலைவர்கள் மாவோவின் கோட்பாடுகளைக் குறை கூறத் தலைப்பட்டனர். ‘கொரில்லாப் போர் மனப்பான்மையுடன் நாட்டை நடத்திச் செல்கிறார்: நடைமுறைக்கொவ்வாத காலத்திற்கேற்காத கோட்பாடுகளைச் செயல்படுத்துகிறார்’’ எனக் கண்டனர். நாட்டை சோஷலிசப்பூங்காவாக மாற்ற அவர் கடைப்பிடித்த விரைவான குறுக்கு வழி நடவடிக்கைகள் ‘‘டான்குயிக் ஷாட்’’ செயல்களைப் போல் நகைப்பூட்டுவதாக

இருப்பதாகக் கருதினர். ஆட்சிப் பொறுப்பில் இருந்த ஒரு சிலர் மறைமுக மாவோ எதிர்ப்புக் கொள்கைகளைக் கொண்டிருந்தனர்.

3.ரஷ்ய ‘‘ஸ்டாலின் ஒழிப்புக் கொள்கையின்’’ எதிரொலி: 1965ல் அகில உலக கம்யூனிஸ் தலைமைக் கேந்திரமான மாஸ்கோவில் குருஷேவ் ஸ்டாலின் ஒழிப்புக் கொள்கையைப் பிரகடனப்படுத்தினார். தனிநபர் வழிபாடு மற்றும் தவறான கோட்பாடுகள் கண்டிக்கப்பட்டன. கூட்டுத் தலைமை வலியுறுத்தப்பட்டது. இது சீனாவிலும் எதிரொலிக்கத் தொடங்கியது. ரஷ்ய நடவடிக்கைகளுக்கேற்ப சீன கம்யூனிஸ்ட் கட்சி சீரமைக்கப்பட்டது. மாவோ வழிபாடு கைவிடப்பட்டது. இப்புதிய மாற்றங்கள் மாவோ ஆதரவாளர் முகாமில் சலசலப்புக்களை உண்டு பண்ணின.

4. சீன, ரஷ்யப் பிளவு: இதற்கிடையில் சீன ரஷ்யத்தலைவர்களிடை ஏற்பட்ட கோட்பாட்டுப்பிளவு சீனாவைப் பெரிதும் பாதித்தது. கம்யூனிஸ உலகில் மாஸ்கோவின் தலைமை அதிகாரத்தை குறிப்பாக குருஷேவின் போக்கினை மாவோ கண்டனம் செய்யத் தொடங்கினார். ரஷ்யத்தலைவர்களை ‘‘நவீனதிரிபு வாதிகள்’’ எனக் குறை கூறினார். மார்க்ஸிய கம்யூனிஸத்திற்கு சரியான விளக்கம் கூறத் தகுதியற்றவர்கள் எனச் சாடினார். இக்கோட்பாட்டுக் குளறுபடியைத் தாடர்ந்து ரஷ்யா தான் சீனாவிற்கு அளித்து வந்த பொருளியல், தொழில் நுட்ப உதவிகளை திரும்ப பெற்றுக் கொண்டதும், எல்லைத்தகராறும் மோதல்கள் நிகழ்ந்ததும் இருநாடுகளுக்கிடையில் நிலவிய சுமுக உறவைக் கொடுத்தது. இச்சமயத்தில் சீன கம்யூனிஸ்ட் கட்சியில் ஒரு பிரிவினர் மாவோவின் முறையற்ற போக்குத்தான் பகைமை உணர்விற்கு அடிப்படைக் காரணமென்று கருதினர். ரஷ்ய உதவி சீன அரசியல் ஒருமைப்பாட்டிற்கும், வளர்ச்சிக்கும் இன்றிமையாதது எனவும் கருதினர்.

5. ‘‘முதலாளித்துவ சாலையில் செல்பவர்களின் தோற்றம்’’ கூட்டுத் தலைமை என்ற கோட்பாட்டின்படி சீரமைக்கப்பட்ட சீன-கம்யூனிஸ்ட் கட்சிப்பொறுப்பில் புதியவர்கள் அமர்ந்திருந்தனர். குடியரசுத் தலைவரான லியூஷாவோ-சி கட்சியின் செயலாளரான டெங்ஷியோ-பிங் ஆகியோர் மாவோவின் கோட்பாடு சீனாவின் நலனுக்கு உகந்தது அன்று என்று உறுதியாகக் கருதினர். தீவிர கம்யூனிஸப் பாதையினின்று சற்று நெகிழ்ந்து கொடுக்கும் தாராளக் கோட்பாடு வழியில் செல்ல முயன்றனர். இவர்களைத்தான் பின்னர் மாவோவின் ஆதரவாளர்கள் ‘‘முதலாளித்துவ சாலையில் செல்பவர்கள்’’ என வர்ணித்தனர்.

6.கலை இலக்கிய வட்டத்தில் வலதுசாரி கருத்துக்களின் மறுமலர்ச்சி: கலைஞர்கள் மீண்டும் பழைய சமூக அரசியல் கருப்பொருட்களின் அடிப்படையில் புதிய படைப்புகளைப் படைக்கத் தலைப்பட்டனர். பண்டைய வரலாற்றுச் சிறப்புக்கள் போற்றப்பட்டன. பண்டைய வரலாற்றுச் சிறப்புக்கள் போற்றப்பட்டன. பண்டைய உயர்பண்புகளான மனிதவியல் உணர்ச்சிகள் நற்பயிபுரியும் அரசு ஆகியவை சிறப்பிக்கப்பட்டன. கன்பூசியஸ் கருத்தரங்குள் நடைபெறலாயின. இவையனைத்தும் மாவோவின் ஆதரவாளர்களுக்கு பண்டையப் பண்பாட்டுச சிறப்புகளை மீண்டும் நிலைநாட்ட செய்யப்படும் திட்டமிட் முயற்சிகளாகத் தோன்றின. கம்யூனிஸ் புரட்சி மனோபாவங்களுக்கு எதிரான வலதுசாரி முதலாளித்துவப் பண்பாடுகளைப்

புதுப்பிக்கும் செயல்களாகத் தென்பட்டன. எனவே கம்யூனிஸ உணர்வுகளை சமுதாயத்திலும் புதிப்பிக்க புரட்சி தேவை எனவும் உணர்ந்தனர்.

**பண்பாட்டுப் புரட்சியின் தொடக்கம்**

“விடுதலைப்படை” (Liberation Army) என்ற நாளிதழ் புரட்சியின் முதல் வெடியை வெடித்தது. 1965 நவம்பர் இதழில் பீகிங் பல்கலைக் கழகப்பேராசிரியர்களின் முதலாளித்துவ சார்பான இலக்கியப் படைப்புகளைக் கண்டித்து கட்டுரை வெளியிடப்பட்டது. இக்கண்டனத்தைத் தொடர்ந்து “முதலாளித்துவ சாலைகளில் செல்பவர்களை”எதிர்த்து போர்க்குரல் எழுப்பப்பட்டது. 1966 ஜீனில் ஷாங்கை நகரத்துச் சுவர்களில் பீகிங் பல்கலைக்கழகத்து முதல்வரையும் அவரது கொள்கைகளையும் தாக்கி சுவரொட்டிகள் காணப்பட்டன. ஆகஸ்டில் கட்சியின் எட்டாவது குழுவின் பதினோராவது கூட்டத்தில் பண்பாட்டு ரீதியில் புரட்சி தேவை எனத் தீர்மானம் இயற்றப்பட்டது. இத்தீர்மானம் அப்புரட்சிக்கு பதினாறு அம்சத் திட்டமொன்றையும் வரைந்தது முதலாளித்துவ சாலையில் செல்வோரையும் கண்டித்தது. இவ்வாறு பண்பாட்டுப் புரட்சிக்கு பச்சைக்கொடி காட்டப்பட்டது.

**புரட்சியின் போக்கு**

1. “நான்கு பழமைகள்” ஒழிக்கப்படல்: முதலாளித்துவ சமூக அமைப்பில் உள்ள பழைய பழக்க வழக்கங்கள், செயல்முறைகள், கலாச்சாரங்கள், எண்ணங்கள் ஆகியவை ஒழிக்கப்பட வேண்டும்: புதிய புரட்பரட்சிக்கான சமுதாயத்திற்கே எண்ணங்களும் புகுத்தப்பட வேண்டும்.
2. குட்சியில் களையெடுப்பு: பண்பாட்டுப் புரட்சியின் முதல் பணியாக அப்புரட்சிக் கோட்பாடுகளை எதிர்த்த கட்சிப் பிரமுகர்கள், தலைவர்கள், இலக்கிய கர்த்தாக்கள் கண்டனம் செய்யப்பட்டு கட்சியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டனர். குறிப்பாக மாவோவின் அரசியல் எதிரிகள் களையெடுக்கப்பட்டனர். அவர்களுள் முக்கியமானவர்கள் சீனக்குடியாட்சித் தலைவர் லியூஷாவோசி, கட்சிச் செயலாளர் டெங்ஷியோ-பிங், பீகிங் நகர மேயர் பெண்செென் ஆகியோராவர்.
3. புண்பாட்டு புரட்சிக் குழுக்கள் நிறுவப்படல்: 1966 நவம்பரில’ பதினேழு உறுப்பினர்களடங்கிய மத்திய பண்பாட்டு புரட்சிக்குழு நிறுவப்பட்டது. அதற்குத் தலைவராக மாவோவின் தனிச் செயலாளரான சென் போட்டாவும் முதல் உதவித்தலைவராக மாவோவின் மனைவி சியாங் சிங்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இக்குழுவின் பியாவோ தலைமையில் உள்ள ராணுவக்குழுவுடன் இணைந்து செயல்பட்டது. இவர்களனைவரும் மாவோவின் தலைமையின் கீழ் அவரது வழிகாட்டலின்படி இயங்கினர்.
4. சுவரொட்டிகள்: பண்பாட்டுப் புரட்சிக் காலத்தில் மக்களின் எண்ணங்களுக்கு ஒரு படிவம் கொடுத்து பொது மக்கள் கருத்தினைப் பிரதிபலிக்கும் வண்ணம் பெரிய சுவரொட்டிகள் முக்கிய நகரங்களில் ஒட்டப்பட்டன.அவற்றில் புரட்சிவாசகங்கள் காணப்பட்டன. முதலாளித்துவ சாலையில் செல்பவர்கள் அடையாளம்

காட்டப்பட்டனர். முதல் சுவரொட்டி பீகிங் பல்கலைக் கழக முதல்வரை குறை கூறும் வண்ணம் அமைந்திருந்தது. மாவோஇதன் வாசகங்களைப் புகழ்ந்ததோடு அவற்றைச் செய்திதாட்களில் பிரசுரிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். பின்னமாகவோ ''தலைமையகத்தைத் தாக்குங்கள்'' எனத் தலைப்பிட்ட சுவரொட்டியைத் தயாரித்தார். இத்தகைய சுவரொட்டிகள் மக்களிமை தீவிர உணர்ச்சிகளைக் கிளறியதோடு எளிய செய்திப் பரப்புக் கருவியாகவும் விளங்கின.

5. சேங்காவலர்கள்: பண்பாட்டுப் புரட்சி இயக்கத்தின் ஈட்டி முனைகளாக விளங்கியவர்கள் செங்காவலர்கள் ஆவர். பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பயிலும் மாணவர்களில் புரட்சி ஆர்வம் கொண்டவர்கள் செங்காவலர் அணியில் நேர்ந்தனர். ''நான்கு பழமைகளை'' ஒழிப்பதில் தீவிரமாக ஈடுபட்டனர். சிறிய செந்நிறப் புத்தகமான ''மாவோ சிந்தனைகள்'' இவர்களது வேத நூலாக விளங்கியது. ரயில்களிலும் பேருந்துகளிலும் இவர்கள் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டனர். நாடெங்கும் சென்று சமுதாயத்தில் உள்ள பழைய முதலாளித்துவப் பண்புகளை அகற்றினர்: பழமைப் பற்றினைச் சாடினர்: பெரிய சுவரொட்டி வாசகங்களைத் தயாரித்தனர். தனியார் அலுவலகங்களைத் தாக்கினர்: நகரங்களும் தெருக்களுக்கும் கூட புதிய பெயர்களைச் சூட்டினர். அயல்நாட்டுப் பிரமுகர்கள் ஏளனம் செய்யப்பட்டனர். அயல்நாட்டுப் பழக்க வழக்கங்கள், உடைகள் கண்டிக்கப்பட்டன.

6. மக்கள் விடுதலைப் படை: பண்பாட்டுப் புரட்சியின் உயிர்நாடியாகச் செங்காவலர்கள் விளங்கினார்கள் என்றால் மக்கள் விடுதலைப்படை அதன் உறுதுணைக் காவலாய் நின்றது. லின்பியாவோ தலைமையில் உருவான அப்படைக்கு தனிசீருடையோ, முகாமோ கிடையாது. முக்களோடு மக்களாகக் கலந்து நின்ற இப்படை விவசாயப் பண்ணைகள் அமைத்தனர். ஆலைகளை நடத்தினர். புண்பாட்டுப் புரட்சிக் கருத்துக்களை பரப்புவதைக் கடமையாகக் கொண்ட அப்படை வீரர்கள் மாவோவின் தலைமையையும், கோட்பாட்டையும் ஏற்றுக் கொண்டனர்.

7. அதிகாரத்தைக் கைப்பற்றுதல்: எல்லா நிறுவனங்களிலுமுள்ள பிற்போக்காளர்களை விரட்டி அவர்களின் அதிகாரத்தைக் கைப்பற்றி அதில் மாவோவின் ஆதரவாளர்களை அமர்த்துதல் புரட்சியின் இறுதிக்கட்டமாக நடைபெற்றது. 1968 செப்டம்பருக்குள் மாவோ ஆதரவாளர்கள் 29 மாநிலங்கள், பிராந்தியங்கள், நகராட்சி மன்றங்கள் ஆகியவற்றைக் கைப்பற்றுவதில் வெற்றி பெற்றனர். அங்கெல்லாம் அவற்றை நிர்வகிக்க புரட்சிக் குழுக்கள் நிறுவப்பட்டன.

**புண்பாட்டுப் புரட்சியின் முடிவு**

1969 ஏப்ரலில் கட்சியின் ஒன்பதாவது மாநாடு கூட்டப்பட்டது. அது மாசே துங்கை கட்சியின் தலைவராகக் ஏகமனதாகத் தேர்ந்தெடுத்தது. லின் பியாவோ துணைத்தலைவராக

தேர்ந்தெடுக்கப்பட்டார். மாவோவின் சிந்தனைகள் கட்சியின் கோட்பாடுகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டன.

**புண்பாட்டுப் புரட்சியின் முக்கியத்துவம்**

1. கலாச்சாரப் புரட்சியாகத் தோன்றிய இந்நிகழ்ச்சிகளையெடுப்புப் புரட்சியாக மாறி, செங்காவலர்களின் பெயர் மாற்றப் போராட்டமாக நீண்டு இறுதியில் அரசியல் ஆதிக்கப் போராட்டமாக முடிவுற்றது. மாவோவின் தலைமை ஆதிக்கத்தை எதிர்த்த அனைவரம் ஒழித்துக் கட்டப்பட்டனர். மாவோவின் ஆதிக்கம் உறுதியாக நிரந்தரமாக நிலைநாட்டப்பட்டது.
2. இப்புரட்சி சீனக் கம்யூனிஸத்தின் தனித்தன்மையைப் பறைசாற்றியது: கம்யூனிஸக் கோட்பாடுகளுக்கு விளக்கமளிக்கும் ஏகபோக உரிமையை மாஸ்கோவிடமிருந்து பறித்தது. ரஷ்யப் பாணியிலான கம்யூனிஸ்த் தலைமையும் கொள்கையும் சீனாவில் நுழையாதவாறு செய்துவிட்டது.
3. பொதுமக்களின் அரசியல் ஆவத்தை அதிகரித்து இளைநர்களும் புரட்சி அனுபவம் பெற ஒரு வாய்ப்பளித்தது. புரட்சி சமுதாயத்தின் தகுதி வாய்ந்த வாரிசுகளாக மாறவும் சந்தர்ப்பமளித்தது.
4. ‘‘மாவோ’’ வெறும் தலைவராக மட்டுமின்றி நவீன சீனாவின் தெய்வமாகவும் உயர்த்தப்பட்டார். மாவோ வழிபாடு ஊக்குவிக்கப்பட்டது. மாவோவின் சிந்தனைகள் அடங்கிய ‘‘சிறிய செந்நிறநூல்’’ சீனர்களின் பைபிளாக மாறியது.

**சீனாவின் அயல்நாட்டுக் கொள்கை**

‘சீன மக்கள் குடியரசின் அயல்நாட்டுக் கொள்கையானது ஹான் பேராதிக்கத்தையும், சீன தேசியத்தையும் மா சே துங்கின் புரட்சி தந்திரத்தையும் சேர்ந்த ஒரு கலவையாகும் ‘பன்னாட்டு பொதுவுடைமையின்பால் பற்று இருந்த போதிலும் மாவோவும் அவரது ஆதரவாளர்களும் மனத்தளவில் தேசியப் பொதுவுடைமை எண்ணத்தினைக் கொண்டிருந்தனர். அதே சமயத்தில் கடந்த நூற்றாண்டுகளில் சீனாவிற்கு ஏற்பட்ட அவலங்களையும் மறந்தாரில்லை. அதன் முக்கிய அயல்நாட்டுக் கொள்கை அதன் விடுதலையைப் பாதுகாப்பது என்பதை முதலில் அறிவித்தது. நாட்டின் இறைமையினையும் சுதந்திரத்தையும் பேணுவது என்று அறிவித்தது. 1) முன்காலத்தில் நிலவிய சாயிான நிலையினை மீண்டும் கொண்டு வர வேண்டும். 2) பெரிய நாடுகளின் வரிசையில் எண்ணப்பட்டு வந்த சீனா அபினிப் போருக்குப் பின் மறுக்கப்பட்டது. அதை மீண்டும் சீனா அடைய வேண்டும். 3) அவர் நாட்டவரால் புறக்கணிக்கப்பட்ட தேசிய நம்பிக்கையினைப் புதுப்பிக்க வேண்டும்: சுயமரியாதையினைப் பேண வேண்டும் என்று பேரவா கொண்டனர்.

இமானுவேல் ஹசு என்பவரின் கருத்துப்படி சீன அயல்நாட்டுக் கொள்கை கீழ்கண்டவாறு 5 காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விளங்கலாயிற்று

1) தேசியமும் வல்லரசு நிலையினைப் பெறுதலும்

2) பன்னாட்டு பொதுவுடைமை இயக்கத்தின் அரசியல்
3) ஊள்நாட்டு அரசியலின் நிலையினைப் கவனித்தல்
4) மார்க்சியம்-லெனின் கோட்பாடு-மாவோகட கொள்கை
5) பண்டைய கருத்துக்கிளன் அடிப்படையில் அரசியல் தந்திரத்தினை உலகரீதியில் பின்பற்றுதல்

கடந்த முப்பது ஆண்டுகளில் சீனக் குடியரசின் அயல்நாட்டுக் கொள்கையானது பெரும் மாற்றத்தைப் பெற்றது. அதற்குக் காரணம் உள்ளேயும் வெளியிலேயும் பொருளாதார அரசியல் அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களேயாகும். ஆதன் அயல்நாட்டுக் கொள்கையில் 4 கட்டங்கள் ஏற்பட்டன.

1) முதல்கட்டம் (1949 முதல் 1952 வரை): இக்காலகட்டத்தில் உலக வல்லரசு நாடுகளில் ஒன்றாக அது இருக்க வேண்டும் என்று எண்ணியது. ஐ.நா.வில் இடம் பெறுவதும் ஆசியாவில் பொதுவுடைமைக் கொள்கையைப் பரப்புவதும் மற்றொரு நோக்கமாகும்: ஏகாதிபத்தியங்களை எதிர்த்து விடுதலை தேசிய இயக்கங்களை ஆதரிப்பது மற்றொரு நோக்கமாகும். இக்காலத்தில் அமெரிக்காவிற்கும் ரஷ்யா-சீனாவிற்கும் கெடுபிடிப்போர் நடைப்பெற்றது. சீனாவானது ரஷ்யாவின் பக்கம் சார்ந்து இருந்தது. அமெரிக்காவுடன் சீனா நல்லதோர் உறவினை மேற்கொள்ள விழைந்தது. ஆனால் கொரியாப் போரில் ஈடுபட்டதும் வியட்நாமின் கோ-சிமின் என்பவரை ஆதரித்ததும் அண்டை நாடுகளிடை ஐயத்தை ஏற்படுத்தியது.
2) இரண்டாவது கட்டம் (1952 முதல் 1958 வரை): இக்காலகட்டத்தில் சீனா நடுநிலைமை வகிக்கும் நாடுகளை அல்லது கூட்டுச்சேரா நாடுகள் பால் நல்லுறவினை மேற்கொள்ள முற்பட்டது. குறிப்பாக இந்தியாவும் சீனாவும் நல்லுறவனை மேற்கொண்டன. 1955-ல் ஏற்பட்ட பாண்டுங் மாநாட்டில் அது ஆசிய ஆப்பிரிக்க நாடுகளின் நண்பன் என்று கூறிக் கொண்டது. ஆனால் சீனாவிற்கும் இந்தியாவிற்கும் பின்னர் கசப்பு ஏற்படலாயிற்று. அப்போதும் அமெரிக்காவுடனான அதன் பகைமை அப்படியே இருந்து வந்தது.
3) மூன்றாவது கட்டம் (1958 முதல் 1970 வரையிலான காலம்): இக்காலகட்டத்தில் சீனாவிற்கும் ரஷ்யாவிற்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இந்திய-சீனத்தகராறு வெளிப்படையாக உருக்கொண்டது. பொதுவுடைமை உலகின் தலைமை இடத்தை சீனா பிடிக்க முயன்றது.
4) இறுதிகட்டத்தழல் சீன-அமெரிக்க உறவின் கெடுபிடி நிலையில் காணும் தீவிர முன்னேற்றத்தில் வெற்றி கண்டது: ஐ.நா. வில் தைவான் அரசாங்கத்திற்கு பதிலாக செஞ்சேனை இடம் பெற்றது.

## ரஷ்யாவுடனான சீன உறவுகள்

**1)** இனிய உறவின் தேனிலவுக் காலம்:

1.ஆரம்பத்தில் சீனாவும் ரஷ்யாவும் உறவினை மேற்கொண்டன. ஒற்றுமை நிலவியது. 1949ல் மாவோ தன்னுடைய ரஷ்யசார்புக் கொள்கையினை வெளியிட்டார். ‘‘சீன மக்கள் ஏகாதிபத்தியக் கோட்பாட்டின் பக்கம் அல்ல: சமதர்மக் கோட்பாட்டின் பக்கமே சார்ந்து இருப்பார்கள்’’ என்று அவர் சொன்னார். ஆதில் எவ்வித மாறுபாடும் கிடையாது. முதில் மேல் உள்ள பூனை போன்ற நிலை இல்லை. ‘‘மூன்றாவது வழியும் இல்லை’’ என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

2)சீனாவை உடனடியாக ரஷ்யா அங்கீகரித்ததோடு ஐ.நா.வில் அதற்கு இடம் தர வேண்டும் என வலிந்து கூறியது. அங்கு சீனப் பொதுவுடைமை ஆட்சி ஏற்பட்டது. ரஷ்யாவிற்குப் பெரும் வெற்றியாகும்.

3)ரஷ்யாவிற்கும் சீனாவிற்கும் இடையில் ஏற்பட்ட ‘‘பரஸ்பர உதவி நட்புறவு கூட்டு உடன்படிக்கையானது’’ (1950) அவர்களது உறவை மேலும் வலிவு பெறச் செய்தது. இந்த உடன்படிக்கையால் இருநாடுகளும் ஒன்றுக்கொன்று உதவி செய்து கொள்வது என்று ரஷ்யா உறுதி அளித்தது. ரஷ்யா போர்ட் ஆர்தரிலிருந்தும் டெய்ரனிலிருந்தும் விலகிக் கொண்டு, மஞ்சூரிய இருப்புப்பாதையின் உரிமையினையும் சீனாவுக்கு விட்டுக் கொடுத்தது. சீன தொழில் முன்னேற்றத்திற்கும் நவீன மயமாக்குதலுக்கும் அது உதவி செய்வதாக உறுதி அளித்தது. ஆரம்பத்தில் மாஸ்கோ-பீகிங் அச்சு சீனாவின் வெளிநாட்டுக் கொள்கையின் ஆணிவேராகத் திகழ்ந்தது. இந்த அச்சு உடையாத சிறப்பு வாய்ந்ததாகும் என மாவோ புகழ்நதுள்ளார். சீனாவிற்கு ஏராளமான அறிவியல் அறிஞர்களை ரஷ்யா அனுப்பி வைத்தது: அத்துடன் தொழில் வல்லுநர் களையுத், இராணுவ ஆலோசகர்களையும் அனுப்பி 156 உற்பத்தி நிலையங்களையும் ஏற்படுத்த வழிவகுத்தது. 1957-ம் ஆண்டில் சீனாவின் அணு ஆராய்ச்சி வளர்ச்சிக்கு உதவி செய்ய ரஷ்யா பெரிதும் பாடுபட்டது. அதன் பின் ஓராண்டு கழித்து பல பெரும் இயந்திரங்களை அனுப்பியது.

**பிளவின் ஆரம்ப அடையாளங்கள்:**

இரு நாடுகளுக்கும் இடையில் வேற்றுமை வளரலாயிற்று. அதற்குரிய காரணங்களாவன:

1) 1955-ம் ஆண்டில் குருஷேவும் புல்கானினும் இந்தியா பர்மா ஆகிய நாடுகளுக்குச் சென்றனர்: இதைச் சீனா தவறாகப் புரிந்து கொண்டு தனக்கு ஏற்பட்டுள்ள ஆசிய எதிர்ப்புக் கொள்கையின் பாதுகாவலர்கள் என நினைத்தது சீனாவிடம் உள்ள ஆர்வம் போல ஆசியாவிலும் அது ஆர்வம் கொண்டுள்ளதாக அறிவித்தது.

2) புதிதாக சுதந்திரம் பெற்ற நாடுகளுக்கு உதவிய ரஷ்யாவை சீனா குறை கூறலாயிற்று.
3) சீனாவின் பெரும் முன்னேற்றமும் பண்பாட்டுப் புரட்சியும் ரஷ்யாவிற்கு எரிச்சலை மூட்டியது.
4) ஸ்டாலின் கொள்கையினை குருஷேவ் குறை கூறியது சீனத் தலைவர்களுக்கு அஆத்திரமாக இருந்தத. ஸ்டாலினைப் புறக்கணித்ததை அவர்கள் விரும்பவில்லை. இது மாவோவை மறைமுகமாகத் தாக்குவதாகக் கருதினார்கள்.
5) மாவோவும் பொதுவுடைமை உலகில் ரஷ்யத் தலைமையினை அங்கீகரிக்வில்லை.

**3)பிளவு அதிகமாதல்**

1950ம் ஆண்டு முடியும் போது இருநாடுகளுக்கு இடையிலான உறவு மிகவும் மோசமானது. ஆதற்குரிய காரணங்களாவன:

1) 1958-ல் ஏற்பட்ட க்யூமாய்-மட்சு சிக்கலில் ரஷ்யா சீனாவிற்கு உதவி செய்யவில்லை. அது தைவான் தேசிய அரசாங்கத்திற்கு எதிரான கடற்கரைத் தீவுகள் பற்றிய சிக்கலாகும்.
2) சீன-இந்திய எல்லைத் தொல்லையின் போது சீனாவை ரஷ்யா ஆதரிக்கவில்லை. 1962-ல் ஏற்பட்ட இந்திய-சீனப்போரில் ரஷ்யா நடுநிலைமை வகித்தது சீனாவிற்கு உதவ முன்வரவில்லை.
3) 22வது கட்சி மாநாட்டின்போது (1961) இருநாடுகளுக்கு இடையிலான தகராறு அதிகமாயிற்று. அப்போது குருஷேவ் சீன ஆதரவு பெற்ற அல்பேனியக் கட்சியினைத் தாக்கினார்.
4) குருஷேவ் சீனாவிற்குச் சென்றபோது (1959) நடைபெற்ற சில நிகழ்ச்சிகள் ரஷ்யத் தலைவர்களின் கோபத்தை கிளறியது.
5) சீனாவிலிருந்து ரஷ்யத் தொழில் நுணுக்க அறிஞர்களையும் பிற நிபுணர்களையும் அது திரும்ப அழைத்துக் கொண்டது சீனாவிற்கு ஆத்திரத்தை மூட்டியது. சீனாவிற்கு எண்ணெய் அனுப்புவதையும் ரஷ்யா நிறுத்திக் கொண்டது.
6) அணுகுண்டு செய்ய சீனாவிற்கு அரஷ்யா உதவி செய்ய மறுத்தது. பெரும் துரோகமாகக் அதை சீனா கருதியது. மாதிரி அணுகுண்டு செய்ய உதவும் உறுதிமொழியும் நிராகரிக்கப்பட்டது.
7) கியூபாச் சிக்கலில் ரஷ்யா பின்வாங்கியது ஒரு கோழைத்தனமானதாகும் என சீனா எண்ணியது. எனவே அது ரஷ்யாவை ‘‘காகிதப்புலி’’ என்று எள்ளி நகையாடியது.

**4)கருத்து மோதல்**

குருஷேவ் ஸ்டாலினை குறைகூறி அவரது கொள்கைகளைத் தூக்கி எறிந்ததால் சீன-ரஷ்ய உறவில் வெளிப்படையான பிளவு தென்பட்டது. இது 1956-ல’ நடைபெற்ற சோவியத் பொதுவுடைமை மாநாட்டில் நிகழ்ந்தத. கிராமப்புற உழவர்களான சீ மக்கள் நகரத் தொழிலாளர்களைக் கொண்ட ரஷ்யாவை வெறுத்தனர். சீனர்கள் கொரில்லா முறையினைப் பின்பற்றுபவர்கள்: ரஷ்யர்கள் புரட்சிவாதிகள் இதனால் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. ரஷ்யா

அமைதியைப் பேண நாட்டம் கொண்டது. சீனா சமத்துவத்திற்கும் முதலாளித்துவத்திற்கும் இடையில் ஏற்படும் மோதலை தவிர்க்க முடியாது என்றது. ஆகவே சீனர்கள் ரஷ்யாவின் கொள்கையினச் சாடினர்.

மாவோவின் எழுச்சி ரஷ்யர்களால் விரும்பபடவில்லை: அவரை பல பொதுவுடைமை நாடுகள் ஆதரித்தன. ரஷ்யா அதைத் தடுக்க முயன்றும் முடியவில்லை.

**5)எல்லைத் தகராறு**

**இரு** நாடுகளுக்கும் இடையில் 4150 மைல்கள் பரப்பு கொண்ட எல்லை நிலம் சம்பந்தமாக தகராறு ஏற்பட்டது. மாவோ அந்த எல்லைத் தகராறை சீராக்க முற்பட்டார். அது நீண்ட நாட்களாகவே ரஷ்யாவிடம் உள்ளது. நெர்ச்சின்ஸ்க் உடன்படிக்கை (1689), கெய்தா உடன்பாடு (1727), அய்கூன் உடன்படிக்கை (1858), பீகிங் உடன்படிக்கை (1860), பீட்டர்ஸ்பர்க் உடன்பாடு (1881) ஆகியவைகளால் சீனாவின் ஆயிரக்கணக்கான சதுர மைல் நிலங்கள் ரஷ்யாவால் கொள்ளையடிக்கப்பட்டன. 1963-ல் பீகிங் ஒரு அறிவிப்பு மூலம் இழந்த நிலப்பகுதியின் அளவு 5000 சதுர மைல்கள் என்றது. அமைதியான முறையில் இதைத் தீர்க்க பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. ஆனால் அது தோல்வியில் முடிந்தது. இரண்டும் ஒன்றை ஒன்று தூற்றிக் கொண்டன. இது போருக்கு வழி வகுத்தது.

இந்நிலை முதலாளித்துவ நாடுகளுக்கு ஆதாயமாக அமைந்தது. இதனால் சமதர்ம நாடுகளின் ஒற்றுமை சீர்குலைந்தது வளர்ந்து வரும் நாடுகளான இந்தியா, இலங்கையில் பொதுவுடைமையின் செல்வாக்குக் குறைய வழி வகுத்தது. ஆகவே இது ‘‘ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்’’ என்பது போலாயிற்று.

சீனாவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான உறவு பற்றிக் கூறுக

சீனாவும் இந்தியாவும் உலகில் பெரும் நாடுகளாகும். ஏறக்குறைய ஒரே சமயத்தில் விடுதலை பெற்ற நாடுகளாகும். ஆவைகள் பொதுவான எல்லையினைப் பெற்றுள்ளன. புத்த சமயம் மூலம் பண்பாட்டுத் தொடர்பு கொண்டுள்ளன. ஆகவே சுமூகமான உறவு இருந்ததில் வியப்பேதுமில்லை. அது தொடர்வதற்கான காரணங்கள் பின்வருமாறு:

1) சீனப் பொதுவுடைமையின் ஆட்சியினை அங்கீகரித்த நாடுகளில் இந்தியா முதலிடம் பெற்றிருந்தது. மேலும் தூதராக உறவினை மேற் கொண்டது.
2) ஐ.நாவில் சீனாவிற்கு இடம் வேண்டும் என இந்தியா வாதாடியது. தீர்மானங்கள் பலவற்றை அது கொண்டு வந்தது.
3) 1950-ல் திபொத்தில் சீனப்படைகள் நிழைந்த போது இந்தியா அதிர்ச்சியுற்றாலும் பின்னர் 1954-ல் ஓர் உடன்பாடு செய்து கொண்டது. அதன் மூலம் திபெத்தின் சீன இறைமையினை அங்கீகரித்தது.

ஆவ்விரு நாடுகளும் புகழ்வாய்ந்த பஞ்சசீலக் கொள்கையினை 1954ல் ஏற்றுக் கொண்டன. அதன்படி 1)ஒன்றுக்கொன்று இறைமையினை மதித்து நடப்பது: நிலப்பபகுதியினை சரிசெய்து கொள்வது 2) ஆக்கிரமிப்பின்மை 3) உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாமை 4) ஒன்றுக்கொன்று நலம் பெறுவது: சமத்துவமாக இருப்பது 5) பரஸ்பரம் அமைதியைப் பேணுதல்

இதன்மூலம் வணிகத்தலங்களின் செயலகங்களைப் புதுடில்லி கல்கத்தா, காலிம்பாங் ஆகிய இடங்களில் ஏற்படுதிக் கொள்ள உரிமை பெற்றது. அதற்கு ஈடாக திபெத்தில் காங்டாக் என்ற இடத்தில் இந்தியா தன் வணிக நிலையத்தை ஏற்படுத்திக் கொள்ள அனுமதி பெற்றது.

5)போரின் போது இந்தியா நடுநிலைக் கொள்கையினைப் பின்பற்றியது. அமெரிக்காவுடன் சேராததைக் கண்ட சீனா மகிழ்வு கொண்டது.

6)அமெரிக்கா சீனாவிற்கு எதிராக "சீட்டோ" என்று தென்கிழக்கு ஆசிய நாடுகளின் பாதுகாப்பு அமைப்பினை நிறுவியது. ஆப்போது இந்தியா நடுநிலைமை வகித்தது. இந்தியா அதில் சேர மறுத்துவிட்டது.

7) இருநாடுகளின் அயல்நாட்டுக் கொள்கைகளில் பல ஒரே மாதிரியானவை. இருநாடுகளுமே போராதிக்கம், குடியேற்றம் இனவெறி ஆகியவற்றை எதிர்த்தன. மேலை நாடுகளின் பிடியிலிருந்து ஆப்பிரிக்க நாடுகள் விடுதலை பெற அவைகள் ஆதரவு நல்கின.

8)1950-52ல் நடைபெற்ற கொரியாப் போரில் இந்தியா நடுநிலைமை வகித்தது. அமெரிக்கா 38-வது இவைக் கோட்டைதாண்டி யாலும் ஆற்றின் கரையில் போரிட்ட போது இந்தியா அதை எதிர்த்தது. கொரியாவில் போர் நிறுத்தம் செய்ய முயற்சி செய்தது இந்தியாதான் என்றால் அது மிகையாகாது.

9)1955ல் ஏற்பட்ட பாண்டுங் மாநாட்டில் இரு நாடுகளும் சேர்ந்து ஆசிய ஆப்பிரிக்க நாடுகளின் ஒற்றுமைக்கு வழிகாட்டின.

**உறவில் விரிசல் ஏற்படக் காரணங்கள்**

1.இரு நாடுகளும் நல்லுறவினை நாடிய போதிலும் கருத்து வேறுபாடுகள் காணப்பட்டன. அவைகள் தேர்ந்தெடுத்துக் கொண்ட முன்னேற்றப்பாதைகள் வெவ்வேறானவை. எனவே மனக்கசப்பு ஏற்பட்டது.

2. இந்தியாவின் முதல் ஐந்தாண்டுத் திட்ட முன்னேற்றங்கள் சினாவிற்கு பொறாமையினை ஏற்படுத்தியது. பொருளாதாரத்தில் தங்களை விஞ்சிடும் என சீனர்கள் அஞ்சினர்.

3. 1959-ல் திபெத்தில் கிளர்ச்சி ஒன்று ஏற்பட்டது. சீனர்கள் அதை அடக்கி விட்டனர். அவர்களின் கொடுமையினை இந்தியா கண்டித்தது.

4.தலைலாமா திபெத்திலிருந்து தப்பி இந்தியாவில் தஞ்சம் புகுந்தார். இதனால் சீனா கோபம் கொண்டது.

5. அத்துடன் சீனாவின் உள்நாட்டுத் தொல்லைகள் ஏமாற்றங்கள், வெறுப்பு ஆகியவை அதன் அயல்நாட்டுக் கொள்கையினை பாதித்தன. ரஷ்யாவானது இந்தியாவிற்கு உதவியதை அவர்கள் வெறுத்தனர். எனவே அவர்கள் மக்கள் கவனத்தைத் திருப்ப நம் எல்லையில் தொல்லை கொடுத்தனர்.

6.சீனப்படத்தில் இந்தியப் பகுதிகள் சேர்க்கப்பட்டிருந்தன. இதை இந்தியா சீன அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்த போது அவர்கள் சரியான பதில் கூறவில்லை. பின்னர் அவர்கள் தங்கள் கூற்றே சரியென வாதிட்டனர்.

7) 1950-ல் சீனா லாங்சு என்ற பகுதியினையும் லடாக்கில் 12000 சதுர மைல்கள் கொண்ட நிலப்பகுதியினையும் வடகிழக்கு எல்லைப்பகுதியினையும் கோரியது. இதனால் பல மோதல்கள் ஏற்பட்டன. அக்டோபர் திங்களில் 9 இந்தியச் சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

**போர் ஏற்படுதல்**

1960-ல் இருநாடுகளின் பேரமைச்சர்களும் டில்லியில் கூடி அமைதிகாண முற்பட்டனர். இரு நாடுகளின் அதிகாரிகளும் அங்கு சென்று பார்வையிட்டனர். ஒப்பந்தம் ஏதும் ஏற்படாததால் போர் ஏற்பட்டது. சீனா இந்தியாவின் லடாக் வடகிழக்கு எல்லைப்புறங்களை நன்கு தாக்கியது. சீனர்களை விரட்டுவதில் இந்தியாவும் முற்பட்டது. இறுதியில் இத்தாலி இராணுவத்திற்கு ஒரு சவாலாக அமைந்தது. சீனாவிற்கும் இந்தியாவிற்கும் நல்லுறவு ஏற்பட ஆசிய ஆப்பிரிக்க நாடுகள் முயன்றன. கொழும்புத் திட்டம் கொண்டு வரப்பட்டது. இரு நாடுகளும் அதை ஏற்றுக் கொண்டன. இன்றும் ஆயிரக்கணக்கான சதுர மைல் கொண்ட நம்பகுதிகள் சீனாவிடம் உள்ளன.

**பாகிஸ்தானுக்கு சீனா ஆதரவு**

இந்த எல்லைப் போரினால் சீனா-பாகிஸ்தானுடன் நல்லுறவு கொண்டது. அது இராணுவ பொருளாதார உதவி செய்தது. காஷ்மீர் சிக்கலில் சீனா பாகிஸ்தானை ஆதரிக்கலாயிற்று. இந்தியா-பாகிஸ்தான் போரின் போது (1965-70) சீனா இந்தியாவை கண்டிக்கலாயிற்று.

**இந்தியாவின் நிலை**

இவ்வாறு இருந்தும் கூட ஐ.நா.வில சீனாவிற்கு இடம் தர வேண்டும் என இந்தியா வலியுறுத்தி வந்தது. மேலும் சிக்கலைத் தீர்க்க எப்போதும் தயார் என இந்தியா கூறியது. ஆனால் சீனா தன் இராணுவ வளர்ச்சியில் கவனம் காட்டி வருகிறது. அணு ஆயுதங்களையும் தயார் செய்து வருகிறது.

## அலகு - IV

### மெய்ஜி முன்னிலையில் மீட்சி அல்லது மெய்ஜி புரட்சி

ஜப்பானியர்கள்தங்கள் நாட்டுக்குள் வன்முறையில் பன்முறை புகந்த அந்நியர்களை அறவே வெறுக்கலானார்கள். ஆத்துடன் அவர்களுடன் செய்து கொண்ட நேர்மையற்ற உடன்பாடுகளை தொசீனப்படுத்தலானார்கள். அவர்களுடைய மனத்திலே ஒரு பெரிய புரடசி நடைபெற்றுக் கொண்டிருந்தது. புதிய நிலைமைக்குத் தகுந்தபடி தங்களை மாற்றிக் கொண்டு வந்தார்கள். தங்கள் அரசாங்கத்தை சீராக்க வேண்டும் என எண்ணினார்கள். மிகாடோவின் ஆதரவாளர்கள் ஒன்று திரண்டனர். அதிருப்தியாளர்களின் தலைவர்களாக விளங்கி அவர்கள் 1867-ம் ஆண்டில் கிளர்ச்சி செய்தார்கள். அந்நியர்களுக்கு ஆதரவாக இருந்த ஷோகனையும் அவர்கள் வெறுத்தனர். ‘‘பேரரசைப் போற்றுவோம்: காட்டுமிராண்டிகளை வெளியேற்றுவோம்’’ (Son-o-jo-i- Revere the Empereror and expel the barbarians) என்றுநாடு முழுவதும் அவர்கள் முழக்கம் செய்தனர். இதுவே அந்நியர்களை விரட்ட வழிகாட்டியது. ஷோகன் செய்வதறியாது திகைத்தார். நாட்டில் அமைதி, ஒழுங்கு கெட்டது. இதனால் ஷோகனின் பெருமை குன்றியது. நாட்டில் உள்நாட்டுப் போர் ஏற்பட்டது. அதில் அந்நியர்களும் தலையிட்டனர். வன்முறை தலைவிரித்தாடியது. ஆதை அடக்க முடியாத ஜப்பானின் திறமையின்மை குறிப்பாக காகோஷிமா (Kagoshima), ஷிமோனோசெகி (Shimonoseki) ஆகிய இடங்களில் நன்கு தெரிய வந்தது. இதைக் கண்டு சாமுராய்கள் ஆத்திரமடைந்தனர். அவர்கள் ஷோகின் தயாரற்ற நிலையையும் கோழைதனத்தையும் வன்மையாகச் சாடினர். நூட்டுக்கு நல்லதோர் ஆட்சி தேவை என்று அவர்கள் கூக்குரலிட்டனர்.

**காரணங்கள்**

பெயரளவிற்குப் பதவியில் வீற்றிருந்த மிகாடூக்கள் உண்மையான அதிகாரங்களை வகித்துவந்த ஷோகன்களை நீக்கிவிட்டு அவர்களது அதிகாரங்களை செயல்படுத்தலானார்கள். ஆந்த நிலையயை எவ்வாறு அவர்கள் அடைந்தார்கள் என்பதை கண்டு நோக்குவோமாக.

முதலாவதாக, நிலமானியப் பிரபுக்கள் வலிவும் பொலிவும் பெற்று விளங்கினார்கள். அவர்களில் பலர் ஏதோ (லுயனழ) என்ற நகரத்திற்கு வெகுதொலைவில் வாழ்ந்து வந்தார்கள். எதோ என்ற இடம்தான் ஜோகனின் தலைமையிடமாகும். துங்கள் விருப்பம்போல் அவர்கள் நடந்து வந்ததால் அது ஷோகனின் ஆட்சியை வெகுவாகப் பாதித்தது.

இரண்டாவதாக, நடுத்தர மக்களின் நிலை இருதலைக் கொள்ளிஎறும்பு இருந்தது. ஒரு பக்கம் திறமையற்ற ஷோகன்: மற்றொரு பக்கம் வலிமை குன்றிய படைத்தளபதிகள் அந்நியருக்கு ஈடுகொடுக்க முடியாமல் இருந்த நிலை இரண்டிற்குமிடையே அவர்கள் அல்லல்பட்டுக் கொண்டிருந்தனர்.

மூன்றாவதாக, ஜப்பானிய அறிஞர்கள் நாட்டின் நிலையை நன்கு சீர்தூக்கி ஆராய்ந்து, மன்னரினட அதிகாரங்களைப் பாதுகாக்க வேண்டுமென்று விரும்பினார்கள். புண்டைய ஜப்பானில் மன்னர் எவ்வாறு இருந்தாரென்று மக்களுக்குப் படம் பிடித்துக் காட்டினார்கள்.

ஆந்த நிலைமையை மீண்டும் கொண்டுவர அவர்கள் முயற்சி செய்தார்கள். மன்னர் என்பவர் ஜப்பானின் உண்மையான மனனராக விளங்க வேண்டுமென்பதே அவர்களுடைய பேரவாவாகும். ஷோகன் என்பவர் மன்னரின் அதிகாரமற்ற செயலி ஆவார். அவரை விரட்ட வேண்டும்: வீண் முயற்சியில் சென்று கொண்டிருக்கும் ஷோகனை நீக்கி முன்னிலை மீட்சியைக் கொண்டுவர வேண்டுமென்று வரப்பி வந்தார்கள்.

நூன்காவதாக, அந்நியர்கள் ஜப்பானில் புகுந்தவுடன் அவர்களின் ஆக்கிரமிப்பையும், அட்டூழியங்களையும் முறியடிக்க வேண்டிய முயற்சியில் ஷோகன்கள் தோல்வி கண்டதால் அதைத் திறம்படச் செய்ய அரசியல் தலைவர்கள் பலர் முடிவு செய்தனர். அவர்களை மன்னரின் ஆதரவாளர்கள் பலமாகக் கண்டித்தனர். நாட்டைச் சீர்குலைக்கும் நாசகாரிகள் என்றனர். ஆகவே ஷோகனுக்கு எதிரானவர்கள் ஒன்று திரண்டு ஒரு போராட்டத்தில் ஈடுபட்டு ஜப்பானில் ஒரு நல்லரசை, வல்லரசை உருவாக்க வேண்டியதின் விளைவாக முன்னிலை மீட்சி ஏற்பட்டது.

ஐந்தாவதாக, பேரரசின் ஆதரவாளர்களுக்கும் ஷோகன்களுக்குமிடையே ஏற்பட்ட சிக்கல்கள், போராட்டங்கள் முன்னிலை மீட்சிக்கு வழிவகுத்தன.

இறுதியாக, ஷோகனைப் பல வலிமை பொருந்திய நிலப்பிரபுக்கள், பெரும்பிரபுக்கள் தாக்கலானார்கள். அவர்களில் குறிப்பாக சாத்சுமா (Satsuma) சோஷு (Chosu), ஹிசன் (Hizen) தோசா (Tosa) ஆகிய பிரபுக்கள் முக்கியமானவர்களாவர்கள். இந்நிகழ்ச்சி 1867-ம் ஆண்டில் உச்ச நிலையை அடைந்தது. அதற்கு முந்திய ஆண்டில் கடைசி ஷோகனாக தொகுகவா கெய்கி (Tokugawa Kieki) என்பவர் பதவியேற்றார். அவரை யொஷிஹிசா என்றும் அழைப்பர். ஆப்போது ஜப்பானுடைய தொல்லைகளுக்குத் தீர்வுகாண முடியாமல் இருந்த ஷோகனை வெளியேறும்படி யோதோ என்ற பிரபு மன்னரிடம் ஒரு விண்ணப்பத்தைக் கொடுத்தார். கண்களைக் கட்டி காட்டில் விட்டதைப்போல திகைத்த ஷோகன் 1867-ம் ஆண்டில் அக்டோபர் திங்கள் 14-ம் நாளில் தன் பதவியிலிருந்து விலகினார். இவ்வாறு ஏறக்குறைய 700 ஆண்டுகளாக இருந்த ஷோகன் பதவிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. அத்துடன் இரட்டை ஆட்சியும் மண்ணோடு மண்ணாக குழிதோண்டிப் புதைக்கப்பட்டது. பேரரசர் காமெகி (Kakeki) இறந்துவிடவே அவருடைய 15 வயது சிறுவர் பேரரசர் மெய்ஜி (Emperor Meli) என்று அழைக்கப்படும் முட்சுஹிடோ (Mutsuhito) ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். அவர் 1867-ம் ஆண்டிலிருந்து 1912-ம் ஆண்டுவரை ஆட்சி புரிந்தார். அந்த ஆண்டிலிருந்து நவீன ஜப்பானின் வரலாறு உதயமாகிறது என்றால் அது மிகையாகாது. அதுவே முன்னிலை மீட்சி என்றும் மெய்ஜி புரட்சி அல்லது மெய்ஜி மீட்சி என்று ஜப்பானின் வரலாற்றில் வழங்கப்படுகிறது. மேய்ஜி என்றால் ஒளி பொருந்திய ஆட்சி என்றும், அறிவுத்திறன்மிக்க ஆட்சி என்றும் பொருளாகும். இவ்வாட்சி 1868-ம் ஆண்டிலிருந்து 1912 வரை நீடித்தது. அக்காலக் கட்டத்தில் ஜப்பானில் அரசியல் சமூக, பொருளாதாரத்துறைகளில் அரிய பெரிய மாறுதல்கள் ஏற்பட்டன. அதனால் ஜப்பான் நவீன நாடாக முற்போக்கான நாடாக மாறியது. உலக வரலாற்றில் பல நாடுகளில் மக்கள் நலன் பேணும் வல்லரசர்கள் அல்லது அறிவு

சார்ந்த வல்லரசர்கள் (enlightened Despots) தோன்றி மாற்றத்தை ஏற்படுத்தியதைப் போல இங்கும் பல மாற்றங்கள் ஏற்பட்டன. ரஷ்யாவுக்கு ஒரு மாமன்னர் பீட்டரைப் போலவும், பிரஷ்யாவிற்கு ஒரு மாமன்னர் பிரடெரிக்கைப் போலவும், ஆஸ்திரியாவுக்கு ஒரு ஜோஸப்பைப் போலவும், துருக்கிக்கு ஒரு கமால் பாஷாவைப் போலவும் ஜப்பானுக்கு முட்சுஹிடோ தோன்றினார் என்பது சாலப் பொருத்தமாகும். மேலும் இந்த முன்னிலை மீட்சியானது இங்கிலாந்தில் தோன்றிய முன்னிலை மீட்சியைப் போன்றதாகும் என சில வரலாற்றாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். ஆகையால் இதை மெய்ஜி சகாப்தம் (Meji era) என்றும் கூறலாம்.

மீட்சிக்கு பிறகு ஜப்பான் மேலைநாடுகளின் பல செயல்களை அப்படியே பின்பற்றினாலும் கூட அது தன்னுடைய பண்டைய பண்பாட்டையும் பழக்க வழக்கங்களையும் விட்டுக் கொடுக்கவில்லை. இவ்வாறு ஜப்பான் பண்டைய வாழ்க்கை முறையினையும் மேலை நாட்டு நாகரிகத்தையும் இணைக்கும் இடமாக விளங்கியது.

## மெய்ஜியின் சீர்திருத்தங்கள்

முட்சுஹிடோ ஜப்பானின் பேரரசர் ஆனதும் தனது தலைநகரை கியோத்தோவிலிருந்து (முலழவழ) எதோ (லுநவழ)வுக்கு மாற்றிக் கொண்டார். அதன் பின்னர் எதோ டோக்கியோ என்று அழைக்கப்பட்டது. அது ஜப்பானின் புதிய தலைநகராக இன்றளவும் விளங்கி வருகிறது. பேரரசர் நாட்டினை மாற்றியமைக்கப் பல சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தார். அவற்றினை ஈண்டு காண்போமாக,

**காப்புறுதிப் பத்திரம்**

பேரரசர் முதலாவதாக மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் ‘‘காப்புறுதிப் பத்திரம்’’ (ஊாயசவநச ழக முயவா) ஒன்றை வெளியிட்டார். அது 1868-ம் ஆண்டில் வெளியிடப்பட்டது. அது பிரெஞ்சுப்புரட்சியின் போது மக்களுக்கு அளிக்கப்பட்ட ‘‘மனிதனின் உரிமைகள் பிரகடனம்’’ (னுநஉடயசயவழைெ ழக வாந சுபைாவள ழக ஆயெ) என்பதற்கு நிகரானதாகும். ஆதைக்கண்ட மக்கள் உதயசூரியன் நாட்டில் ஒரு புதிய தென்றல் வீசுவதைப்போல உணரலானார்கள். ஆதன்படி அவர்களுக்கு பல உரிமைகள் வழங்கப்பட்டன. சட்டமன்றங்கள் மூலம் ஆட்சி செய்து கொள்ளவும் தனி மனிதனுக்குரிய வாழ்க்கை சம்பந்தப்பட்ட உரிமைகளை அனுபவிக்கவும் சமமான நீதி வழங்கவும் நாட்டின் நலனைப் பேணவும் அது வழி செய்தது.

**நிலமானிய முறை அழிதல்**

நிலமானிய முறைக்கு ஜப்பானில் சாவுமணி அடிக்கப்பட்டது. 1869 ஆண்டு மார்ச் திங்களில் அப்பணியானது துவங்கப்பட்டது. அமய்ஜி மீட்சிக்குக் காரணமான மிகப் பெரும் நிலப்பிரபுக்களான சாத்சுமா, சோஷு, தோஷா, ஹிசன் ஆகிய நான்கு பேர்களும் தங்களிடமிருந்த நிலங்களை பேரரசரிடம் ஒப்படைத்தனர். 1871-ம் ஆண்டு அதற்கான ஆணை ஒன்று பிறப்பிக்கப்பட்டது. அத்துடன் நிலமானிய முறை அழிந்தது. மேலும் அப்பிரபுக்கள்

பேரரசரின் இராணுவத்திற்கு உதவிபுரியும் வகையில் தங்களுடைய வீரர்களை அனுப்பி, பேரரசருக்கு எதிரான சில பிரபுக்களை அடக்கினர். நிலமானிய பிரபுக்களின் பண்ணைகளைக் கவனிக்க அரசாங்க அதிகாரி ஒருவர் நியமிக்கபட்டார். படைமானிய முறை ஒழிக்கப்பட்டது. அங்கு தேசிய இராணுவப்படையொன்று ஏற்படுத்தப்பட்டது. இதில் பெரும்பாலான பதவிகளை சாமுராய்கன் பெற்றனர். நிலப்பிரபுக்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டது. சாமுராய்களின் ஊதியம் குறைக்கப்பட்டது. சில நிலப்பிரபுக்கள் சுபேதர்களாக (Subedars) நியமிக்கப்பட்டார்கள். இவ்வாறு அவர்கள் பேரரசருக்குக் கட்டுப்பட்டு வாழ்ந்து வந்தார்கள்.

1871-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29-ம் நாள் பேரரசர் ஒரு ஆணையை வெளியிட்டு ஜப்பான் நாட்டை மூன்று பெரும் பிரிவுகளாகப் (Fues) பிரித்தார். அத்துடன் 72 பிரதேசங்களாகவும் அது பிரிக்கப்பட்டது. பிரதேசங்கள் மைய ஆட்சியால் நியமிக்கப்பட்ட ஆளுநரால் ஆட்சி செய்யப்பட்டு வந்தன. ஒவ்வொரு பிரதேசமும் பல மாவட்டங்களாகவும் (Districts) நகரங்களாகவும் (Towns) கிராமங்களாகவும் (Villages) பிரிக்கப்பட்டன. இவ்வாறு மைய ஆட்சி வலிமை பெற்றதாக விளங்கியது. அதன் விளைவாக நிலமானிய பிரபுக்கள் நிலைகுலைந்தனர். நிலமானிய மறை அழிந்ததின் விளைவாக விவசாயிகளுக்கு ஏற்பட்ட விளைவுகளைப்பற்றி குறிப்பிடும்போது கிளைடும் பீர்ஸீம் “விவசாயிகள் நிலமானிய பிரபுக்களிடத்தில் வாழவும் முடியாமல் சாகவும் முடியாமல் இருந்தனர். 1871-க்கு பிறகு அவர்கள் தங்கள் தலைவிதியை தங்கள் விருப்பம்போல் தேர்ந்தெடுத்துக் கொண்டனர். அதாவது வாழவோ அல்லது சாகவோ, நிலத்தைப் பெற்றுக் கொள்ளவே அல்லது விற்றுவிட்டு நகரத்திற்குச் செல்லவோ அவர்களால் முடிந்தது” என்று கூறுகின்றனர். நிலமானிய முறை அழிந்த விதத்தைப் பற்றி விளக்கமாக நு. ஹெர்பர்ட் நார்மன் (E.Herbert Norman) என்பவர் ‘ஜப்பான் நவீன நாடாக எழிச்சி அடைதல்’ (Japan’s Emergence as a Modern State) என்ற நூலில் நன்கு விளக்கியுள்ளார்.

**1889-ம் ஆண்டு அரசியல் சட்டம் (The Constitutions of 1889)**

மேய்ஜி சகாப்தத்தில் மற்றொரு முக்கிய சீர்திருத்தம் 1829-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட அரசியலமைப்பாகும். அது கவுண்ட் இடேச ஹீரா புமி என்பவரால் உருவாக்கப்பட்டதாகும். ஆந்த அரசியமைப்பானது இரண்டு வகையான கோட்பாடுகிள்ன அடிப்படையில் எழுந்ததாகும். ஓன்று பேரரசர் எல்லா அதிகாரங்களையும் கொண்டு விளங்குவதோடு மட்டுமில்லாமல் நீதி வழங்ககூடியவராகவும் செயல்பட்டார். பேரரசின் செயல்கள் அவ்வதிகாரங்களை செயல்படத்தலாம் என்பது மற்றொன்றாகும். இந்த அரசியலமைப்பானது பவேரியாவின் அரசியலமைப்பைப் போன்றுள்ளது என்பது நோக்கற்பாலது. இதை உருவாக்கியவர்கள் ஆங்கிலேய அமெரிக்க அரசியலமைப்புகளின் அடிப்படையில் உருவாக்கினார்கள் என்றால் அது சாலச் சிறந்ததாகும்.

**பேரரசர் (The Emperor)**

1889-ம் ஆண்டில் ஏற்பட்ட இந்த அரசியலமைப்பு பேரரசருக்குரிய சகல அதிகாரங்களையும் வரையறுத்தது. அதுமட்டுமில்லாமல் அது பேரரசரின் நிலையையும்

தெளிவாகக் காட்டியுள்ளது. பேரரசர் அரசியல் மன்ற சட்டமன்ற நீதிமன்ற அதிகாரங்களைப் பெற்று ஒரே தலைவராக நாட்டில் விளங்கினார். பண்டைய புனிதப் பெரரசர் அல்லது தெய்வீகப் பேரரசர் என்று மிகாடோ அழைக்கப்பட்டார். பேரமைச்சர் அரசாங்கத்தின் அதிகாரிகள் ஆகியோரின் ஆலோசனையின் பேரில் அவர் அவ்வதிகாரங்களைப் பயன்படுத்தி வந்தார். அரசியல் ஆணைகள், ஏனையப்பத்திரங்கள் அரசாங்க அமைச்சரின் கையொப்பத்தைப் பெற்றே வெளிவரவேண்டுமென வழி செய்யப்பட்டது. பேரமைச்சரை மூத்தோர் அவையினரின் ஆலோசனையின் பேரில் நியமனம் செய்தார். ஏனைய அமைச்சர்கள் பேரமைச்சரின் ஆலோசனையின் படி பேரரசராலட நியமிக்கப்பட்டனர். நாட்டிலுள்ள தரைப்படைக்கும், கப்பற்படைக்கும் அவரே தலைவராவார். சுண்டையிடவோ அல்லது சமாதானம் செய்து கொள்ளவோ அவருக்கு அதிகாரமுண்டு. சட்டங்களை இயற்றவோ அல்லது மாற்றவோ அல்லது நீக்கவோ அவருக்கு அதிகாரமுண்டு. அவருடைய அனுமதியின்றி எந்த மசோதாவும் சட்டமாக வெளிவராது. நாடாளுமன்றத்தை கூட்டவோ, ஒத்தி போடவே, கலைக்கவோ அவருக்கு உரிமை உண்டு. அவருடைய புனித ஆளுமையானது நன்கு பாதுகாக்கப்பட்டது. நாடாளுமன்றம் கூட அவருக்கு இணங்க சேவை செய்து வந்தது. பேரரசருக்கு ஆலோசனை கூற ஒரு அமைச்சரவையும் இருந்தன.

**நாடாளுமன்றம் (Imperial Diet)**

ஜப்பானின் பாராளுமன்றம் அல்லது நாடாளுமன்றம் தான் 'டயட்' என்று பிரதிநிதிகள் அவை (House of Retpresentatives) என இரு அவைகள் இருந்தன. பிரபுக்கள் அவையில் பெரும்பாலோர் மன்னர்குலத்தைச் சேர்ந்தவர்களாவர். இதில் உயர்குலப் பிரபுக்களும் இருந்தனர்.. இவர்கள் ஆயுள் உறுப்பினர்களாவார்கள். கவுண்டிகள், வைகௌண்டிகள், சீமான்கள் ஆகியோர் பிரபுக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு 7 ஆண்டுகள் உறுப்பினர்களாக இருந்தார்கள். பேரரசர் சிலரை அவ்வவைக்கு நியமனம் செய்தார். அதிகவரி செலுத்துவோரின் பிரதிநிதிகளும் அதில் அங்கம் வகித்தனர். பிரதிநிதிகள் அவையில் உள்ள அனைவரும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாவர். சொத்துடையவர்கள் அனைவரும் அவர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பெற்றிருந்தனர். இரு அவைகளும் நிதி, நீதி சார்ந்த அதிகாரங்களைச் சமமாகப் பெற்றிருந்தன. நாட்டின் வரவு செலவு திட்டம் (Budget) நாடாளுமன்றத்தின் அனுமதி பெற்றே நடை முறைக்குக் கொண்டுவர வேண்டும். அதன் அனுமதியின்றி எவ்வித வரியும் விதிக்கமுடியாது. ஆதைப்போலவே நாடாறுமன்றத்தின் அனுமதியின்றி அரசாங்கம் கடன் வாங்ககூடாது. நாடாளுமன்றம் செயலில் இல்லாதபோது அவசர நிதி சார்பான ஆணைகளைப் பேரரசர் வெளியிடலாம். நாடாறுமன்றம் வரவு-செலவு திட்டத்தை ஏற்க மறுத்ததால் நடைமுறை ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தையே வருகிற ஆண்டிலும் பின்பற்றலாம். நாடாளுமன்றம் அதிகரிக்கும் செலவினங்களை மறுக்க உரிமை பெற்றிருந்தது.

ஆரசியலமைப்பில் புறிப்பிடாத சட்டங்களை நாடாளுமன்றம் நடைமுறைக்கு கொண்டுவரலாம். நாடாளுமன்றம் ஆண்டிற்கு ஒரு முறை கூடவேண்டும். பேரரசரின் இசைவு

பெற்று நாடாளுமன்றம் அமைச்சர்கள் மீது குற்றம் சாட்டலாம். நாடாளுமன்றம் கொண்டு வரும் எந்த மசோதாவையும் பேரரசர் ரத்து செய்யலாம். அவருக்கு ரத்து அதிகாரம் (Veto power) உண்டு.

பிரதிநிதிகள் அவையும் பிரபுக்கள் அவையைப்போல அதிகாரங்களைப் பெற்று விளங்கியது. பண மசோதாக்களை பிரதிநிதிகள் அவையில் கொண்டுவர வேண்டும். மற்ற மசோதாக்களை ஏதேனும் ஒரு அவையில் கொண்டுவரலாம். மேலவையில் 120 பேரும், கீழவையில் 363 பேரும் இருந்தனர்.

**ஆமைச்சரவை (Cabinet or council of Ministers)**

பேரமைச்சர் பேரரசரால் நியமிக்கப்பட வேண்டும் என்று முன்னரே கண்டோம். அவர் மூத்தோர் அவையின் ஆலோசனைப்படி நியமிக்கப்படுதல் வேண்டும் அதே சமயத்தில் ஏனைய அமைச்சர் குழாம் பேரமைச்சரின் ஆலோசனையின் பேரில் பேரரசர் நியமனம் செய்ய வேண்டும். அமைச்சர்களை பேரரசரே நியமிப்பதால் அவர் நாடாளுமன்றத்திற்கு கட்டுப்பட்டவரல்லர். இராணுவக் கொள்கையைப் பற்றி வாதிட நேரும்போது பேரரசர் தரைப்படை, கப்பற்படைத் தலைவர்களையும் அது சம்பந்தப்பட்ட அமைச்சர்களையும் கலந்து ஆலோசனை மேற்கொள்ளலாம்.

**அரசப் பேரவை (Privy Council)**

அரசப் பேரவையில் ஒரு தலைவரும், ஒரு துணைத்தலைவரும் 24 உறுப்பினர்களும் அமைச்சர்களும் அங்கம் வகித்தனர். அரசியல் அமைப்பு சம்பந்தப்பட்ட திருத்தங்களை ஏற்றுக் கொண்டு அரசியல் அமைப்புக்குத் துணையான சில ஆணைகளையும் சட்டங்களையும் ஏற்றுக் கொள்வது, நெருக்கடி காலத்தில் கொண்டுவரப்படும் நெருக்கடி ஆணைகள், நெருக்கடி நிதி சார்ந்த ஆணைகள் ஆகியவற்றிற்கு அனுமதி வழங்குவது உடன்படிக்கைகள் மேற்கொள்வது இதனுடைய பணிகளாகும்.

**மூத்தோர் அவை (Genro or Elder Statemen)**

ஜப்பானில் 1889 ஆம் ஆண்டு ஏற்பட்ட அரசியலமைப்பின் முக்கிய நிறுவனங்களில் மூத்தோர் அவையும் ஒன்றாகும். ஜப்பானை முன்னேற்றப் பாதையில் நடத்திச் செல்ல அது வழிகாட்டியது. அதில் வயதில் முதிர்ந்த, அனுபவத்தில் முதிர்ந்த அரசியலில் பழுத்த திறமையான பெரியோர்கள் அங்கம் வகித்திருந்தனர். அதனுடைய ஆலோசனையின் பேரில் பேரரசர் பேரமைச்சரை நியமிக்கவேண்டும். ஜப்பானின் அரசியல் வரலாற்றில் அது முக்கிய பங்கை வகிக்கிறது. அதனுடைய பங்கைப் பற்றிக் குறிப்பிடும் போது ரிச்சர்டு ஸ்டோரி (Rechard Story) “ஆண்டுகள் செல்லச் செல்ல மூத்தோர் அவையின் செல்வாக்கும் பெருகியது. நவீன ஜப்பானை உருவாக்க மெய்ஜி காலத்தில் ஏற்படுத்தப்பட்ட மூத்தோர் அவை சிறந்த தலைமையைக் கொண்டு விளங்கியது” என்று குறிப்பிட்டுள்ளார். கிளைடும் பீர்ஸும் மூத்தோர் அவையின் முக்கியத்துவத்தை வாயாரப் புகழ்ந்துள்ளனர். அவர்கள் கூற்றுப்படி 1880-1900 ஆண்டுகளில் நவீன ஜப்பானை உருவாக்க அது சிறந்த முறையில் செயல்பட்டது என்பது உண்மையேயாகும். “அது நம்பிக்கையுள்ள நன் முயற்சியுள்ள மூத்த அரசியல்

நிபுணர்களாலான அவையாகும். அவர்கள் தங்கள் திறமையை நன்கு பயன்படுத்தி முடிவுகளை மேற்கொள்கிறார்கள். அவர்கள் அனுமதியின்றி எந்த முடிவும் எடுப்பதில்லை. உண்மையில் அவர்கள் தான் அம்முடிவுகளை உருவாக்குகிறார்கள்.'' ஏன்று அவர்கள் கூறுகின்றனர்.

ஜப்பானின் அரசியலமைப்பை உருவாக்கியவரான கவுண்ட இடேஹிரோ புமி என்பவர் மூத்தோர் அவையின் முதன்மையான உறுப்பினராவார். அவருடன் யமகதா (Yamagata) ஜப்பானுக்கு நவீன இராணுவத்தை அமைத்து தந்தவர்: இனோயோ (Inoyo) வரிச் சீர்திருத்தத்தை வழங்கியவர். பெருமைவாய்நத தேசிய வீரரான ஓயாமா (oyama) முட்சுகதா (Mustsukata) என்ற நிதி நிர்வாகழ சையோனிஜி (Saiongi) ஆகியோரும் அதில் இடம் பெற்றிருந்தனர். இவ்அவை 1882-ல் இடோ என்பவரைப் பேரமைச்சராகத் தேர்ந்தெடுத்தது. அது முதற்கொண்டு பல பேரமைச்சர்களை அது ஜப்பானுக்கு அளித்துள்ளது. இது எல்லாத் துறைகளிலும் சிறந்த முறையில் செயல்பட்டது. எந்தவொரு ஜப்பானியனும் ஜப்பானிய நாட்டில் பழிவாங்கப்படாமல் அது பார்த்துக்கொண்டது. எனவே அதன் செல்வாக்கு ஜப்பானில் கொடிகட்டிப் பரந்தது.

**மக்களின் உரிமைகளும் கடமைகளும்**

மக்கள் சிவில், இராணுவத்துறைகளில் பணிப்புரிய உரிமை பெற்றிருந்தனர். சட்டப்படி அவர்கள் உரிமைகளை அனுபவிக்கவும், நீதியைப் பெறவும், தண்டனையை அடையவும் விதி வகை செய்தது. தனிப்பட்டவரினட இரகசிய மடல்கள் அவருடைய அனுமதியின்றி பார்வையிட அனுமதிக்கப்படவில்லை. சமய சுதந்திரம், பேச்சு சுதந்திரம், எழுத்து சுதந்திரம், கருத்துக்கள் வெளியிட சுதந்திரம், சங்கம் அமைத்துக்கொள்ளவும் கூட்டம் கூடவும் சுதந்திரம் வழங்கப்பட்டது. இவ்வுரிமைகள் மக்களின் கடமைகளைப் பாதிக்கா வகையில் அமைந்திருந்தன.

**நீதிமன்றங்கள்**

பேரரசரின் கீழ் நீதிமன்றங்கள் செயல்பட்டன. நீதிபதிகளுக்கு நீதியை வழங்குவதில் சுதந்திரம் அளிக்கவில்லை. அரசியல் அதிகாரிகளை விசாரிக்க தனி நீதிமன்றங்கள் இயங்கின. மேலைநாடுகளைப் பின்பற்றி அங்கு சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. வழக்குகளை விசாரணை செய்வதும், தீர்ப்புகள் வழங்குவதும் வெளிப்படையாக நடைபெற்றன.

**நிதி (Finance)**

இவ்வரசியலமைப்பின்படி நிதி நிர்வாகம் ஒழுங்கு செய்யப்பட்டது. நாடாளுமன்ற அனுமதியின் பேரில் வரிகள் வசூலிக்கப்பட்டன. பிரதிநிதிகள் அவையில் முதலில் வரவு செலவுத் திட்டம் தாக்கல் செய்யப்பட்டு பின்னர் அடுத்த அவைக்கு அனுப்பும் முறை பின்பற்றப்பட்டது. ஒதுக்கப்பட்ட நிதி (Reserve Fund) ஏற்படுத்த அரசியலமைப்பில் விதி ஏற்படுத்தப்பட்டது.

## பொருளாதார பண்பாட்டுச் சீர்திருத்தங்கள்

### தொழில் முன்னேற்றம்

ஒரு நாடு முன்னேற வேண்டுமானால் அங்கு பொருளாதாரம் பொலிவுடன் விளங்கவேண்டும். பொருளாதாரம் பொலிவுடன் விளங்க வேண்டுமானால் அங்கு தொழில் வளமுடையதாகவும் நலமுடையதாகவும் அமைதல் வேண்டும். ஆகவேதான் ஒரு நாட்டின் பொருளாதாரத்திற்கு இரு கண்களாக தொழில் வளமும் வேளாண்மையும் அமைந்திருக்கின்றன. மெய்ஜியின் புரட்சியின் போது தொழில்வளம் பெற்று பல்வகையிலும் சிறந்து விளங்கி இருந்தது. அரசியலில் சீரிய தோற்றத்தைக் கொண்டு வந்த மெய்ஜி பேரரசர் பொருளாதாரத்திலும் அத்தகைய மாற்றத்தைக் கொண்டுவர விழைந்ததில் வியப்பேதுமில்லை. அரசியலும் பொருளாதாரமும் தனித்தனியான கூறுகள் அல்ல என்பதை அவர் உணர்ந்து துரித முறையில் தொழில் வளர்ச்சியைக் கொண்டு வந்தார்.

கி.பி.1868-ம் ஆண்டுக்கு முன்பே ஷோகன்கள் தொழில் வளர்ச்சியில் சிறிது கவனம் செலுத்தினர். மேய்ஜி சகாப்தத்தின்போது இன்னும் தீவிர கவனம் செலுத்தப்பட்டது. சத்சுமா இரும்புத் தொழிற்சாலை ஒன்றை நிர்மாணித்தார். மேலைநாடுகளின் பாணியில் பல கப்பல்கள் கட்டப்பட்டன. மெய்ஜி மன்னர் ஏற்கனவே இருந்த தொழிற்சாலைகளை நன்கு பராமரித்தார். புதிய கப்பல் கட்டும் தொழிற்சாலைகள் நிர்மாணிக்கப்பட்டன. கோபே (Kobe) நாகசாகி (Nagasaki) யோகோசுகா (Yokosuka) ஆகிய இடங்கள் போர்த்தளவாடங்களை தயார் செய்யும் மைய இடங்களாக அமைந்தன. அரசாங்கம் போக்குவரத்து, செய்தித் தொடர்பு ஆகியவற்றிலும் கவனம் செலுத்தியது. தந்தி, ரயில்பாதை ஏற்படுத்தப்பட்டன. 1880-ம் ஆண்டிலேயே ஜப்பானின் பெருநகரங்களில் பல தொலைபேசி மூலம் இணைக்கப்பட்டன. ஜப்பான் மலைகள் நிறைந்த பகுதியாதலால் இருப்புப்பாதைகள் அமைப்பது மிகவும் கடினமாக இருந்தது. அது அவசியமானதாகவும் கருதப்பட்டது. முதலாவது இருப்புபாதை யோகே ஹாமா (Yokohama)வை டோக்கியோவுடன் இணைத்தது. அதன் நீளம் 16 மைல்களாகும். இரண்டாவது இருப்புப் பாதை சோபே, ஒசாகா, கியாத்தோ ஆகிய நகரங்களை இணைத்தது.

மெய்ஜி அரசாங்கம் பட்டு தொழிற்சாலைகள் பலவற்றை ஏற்படுத்தியது. பஞ்சாலைகள் நாடெங்கிலும் நிர்மாணிக்கப்பட்டன. சிமெண்ட், கண்ணாடி (Tiles) ஓடுகள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் தோற்றுவிக்கப்பட்டன. வேதியியல் பொருள்கள் (Chemicals) தயார் செய்யும் தொழிற்சாலை ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. பருத்தி நூற்பாலை ஒன்றும் சர்க்கரைத் தொழிற்சாலை ஒன்றும் ஏற்படுத்தப்பட்டன. இடோவின் காலத்திலும், அவருக்குப் பின்னும் தொழில் அமைச்சகம் ஒன்று தனியே செயல்பட்டு வந்தது. இது 1870-ல் தொடங்கி வைக்கப்பட்டது. பண முதலாளிகளும், தனிப்பட்டோரும் அரசாங்க தொழிற்சாலைகளை நிர்மாணிக்கப் பணஉதவி செய்தனர். அதற்கு குறைந்த வட்டி கொடுக்கப்பட்டது. அரசாங்கத்தின் முயற்சியால் கம்பளி ஆடைகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று துவங்கப்பட்டது. ஜப்பானின் இத்துரித தொழில்வளர்ச்சியால் பெரும் தொழில் முன்னேற்றமடைந்த நாடாக அது எழுச்சி பெற்றது. 1880ம் ஆண்டில் தொழிலில் அவர்கள்

மேற்கொண்டிருந்த ‘‘நேரடிக் கட்டுப்பாடு’’ (Diredct Control) நீக்கப்பட்டு ‘‘மறைமுகப் பாதுகாப்பு (Indirect protection) அளிக்கும் கொள்கையானது பின்பற்றப்பட்டது. இதனால் வெளிநாடுகளின் கடனுதவி இல்லாமலேயே ஜப்பானின் பொருளாதாரம் 19-ம் நூற்றாண்டில் அதிக முன்னேற்றம் பெற்று விளங்கியது என்று கிளைடும் பீர்ஸும் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஜப்பானைத் தாழில்மயமான நாடாக மாற்றுவதில் சில தொல்லைகளும் இருந்தன. முதலீடு இல்லாமல் அரசாங்கம் தவித்தது. வியாபார நுணுக்கங்களும் தொழில் தந்நதிரங்களும் சிலரிடம் சிக்கி கொண்டிருந்தது. அந்தச் சிலர் ஜெய்ப்பட்சு (ணுயடையவளர) என அழைக்கப்பட்டனர். மிட்சுய் (ஆவைளரடை) அிட்சுபிஜி (ஆவைரடிளைாை), சுமிதொமொ (ளுரஅவைழஅந) யசுதா (லுநளரனய) ஆசிய குடும்பங்கள் முக்கியமான ஜெய்பட்சுகளாக விளங்கி வந்தார்கள். அத்துடன் ஒகூரா (முமரசய) அசனோ (யுளயழெ) குபரா (முரடியசய) ஒகாவாதனாகா (முமயறய-வுயழெமழ) கவாசாகி (முயறயளயமை) ஷிபுசவா (ளுாடைரளயறய) புருகவா (Furukawa) மோரி (Mori) ஆகியஇப்பிரிவினர்களில் வலிமை பெற்ற ஜெய்பட்சுகளாக விளங்கி ந்தார்கள். வங்கிகள் (Banks) ஆயுள் காப்புறுதி நிறுவனங்கள் (Life Insurance Companies) பல்வகை தொழில்நிறுவனங்கள் ஆகியவை அந்த ஜெய்பட்சுகளின் கட்டுப்பாடுகளுக்குள்ளிருந்தன. அவர்கள் செம்பு தொழிற்சாலைகளில் மூன்றில் ஒரு பங்கையும் நிலக்கரி உற்பத்தியில் பாதியையும் கப்பல் கட்டும் தொழில் காகிதம் தயாரிக்கும் தொழில், வெளிநாட்டு வாணிகம், எண்ணெய் உற்பத்தி, சர்க்கரை தயாரித்தல் ஆகிய அனைத்துத் தொழில்களையும் அவர்களுடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர். தனிப்பட்டோர் கைகளில் தொழிற்சாலைகள் அனைத்தும் முடங்கி இருந்தாலும் ஜப்பானியர் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் தொழில்துறையில் கொண்டு வந்து புகுத்திய கண்டுபிடிப்புகளைக் கண்டு பயன் அடையும் வாய்ப்பினைப் பெறாமலில்லை. அரசாங்கம் வெளிநாடுகளிலிருந்து இயந்திப் பொருள்களை இறக்குமதி செய்தது. நாட்டின் பாதுகாப்புக்குரிய பொருள்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதழல் அரசாங்கம் கண்ணும் கருத்துமாக இருந்தது. 1890-ம் ஆண்டு இறுதிக்குள் ஜப்பானில் நீராவியினால் இயக்கக் கூடிய 850 இயந்திரங்கள் இடம் பெற்றிருந்தன.

1873ம் ஆண்டில் அரசாங்கம் கனிவளத் துறையொன்றை ஏற்படுத்தியது. அதன் விளைவாக நாட்டில் பல சுரங்கங்கள் கண்டுப்பிடிக்கப்பட்டன. 1880-ல் நிலக்கரிச் சுரங்கங்களும் இன்னபிற கனிவளச் சுரங்கங்களும் ஏற்படுத்தப்பட்டன. வெளிநாட்டவரின் உதவியால் அவைகள பூமியிலிருந்து தோண்டி எடுக்கப்பட்டன. இவ்வாறு மெய்ஜி காலத்தில் ஜப்பான் ஒரு தொழில் மயமான நாடாக மாற்றப்பட்டது.

**2.வேளாண்மை**

**அ**ரசியலில் மாற்றங்களைக் கொணர்வதில் எத்தகைய ஆர்வத்தைக் காட்டினார்களோ, தொழில் வளர்ச்சியில் துரித முனனேற்றம் காண எத்தகைய ஊக்கத்தை காட்டினார்களோ அத்தகைய ஆர்வத்தையும் ஊக்கத்தையும் நாட்டின் முதுகெழும்பு போன்ற வேளாண்மையில் காட்ட முற்பட்டது. ஆரம்பத்திலிருந்தே இத்துறையில் புரட்சிகரமான மாறுதல்களை

கொண்டுவர முற்பட்டார்கள். மெய்ஜி மீட்சிக்குப் பிறகு நிலம் விற்பது சட்டபூர்வமாக்கப்பட்டது. 1873-ம் ஆண்டில் தீவிர வரிச் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. பண்டைய முறைகள் மாற்றியமைக்கப்பட்டன. அதில் மூன்று முக்கிய மாற்றங்களை அரசாங்கம் வெளியிட்டது. 1) நிலத்தின் மதிப்பைப் பொறுத்து வரி விதிக்கப்பட்டது. 2) நிலவரி நிர்ணயிக்கப்பட்டது: அது 3 சதவிகிதமாகும் 3) வரியானது பணமாக வசூலலிக்கப்பட்டது: இதற்கு முன்பு பொருளாக (நெல்) வசூல் செய்தது அகற்றப்பட்டது ஆனால் விவசாயிகளின் நிலை மிகவும் பரிதாபமாகவே இருந்தது. 1874-ம் ஆண்டில் ஒரு குடியானவன் சராசரியாகப் பயிரிடப்பட்டது. 2.35 ஏக்கராகும். அது 1909ல் 2.38 ஏக்கராகவும், 1914-ல் 2.61 ஏக்கராகவும் இருந்தது. இதில் நெல் விளையுமிடங்களும், கரம்பு நிலங்களும் அடங்கியிருந்தன. விவசாயி உற்பத்தி செய்யும் மகசூலில் (ீசழனரஉநச லுநைடன) பெரும் பகுதியை நிலப் பிரபுக்கள் எடுத்துக் கொண்டனர்.

விவசாயிகள் பல தொல்லைகளை அனுபவித்தபோதுங்கூட ஜப்பானின் பொதுவான பொருளாதார முன்னேற்றம் பொலிவோடு விளங்கியது. சிறப்பாக வாணிகம், வேளாண்மை, கைத்தொழில்கள் ஆகியவை வெளிநாட்டவரின் இறக்குமதியால் இறந்துபடவில்லை அழிந்துபடவில்லை. 20-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் விவசாயப் பொருள்களின் உற்பத்தி இரு மடங்காகியது. இதற்கு அரசாங்க நீர்பாசன வசதிகளைச் செய்து கொடுத்தது. மற்றும் பல உதவிகளை அவர்களுக்கு அளித்தது.

மேய்ஜியின் சகாப்தத்தின் பொது தொழில் நுணுக்கம், வேளாண்மை இன்னபிற துறைகளும் நன்கு வளர்ச்சி அடைந்தன. 1873-ல் இடோவின் முயற்சியினால் ஜப்பானில் வங்கி உன்று தோற்றுவிக்கப்பட்டது. இது பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிகோழியது. 1879-ல் அதன் எண்ணிக்கை 4 ஆகவும் 1889-ல் 151 ஆகவும் அது அதிகரித்தது. அயல்நாடுகளுடன் வாணிக உறவுகளை மேற்கொண்டதன் விளைவாக தங்கத்தின் தரம் நிர்ணயிக்கப்பட்டது. தங்கம், வெள்ளி நாணயப் பழக்கமானது நிறுத்தப்பட்டு காகித நாணயம் வெளியிடப்பட்டது. இதை வெற்றியுடன் செயல்படுத்தவே வங்கி முறைகள் ஏற்படுத்தப்பட்டன.

**3.கல்வி சீர்திருத்தங்கள்**

மேய்ஜி காலத்து ஜப்பான், ஜப்பானியர்களின் முயற்சியினால் உண்டாக்கப்பட்ட போதிலும் அது பிறந்த சூழ்நிலையை நோக்கும் போது மேலைநாடுகளின் தொடர்பால் பிறந்தது என்பது தெளிவாகும் என கிளைடும் பீர்ஸூம் குறிப்பிட்டுள்ளார்கள். ஜப்பானியர் இந்த காலத்தில் புரட்சிகரமான கல்விச் சீர்திருத்தங்களைக் கண்டனர். மேலைநாடுகளின் கல்வியின்பால் அவர்கள் பெரிதும் ஈர்க்கப்பட்டனர். அவற்றைக் கற்பதற்கு அவர்களுக்கு எவ்வித தடையுமில்லை. இதற்கு முன்பு உரிமைகள் பெற்ற உயர்குலத்தினர் மட்டுமே கல்வி கற்கும் வாய்ப்பினைப் பெற்றார்கள. மேலைநாட்டு முறையில் சிறப்பாக அமெரிக்க முறையில் அங்கு கல்வி அமல் செய்யப்பட்டது. மெய்ஜி மீட்சிக்குப் பிறகு 1871-ம் ஆண்டில் கல்வி துறையொன்று ஏற்படுத்தப்பட்டது. ஜப்பான் எட்டு பல்கலைக்கழக மாவட்ட பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு பல்கலைக்கழக மாவட்டத்தின் கீழ் முப்பத்திரண்டு உயர்நிலைப்பள்ளிகள் இருந்தன. ஒவ்வொரு உயர்நிலைப்பள்ளி பிரிவின் கீழ் 210 ஆரம்பபள்ளிகள் நடைபெற்று வந்தன. 1872-ம் ஆண்டு கட்டாயக் கல்வி முறை

புகுத்தப்பட்டது. பதினாறுவயதிற்கு உடபட்ட ஒவ்வொரு ஆண்பிள்ளையும் குறைந்தது பதினாறு மாதங்களாவது கட்டாயக் கல்வியை மேற்கொள்ள வேண்டும் என்று சட்டம் கொண்டுவரப்பட்டது. பின்னர் அது மூன்று ஆண்டுகளாக அதிகரிக்கப்பட்டது. அதன் பின்னர் அது ஆறு ஆண்டுகளாக அதிகரிக்கப்பட்டது. அதன் பின்னர் அது ஆண்டுகளாக அதிகமாக்கப்பட்டது மாணவர்களுக்கு தங்கள் குணவியல்புகளை எவ்வாறு அமைத்துக் கொள்ள வேண்டும் என்பது பற்றிக் கற்று கொடுக்கப்பட்டது. நாட்டுப்பற்றும் அவர்களுக்கு ஊட்டப்பட்டது. 1902-ம் ஆண்டுக்கு பிறகு பெண்களுக்கு உயர் கல்வி அளிக்க வகை செய்யப்பட்டது. பிரெஞ்சு, அமெரிக்க பாடத்திட்டங்கள் ஜப்பானில் பின்பற்றப்பட்டன. 1883-ம் ஆண்டில் 33,00,0000 மாணவர்கள் கல்வி கற்றனர். 1990-ம் ஆண்டில் 50,00,0000 மாணவர்கள் கல்வி பெற்று வந்தனர். அப்போது ஜப்பானில் 27,000 ஆரம்பபள்ளிகள் இருந்தன. 1803-ம் ஆண்டில் 240 தொழில் நுணுக்கப் பள்ளிகள் (Techical Schools) செயல்பட்டன. 1886-ம் ஆண்டில் டோக்கியோ பேரரசுப் பல்கலைக்கழகத்தில் எல்லாவிதமான கல்வி முறைகளும் பாடங்களும் கொண்டுவரப்பட்டன. 1897-ம் ஆண்டில் முறைகளும் பாடங்களும் கொண்டுவரப்பட்டன. 1897-ம் ஆண்டில் ஆசரியர்களைப் பயிற்றுவிப்பதாக பயிற்சிபள்ளிகள் ஏற்படுத்தப்பட்டன. பள்ளிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் பல துறைகளில் திறமையான ஆசிரியருக்கே வேலை கொடுக்கப்பட்டது. வெளிநாடுகளிலிருந்து சிறந்த பேராசிரியர்கள் ஜப்பானுக்கு வரவழைக்கப்பட்டனர். ஆயிரக்கணக்கான மாணவர்கள் மேலை நாடுகளில் உயர்கல்வி பெறும் பொருட்டு அனுப்பப்பட்டார்கள்.

1901-ம் ஆண்டில் தான் முதன் முதலாக பெண்களுக்கென ஒரு பல்கலைக்கழகம் ஜிஞ்ஜோ நருசே (Jin-Jo-Naruse) என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. கல்வியில் பல சீரிய மாற்றங்களைக் கொண்டு வருவதில் சிறந்து விளங்கியவர் மோரி அரிதோரி (Mori Arinoti) என்ற கல்வி அமைச்சலாவார். முக்களுக்கு ஆங்கிலக்கல்வியே அளிக்கப்பட்டது. ஏனெனில் ஜப்பானிய மொழி சீன மொழியின் கலப்பாகும் அதனைக் கற்பது மிகவும் கடினமாகும். ஆகவே ஆங்கிலக் கல்வி வழங்கப்பட்டது.

**சுமய பண்பாட்டில் தோன்றிய மாறுதல்கள்**

ஜப்பான் தன்னுடைய பழம் பெருமையை நிலைநாட்டும் வரையில் இத்துறையில் செயல்பட்டது. ஆகவே தன் சமயமான ஷின்தோ சமயத்தை நன்கு பேணி வளர்த்தது. ஜப்பானின் தற்கால தெசீய பற்றுக்கு அவர்களின் ஷின்தோ சமயம் அவசியமானதாக இருந்து வந்துள்ளது என்பதை கிளைடும் பீர்ஸீம் தங்கள் நூலில் குறிப்பிட்டுள்ளார்கள். குன்பூஷிய, புத்த சமயங்கள் காலூன்றுவதற்கு முன்பு தன்னிலைகடகு கொண்டுவர ஷின்தோ சமய சார்பான செயல்களை கவனிக்க அலுவலகம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அதில் அலுவலர்கள் பலர் பணிபுரிந்து வந்தனர். அதைத் தவிர ஏனைய சமயங்கள் தடை செய்யப்பட்டன. ஷின்தோ சமயம் அரசியலையும் விசுவாசத்தையும் நாட்டுப்பற்றையும் கலந்து மக்களுக்கு அளித்தது. மக்கள் பற்றுடனும் பாசத்துடனும் மனசாட்சியுடனும் நடக்கவேண்டும் என்பது வற்புறுத்தப்பட்டது. ஷின்தோ சமயம் இரு வகைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒன்று அரசாங்கத்தால் பாதுகாக்கப்பெற்ற ஷின்தோ சமயம் இது மேலே சொன்னதாகும்.

முற்றொன்னு மக்களால் ஆதரிக்கப்பட்ட ஷின்தோ சமயமாகும். ஷின்தோ சயம் பேரரசர் தெய்வீத் தன்மை பெருந்தியவர் என்றும், ஜப்பான் தெய்வங்களின் பூமி என்றும் அறிவு ஒளியை மக்களுக்கு வழங்கவேண்டுமென்றும் கூறுகிறது. மேய்ஜி காலத்தில் சமயம் நாட்டை வலுவாக்குவதற்கே பயன்படுத்தப்பட்டது. கிளைடும் பீர்ஸாம் ஷின்தோ சமயத்தின் கோட்பாடுகளை மக்களாட்சிக்கு முரணானவை என்று குறிப்பிட்டுள்ளார்கள். இறுதியில் ஷின்தோ சமயத்துடன் புத்த சமயமம் கிறிஸ்துவ சமயமும் பரவின.

மீட்சிக்குப் பின்னர் ஜப்பான் தொழில் துறையில் பீடு நடைபோட்டது என்று காண்போம். முக்கள் தொகையும் அப்போது அதிகரித்து வந்தது. குடியானவர்கள் கிராமங்களைவிட்டு நகரங்களுக்கு குடி பெயர்ந்தனர். எனவே குடும்ப அமைப்பு முறை நிலைகுலைந்தது அதனால் குடும்பத்திலுள்ள அங்கத்தினர்களுக்கிடையே நல்லுலுறவு நிலைக்கவில்லை. மேலும் அவர்கள் மேலைநாட்டு நாகரிகத் தென்றலினால் ஈர்க்கப்பட்டு அதற்கு அடிமைகளானார்களா. வகுப்பு வேற்றுமைகள் அறவே ஒழிக்கப்பட்டன. புத்த சந்நியாசிகளும் திருமணம் செய்து கொண்டு குடும்ப வாழ்க்கையை மேற்கொண்டார்கள். அவர்கள் புலால் உண்டார்கள். மேலைநாட்டு உடை, நடை, ஏனைய பழக்கவழக்கங்கள் மேற்கொள்ளப்பட்டன. தொகுசுவா காலத்தில் எங்கும் குடிகொண்டிருந்து கருச்சிலைவு (யுடிழசவழைெ) சிசுவதை (ஐகெயவெைஉனைந) ஆகிய பழக்கங்கள் தற்போது தடை செய்யப்பட்டன. பொது நீராடுதுறைகளில் இருபாலரும் இணைந்து குளிப்பது, பொழுது போக்கு மன்றங்கள் (ஆண்களும்ஈ பெண்களும் சேர்ந்து பொழுதுபோக்கும் மன்றங்கள்) ஆகியவைகளும் அகற்றப்பட்டன. மேலைநாட்டு நாகரிகத்தில் ஒரு பேரவா அவர்களிடத்தில் காணப்பட்டாலும்கூட 1885 க்குப் பிறகு அவர்கள் பண்டைய பண்பாட்டுக் கூறுகளை நன்கு பாதுகாத்தே வந்தார்கள்.

**சீன ஜப்பானியப் போர்கள்**

**முதல் சீன ஜப்பானியப் போர் அலகு- 1**

**(இரண்டாம் சீன ஜப்பானியப்போர் அலகு -2**

**((முந்தைய பாடங்களில் கொடுக்கப்பட்டுள்ளது**

**ரஷ்ய ஜப்பானியப் போர் (1904-1905)**

ஆசியாவின் வரலாற்றில் மட்டுமில்லாமல்லாமல் உலக வரலாற்றில் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்றாக ரஷ்ய-ஜப்பானியப் போர் இடம்பெற்றுள்ளது. அதன் விளைவுதான் ஆசியாவிலேயே ஜப்பான் ஒரு வல்லரசு எழுச்சி பெற்றது என்றால் அது மிகவும் பொருத்தமுடையதாகும். புன்னாட்டு அரசியலை பல்வகைகளில் மாற்றியமைத்த பெருமை இப்போருக்கே உரித்தாகும்.

**காரணங்கள்**

ரஷ்ய ஜப்பானியப் போருக்கென தனியாக எந்தவொரு காரணத்தையும் கூற இயலாது. போருக்கென விதைகள் 1875-ம் ஆண்டிலேயே தூவப்பட்டுவிட்டன. எனினும் போர் 1905-ம் ஆண்டில்தான் ஏற்பட்டது. அதற்குரிய காரணங்களாவன,

1. 1875-ம் ஆண்டில் ஜப்பானுடைய பகுதியான சகாலின் என்ற தீவை (ளுயமாயடைை ஐளடயனெ) ரஷ்யா வன்முறையில் கைப்பற்றிக் கொண்டது. நாட்டுப்பற்று கொண்ட நல்லோர்கள் இதைக் கண்டு மனம் கொதிப்படைந்தனர். எனினும் அச்சூழ்நிலையில் ஜப்பான் போரை விரும்பவில்லை. ரஷ்யாவின் வன்செயலை உள்ளக்குமுறலோடு இன்செயலாக ஏற்றுக்கொண்டு வாளாயிருந்தார்கள். ஒரு மீன்வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு என்பதைப்போல் ஜப்பான் அதைப் பெறுவதற்கு தக்க தருணத்தை எதிர்நோக்கி இருந்தது.
2. 1895-ல் நடைபெற்ற சீ-ஜப்பானியப் போரில் சீனா படுதோல்வி அடைந்தது. சீனாவிடமிருந்து லியோடுங், போர்ட் ஆர்தர் ஆகிய இரு துறைமுகங்களையும் ஜப்பான் பெற்றுக் கொண்டது. ஆனால் இந்த இரு இடங்களும் மூன்று நாடுகளின் தலையீட்டால் மீண்டும் சீனாவுக்கு கொடுக்கப்பட்டது. அம்மூவர் தலையீட்டுக் கூட்டில் ரஷ்யா, ஜெர்மனி, பிரான்ஸ் சேர்ந்திருந்தன. இந்நாடுகளைத் திருப்பித் தருவதற்கு ரஷ்யாவே முழு முதற் காரணம் என ஜப்பான் எண்ணியது. இந்த அவமானத்தை துடைத்தெறியவும், ரஷ்யாவைப் பழிவாங்கவும் அது காத்துக் கொண்டிருந்தது.
3. ரஷ்யா, சீனாவின் பாதுகாவலன் எனக் கூறிக்கொண்டு ஜப்பானுக்கெதிராக அங்கு தன் செல்வாக்கை நிலைநாட்டியது. ரஷ்யா, சீனாவிடமிருந்து பல வாணிகச் சலுகைகளைப் பெற்றது. குறிப்பாக லியோடுங், போர்ட் ஆர்தர் துறைமுகங்களில் தனிக்காட்டு ராஜா போல அது உலாவி வந்தது. ஜப்பானிடமிருந்து பறித்து அதைச் சமூனாவுக்கு அளிப்பதாகக் கூறி சகல உரிமைகளையும் ரஷ்யாவே அனுபவிப்பதைப் பார்த்து ஜப்பானுக்கு வயிற்றெரிச்சலாக இருந்தது. இச்சூழ்நிலையில் அங்கு நாட்டுப்பற்று விரைவாகப் பரவி மக்களின் உள்ளத்தை ஆட்கொண்டது.
4. 1894-95-ம் ஆண்டுகளில் நடைபெற்ற சீன-ஜப்பானியப் போரில் கொரியாவை பெற்றுக்கொண்டது என்று கண்டோமல்லவோ? ஆங்கு தன் விருப்பம்போல் ஜப்பான் சில சீர்திருத்தங்களை அமல் செய்தது. கொரியாவின் சுதந்திரத்தை ஜப்பான் அனுமதித்தாலும் கூட அதன் பொருளாதாரம் ஜப்பானுடைய செல்வாக்கில் சிக்குண்டு கிடந்தது. அச்சீர்திருத்தங்களை அந்நாட்டு அரசி விரும்பவில்லை. அதன் விளைவாக கிளர்ச்சி ஏற்பட்டு அவர் கொல்லப்பட்டார். இதனால் ஜப்பானை கொரியர்கள் வெறுத்தனர். அப்போது கொரிய மன்னர் ரஷ்ய தூதரகத்தில் தஞ்சமடைந்தார். இதை ஜப்பான் வெறுத்தது. அத்துடன் ரஷ்யாவின் செல்வாக்கு அங்கு நன்கு வளர்ந்து வந்தது. ஆகவே ரஷ்யா, ஜப்பான் ஆகிய இரு நாகளுக்கிடையில் நிலவிய உறவில் பிளவு ஏற்பட்டது. பல உடன்பாடுகள் ஏற்பட்டும் நிலைமை சரியாகவில்லை.அவர்களுக்கிடையில் இருந்த பிணக்கு மேலும் மேலும் மோசமடைந்து கொண்டே சென்றது. அப்போது ஜப்பான் ரஷ்யாவிடம் ஒரு ஆலோசனையைத் தெரிவித்தது. அதாவது மஞ்சூரியாவில் ரஷ்யா தன் செல்வாக்கை நிலைநாட்டிக் கொள்வதென்பதும், கொரியாவை தன்னிடம் விட்டுவிடவேண்டுமென்பதும் ஆகம். அந்த ஆலோசனை ரஷ்யா, ஜப்பானின் பொருளாதார ஆசைகளை மட்டும் கொரியாவில்

நிறைவேற்றிக் கொள்ள ஒப்புக் கொண்டது. ஆனால் அது அரசியல், இராணுவ முறைகளை அங்கு நிலைநாட்ட அனுமதிக்கவில்லை. இதை ஜப்பான் விரும்பாததால் அமைதிப் பேச்சு வார்த்தைகள் முறிந்தன. 1904-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 12-ம் நாள் மீண்டும் ஜப்பான் அதே ஆலோசனையை ரஷ்யாவிடம் தெரிவித்தது. இதை ரஷ்யா கவனிப்பதாக காட்டிக் கொள்ளவில்லை. இதைக்கண்ட ஜப்பான் ரஷ்யா மீது அடங்காக் கோபம் கொண்டது. இதுவே ரஷ்ய-ஜப்பரினய போருக்கு மிக முக்கியமான காரணமாகும்.

5. ரஷ்ய-ஜப்பானியப் போருக்கு மற்றொரு முக்கிய காரணம் ரஷ்யாவும், ஜப்பானும் கீழ்த்திசை நாடுகளில் குறிப்பாக மஞ்சூரியாவிலும், கொரியாவிலும் தங்கள் தங்கள் ஆதிக்கத்தைப் பெருக்கிக் கொள்ள போட்டியிட்டதேயாகும். கோரியாவில் அவர்கள் கொண்டிருந்த கொள்கை வேறுபாட்டை மேலே கண்டோம். மஞ்சூரியாவில் இருநாடுகளும் ஆதிக்கப் போட்டியிலிறங்கின. சீன-ஜப்பானியப் போருக்கு பிறகு ரஷ்யா மஞ்சூரிய இருப்புப் பாதையை அமைக்க சீனாவிடமிருந்து சலுகையை பெற்றது. அது 1000 மைல் நீளங் கொண்ட பெரிய இருப்புப் பாதையாகும். ஆதை அமைக்க ஆயிரகணக்கான ரஷ்யர்கள் மஞ்சூரியாவில் வந்திறங்கினர். சீனாவில் பாக்சர் கலகம் ஏற்பட்டபோது ரஷ்யா ஓடோடிச் சென்று உதவிச் செய்து அதன் நல்லெண்ணத்தைப் பெற்றது அப்பெரும் இருப்புபாதையை பாதுகாக்க வேண்டி ரஷ்யா தன் படைகளையும் அங்கு அனுப்பி வைத்தது. உண்மையிலேயே மஞ்சூரியாவை கபளீகரம் செய்ய வேண்டுமென்பதே ரஷ்யாவின் நோக்கமாகும். சீனாவிடமிருந்து மென்மேலும் சலுகைகளைக் கோரிய ரஷ்யாவின் தொல்லை தாங்காமல் அது உலக நாடுகளின் உதவியைக் கேட்டது. ரஷ்யாவைப் போலவே ஜப்பானும் அதன் இயற்கை வளங்களைப் பயன்படுத்தும் வகையில் அதிக ஈடுபாடு காட்டியது. வளர்ந்து வரும் ரஷ்யாவின் செல்வாக்கு ஜப்பானின் பாதுகாப்புக்கு பங்கம் ஏற்படும் என்று கருதிய ஜப்பான் ரஷ்யாவிடம் அமைதியாகச் செல்ல முயன்றும் தோல்வி கண்டது. இவ்வாறு ரஷ்யாவும் ஜப்பானும் மஞ்சூரியாவில் தங்கள் தங்கள் ஆதிக்கத்தைக நிலைநாட்ட போட்டியிட்டுக் கொண்டது போருக்கு வழி வகுத்தது.

6. 1902-ம் ஆண்டில் ஏற்பட்ட ஆங்கிலேய-ஜப்பானிய உடன்படிக்கையானது ரஷ்யாவின் வளர்ந்துவரும் செல்வாக்கைக் கண்டு பயமடைந்த அந்நாடுகளிரண்டும் ஏற்படுத்திக் கொண்ட ஒன்றாகும். ரஷ்யாவிடம் அமைதியாகச் செல்வதற்கு மாறாக இங்கிலாந்துடன் செய்து கொண்ட இவ்வுடன்படிக்கையை பல ஜப்பானியர்கள் கண்டித்தனர். ரஷ்யாவிற்று நிலையான ஒரு நண்பன் இல்லாதபோது இவ்வுடன்படிக்கையானது ஏற்படுத்தப்பட்டது. இதனால் ஜப்பானுக்கு புதிய தெம்பும், ஆர்வமும், நம்பிக்கையும் ஏற்பட்டது.

7. மேய்ஜி மீட்சிக்குப் பிறகு நாடெங்கிலும் நாட்டுப்பற்று வளர்ந்து வரலாயிற்று. வலிமை பொருந்திய நாடாக மாறவேண்டுமானால் ஜப்பானின் இராணுவம் நவீன முறையில் அமைக்கப்படுதல் வேண்டும் என்பதை அது உணர்ந்தது. நாட்டில் உள்ள எல்லா

நிறுவனங்களும் நவீனமயமாக்கப்பட்டன. இந்த நவீனமயமாதல் (அந்நாட்டு மக்களிடத்தில் தளராத தன்னம்பிக்கையை உண்டாக்கியது. தங்கள் பேராதிக்க வளர்ச்சிக்கு எது முட்டுக்கட்டையாக இருந்தாலும் அதை முறித்து எறிவோம் என்று அவர்கள் வீறுகொண்டு எழுந்தார்கள். எனவே ஜப்பான் அவர்களுக்கு முட்டுக்கட்டையாக நிற்கவே அதை முறியடிக்க அவர்கள் அதனுடன் போரில் ஈடுபட்டார்கள்.

8. ரஷ்ய-ஜப்பானியப் போருக்கு மற்றொரு முக்கிய காரணம் ஜப்பானின் நாடுபிடிக்கும் ஆசையே ஆகும். ஜப்பானுக்கு சீனாவைத் தவிர, வேறு இடத்தில் தன் ஆதிக்கத்தை பரப்புவதற்கு இடமில்லை. தன் செல்வாக்கை அங்கு விரிவாக்கி, தன்னுடைய வளர்ந்துவரும் மக்கள் தொகையை அங்கு குடியேறச் செய்து தன் நாட்டில் உற்பத்தியாகும் பொருட்களை அங்கு நிரப்பி வாழ விருப்பம் கொண்டது. சிறப்பாக அதன் கண்களுக்கு கொரியாவும் மஞ்சூரியாவும் தகுதியான இடங்களாகக் காட்சியளித்தன. அந்த இடங்களை அதற்கு வழங்க மறுக்கவே, அது பொறுமையிழந்தது: பொங்கி எழுந்தது, போரில் ஈடுபட்டது.

**போர் நிகழ்ச்சிகள்**

ரஷ்யாவுக்கும் ஜப்பானுக்கும் இடையே நிலவிய உறவில் பிளவு ஏற்பட்டதால் போர் ஆரம்பமாயிற்று. 1904-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 8,9 ம் நாட்களின் நள்ளிரவில் ஜப்பான் தன்னுடைய படைகளை கொரியாவிற்கு அனுப்பியது. கோரியாவின் தலைநகரான செவுலை முற்றுகையிட்டு ஆர்தர் துறைமுகத்தை தாக்க அது திட்டமிட்டது. பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகளிலிருந்து உதவியை எதிர்பார்த்த ரஷ்யா ஏமாற்றம் அடையவே தனியாக ஜப்பானை தாக்க முற்பட்டது. மே திங்கள் முதலாம் நாளட சில ஜப்பானிய வீரர்கள் ரஷ்யாவிற்கு குத்தகைக்கு விடப்பட்ட சில பகுதிகளை (தென் மஞ்சூரியாவின அருகில் உள்ளவை) முற்றுகையிட்டார்கள். ரஷ்யர்களை ஆர்தர் துறைமுகத்திலிருந்து விரட்டியடிக்கும் பணி ஆரம்பமாயிற்று.

ஜப்பானின் சார்பில் உரியூ என்ற கப்பற்படைத் தளபதியும் டோகோ என்ற தரைப்படைத் தளபதியும் கலந்து கொண்டனர். ஆர்தர் துறைமுகத்தில் நடைபெற்ற போர் கடுமையாக இருந்தது. இரு தரப்பிலும் கடும் சேதங்கள் விளைந்தன. அப்போராட்டம் 6 நாட்கள் தொடர்ந்து நடைபெற்றது. ஆர்தர் துறைமுகம் விழாததால் மற்றொரு தளபதி கைமாமுரா அங்கு வந்து சேர்ந்தார். அப்போது வினாடிவாஸ்டாக் நகரமும் தாக்கப்பட்டது. ஆர்தர் துறைமுக முற்றுகையை முறியடிக்க மக்காராப் என்ற ரஷ்ய தளபதி முனவந்தார். போர் தொடர்ந்து நடைபெற்றது. டோகோவின் தாக்குதல்களுக்கு தாங்காமல் ரஷ்யக் கப்பல்களும் அழிந்தன. ரஷ்ய தளபதியும் மாண்டு போனார். எனினும் ரஷ்யர்கள் பலத்த எதிர்ப்பைக் கொடுத்தனர். எனவே ஜப்பானியரால் ஆர்தர் துறைமுகத்திலும் விளாடிவாஸ்டாகிலும் நுழைய முடியவில்லை.

அதே சமயத்தில் ஜப்பானிய படைகள் செவுலில் போரிட்டு கொண்டிருந்தன. ஜப்பானியப் படைகளின் எண்ணிக்கையே கணக்கிலடங்கா. அவர்கள் பெற்ற பயிற்சியோ

சொல்லும் தரமன்று. அவர்கள் கொண்டிருந்த ஆயுதங்களோ அளவிலடங்கா. ஆதை போலவே ரஷ்யாவிடமும் ஏராளமான படை வீரர்கள் இருந்தனர். ரஷ்யா இப்போருக்கு குறைந்த வீரர்களை அனுப்பி விட்டு மீதியுள்ளவர்களை ஐரோப்பிய எதிரிகளைக் கண்காணிக்கப் பயன்படுத்தியது. ஆர்தர் துறைமுகத்திலும் விளாடிவாஸ்டாக்கிலும் போர் நடைபெற்றுக கொண்டிருந்த போதே குரோகியின் தலைமையில் ஒரு படை வடகொரியாவை முற்றுகையிட்டு, பின்யாங் என்ற நகரைக் கைப்பற்றியது. அதன் பின்னர் யாலுநதியின் கரையில் தங்கியிருந்த ரஷ்யப் படையை தாக்க முற்பட்டார். அப்போதுதான் ரஷ்யாவின் தலைமைத் தளபதியான குரோபாகின் அங்கு வந்து சேர்ந்தார். இரு தரப்பு படைகளும் யாலு நதியின் துணை நதியான ஐஹோவில் போருக்குத் தயாராக அணிவகுத்து நின்றன. போர் ஆரம்பித்தது. வெற்றி மகன் ஜப்பானைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தான். எனவே அவர்கள் ரஷ்யப் படைகளைப் பின்னடையச் செய்து கிஞ்தேய், இக்கியூரி, ஒசேகித் தீவு, சுகோதைத் தீவு மற்றும் பல இடங்களையும் கைப்பற்றிக் கொண்டனர். இதில் ஜப்பான் பெரு வெற்றி பெற்றது. இப்போரில் ஜப்பானியரின் பக்கம் ஆயிரம் பேரும், ரஷ்யாவின் பக்கம் மூவாயிரம் பேரும் கொல்லப்பட்டனர்.

ரஷ்யப் படைகளுக்கும் ஜப்பானியப் படைகளுக்கும் போர் ஆங்காங்கே நடைப்பெற்றுக் கொண்டிருந்தன. மே திங்கள் முதலாம் நாள் மற்றொரு ஜப்பானியக் கடற்படை ஒன்று தளபதி ஒகு (Oku) தலைமையின் கீழ் தெற்கு மஞ்சூரியாவில் லியோடுங் என்ற இடத்தை வந்தடைநத்து. மற்றும் தளபதி நொத்சு (Nodzu) தலைமையில் மற்றொர படைவ ந்து சேர்ந்தது. மே திங்கள் 26-ம் நாள் ஜப்பானியர் நான்ஷன் (Nanshen) என்ற ரஷ்யப் போக்குரத்துத் தளத்தை துண்டித்தனர். அவர்களை ஆர்தர் துறைமுகத்திலிருந்து வெளியேற்ற நினைத்து கடும் போரில் இறங்கினர். அதன் பின்னர் ஜீலை 31-ம் நாளிலிருந்து தொடர்ந்து சில நாட்களில் எஞ்சியிருந்த ஜப்பானியப் படைகள் ஏறக்குறைய 1,23,000 வீரர்கள் 1,58,000 வீரர்களைக் கொண்டு விளங்கிய ரஷ்யத் தளபதி குரோபாகின்னை முக்டன் என்ற இடத்திற்கு தெற்கில் சந்தித்தன. முக்டன் என்பது மஞ்சூரியாவின் தலைநகரமாகும். ஆகஸ்டு திங்கள் 23-ம் நாளிலிருந்து செப்டம்பர் திங்கள் 3-ம் நாள் வரை லியோயாங் என்ற இடத்தில் கடும் போரும் (The Battle of Liaoyang) அதன் பின்னர் முக்டனில் 1905-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 23-ம் நாளிலிருந்து மார்ச் திங்கள் 19ம் நாள் வரை மற்றொரு போரும் (The Battle of Mukden) நடைபெற்றன. முக்டன் போரில் முதன்முதலாக ஜப்பான் ரஷ்யாவைவிட அதிக வீரர்களைப் பெற்றிருந்தது. ஜப்பானின் பக்கம் 4,00,000 வீரர்களும் ரஷ்யாவின் பக்கம் 3,25,000 வீரர்களும் இருந்தனர். இருதரப்புப் படைகளும் கடுமையாக மோதிக் கொண்டன. இப்போரில் ரஷ்யா படுதோல்வி அடைந்தது. தோல்வி மேல் தோல்வி கண்ட ரஷ்யா முக்டன் போரில் முற்றிலும் முறியடிக்கப்பட்டது. இப்போரை உலக வரலாற்றில் மிகச் சிளப்பு வாய்ந்த போராக வரலாற்றாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இப்போரின் வெற்றிக்கு ஜப்பானியக் கடற்படைத் தளபதி டோகோவின் மனந்தளராமையும் ஊக்கமும் விடா

முயற்சியும் வீரச்செயலுமே காரணங்களாகும். முக்டன் போர்க்களம் ஒரு நீண்ட போர்க்களமாகும். இதைச் சமாளிக்க ரஷ்யர்களால் முடியவில்லை. எனவே அவர்கள் தோல்வியைத் தழுவிக் கொண்டனர்.

முக்டன் போரில் முறியடிக்கப்பட்டுள்ள ரஷ்யா மீண்டுமொரு பெரும் போரில் தோல்வியைக் கண்டது. அதுதான் சூசிமா ( Tsushima) என்ற கடற்போராகும். ஆப்போரில் தளபதி டோகோ தன் முழுத் திறமையையும் தன் பேராற்றலையும், போராற்றலையும் காட்டினார். ரஷ்யப் படைகளைத் தளபதி டோகோ சூசிமாச் சண்டையில் (The Battle of Tsushima) தோற்கடித்தார். ரஷ்யாவின் கடற்படை படுநாசத்திற்குள்ளாகியது. அவர்களுடைய பால்டிக் கடல் கப்பற்படைத்தளம் சின்னாபின்னமாக்கப்பட்டது. மாவீரன் நெப்போலியனுக்கும் தளபதி நெல்சனுக்கும் நடந் டிரபால்கர் போருக்குப்பின் நவீன போர்க் கப்பல்களைப் பயன்படுத்திய முதல் போர் சூசிமாப் போரேயாகும். ஆகவே இப்போர் ரஷ்ய-ஜப்பானியப் போரின் தலைவிதியை நிர்ணயித்தது என்றால் அது மிகையாகாது. இத்துடன் போரும் முடிவுற்றது.

**அமைதியை நோக்கி**

ரஷ்ய-ஜப்பானியப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோதே அமைதிப் பேச்சுவார்த்தைகளைப் பற்றி அவ்விரு நாடுகளும் சிந்தித்துக் கொண்டிருந்தன. மேலும் பெரிய வல்லரசான ரஷ்யா சிறிய நாடான ஜப்பானிடம் படுதோல்வி அடைந்த செய்தி உலக நாடுகளிடையே பரபரப்பை மூட்டின. தொடர்ந்து நடைபெற்று வந்த போர்களினால் ஜப்பானின் செல்வம் சீரழிந்தது. இதனால் நாட்டில் மனக்கசப்பு வளர்ந்தது. இச்சூழ்நிலையில் இரு நாடுகளும் அமைதியை நோக்கி அடியெடுத்து வைத்தன. அமெரிக்க குடியரசு தலைவர் ரூஸ்வெல்ட் என்பவர் தலையீட்டால் இரு நாடுகளுக்கிடையில் அமைதிப் பேச்சுவார்த்தைகள் 1905-ம் ஆண்டு ஜுன் திங்கள் 3-ம் நாள் ஆரம்பிக்கப்பட்டன. ரஷ்ய மன்னர் இரண்டாம் நிக்கோலஸ் அதில் கலந்து கொண்டார். இவ்வாறு துாய பீட்டர்ஸ்பர்க்கும் டோக்கியோவும் 1905-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 5-ம் நாள் போர்ட்ஸ்மவுத் உடன்படிக்கையில் கையெழுத்திட்டன.

**பார்ட்ஸ்மவுத் உடன்படிக்கை (Treaty of Portsmouth)**

போர்ட்ஸ்மவுத் உடன்டிக்கையைப் பற்றி கிளைடும் பீர்ஸும் கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளனர். ‘‘இவ்வுடன்படிக்கையானது துாரக்கிழக்கு நாடுகளின் தற்கால வரலாற்றில் ஏற்பட்ட முக்கியதோர் உடன்படிக்கையாகும். இப்போரை நீட்டிப்பதால் யாதொரு பயனுமில்லை என்பதை இரு சாராரும் உணர்ந்தனர். உண்மையிலேயே இவ்வுடன்படிக்கை மஞ்சூரியாவில் ரஷ்ய ஜப்பானியரின் நட்புறவிற்கு நல்வழியை அமைத்துக் கொடுத்தது’’. போரின் முடிவில் இவ்வுடன்படிக்கை ஏற்பட்டது.

**விதிகள்**

1. கொரியாவில், ஜப்பானுடைய அரசியல், பொருளாதார ராணுவ உரிமைகளை ரஷ்யா அனுமதித்தது.

2. லியோடுங் தீபகற்பத்தில் தான் அனுபவித்து வந்த உரிமைகளை ஜப்பானுக்கு மாற்றிவிட ரஷ்யா ஒப்புக் கொண்டது. மேலும் ஆர்தர் துறைமுகத்தையும் முக்டனையும் தொடர்பு படுத்தும் அல்லது இணைக்கும் இருப்புப்பாதையையும் அதற்குத் தருவதாக ஒப்புக் கொண்டது.
3. 1875-ம் ஆண்டில் ரஷ்யா கைப்பற்றி சகாலின் தீவை ஜப்பானுக்குதிருப்பித்தர ஒப்புகட கொண்டது. அதில் மீன் பிடிக்கும் உரிமையும் அதற்குக் கிடைத்தது.
4. ரஷ்யாவும் ஜப்பானும் தங்கள் படைகளை மஞ்சூரியாவிடமிருந்து 18 மாதங்களுக்குள் திருப்பிப் பெற்றுக்கொள்ளச் சம்மதிதன. துங்களுடைய இருப்புப்பாதைகளை பாதுகாக்க அவைகள் படைகளை வைத்துக் கொள்ளலாம்.
5. முங்சூரியாவில் வாணிகம், தொழில் இவைகளின் வளர்ச்சிக்காக எல்லா நாடுகளுக்கும் பொதுவான நடவடிக்கைகளை சீனா எடுத்துக்கொள்ளுமானால் அதை ரஷ்யாவும், ஜப்பானும் மறுக்கக் கூடாது.
6. மஞ்சூரியாவிலுள்ள இருப்புப்பாதைகளை வணிக போக்குவரத்துக்கு மட்டுமே பயன்படுத்திக் கொள்வது என்றும் மற்ற அரசியல் இராணுவ நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதில்லை என்றும் இரு நாடுகளும் ஒப்புக்கொண்டன.
7. இரண்டு நாடுகளும் காசில்லா நுழைவுச் சீட்டுக் கொள்கையை சமமாக எல்லா நாடுகளிடத்திலும் பராமரிப்பது என்று ஏற்றுக் கொண்டன.

**போரின் விளைவுகள்**

1. ரஷ்ய-ஜப்பானியப் போரின் விளைவாக கொரியாவும் மஞ்சூரியாவும் ஜப்பானின் வசமாயின. ரஷ்ய ஆபத்தனாது மறைந்தது. ஜப்பான் தன்னுடைய இராணுவ ஆலோசகர்களைக் கொரியாவில் நியமித்தது. மஞ்சூரியாவின் தென்பகுதி ஜப்பானின் செல்வாக்கு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.
2. அமெரிக்காவிற்கும் ஜப்பானுக்கும் இடையே நிலவி வந்த உறவு முறிய ஆரம்பித்தது. அமெரிக்காவின் செல்வாக்கு ஜப்பானால் தடைப்பட்டு விடுமோ என அது அஞ்சியது.
3. ஜப்பானில் அரசியல் மாற்றம் ஏற்பட்டது. போரில் அது தன் செல்வம் எல்லாம் இழந்தது. உடன்படிக்கையின் போது நஷ்ட-ஈடு கேட்கும்படி மக்கள் வற்புறுத்தியும் அரசு செவிடன் காதில் ஊதிய சங்கு போல இருந்துவிட்டது. இதனால் வெறுப்புற்ற மக்கள் சிறிது நாட்களுக்குப் பிறகு அரசாங்கத்தை மாற்றினார்கள. ஆப்போதிருந்தது கட்சூரா அமைச்சரவையாகும்.
4. ஜப்பானின் பெருமை பன்னாட்டு அரசியல் அரங்கில் தெரியலாயிற்று. ரிச்சர்டு ஸ்டோரி கூறுவது போல உலக வல்லரசுகளில் ஒன்றாக ஜப்பான் விரைவிலேயே எழுச்சி பெற்றது. அந்நாடுகளால் பாராட்டப்படன என்பது உண்மையாகும். இதனால் மேலும் மேலும் தன் பேராதிக்கக் கொள்கையை விரிவாக்கும் எண்ணத்திலேயே இருந்து வந்தது.

**5.** கோரியா மஞ்சூரியா ஆகிய நாடுகளில் வளமான பகுதிகளைப் பெற்ற ஜப்பான் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைய வழிவகுத்துக் கொண்டது. பொருளாதார முன்னேற்றம் ஏற்படவே மக்களின் வாழ்க்கைத்தரமும் உயர்ந்தது.

**6.** போரின் விளைவாக ரஷ்யா தோற்கடிக்கப்பட்டது. இது ஐரோப்பிய அரசியல் அரங்கில் பல மாற்றங்களைக் கொண்டு வந்தது. ஆரம்பத்தில் ஜப்பான் தோற்றுவிடும் என்று கருதியதால் ஐரோப்பிய நாடுகள் இப்போரில் அக்கறை காட்டவில்லை. ரஷ்யா தோற்கடிக்கப்பட்டவுடனே உலகமே வியப்பில் ஆழ்ந்தது. போரினால் ஜப்பானுக்கு அதிக நன்மைகளும் பலன்களும் கிடைத்தன என்று மேலே கண்டோம். ஆனால் ரஷ்யாவுக்கு அதிக நஷ்டங்களும் தீமைகளுமே ஏற்பட்டன. ரஷ்யாவில் வளர்ந்து வரும் ஆசிய செல்வாக்கு தடை செய்யப்பட்டது. ரஷ்யாவைப் பொறுத்தமட்டில் இது 1914-ம் ஆண்டு சீனாவில் பெற்றிருந்த செல்வாக்கினை இழந்தது. பன்னாட்டு அரசியலில் அது பெருமை குன்றி நின்றது. மேலும் இப்போர் ரஷ்யாவின் இராணுவ கப்பற்படைகளின் திறமையின்மையை உலகுக்கு வெளிப்படுத்தியது. இதனால் ரஷ்யாவில் உள்நாட்டுப்போர் ஏற்பட்டது. அது 1917-ம் ஆண்டில் ஏற்பட்ட ரஷ்யப் புரட்சியில் போய் முடிவுற்றது. தொழிலாளர்களிடையே அமைதியின்மை ஏற்பட்டது. சார் மன்னரின் பெருமை குன்றியது. மனச்கசப்பு, வெறுப்பு, அமைதியின்மை நாட்டில் குடிகொண்டன. விருப்பத்திற்கு மாறாக சார் ரஷ்ய மக்களுக்கு சில சீர்திருத்தங்களை அளிக்க வேண்டியிருந்தது.

**7.** ஜப்பான், மஞ்சூரியா, ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளில் விளைவுகளை ஏற்படுத்திய இப்போர் ஐரோப்பிய நாடுகளையும் விட்டு வைக்கவில்லை. ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் நிலவி வந்த வல்லரசு சமநிலையில் (Balance of Power) கலங்கம் ஏற்பட்டது. அதற்கு ஊறு நேர்ந்தது, ரஷ்யா கீழே தள்ளப்பட்டதும் அதனால் உண்டான வெற்றிடத்தை நிரப்புவதற்குப் போட்டி ஏற்பட்டது. ஜப்பான் வல்லரசாக உலக அரசியலில் பவனி வந்தது. அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்குமிடையிலான உறவில் பிளவு ஏற்பட்டது. சீனாவில் சீர்திருத்த இயக்கங்கள் தோன்றலாயின. சீன மாணவர்களும் ஜப்பானியரை முன்மாதிரியாகக் கொண்டு அவர்களைப் போல வளர்ச்சி அடைய எண்ணி அங்கு சென்றனர். அங்கு கற்றுத் திரும்பிய அவர்கள் சீனாவில் புரட்சியை ஏற்படுத்தினார்கள்.

**8.** இப்போரின் வளைவாக உலகின் பல பகுதிகளில் விடுதலை இயக்கங்கள் மலர்ந்தன. இந்தியாவிலும் அது ஏற்பட்டது. இந்தோ-சீனா கிழக்கு இந்தியத் தீவுகள் ஆகிய இடங்களையும் அது விட்டு வைக்கவில்லை. அவைகளும் தங்களுடைய பேராசை பிடித்த பேராதிக்க நாடுகளின் பிடியிலிருந்து விடுபட எண்ணின.

**9.** இப்போரின் விளைவாக ரஷ்யாவின் திறமையின்மை உலகுக்கு எடுத்துக்காட்டப்பட்டது என்று கண்டோம். எனவே ரஷ்யா இங்கிலாந்துடன் ஒரு

உடன்படிக்கைச் செய்து கொண்டது இதற்கு ஆங்கிலேய-ரஷ்ய உடன்படிக்கை (Anglo-Russian Convention)என்று பெயர்.

**ரஷ்யா தோல்வி அடைந்ததற்கான காரணங்கள்**

வலிவும், பொலிவும் பெற்று விளங்கிய பெரிய நாடான ரஷ்யா சுண்டைக்காய் நாடான ஜப்பானிடம் தோல்வியடைந்ததால் உலகமே வியப்பில் ஆழ்ந்தது. அதற்குரிய காரணங்களாவன,

முதலாவதாக, ரஷ்யாவிற்கும், ஜப்பானுக்கும் மனக்கசப்பு ஏற்பட்ட போதிலும் கூட ரஷ்யா போரை எதிர்பார்க்கவில்லை. ஆகவே அது தன்னுடை இராணுவத்தைப் பலப்படுத்தாமல் வாளாவிருந்துவிட்டது. அதே நேரத்தில் ஜப்பான் என்றாவது ஒரு நாள் ரஷ்யாவின் மீது போர் தொடுத்தே ஆக வேண்டும் என்ற எண்ணத்தில் செயல்பட்டது. திடீரென்று தாக்கிய ஜப்பானை ரஷ்யா தடுக்கமுடியாமல் திணறியது.

இரண்டாவதாக, ரஷ்யாவிற்குப் பணநெருக்கடி ஏற்பட்டது. பிரான்சின் உதவியை எதிர்பார்த்து அது ஏமாந்தது. அச்சமயத்தில் உள்நாட்டுத் தொல்லைகளும் அதை நெருக்கிக் கொண்டிருந்தன. இருதலைக்கொள்ளி எறும்பு போலான ரஷ்யா, நெருப்பிலிட்ட புழுவைப்போல துடித்துக் கொண்டிருந்தது. எனவே அது தோல்வியை தழுவிக் கொண்டது.

மூன்றாவதாக, மஞ்சூரியாவில் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த போது ஜப்பானியப் படைகளுக்குத் தேவையான ஆயுதங்கள், உணவுப்பொருட்கள் விலைவில் கிடைத்தன. ஏனெனில் ஜப்பான் மஞ்சூரியாவின் அருகில் உள்ளது. ரஷ்யா தொலைவில் உள்ளதால் அதற்குத் தேவையான போர்த் தளவாடங்கள், உணவுப்பொருட்கள் கிடைக்காமல் திணறியது. தொடர்பு கொள்ளவும் அதனால் முடியவில்லை.

நூன்காவதாக, ஜப்பான் ஆங்கிலேய-ஜப்பானிய உடன்பாட்டில் சேர்ந்திருந்ததால் இங்கிலாந்தின் ஆதரவு அதற்குக் கிடைத்தது. ஆனால் ரஷ்யாவுடன் சேர்ந்திருந்த நாடுகளான ஜெர்மனியும் பிரான்சும் இங்கிலாந்தின் பகைமையைத் தேடிக்கொள்ள விரும்பவில்லை. அமெரிக்காவும் தலையிடாமல் இருந்துவிட்டது. இதனால் ஜப்பான் வெற்றி பெற்றது. ரஷ்யா தோல்வி அடைந்தது.

இவ்வாறு ரஷ்ய-ஜப்பானியப் போர் ஜப்பானின் செல்வாக்கை ஆசியாவில் மட்டுமில்லாமல் உலகிலேயே நிலைநாட்டிவிட்டது என்ப துநன்கு விளங்கும். ரஷ்யாவிற்கு உள்நாட்டிலும் வெளி உலகிலும் பல பிரச்சனைகளை அப்போர் உண்டாக்கிவிட்டது.

**ஜப்பானும் கொரியாவும்**

ஜப்பானுக்கும் கொரியாவுக்குமிடையே 16-ம் நூற்றாண்டிலிருந்தே தொடர்பு வளர ஆரம்பித்தது. அந்த நூற்றாண்டில்தான் ஜப்பான் கொரியாவின் மீது தன் கடைக்கண் பார்வையைச் செலுத்தியது. கொரியா ஜப்பானின் செல்வாக்கில் வாழ்வை நோக்கி நடைபோட ஆரம்பித்தது. ஜப்பானைப் போலவே சீனாவும் கொரியாவில் தன் செல்வாக்கை செலுத்த முற்பட்டது. ஜப்பான் வெளிநாடுகளுடன் தன்னுடைய உறவினை துண்டித்துக்கொண்டு கதவுகளை இறுக மூடிக்கொண்டு வாழ்ந்த 200 ஆண்டுகளில் அதனுடைய செல்வாக்கானது கொரியாவில் குறையலாயிற்று, அது செல்லாக்காசாக மதிக்கப்பட்டது. அதே சமயத்தில்

சீனாவின் செல்வாக்குப் பெருகியது. மேய்ஜி மீட்சிக்குப் பிறகு ஜப்பான் தனிமை வாழ்வை முடித்துக் கொண்டு வெளி உலகில் காலடி எடுத்து வைத்தபோது மீண்டும் அது கொரியாவைக் காண விழைந்தது. மெய்ஜி மன்னர் கொரியாவில் தன் ஆதிக்கத்தை நிலைநாட்ட முயற்சி செய்தார். கொரியா மக்கள் அதைக் கண்டு கொதிப்படைந்தனர். இந்த அவமானத்தை ஜப்பானின் தேசியவாதிகள் பொறுத்துக் கொள்ளவில்லை. மெய்ஜி மன்னர் கொரியாவின் கொட்டத்தை அடக்க தக்க தருணத்தை எதிர் நோக்கியிருந்தார்.

1870-க்கும் 1873க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் ஜப்பான் மறுபடியும் கொரியாவில் வணிக உறவுகளை மேற்கொள்ள முயற்சி செய்தது. ஆனால் தோல்வியே கண்டது. இதற்கிடையில் சீனாவும் ஜப்பானும் கொரியாவில் ஆக்கிரமிப்பு தவிர்ப்புக் கொள்கையைக் கடைப்பிடித்தனர். ஆனால் ஜப்பான் கொரியாவைத் தன்னுடைய செல்வாக்கு மண்டத்தின் கீழ் கொண்டுவரவேண்டுமென்ற எண்ணத்தை மறக்கவேயில்லை. அச்சமயத்தில் நடந்த நிகழ்ச்சியொன்று ஜப்பானின் ஆதிக்கத்தைத் துாண்டிவிட்டது. 1875-ம் ஆண்டிலட கொரியர்களின் துப்பாக்கிப் படைகளால் ஜப்பானிய கப்பலொன்று தீக்கிரையாக்கப்பட்டது. எனவே ஜப்பானியர் கொரியா மீது போர் தொடுத்தனர். அவர்கள் அங்கிருந்த ஒரு துறைமுகத்தைக் கைப்பற்றினர். இதற்கிடையில் ஜப்பான் இரண்டு துாதுக் குழுக்களை ஒன்று பீகிங்கிற்கும் மற்றொன்று கொரியாவிற்குமாக அனுப்பிவைத்தது. இறுதியில் ஜப்பானுக்கும் கொரியாவுக்குமிடையே ஒரு ஒப்பந்தம் நிறைவேறியது. ஆதன் மூலம் ஜப்பான் கொரியாவில் ஒரு ஆலோசகரை வைத்துக் கொள்ளும் உரிமையைப் பெற்றது. இரு நாடுகளின் அமைச்சர்களும் பரஸ்பரம் தங்களுக்குள் கருத்துக்களை பறிமாறிக் கொள்ளவும் நாடுகளை சுற்றிப் பார்க்கவும் ஒப்புக் கொண்டார்கள். கொரியா சில துறைமுகங்களை ஜப்பானுக்கு திறந்து விட்டது. வணிக உறவினை ஏற்படுத்திக் கொள்ளவும் அது இசைவு தந்தது.

இந்நிலை நீடிக்கவில்லை. கொரியாவின் மன்னர் மக்களை ஜப்பானுக்கெதிராகத் துாண்டிவிட்டார். சீனாவும் அவர்களுக்கு உதவி செய்தது. பழமைவாதிகளுக்கும் சீர்திருத்தவாதிகளுக்குமிடையில் கருத்து வேறுபாடுகள் வேறு ஏற்பட்டன. சீனா அமைதியைப் பாதுகாக்க முற்பட்டது. இதற்குள் சில ஜப்பானியர்கள் கொரியர்களால் கொலை செய்யப்பட்டனர். ஜப்பானியர் மீது வன்முறைச் செயல்களை நடத்தினர். துங்கள் உடமைகளையும் உயிரையும் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு ஜப்பானியர்கள் கொரியாவிலிரந்து வெளியேறினர். இதைக்கண்டு பீதி அடைந்த ஜப்பான் கொரியாவிற்கு பல கோரிக்கைகள் கொண்ட பத்திரம் ஒன்றை தாக்கீது செய்தது. அதில் ஜப்பானிடம் கொரியா மன்னிப்புக் கோர வேண்டுமென்றும் ஜப்பானியர் படுகொலைக்குக் காரணமான கொரியர்களை தண்டிக்க வேண்டுமென்றும் கொரியாவிலுள்ள ஜப்பானியர்களுக்கும் அவர்களுடைய சொத்துக்களுக்கும் பாதுகாப்பளிக்க வேண்டுமென்றும் கொரியர்களால் கெல்லப்பட்ட ஜப்பானியர்கள் குடும்பங்களுக்குத் தக்க முறையில் இழப்பீட்டுத் தொகை வழங்கவேண்டுமென்றும் அந்த பத்திரத்தில் குறிப்பிட்டிருந்தார்கள். இவைகளை ஏற்றுக் கொள்ள கொரியா மறுத்தது. இச்சூழ்நிலையை சமாளிக்கும் பொருட்டு சீனா நல்லுறவை ஏற்படுத்த முயற்சி செய்தது. இதை ஜப்பான் அனுமதிக்கவில்லை. இதை ஜப்பான்

அனுமதிக்கவில்லை. மீண்டும் தன் கோரிக்கைகளை வலியுறுத்துவதிலேயே அது கண்ணும் கருத்துமாய் இருந்தது. இறுதியாக, 1882-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 30-ம் நாள் கொரியா ஜப்பானுடன் செம்புலோ உடன்படிக்கையைச் செய்து கொண்டது. இவ்வுடன்படிக்கையின் மூலம் கொரியாவில் ஜப்பான் தன் படைகளை வைத்துக் கொள்ள அனுமதி பெற்றது. அப்படைகளுக்கான செலவை கொரியாவே ஏற்றுக்கொண்டது.

இவ்வுடன்படிக்கையின் வளைவாக சீன ஆதரவாளர்களுக்கும் ஜப்பானின் ஆதரவாளர்களுக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் அதிகமாகக காணப்பட்டன. ஆகவே இருநாடுகளின் உறவிலும் விரிசல் ஏற்பட்டது. 1884-ம் ஆண்டு ஜப்பானியர்கள் அவர்களுடைய ஆதரவாளர்களின் உதவியில் புதிய அரசாங்கத்தை ஏற்படுத்தினர். சீனாவும் அதில் தலையிட்டதின் விளைவாக 1885-ல் டியன்ஸின் உடன்படிக்கை ஏற்பட்டது. இருப்பினும் இந்த இக்கட்டான சூழ்நிலை மறையவில்லை. ஆகவே சீன-ஜப்பானியப் போர் 1894-95ம் ஆண்டுகளில் ஏற்பட்டது. அதன் இறுதியில் ஷிமோனாஸெகி உடன்படிக்கை முடிவாயிற்று என்று முன்னரே கண்டோம். ஆதன் விளைவாக 1902-ம் ஆண்டில் ஆங்கிலேய-ஜப்பானியப் நட்புறவு உடன்பாடு முடிவாயிற்று. ஜப்பான் சீனாவைக் காட்டிலும் கொரியாவில் செல்வாக்கு பெற்று விளங்கியது. ஆனால் அப்போது கொரியாவில் கிளர்ச்சி ஏற்படவே அரசி கொல்லப்பட்டார். மன்னர் ரஷ்யதூதரகத்தில் அடைக்கலம் புகுந்தார். அதிலிருந்து ரஷ்யாவின் செல்வாக்கு அங்கு வளர ஆரம்பித்தது. இதைக் கண்ட ஜப்பான் பீதி அடைந்தது. எனினும் ஜப்பான் ரஷ்யாவை அணுகி தான் கொரியா மீது கொண்ட ஆவலை வெளிப்படுத்தியது. 1896-ம் ஆண்டில் ஜுன் 5-ம் நாளில் யகமாதா-லோபனோவ் ஒப்பந்தம் (Yamagata-Lobanoff Protocol) அவ்விரு நாடுகளுக்கிடையில் கையெழுத்தாயிற்று. அவ்வொப்பந்தத்தின் படி கொரியாவில் அமைதியை நிலைநாட்ட மன்னர் எடுத்துக்கொள்ளும் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பது, நிதி நெருக்கடியைச் சீராக்குவது, கொரியாவில் இரு நாடுகளும் இணைந்து நிதிசார்ந்த சீர்திருத்தங்களைக் கொண்டு வரச் செய்வது போன்றவை முடிவு செய்யப்பட்டது. 1898-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28-ம் நாள் மீண்டும் இரு நாடுகளும் கூடி நிஷிரோச ஒப்பந்தத்தை (Nishi-Rosen Convention) ஏற்படுத்திக் கொண்டது. அதன்படி கொரியாவின் இறைமையையும் சுதந்திரத்தையும் காப்பதாக இருநாடுகளும் உறுதிமொழி அளித்தன. ஜப்பானுக்கும் கொரியாவுக்குமிடையே நடைபெற்று வரும் வாணிக, தொழில் உறவுகளில் தலையிடுவதில்லை என்று ரஷ்யா வாக்குறுதியளித்தது. இவ்வுறவு 1904-ம் ஆண்டு ரஷ்யா-ஜப்பானியப் போர் ஏற்படுகின்ற வரையிலும் நீடித்தது. அப்போரில் சிறிய நாடான ஜப்பானிடம் பெரிய நாடான ரஷ்யா படுதோல்வி அடைந்தது. இவ்வுடன்படிக்கையின் மற்றொரு விளைவாகும். இவ்வாறு கொரியாவில் சிறப்பான செல்வாக்கு ஜப்பான் பெற்றிருந்தது.

**ஜப்பானும் முதல் உலகப்போரும்**

ரஷ்ய-ஜப்பானியப் போருக்குப்பின் ஜப்பானின் பெருமை குன்றின் மீது இட்ட விளக்கைப்போல சுடர்விட்டுப் பிரகாசித்தது. சீனாவில் அதன் செல்வாக்குப் பெருகியது. கொரியாவையும், மஞ்சூரியாவில் தென்பகுதியையும் பெற்றதால் அது பொருளாதாரத்தை வளமுடையதாக்கிக் கொண்டது. இச்சூழ்நிலையில் அது தன் பேராதிக்கத்தை வளர்க்க

முற்பட்டது. அப்போது ஏற்பட்ட முதல் உலகப்போர் அதற்கு வரப்பிரசாதமாக அமைந்தது. ஐரோப்பிய நாடுகள் போரில் ஈடுபட்டிருந்த நேரத்தில் ஜப்பான் தன் ஆதிக்க வளர்ச்சியில் தீவிர கவனம் செலுத்தியது. போர் முடிவுற்ற பிறகு ஜப்பான் ஆசியாவிலே மிகப் பெரிய வலிமை பொருந்திய நாடாகத் திகழ்ந்தது.

முதல் உலகப்போர் பல காரணங்களால் ஏற்பட்டது என்று கூறினாலும் கூட அதற்கு உடனடிக் காரணமாக அமைந்தது ஆஸ்திரியாவின் இளவரசர் ஆர்ச்டியூக் பிரான்சிஸ் பெர்டினாண்டும் அவருடைய மனைவியும் செர்பியாவில் கொலை செய்யப்பட்டனர் என்பதேயாகும். இந்நிகழ்ச்சி 1914-ம் ஆண்டு ஜூன் திங்கள் 28-ம் நாள் நடைபெற்றது. இதனால் ஆஸ்திரியா, செர்பியா நாட்டின் மீது கொலைக்குக் காரணமானவர்களைத் தண்டிக்காதததையும் தக்க இழப்பீட தராததையும் காரணம் காட்டி போர் தொடுத்தது. ரஷ்யா செர்பியாவுக்கு ஆதரவாகப் போரில ஈடுபட்டது. ஜெர்மனி ஆஸ்திரியாவின் பக்கம் சேர்ந்தது. பிரான்சும் இங்கிலாந்தும் ரஷ்யாவின் பக்கம் சேர்ந்தன. இவ்வாறு ஆஸ்திரிய இளவரசனின் படுகொலை பல நாடுகளைப் போரில் ஈடுபடுத்தியதால் முதல் உலகப்போர் ஏற்பட்டது.

ஐரோப்பாவில் இந்நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது ஜப்பான் இங்கிலாந்துடன் செய்து கொண்ட உடன்படிக்கையைப் புதுப்பித்துக் கொண்டது. அது மேலும் பத்து ஆண்டுகளுக்கு நீடித்தது. அப்போது இங்கிலாந்து ஜப்பானை அணுகி பிரிட்டிஷ் வணிக கப்பல்களுக்கு சேதம் ஏற்படும் பட்சத்தில் ஜப்பான் உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டது. இவ்வாறு இங்கிலாந்து தனது துாரக்கிழக்கு நேச நாடான ஜப்பானை தன்னுடன் போரில் கலந்து கொள்ளச் செய்தது. எனவே 1914-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 23-ம் நாள் ஜப்பானும் பிரிட்டனும் சேர்ந்து கொண்டு ஜெர்மனியின் மீது போர் தொடுத்தன. ஜப்பான் கியாசௌ என்ற சீனத் தறைமுகத்தைக் கைப்பற்றி கொண்டது. ஷாண்டுங் மாநிலத்தை ஜெர்மனி குத்தகையாக சீனாவிடமிருந்து பெற்று அனுபவித்துக் கொண்டிருந்தது. அப்பகுதியையும் ஜப்பான் கைப்பற்றிக் கொண்டது. சீனாவின் உரிமைகளை நசுக்கி ஜப்பான் அத்துமீறி நடந்துகொண்டதை எந்தவொரு ஐரோப்பிய நாடும் சீனாவுக்கு பரிந்து பேசவும் ஜப்பானை எதிர்க்கவும் வரவில்லை. அதுமட்டுமல்லாமல் ஜப்பான் சீனாவில் சிங்தோவிலிருந்து சினாம் வரையிலுமுள்ள இருப்புப்பாதையைக் கைப்பற்றிக் கொண்டது. அத்துடன் அப்பாதையின் நெடுகிலுமுள்ள ஜெர்மானியரின் சுரங்கங்களை எடுத்துக் கொண்டது. இவ்வாறு ஜப்பான் ஷாண்டுங் மாநிலத்தில் உறுதியாக தன் ஆதிக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு விட்டது. அங்கு தன் அரசியல் செல்வாக்கையும் அதிகாரத்தையும் நிலைநாட்டவும் எண்ணம் கொண்டிருந்தது.

ஜேர்மனி தன்னுடைய கடற்படை வலிமையை பசிபிக் மகாகடலில் திறம்பட நடத்துவதற்குரிய நிலையில் வைத்துக் கொண்டிருந்தது. அதனுடைய கடலாதிக்கம் அங்கு குறையவே இல்லை. பசிபிக் மகாகடலில் ஜொமனி மார்ஷல், கரோலினா தீவுகளில் தங்கள் தளங்களைச் செவ்வனே அமைத்துக் கொண்டிருந்தது. இதைக் கைப்பற்றுவதில் அது தீவிரம் காட்டியது. இறுதியில் அவைகள் ஜப்பானிடம் வந்து சேர்ந்தன. அதன் பின்னர் ஜப்பான் ஆஸ்திரேலியா ஆப்பிரிக்கக் கடலிலம் தன் ஆதிக்கத்தை நிலைநாட்டியது. ஐரோப்பிய

நாடுகள் முதல் உலகப்போரில் தீவிரமாக ஈடுபட்டிருந்த நேரத்தில் ஆசியாவில் என்ன நடக்கிறது என்றே அவர்கள் கவனிக்கவில்லை. இதனால் ஜப்பான் தன் ஆதிக்க வளர்ச்சிக்கு அணை பொடாமல் அதை வளர்த்துக் கொண்டே வந்தது.

சீனாவிலிருந்து இதுவரை பெற்ற சலுகைகளினால் திருப்தி அடையாத ஜப்பான் அதை முழுமையாகத் தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர திட்டமிட்டது. எனவே வரலாற்றிலே கண்டும் கேட்டும் அறியாத ஒரு கோரிக்கை விண்ணப்பம் தயார் செய்து சீனாவிடம் சமர்ப்பித்தது. அதில் 21 கோரிக்கைகள் அடங்கியிருந்தன.

சீனாவின் தலைவரான யுவாங் ஷி சகாய் செய்வதறியாது திகைத்தார். சிற்சில மாறுதல்களுடன் ஜப்பானின் 21 கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டார். யுவானின் இச்செயலைக் கண்டித்து சீனர்கள் குழப்பம் விளைவித்தனர். ஜப்பானியப் பொருள்களை சீனர்கள் வாங்க மறுத்தார்கள். இச்சமயத்தில் யுவான் திடீரென இறந்துவிட்டார். அதன் பின்னரும் கலகங்கள் அடங்கியபாடில்லை. அப்போது அமெரிக்காவின் வேண்டுகோளை ஏற்று சீனா முதல் உலகப்போரில் ஜெர்மனிக்கு எதிராக குதித்தது.

இதுவரையில் தொல்லையில்லாமல் தன் ஆதிக்க எல்லையை விரிவாக்கிக் கொண்டிருந்த ஜப்பானுக்கும் ஒரு சிக்கல் வந்து சேர்ந்தது. அப்போது ஜப்பானியப் பெருட்களின் விலைகள் விஷம்போல் ஏறிக்கொண்டு சென்றன. போர்க் காலமாததால் பொருள்களின் விலை ஏறிக் கொண்டிருந்ததில் வியப்போதுமில்லை. அரசாங்கம் விலைவாசிகளைக் கட்டுப்படுத்த முயன்று தோல்வி கண்டது. கூலிக்கும் விலைக்கும் ஏணி வைத்ததாலும் எட்டாதது போல நிலைமை இருந்து வந்தது. அரிசிப் பற்றாகுறையினால் 1918-ம் ஆண்டிலட அரிசிக்கலகம் ஜப்பானில் ஏற்பட்டது. மிகவும் சிரமப்பட்டு அதிகாரிகள் அக்கலகத்தை ஒடுக்கினர்.

1917-ம் ஆண்டிற்குப் பிறகு (போல்ஷ்விக் புரட்சிக்குப் பிறகு) ரஷ்யாவின் நிலையில் தற்காலிகமாக சில மாற்றங்கள் ஏற்பட்டன. தூரக்கிழக்கு நாடுகளில் அது பெற்றிருந்த செல்வாக்கு ஜப்பானுக்குச் சாதகமாக மாறிவிட்டது. இதைப் பயன்படுத்திக் கொண்டு சைபீரியாவிலிருந்து ரஷ்யாவை விரட்ட ஜப்பான் திட்டமிட்டது. அதுமட்டுமல்லாமலட ரஷ்யாவை மஞ்சூரியாவிலிருந்தும் வெளியேற்ற வேண்டும் என்று எண்ணம் கொண்டது. மங்கோலியாவிலும், மஞ்சூரியாவிலும் உள்ள சீன இருப்புப்பதை முழுவதையும் ஜப்பான் எடுத்துக் கொள்ள பேராசை கொண்டிருந்தது. இந்த ஜப்பானிய தலையீட்டை அமெரிக்கா விரும்பவில்லை. அதற்கு சைபீரியாவின் இருப்பிடமே காரணமாகும். அது மேற்கத்திய நாடுகளுக்கும் அமெரிக்காவும் இடையில் அமைந்துள்ளது. இதை காவல் பகுதி அல்லது தடை நாடாகப் பயன்படுத்திக் கொள்ள ஜப்பான் எண்ணியதில் வியப்பேதுமில்லை. ஜப்பானின் படைகள் சைபீரியாவில் வந்து குவிந்தன. மேலைநாடுகளில் கூட்டுப்படைகள் ஜப்பானியப் படைகளுக்கு முன்பே அங்கு வந்து சேர்ந்தன. ஜப்பான் விளாடிவாஸ்டாக் என்ற நகரத்தைப் பிடித்துக் கொண்டது. அப்போது ஜப்பானிய அதிகாரிகளுக்கிடையே தகராறு ஏற்பட்டதால் சைபீரிய மக்கள் அவர்களை விரும்பவில்லை. ஆகவே அங்கு அவர்களுக்குள் ஏற்பட்ட கைகலப்பில் சில ஜப்பானியர்கள் சைபீரிய மக்களால் கொல்லப்பட்டார்கள். இதைப்

பயன்படுத்திக் கொண்டு ஜப்பான் சகாலினைக் கைப்பற்றியது. இந்த சைபீரியப் படையெடுப்பு அவர்களுடைய பொருளாதாரத்தைப் பாழாக்கும் வகையில் அமைந்ததால் இறுதியில் கைவிடப்பட்டது.

ஜப்பான் சில வீரர்களை அனுப்பி மஞ்சூரியாவைக் கைப்பற்ற முயற்சி செய்தது. அமெரிக்கா தலையிடவே ஜப்பான் பின்வாங்கிக் கொண்டது. இந்தச் சூழ்நிலையில் முதல் உலகப்போரும் முடிவடைந்தது. இதனால் ஜப்பான் பொருளாதாரத்தில் நல்ல முன்னேற்றமடைந்த நாடுகளில் ஒன்றாகத் திகழ முடிந்தது. இவ்வாறு முதல் உலகப்போர் அதற்கு பெரிய வெகுமதியாக அமைந்தது.

போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோதே ஜப்பான், மஞ்சூரியா மங்கோலியாவுடன் ஒரு உடன்படிக்கையை 1915ம் ஆண்டில் செய்து கொண்டது. ஷதண்டுங் மாநிலத்தைப் பற்றிய ஒரு உடன்பாட்டை சீனாவுடன் செய்துகொண்டது. இதன் மூலம் ஜப்பானின் ஆதிக்கம் அங்கு நிலைநாட்டப்பட்டது. 1917-ம் ஆண்டில் ஜப்பானும் இங்கிலாந்தும் ஒரு உடன்படிக்கையையும் ஜப்பானும் இத்தாலியும் சேர்ந்து ஒரு உடன்படிக்கையையும் செய்து கொண்டது. இதன்படி போர்முடிந்த பிறகு ஷாண்டுங் மாநிலம் சார்பாக ஜப்பானின் கோரிக்கையை அந்நாடு ஆதரிப்பது என மடிவு செய்தன. அதே ஆண்டில் அமெரிக்காவிலிருந்த ஜப்பானிய தூதர் இஷி என்பவரும் அமெரிக்க வெளிநாட்டு அமைச்சரான லான்ஷிங் என்பவரும் சேர்ந்து ஒரு உடன்படிக்கையைச் செய்து கொண்டனர். இதற்கு லான்ஷிங் இஷி உடன்படிக்கை என்று பெயர். இதனால் அமெரிக்கா புவியியல் அடிப்படையில் ஜப்பான் சீனா மீது கொண்டிருந்த ஆர்வத்தை அனுமதித்தது.

உலகப்போரில் சீனா ஈடுபட்டதால் அதுவும் பாரீஸ் அமைதி மாநாட்டில் கலந்து கொள்ளும் வாய்ப்பினை பெற்றது. ஜப்பான் ஷாண்டுங் மாநிலத்தில் குத்தகை உரிமை வேண்டுமென்று கோரியது. இதை சீனா ஏற்றுக் கொள்ளவில்லை. இறுதிவரை அது ஜப்பான் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை. இதுவரையில் அம்மாநிலத்தின் உரிமையைக் குத்தகை பெற்றிருந்த ஜெர்மனி அதை ஜப்பானுக்கு விட்டுக்கொடுத்தது. ஆகவே சீனா உடன்படிக்கையில் கையெழுத்திடாமலே மாநாட்டிலிருந்து கோபமாக வெளியேறிவிட்டது.

## அலகு - V

### ஜப்பானும் இரண்டாம் உலகப்போரும்

ஜப்பானில் கட்சி ஆட்சியின் செல்வாக்குக் குறையவே அங்கு இராணுவத் தளபதிகளின் செல்வாக்கு அதிகமாகிக் கொண்டு வந்தது. அதன் விளைவாக அவர்கள் மஞ்சூரியாவில் வெற்றிமேல் வெற்றி பெற்றார்கள் என்று முன்இயலில் கண்டோம். ஆகவே 1930-ம் ஆண்டிற்குப் பின் இராணுவ சர்வாதிகாரம் அல்லது இராணுவ வளர்ச்சியைக் கண்டபின் இரண்டாவது உலகப்போருக்கு அது எவ்வாறு வித்திட்டது. ஜப்பான் எவ்வாறு ஈடுபட்டது என்பது பற்றிப் பார்ப்பது சாலச் சிறந்ததாகும்.

**இராணுவ வளர்ச்சி முறை**

கி.மு.முதல் நூற்றாண்டிலிருந்தே ஜப்பானில் இராணுவ முறை வளர ஆரம்பித்தது. ஜப்பானில் பல இனங்கள் வாழ்ந்து வந்தன. ஒவ்வொரு இனமும் ஒரு தலைவன் கீழிருந்து வந்தது. அதில் வலிமை பொருந்திய இனம் மற்றவர்களைக் கட்டுப்படுத்தி வாழ்ந்து கொண்டிருந்தது. நாளடைவில் அவ்வினத்தின் தலைவன் மன்னருக்குரிய அதிகாரங்களையும் செலுத்த ஆரம்பித்தான். மினோமொத்தோ யொரித்தொமோ என்பவர் எழுச்சியிலிருந்து இராணுவ அதிகாரம் உருக்கொண்டது. அவர் ஆயிரகணக்கான பயிற்சி பெற்ற வீரர்களை வைத்திருந்தார். அவர் ஷோகன் பதவியைப் பெற்றார். அவர் உண்மையான அதிகாரங்களை அனுபவித்து வந்தார். பதினான்கால் நூற்றாண்டில் ஏற்பட்ட ஆதிக்கப் போட்டியில் தொகுசுவா ஷோகன்கள் ஆட்சிக்கு வந்தனர். மெய்ஜி மீட்சியின் போது அவர்களுடைய செல்வாக்குக் குறையவில்லை. அவர்கள் மென்மேலும் வலிமை பெற்று வாழ்ந்து வந்தார்கள்.

ஜப்பானில் இராணுவ முறை நன்குவளர்வதற்கு அவர்களுடைய பேராதிக்க முறை முக்கிய காரணமாகும். மேலும் ஜப்பானிய அதிகாரிகள் அரசியலில் கலந்துகொள்ள அவ்வரசியலமைப்பு அனுமதித்தது. அத்துடன் மேலை நாடுகளுடன் அவர்கள் போட்டி போட்டுக் கொண்டு ஆயுதங்களைத் தயார் செய்வதிலும், போர்ப் பயிற்சியை மேற்கொள்வதிலும் தீவிரமாக ஈடுபட்டார்கள். கட்சி ஆட்சி முறை வெற்றிகரமாக இயங்காததால் இராணுவ முறை எழுச்சி பெற்றது. அங்கு ஒரு தேசியத் தலைவர் தோன்றாததே அதற்கு மற்றொரு கரணமாகக் கூறலாம். 1918 லிருந்து 1921 வரை 12 பேரமைச்சர்கள் பொறுப்பேற்றதார்கள். இவர்களுடைய கோட்பாடுகள், நோக்கங்கள் மக்களுக்குப் பிடிக்காததால் அடிக்கடி இந்த மாற்றங்கள் ஏற்பட்டன. இராணுவ முறை ஒன்றினால் தான் சிறந்த வளர்ச்சியை அடையமுடியும் என்று அவர்கள் கருதி 1923-லிருந்து 1927 வரை இராணுவ அதிகாரிகளை பேரமைச்சர்களாக் கொண்டு வந்தார்கள்.

இராணுவ வளர்ச்சி முறையில் முக்கிய பங்கினை ஏற்றவர் யமகதா என்பவராவார். இவருடைய காலத்தில் அதிகார வர்க்கத்தினரும், பொருளாதாரத்தில் சிறந்து விளங்கிய குடும்பங்களான ஜெய்பட்சுவும் அவ்வளர்ச்சியைத் தடுக்க முயற்சி செய்தனர். உன்றாட்டு வெளிநாட்டுக் கொள்கைகளை அவர்களே தீர்மானித்து வந்தனர். பேரமைச்சர் இனுகாய் என்பவரின் படுகொலை உள்நாட்டில் சிக்கலை ஏற்படுத்தியது. அத்துடன் ஜப்பான் சர்வதேச

சங்கத்திலிருந்து வெளியேறியது உலக அரசியலில் சிக்கலை அதிகமாக்கிவிட்டது. அப்போது ஜப்பானின் இராணுவத் தளபதிகள் சூழ்நிலையை பயன்படுத்திக் கொண்டு முன்னோக்கி செல்லலானார்கள். அவர்களிடையே இரு பிரிவினர் இருந்தனர். ஒன்று அரசியல் கட்சிகளையும், ஜெய்பட்சுவையும் அகற்றுவதை நோக்கமாகக் கொண்ட இளம் அதிகாரிகளால் ஆன 'கோடே ஹா' (Hode Ha) அல்லது பேராதிக்கத்திற்கு வழிகாட்டும் பிரிவினர் (The Imeprial Way Faction) ஆகும். மற்றொன்று, தளபதி தோஜோ உள்ளிட்ட பெரிய அதிகாரிகள் அடங்கிய தோசெய் ஹா (Tosei Ha) அல்லது அடக்கி ஆளும் பிரிவினர் (Control Faction) என்பது இவர்கள் வன்முறையில் நம்பிக்கை கொள்ளவில்லை. நேரடிச் செயல்களிலும் ஆர்வம் காட்டவில்லை.

கோடோ ஹா என்ற பிரிவினர் மிகவும் தீவிரவாதிகளாக விளங்கி வந்ததோடு மட்டுமில்லாமல் வன்செயல்களிலும் ஈடுபட்டு வந்தார்கள். 1935-ம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் இராணுவ அதிகாரி ஒருவர் இராணுவ அமைச்சரைக் கொன்று விட்டார். 1936-ம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் படைவீரர்கள் மஞ்சூரியாவிற்குப் போக மறுத்தார்கள். கிளர்ச்சியில் ஈடுபட்ட அவர்கள் ஒகாதா (Okada) என்ற பேரமைச்சரின் உயிரைபழிவாங்க முயற்சி செய்தனர். அவர் தப்பித்து விட்டார். ஆனால் சில அமைச்சர்கள் அக்காலத்தில் கொல்லப்பட்டனர். 1936-ம் ஆண்டில் ஏற்பட்ட இந்நிகழ்ச்சியினால் இராணுவம் மென்மேலும் செல்வாக்கு பெற்று வரலாயிற்று. இரண்டாவது உலகப்போரின் போது இராணுவ அதிகாரிகள் ஜப்பானைப் போரில் ஈடுபடுத்தினர். 1941ஆம் ஆண்டில் ஜப்பான் முழுவதும் இராணுவத் தளபதிகளின் கட்டுப்பாட்டுக்குள் செயல்பட ஆரம்பித்தது. அப்போது ஜப்பானின் பேரமைச்சரான தளபதி தோஜா என்பவரின் பேராசையே இரண்டாம் உலகப்போரை ஏற்படுத்தியது எனலாம்.

**ஜப்பானின் ஆக்கிரமிப்பு**

இச்சூழ்நிலையில் ஜப்பான் மஞ்சூரியாவில் பெரும் வெற்றியையும் வடசீனாவில் பல வெற்றிகளையும் பெற்றுக்கொண்டு வந்தது. 1934-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17-ம் நாள் அமாவ் ஈஜி என்ற ஜப்பானிய வெளியுறவு அதிகாரி ஒரு கோட்பாட்டை வெளியிட்டார். அதன்படி ஜப்பான் தனித்து நின்று கிழக்கு ஆசியாவில் அமைதியை நிலைநாட்டும் என்றும், அதற்கு சீனாவைத் தவிர வேறு எந்த நாடும் ஜப்பானுடன் பங்குபெற முடியாது என்றும் கூறினார். இதற்கு அமோவ் ஈஜிக் கோட்பாடு (Amau Eiji Doctrine) என்று பெயர். இதை அமெரிக்காவும், பிரிட்டனும் வன்மையாகக் கண்டித்தன. மற்ற நாடுகள் சீனாவில் பெற்றிருக்கும் உரிமைகளுக்குத் தீங்கு நேராவண்ணம்தான் செயல்படுவதாக ஜப்பான் உறுதி அளித்தது. எனினும் ஜப்பான் சீனாவில் ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து நடத்தி வந்தது.

ஜப்பானிய ஆதரவாளர்களான இரண்டு சீன நாளிதழ்களின் நிருபர்களை டியன்ஸினில் கொலை செய்து விட்டதின் காரணமாக ஜப்பான், சீனாவிடம் ஹோ-உமேதா ஒப்பந்தத்தைச் செய்து கொண்டு சில சலுகைகளைப் பெற்றுக் கொண்டது. எனினும் ஜப்பானி மங்கோலியாவிலும், கிழக்கு ஹோப்பையிலும் தன்னுடைய பொம்மை அரசாங்கங்களை 1935-

36ம் ஆண்டுகளில் ஏற்படுத்திக் கொண்டது. இதை நான்கிங் அரசாங்கம் வன்மையாக எதிர்த்தது. இச்சமயத்தில் சீனாவில் கோமின்டாங் கட்சியும் பொதுவுடைமைக்கட்சியும் ஒன்றாக இணைந்து ஜப்பானை விரட்ட எண்ணின. ஜப்பானுக்கெதிரான சீனக் கிளர்ச்சியானது சீனாவின் வட மாநிலங்களில் நடைபெற்று வந்தன. 1933-ம் ஆண்டில் ஏற்பட்ட ஹிரோதா அரசாங்கம் 'புதிய அமைப்பு' அல்லது 'புதிய ஆதிக்கம்' (New Order) என்பதை சீனாவில் புகுத்தியது. அதன்படி மஞ்சூகோவில் பல முன்னேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதென்றும், வடக்கிலிருந்து பொதுவுடைமைக் கட்சியை வெளியேற்றுவது என்றும் பொருளாதாரத்தைப் பொறுத்தமட்டில் ஜப்பான், மஞ்சூகோ, சீனா ஆகிய நாடுகளுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவது என்றும் அறிவிக்கப்பட்டது. இதில் விருப்பம் இல்லாத சீனர்கள் ஜப்பானுக்கு எதிரான வன்செயல்களில் ஈடுபட்டனர். இறுதியில் 1937-ம் ஆண்டு இளவரசர் கோனோயி தலையிலான அமைச்சரவை சீனாவுடன் போரிடத் துவங்கியது.

1937-லிருந்து 1941 வரை சீன ஜப்பானியப் பேரானது நடைபெற்றது. அது மார்கோபோலோ பாலத்தில் நடைபெற்ற கைகலப்பினால் ஏற்பட்டதென்பதை முன் இயலில் கண்டோம். இறுதியில் சியாங் கே ஷேக்குடன் அமைதி உடன்பாடு செய்துகொள்ள ஜப்பான் முயற்சி செய்தது. இதை சியாங் ஏற்றுக் கொள்ளவில்லை அவருடைய பழைய பகைவரான வாங் கிங் வை அதை ஏற்றுக்கொண்டார். எனவே ஜப்பானியரால் ஏற்படுத்தப்பட்ட அரசாங்கம் சீனாவில் 1940-ல் பொறுப்பேற்றது. ஆனால் சுங்கிங் என்ற நகரிலிருந்து சியாங் தொடர்ந்து ஜப்பானியரை எதிர்த்தார். ஜப்பானால் அதை சமாளிக்க முடியவில்லை. எனவே 1939-க்கு பிறகு அது சீனாவுக்கு உதவி செய்து வந்த நேச நாடுகளின் மீது போர் தொடுத்தது. அதுவே இரண்டாம் உலகப்போராகும். போரின்போது ஜப்பான் அச்சு நாடுகள் பக்கம் அதாவது ஜெர்மனி,இத்தாலி ஆகிய நாடுகளின் பக்கம் சேர்ந்து கொண்டது. அந்நாடுகளுக்கு எதிராக நேச நாடுகள் செயல்பட்டன. அவைகள் ரஷ்யா, இங்கிலாநது அமெரிக்கா, பிரான்சு ஆகியவைகளேயாகும்.

**போருக்கு காரணங்கள்**

முதல் உலகப்போரின் முடிவில் ஏற்பட்ட வெர்செய் உடன்படிக்கையின் மூலம் ஜெர்மனி பழிவாங்கப்பட்டது. அது வளமிழந்து நலமிழந்து படைகளை இழந்து மிகவும் மோசமான நிலைமைக்குத் தள்ளப்பட்டது. எனவே அது ஹிட்லரின் தலைமையில் எழுச்சிபெற்று நேசநாடுகளைப் பழிவாங்கத் துடித்துக் கொண்டிருந்தது. ஹிட்லர் போலந்தின்மீது தன் ஆக்கிரமிப்பை தொடங்கினார். அதனால் இரண்டாம் உலகப்போர் ஏற்பட்டது. அத்துடன் இத்தாலியில் முசோலினியின் சர்வாதிகாரத் தோற்றமும், இராணுவப் போட்டியின் கடுமையும் சர்வாதிகார நாடுகளுக்கும் குடியாட்சி நாடுகளுக்கும் ஏற்பட்ட போட்டியும் போரை உருவாக்கிவிட்டன. ஜப்பானில் பேராசை இதற்கு மற்றொரு காரணமாகும். ஜப்பானின் பேரமைச்சரான தளபதி தோஜாவின் பேராசையும், போராசையும் போருக்கு வழிவகுத்தன எனலாம்.

போர் ஆரம்பிப்பதற்கு முன்பு, வாஷிங்டனிலிருந்த ஜப்பானியத் தூதர் நொமூரா (Nomura) என்பவர் அமெரிக்க வெளிவிவகார அமைச்சரான கார்டல் ஹல் (Cordall

Hull)என்பவருடன் தங்கள் நாடுகளுக்கிடையே உள்ள பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான அமைதிப் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டார். இது 1941-ம் ஆண்டில் நடைபெற்றது. அமைதி ஏற்படுவதற்குரிய நம்பிக்கைச் சிதறலும் 1941-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17-ம் நாள் பேரமைச்சர் கோனொயி என்பவரின் பதவி விலகலால் சிதறிவிட்டது. ஏனெனில் அவர் ஜப்பான் போரில் ஈடுபடுவதை விரும்பவில்லை. அவருக்கு பின் பொறுப்பேற்ற தளபதி டோஜோ சபுரோ குருசு என்பவரை நொமூராவுக்கு உதவி செய்ய அனுப்பி வைத்தார். அமைதிப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே ஜப்பான் திடீரென போரில் ஈடுபட்டுவிட்டது. ஜப்பான் எவ்வித முன்னெச்சரிக்கையும் இன்றி 1941-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 7ம் நாள் அமெரிக்க கப்பற்படைத் தளமான பெர்ல் துறைமுகத்தை தாக்கியது. எதிர்பாராத தாக்குதலினால் அமெரிக்காவின் கப்பற்படை பெரும் சேதத்திற்குள்ளானது. இதனால் அமெரிக்காவுடனான போர் ஆரம்பமாயிற்று. அதற்கு மறுநாள் பிரிட்டன், நெதர்லாந்து, சீனா ஆகிய நாடுகளும் போரில் இறங்கின.

**ஜப்பானின் வியத்தகு வெற்றிகள்**

பெர்ல் துறைமுகத் தாக்குதலுக்குச் சில மாதங்களுக்குப் பிறகு ஜப்பான் பல வியத்தகு வெற்றிகள் பெற்றது. ஜப்பானியப் படைகள் ஒன்றன் பின் ஒன்றாக ங்கிலேய, அமெரிக்க, டச்சுப் பகுதிகளுக்குப் பெரும் சேதம் விளைவித்தன. இவ்வாறு பெர்ல் துறைமுகத்தின் பெரும் சேதம், பிலிப்பைன் தீவுகளிலட இருந்த அமெரிக்க விமானப்படையின் பெரும்பகுதியின் அழிவு, தீவுகளை ஜப்பானியர் கைப்பற்றிக் கொண்டது. பிரிட்டிஷ் போர்க்கப்பல்கள் ‘ரிபல்ஸ்’(Repulse) வேல்ஸ் இளவரசர்’(Prince of Wales) இரண்டும் முழ்கடிக்கப்பட்டது ஆகியவை அனைத்தும் அமெரிக்காவுக்குப் பீதியை ஏற்படுத்தியது. ஆனால் இன்னும் பல பெரிய விபத்துக்கள் வரவிருந்தன. குறுகிய காலத்துக்குள் ஜப்பான் ஒரே பாய்ச்சலாக இந்தோ-சீனாவையும் தாய்லாந்தையும் மலேயா தீபகற்பத்தையும் கடந்து பலமான தற்காப்புள்ள சிங்கப்பூரைக் கைப்பற்றி சுமத்ரா, ஜாவா, டோர்னியோ, செலபஸ், தைமோர், மாக்கோ ஆகிய தீவுகளையும் அடக்கி நியூகினிக்குக் கிழக்கே ரபாஉல் துறைமுகத்தை வசமாக்கி சாலமென் தீவுகளையும் ஆக்கிரமித்து ஆஸ்திரேலியாவுக்குத் திகிலை உண்டாக்கியது. ஜப்பானிய படையின் மற்றொரு பிரிவு பர்மாவைப் பிளந்து முன்னேறி சீனாவைத் தனிப்படுத்தி இந்திய எல்லையை எட்டியது. இவ்வாறு 1942ம் ஆண்டின் கோடைகாலத்துக்கு முன் ஆசியாவின் பெரும்பாகமும் அவர்கள் வசம் வந்து சேர்ந்தது. மேற்குபசிபிக்கில் அவர்கள் ஆதிக்கம் செலுத்தலானார்கள். மேலும்ஈ இந்தோனேசியாவின் கற்பனைக் கடங்காத எண்ணெய், ரப்பர் வெள்ளீயம் முதலான வளங்களும் அவர்களுக்குக் கிடைத்தன. உலக வரலாற்றிலேயே வேறு ஒரு நாடும் இவ்வளவு குறுகிய காலத்தில் இவ்வளவு மகத்தனா வெற்றிகள் பெற்றதில்லை. ஜப்பானியர் ஆசிய நாடுகளின் வளத்திற்கு “ஆசியர்களுக்கே ஆசியா”“ஆசியாவின் மன்றோக் கொள்கை ஆகிய முழக்கங்களை முழங்கி வந்தனர்.

**போரின் திருப்பு மையம்**

இதற்கிடையில் ஜப்பானியர் வெற்றி நோயால் பீடிக்கப்பட்டு பசிபிக் பிரதேசத்தில் எஞ்சி நின்ற நேசநாடுகளின் சக்தியையும் சிதறடிக்க முற்பட்டனர். 1942-ம் ஆண்டு மே திங்களில் ஆஸ்திரேலியாவை அடுத்து வடக்கேயிருக்கும் பவளக்கடலில் இருந்த அமெரிக்கக் கப்பல்களை அவர்கள் நசுக்கினார்கள். இது ஒரு முக்கியப் போராகும் ‘‘கப்பல்கள் ஒன்றின் மேல் ஒன்று பீரங்கிக் குண்டு வீசாத சண்டை இது. கடற்போரின் வரலாற்றிலேயே இப்படிப்பட்ட முதல் நிகழ்ச்சி இதுவே’’ என்று கடற்படை அதிகாரி கிங் குறிப்பிட்டுள்ளார்.. இரண்டு பக்கங்களிலும் சேதம் ஏற்பட்டன. சிலவாரங்கள் கழித்து ஜுன் 4-6மட நாட்களில் தீவிரமான மிட்வே போர் (The Battle of Midway) நடந்தது. மிட்வே ஹவாய் தீவுக்கு 1,500 மைல் மேற்கேயுள்ள ஒரு சிறு பவளத் தீவாகும். ஆமெரிக்க விமானப்படை ஜப்பானியப் படைகளுக்குக் கடும் சேதத்தை உண்டாக்கியது. ஜப்பானியர் பயந்து ஓட்டம் பிடித்தனர். அமெரிக்க விமானங்கள் மேலும் பெரிய நஷ்டத்தையும் பேரழிவையும் உண்டு பண்ணின. ஜப்பானுக்கு அதுவே முதல் பெரிய கடற்தோல்வி. பின்னால் நடக்கப்போகும் நிகழ்ச்சிகளுக்கு அது அச்சாரம் காட்டியது. அதன் பின்னர் அமெரிக்கா சாலமென் தீவிலுள்ள குவாடலகனால் என்ற இடத்தை ஆகஸ்டு திஙடகளில் கைப்பற்றிக் கொண்டது. அமெரிக்க இராணுவ வரலாற்றில் மிக்க கடுமையான நடவடிக்கையாக இது கருதப்படுகிறது. முறக்க முடியததும் கூட, ஏனெனில்இப்போர் ஆறு மாதங்கள் நடைபெற்றன. தொடர்ந்து நடைபெற்ற இபபோர் ஜப்பானியரின் இருதயத்னைப் பிளப்பதுபோல் அமைந்துவிட்டது. தொடர்ந்து பல பெரிய கடற்போர்களும், பயங்கரமான தரைப்போர்களும் அநேகமாய் நாள் தவறாமல் விமானப் போர்களும் நடைபெற்றன. குவால்டகனால் கடற்போரில் ஜப்பானியர் இரண்டு போர்க் கப்பல்களையும், ஒரு க்ரூசர் கப்பலையும் இரண்டு நாசகாரிக் கப்பல்களையும் வீரர்கள் அடங்கிய பத்து கப்பல்களையும் இழந்தனர். 1943-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் ஜப்பானியர் குவாடல்கனால் பகுதியிலிருந்து வெளியேறினர். ஆதன் பிறகு தென் பசிபிக் பகுதிகளில் அமெரிக்காவின் கை ஓங்கியது.

குவாடலகனால் வெற்றிக்குப் பிறகு ஜப்பானியர் தாரவார(Tarawara) அல்யூஷன் தீவுகள(Aleutian Island) ஆகியவற்றை நேச நாடுகளிடம் 1943ல’ இழந்தது. இந்த வெற்றிகளின் காரணமாக ஜப்பானியர் வடமேற்கு மூலையிலிருக்கும் அலாஸ்கா வழியாக வடஅமெரிக்காவைத் தாக்கக்கூடும் என்ற பயம் நீங்கிற்று. 1944-ம் ஆண்டில் சைபான் பிலிப்பைன் தீவுகள் ஆகியவற்றை நேசநாட்டுப் படைகள் கைபபற்றிக் கொண்டன. அதற்கு முன்பே பிஸ்மார்க் கடற்போரில் (Bismark Islands) ஜப்பானியக் கப்பல்களும் படுநாசமடைந்தன. ஜப்பானிய தளபதியான யமமொதொ என்பவரும் உயிர்துறந்தார். மீண்டும் அவர்கள் சாலமன் தீவுகளையும்,ஈவோஜிமா ஒகிநாவா, ஆகிய தீவுகளையும் கைப்பற்றினர் இதற்கிடையில் பர்மாவில் கடும் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தது. 1944-ம் ஆண்டின் இறுதியில் ஜப்பான் உறுதியாக தோற்றுவிடும் என்ற நிலை ஏற்பட்டது. எனினும் அவர்கள் கடுமையாக எதிர்த்து வந்தனர்.

இதற்கிடையில் வெற்றிமேல் வெற்றி பெற்று வந்த ஹிட்லரும், முஸோனியும் கூட அழிவுப்பதையை நோக்கி நடைபோட ஆரம்பித்தனர். தோல்வி அவர்களைத் தழுவிக் கொள்ளும் நேரம் நெருங்கிவிட்டது போரின் இறுதிக்கட்டமும் ஆரம்பமாயிற்று. ஜெர்மானியரை கிழக்கேயும், தெற்கேயும் இருந்து ரஷ்யர்களும், மேற்கே இருந்து ஆங்கிலேயரும், அமெரிக்கரும் நெருங்கினர். இத்தாலியில் இஜர்மனியர் ஆயுதங்களைக் கீழே வீசி எறிந்தனர். ஜெர்மானியரின் போர்த்தந்திரங்கள் தவிடு பொடியாயின. ஏப்ரல் திங்களில் ரஷ்ய, அமெரிக்கப் படைகள் ஜெர்மானியரை பெர்லின் நகரிலேயே கடுமையாகத் தாக்கின. பெர்லின் நகரத்தின் வீழ்ச்சி உறுதி என்பதை உணர்ந்து ஹிட்லர் தற்கொலை செய்து கொண்டார். அதற்கு முன்பே முஸோலினியை வெறிக்கோபம் கொண்ட இத்தாலியர் கொன்றுவிட்டனர். மே 7-ம் நாள் எஞ்சிய ஜெர்மன் படைகள் சரணடைந்தன.

ஜோ்மனி, இத்தாலி ஆகியவற்றை முறியடித்த பின்னர் நேசநாடுகள் தங்கள் கவனத்தை ஜப்பான் பக்கம் திருப்பின. ஜப்பானின் தோல்வி என்னும் நாடகத்தில் வீழ்ச்சி என்னும் இரும்புத்திரை விழும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. 1945-ம் ஆண்டு ஜுலை 17-ம் நாளிலிருந்து ஆகஸ்டு திங்கள் 2-ம் நாள் வரை நேச நாடுகளின் தலைவர்கள் பாட்ஸ்டம் (Potsdam) என்ற நகரில் கூடி ஜப்பானை நோக்கி ‘‘தாழ்நது போ அல்லது அழிந்து போ’’ என்று அறை கூவினர். ஜப்பானிய அரசாங்கம் அந்த எச்சரிக்கையை அசட்டை செய்தது.

**ஜப்பான் சரணடைதல்**

நேசநாடுகளின் எச்சரிக்கையை அசட்டை செய்ததால் அவைகள் மேற்கொண்டு தளபதி மக் ஆர்தர் (Max Arthur) தலைமையில் தீவிர நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். ஆகஸ்டு திங்கள் 6-ம் நாள் ஒரு தனி (பி 29) விமானம் ஹிரோஷிமா (Hiroshima) என்னும் தொழில் வளமடைந்த நகரத்தின் மேலட பறந்து ஒரு அணுகுண்டை (Auto bomb) வீசியது மூன்று நாட்கள் கழித்து இரண்டாவது அணுகுண்டு நாகசாகி (Nagasaki)என்னும் நகர் மேல் வீசப்பட்டது. இரு நகரங்களும் பஸ்பமாயின. அதாவது நிர்மூலமாயின. முரணத்தாலும் காயத்தாலும் அழிக்கப்பட்டவர்கள் ஏராளம். ஏறக்குறைய அவர்கள் ஒரு லட்சத்திற்கு அதிகமென்று கணக்கிடப்படுகிறது. அனைவரும் கூண்டோடு இறந்துவிடுவோம் அல்லது அழந்துவிடுவோம் என்று கருதிய ஜப்பான் ஆகஸ்மு திங்கள் 14-ம் நாள் தலைவணங்க ஆரம்பித்தது. டோக்கியோ அமைதி உடன்பாடு செய்து கொள்ள முன்வந்தது. செப்டம்பர் இரண்டாம் நாள் மிசௌரி என்ற அமெரிக்க போர்க்கப்பலில் டோக்கியோ வளைகுடாவில் ஜப்பானியப் பிரதிநிதிகள் அமைதி உடன்பாட்டில் கையெழுத்திட்டனர். அத்துடன் உலக மக்களை எல்லாம் அலைக்கழித்துக் கொண்டிருந்த கொடுமையான போர் முடிவு பெற்றது.

**போருக்குப் பின் ஜப்பானின் நிலை**

1945-ம் ஆண்டில் நேச நாடுகளின் முன் ஜப்பான் சரணடைந்தது என்று முன் இயலில் கண்டோம். அது தன் சுதந்திரத்தை இழந்தது. நேச நாடுகளின் பெரும் தானைத் தலைவராக (Supreme Commander of the Allied Powers (SCAP) தளபதி மெக் ஆர்தர் ஜப்பானில்

பொறுப்பேற்றார். ஜப்பானின் படுதோல்விக்கு அமெரிக்காவே முக்கியக் காரணமாக அமைந்ததால் அதுவே அதை ஏற்று நடத்த ஆரம்பித்தது. அதற்கு அவர் தலைமை தாங்கினார். அவர் 1957-ம் ஆண்டு வரை ஆட்சி நடத்தி வந்தார்.

ஜப்பான் தோல்வியடைந்த பிறகு அது மெய்ஜி மீட்சிக்குப் பின் பெற்ற பகுதிகளை இழந்துவிட்டது. குரில்ஸ (Kurilies) சகாலினின் தென்பகுதி ரஷ்யாவுக்குக் கிடைத்தது. முதல் உலகப்போரில் ஜெர்மனியிடமிருந்து வெற்றி கொண்ட பசுபிக் தீவுகளை அமெரிக்காவுக்கு அளித்தது. மஞ்சூரியாவிலிருந்தும் சீனாவிலிருந்தும் ஜப்பான் வெளியேற்றப்பட்டது. பார்மோசா, பெஸ்கடோர்ஸ் சீனாவுக்குக் கொடுக்கப்பட்டன. கொரியாவை அமெரிக்காவும் ரஷ்யாவும் பிரித்துக் கொண்டன. இவ்வாறு ஜப்பான் குறைக்கப்பட்டு தன்னுடைய பழைய நான்கு தீவுகளான ஹான்ஷு, ஷிகோகு, கியூஷு ஹோக்கைடோவுடன் விடப்பட்டது.

ஜப்பானைப் பன்னாட்டு ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவந்த போதிலும்கூட செயல்முறையில் அமெரிக்காவே எல்லாவற்றையும் கவனித்து வந்தது. 1945-ம் ஆண்டில் டிசம்பர் திங்களில் பதினொரு நாடுகளடங்கிய தூரக்கிழக்கு நாடுகளின் குழு (Eleven Nations For Estern Commisision) ஒன்றும், நான்கு வல்லரசுகளடங்கிய சபை (Four power allied Council for Janpan) ஒன்றும் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டது. அக்குழு கொள்கைகளை வகுக்கவும், சபை அல்லது கவுன்சில் ஆலோசனை கூறவும் அமைக்கப்பட்டது. குழுவின் தலைமையகம் வாஷிங்டனில் இருந்தது. தளபதி மெக் ஆர்தர் என்பவர் அதன் கொள்கைகளை உருவாக்கித் தந்தார். ஜப்பானை அமெரிக்கா ஏற்ற பின்பும் அங்கு பேரரசர் ஹிரோ ஹிடோ என்பவர் ஆண்டு வந்தார். SCAP நிர்வாகப் பொறுப்பு அனைத்தையும் கவனித்து வந்தது.

**ஜப்பானின் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டதன் நோக்கங்கள்**

**உ**லகில் அமைதிக்கும், பாதுகாப்புக்கும் எவ்வித கேடும் ஜப்பானால் ஏற்படக்கூடாதென்பதற்காகவே அவர்கள் அதை ஏற்றுக்கொண்டார்கள். இதைப்பற்றி கிளைடும், பீர்சும் "ஜப்பானை ஏற்றுக் கொள்வதின் முழுநோக்கம் உலகில் இனி அதன் மூலம் அமைதிக்கும் பாதுகாப்புக்கும் பங்கம் ஏற்படக்கூடாது என்பதற்காகவும், ஜப்பானிய மக்கள் ஆதரிக்கும் ஒரு சுதந்திர அரசின் முன்னேற்றத்தை ஊக்கப்படுத்துவதாகவும் இதை நேசநாடுகள் ஏற்றுக்கொண்டன" என்று கூறுகின்றனர். அத்துடன் ஜப்பானின் அதிகாரம் அதன் எல்லைக்குள் கட்டுப்பட்டிருக்க வேண்டுமென்றும் அதன் இராணுவ பலம் அழிக்கப்பட வேண்டுமென்றும் போர்க்குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டுமென்றும் வேளாண்மை தொழில், தொழிலாளர் நலன் ஆகியவற்றை ஊக்குவிக்க வேண்டுமென்றும், உற்பத்தியைப் பகிர்ந்தளிக்க வேண்டும் என்றும், சிந்தனைகள் மூலம் மக்களாட்சி வளமடைய கல்விச் சர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமென்றும் அந்த தூரக் கிழக்கு நாடுகளின் குழு (Far Eastern Commission- F.E.C) நோக்கங்களாகக் கொண்டிருந்தது.

**மக்களாட்சிக் கூறுகளைக் கொடுத்தல்**

ஜப்பானிய மக்களுக்கும், ஜப்பானிய நிறுவனங்களுக்கும் மக்களாட்சியின் மாண்புகளை அளிப்பதற்காகப் பல முயற்சிகளை மேற்கொண்டார்கள். அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். எழுத்து, பேச்சு, சமய சுதந்திரங்கள் அளிக்கப்பட்டன. கூட்டம் கூட உரிமையும் அவர்களுக்கு அளிக்கப்பட்டது. அந்நியருக்கு விரோதமானவர்கள், இராணுவத் தளபதிகள், ஏனைய வன்முறையில் ஈடுபடும் கும்பல்கள் அவர்களின் நிறுவனங்கள் எல்லாம் தடை செய்யப்பட்டன. பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டது. வாக்குரிமை வயது 25லிருந்து 20 ஆகக் கொண்டுவரப்பட்டது. 1946-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10-ம் நாள் நாடாளுமன்ற தேர்தல் நடைபெற்றது. புதிய அரசியலமைப்பு வெளியிடப்பட்டது. 1947-ம் ஆண்டு மே திங்கள் 3-ம் நாள் ஆக அது நடைமுறைக்கு வந்தது. பல அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தல அரசாங்கங்கள் அதிக அதிகாரத்தைப் பெற்று விளங்கின. காவல் துறையின் அதிகாரம் பன்முகப்படுத்தப்பட்டது. கிராமங்களிலும் காவல்படை நிர்மானிக்கப்பட்டது. பொது மக்கள் கருத்துகளுக்கு ஏற்ப தல அரசாங்கங்கள் நடைபெற்று வந்தன.

**புதிய அரசியலமைப்பு**

**த**ளபதி மெக் ஆர்தர் என்பவரின் தலைமையில் அவருடைய அதிகாரிகள் புதிய அரசியலமைப்பை உருவாக்கினார்கள். ஆதில் முடியாட்சி நிலைநாட்டப்பட்டிருந்தது. போரைத் தவிர்த்து, படைமானிய முறை ஒழிக்கப்பட்டிருந்தது. இப்புதிய அரசியலமைப்பின்படி மக்களுக்கு இறைமை கொடுக்கப்பட்டிருந்தது. மக்களின் ஒற்றுமையின் அடையாளமே பேராசராவார் என்று அதில் குறிப்பிட்டிருந்தது. வெளிநாட்டுத் தூதுவர்களை நியமிக்கும் அதிகாரம் அமைச்சரவைக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. ஈரங்க சட்டமன்ற முறை (Bi-Cameralis) யானது பாதுகாக்கப்பட்டது. ஒவ்வொரு சபையின் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களால் மட்டுமே அரசியல் சட்டத்திற்குத் திருத்தங்கள் கொண்டுவரலாமென இப்புதிய அரசியலமைப்பு வழி செய்தது. அது பின்னர் மக்கள் வாக்கெடுப்பால் ஏற்றுக் கொள்ளப்படவேண்டும். இப்புதிய அரசியலமைப்பானது 1946-ம் ஆண்டு அக்டோபர் திங்களில் ஜப்பானிய நாடாளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, நவம்பர் திங்களில் பேரரசரால் வெளியிடப்பட்டு, 1947-ம் ஆண்டு மே திங்களில் நடைமுறைக்கு வந்தது.

**1.பேரரசர்**

பேரரசர் அரசின் அடையாளமாகவும், மக்களின் ஒற்றுமைச் சின்னமாகவும் இருக்க வெண்டும். மக்களின் விருப்பப்படி அவர் நடக்க வேண்டும், பேரரசரின் அரியணை பரம்பரை உரிமையைக் கொண்டது. அமைச்சரவையின் ஆலோசனையின் பேரில் அவர் நடத்தல் வேண்டும். நாடாளுமன்ற விருப்பப்படி அவர் பேரமைச்சரை நியமிக்க வேண்டும். தலைமை நீதிபதியை அவர் நியமிக்கலாம். ஆமைச்சரவையின் ஆலோசனையின் பேரில் அவர் அரசியலமைப்பு திருத்தங்களைக் கொண்டு வரலாம். பாராளுமன்றத்தைக் கூட்டவும் கலைக்கவும் தேர்தல்கள் நடத்தவும் அமைச்சரவை ஏற்படுத்தவும் நீக்கவும் வெளிநாட்டுத் தூதுவர்களை ஏற்கவும் அரசியல் பத்திரங்களில் கையொப்பமிடவும் அரசு விழக்களில் பங்கு

பெற்று நடத்தவும் அவருக்கு அதிகாரமுண்டு. நாடாளுமன்ற அனுமதியின்றி அவர் பொருள் சேர்த்துக்கொள்ளவோ அல்லது பெற்றுக்கொள்ளவோ கூடாது. ஜப்பானிய மக்கள் போரை கைவிட்டுவிட வேண்டுமென்றும் அந்த புதிய அரசியல் விதி வழி செய்துள்ளது.

**2.மக்களின் உரிமைகளும் கடமைகளும்**

மக்களுக்கு பலவித உரிமைகள் அளிக்க வழி செய்யப்பட்டது. அரசு மக்களின் உரிமைகளைப் பாதுகாக்குமென்றும், மக்களுக்கு வாழ உரிமை, விடுதலை உரிமை உண்டு என்றும் அறிவிக்கப்பட்டது. சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்று கருதப்பட்டார்கள் பிரபுத்துவம் அனுமதிக்கப்படவில்லை. பொது நிர்வாக அதிகாரிகளை தேர்ந்தெடுத்துக் கொள்ள மக்களுக்கு உரிமை உண்டு. வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டது. இரகசிய வாக்குப்பதிவு முறை புகுத்தப்பட்டது. மக்கள் அமைதியான முறையில் தங்கள் குறைகளை அரசுக்குத் தெரிவித்துக் கொள்ளலாம். சிந்தனை, சமய சுதந்திரத்தை அனைவரும் மதிக்கவேண்டும். விரும்பிய இடத்தில் வேண்டிய தொழிலை மேற்கொள்ள மக்களுக்கு உரிமை கொடுக்கப்பட்டது. கல்விச் சுதந்திரம் அளிக்கப்பட்டது. கணவனும் மனைவியும் சமமான உரிமைகளைப் பெற்றனர். பண்பாடு, கல்வி ஆகியவற்றை அனைவரும் கடைப்பிடிக்கவேண்டும்இ அத்துடன் மக்கள் வேலை செய்யவும் சொத்து வைத்துக் கொள்ளவும் சட்டப்படி தண்டனை பெறவும் காரணமில்லாமல் கைது செய்யாமலிருக்கவும் விரைவில் வழக்குகளை விசாரணை செய்யப் கோரவும் உரிமைகள் பெற்றனர். மேலும் கடுமையான தண்டனைகளும் துன்புறுத்தலும் தடை செய்யப்பட்டன.

**3.நாடாளுமன்றம் (Diet)**

சட்டங்களை உருவாக்கும் மிக உயர்ந்த அரசு நிறுவனம் நாடாளுமன்றமேயாகும். ஆதில் இரண்டு சபைகள் இருக்கின்றன. ஒன்று பிரதிநிதிகள் சபை (House of Representatives) மற்றொன்று உறுப்பினர்கள் அவை (House of Councillors) முதல் சபையிலுள்ளவர்கள் 4 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இரண்டாம் அவையிலுள்ளவர்கள் 6 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப் படவேண்டும். அதில் பாதிப்பேர் மூன்று ஆண்டுகளுகடகு ஒரு முறை பதவி விலகவேண்டும். ஆண்டுக்கு ஒரு முறை நாடாளுமன்றம் கூட்டப்பட வேண்டும். சிறப்புக் கூட்டங்களும் கூட்டலாம். மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு சபைக்கும் ஒரு தலைவர் (Presiding Officer) உண்டு. அதன் நடவடிக்கைகளை அவரே மேற்கொள்வார். இரண்டு அவைகளிலும் நிறைவேறிய பின்பே எந்தவொரு மசோதாவும் சட்டமாக்கப்படும். வரவு-செலவுத் திட்டம் முதலில் பிரதிநிதிகள் சபையில் தாக்கல் செய்யப்படவேண்டும.

**4.அமைச்சரவை**

நிர்வாக அதிகாரங்களைக் கொண்டுவிளங்குவது அமைச்சரவையாகும். பேரமைச்சரும் மற்ற அமைச்சர்களும் இதில் உள்ளனர். நாடாளுமன்றம் பேரமைச்சரை நியமிக்கும். அவர் மற்ற அமைச்சர்களை நியமிப்பார். நும்பிக்கையில்லாத் தீர்மானத்தின் பேரில் அமைச்சரவை பதவி விலக வேண்டும். அமைச்சரவை சட்டங்களை இயற்றவும் உடன்படிக்கைகளை

மேற்கொள்ளவும், பொது நிாவாகத்தை மேற்கோள்ளவும், வரவு-செலவுத் திட்டத்தைக் தயார் செய்யவும் அமைச்சரவை ஆணகைளை வெளியிடவும் உரிமை பெற்றுள்ளது. ஆணகைள் அனைத்தும் அந்தந்தத் துறை அமைச்சரால் கையொப்பமிடப்பட்டு, பேரமைச்சரால் கையொப்பமிடப்பட்ட பின்னரே வெளிவரும். வரவு-செலவுக் கணக்குகளைத் தணிக்கை பார்க்க தணிக்கை குழு (Board of Audit)ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அது பொதுக்கணக்குகளைக் தணிக்கை செய்து அதன் அறிக்கையை நாடாளுமன்றத்திற்கு அனுப்பவேண்டும் என விதிகள் வகுக்கப்பட்டன.

**5.நீதித்துறை**

நீதி பரிபாலனம் உயர் நீதிமன்றத்தால் பாதுகாக்கப்பட்டது. தனிப்பட்ட மேல் முறையீட்டு மன்றங்கள் ஏற்படுத்தப்படவில்லை. நீதிபதிகள் அனைவரும் மனசாட்சிக்குட்பட்டு சுதந்திரமாகச் செயலபட வேண்டும். கீழ் நீதிமன்றங்களைத் தலைமை நீதிமன்றங்கள் நடத்திச் செல்ல வேண்டும். இராஜத் துரோகக் குற்றம் சாட்டப்பட்டாலொழிய நீதிபதிகளைப் பதவியிலிருந்து விலக்க முடியாது. துலைமை மன்ற நீதிபதிகள் அமைச்சரவையால் நியமிக்கப்பட வேண்டும் என்று அந்தப் புதிய அரசியல் அமைப்பு கூறியது. ரிச்சர்டு ஸ்டோரி என்பவர் கூறுிறுப்படி மெய்ஜி அரசியலமைப்பானது தூக்கியெறிப்பட்டது. அமெரிக்க அறிஞர்களால் உருவாக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு ஜப்பானிய மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பது பொருத்தமானதேயாகும். “1947ம் ஆண்டில் ஏற்பட்ட புதிய அரசியலமைப்பானது ஜப்பானியர்களின் ஒரு புரட்சிகரமான உரிமைப் பத்திரமாகும்” என்று கிளைடும், பீர்சும் குறிப்பிட்டுள்ளனர்.

**பொருளாதார சீர்திருத்தங்கள்**

பொருளாதாரம் முன்னேற்றம் அடைந்தால்தான் ஜப்பானில் மக்களாட்சி வளர சூழ்நிலைகள் ஏற்படுமென்றும் வளரும் இராணுவ முறை தடை செய்யப்படுமென்றும் அதை ஏற்றுக்கொண்ட நேசநாடுகள் எண்ணின. எனவே 1946-ம் ஆண்டு அக்டோபர் திங்களில் ஒரு மசோதா கொண்டுவரப்பட்டது. அதன்படி ஜப்பானில் சொந்த நிலங்களோடு குடியிருப்பவரும் குடியேறியவரும் 9.8ஏக்கர் நிலம் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டனர். நிலக்குழு (Land Commission) ஒன்று ஏற்படுத்தப்பட்டு தேவைக்கு அதிகமான நிலங்கள் (9.8 ஏக்கருக்கு அதிகமானவை) அதனிடம் ஒப்படைக்கப்பட்டன. அக்குழுவின் உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாவார்கள். ஆக்குழு அந்நிலங்களை நிலமில்லாத குடியானவர்களுக்கு விற்றது. அவர்கள் நிலத்தின் விலையை முப்பது தவணைகளில் செலுத்தி வந்தனர். டியட்மான் என்பவர் 1952-ம் ஆண்டில் 10 லட்சம் ஏக்கர் நிலங்கள் கைமாறின என்றும், 90சதவிகித பண்ணை நிலங்கள் உழுபவருக்கே சொந்தமாக இருந்தன என்றும் கூறியுள்ளார்.

ஜப்பானில் தொழிலாளர்கள் சங்கம் வைத்துக்கொள்ளவும், கூட்டாக கடன் வாங்கவும் வேலை நிறுத்தம் செய்யவும் உரிமை பெற்றனர். 1948-ம் ஆண்டில் தொழிற்சங்கங்களின் உறுப்பினர் எண்ணிக்கை 6,93,700 ஆக இருந்தது. அதில் பாதிப்பேர் வேளாண்மைத்

தொழிலில் ஈடுபடாதவர்களாவார்கள். ஆனால் அரசாங்க அலுவல்களில் வேலை செய்வோர், பொது மக்கள் நலம் பேணும் துறைகளில் வேலைசெய்வோர், வேலை நிறுத்தம் செய்யக்கூடாது. ஜப்பானின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக வீற்றிருந்த ஜெய்பட்சு என்ற பணமுதலைகள், ஆலை அதிபர்கள் தொழில்களில் ஈடுபடுவதிலிருந்து தடுக்கப்பட்டனர். அதற்குரிய சட்டம் 1947-ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. 1949-ல் ஜப்பான் தன் பழைய பொருளாதாரப் பொலிவை அடைந்துவிடும் என்று எதிர்பார்த்தனர். அதன்படி அவர்களின் நோக்கமும் ஈடேறியது.

**அமைதி உடன்படிக்கைகள்**

1951-ம் ஆண்டு ஜூலை திங்கள் அமெரிக்காவும், பரிட்டனும் ஜப்பானுடன் போரில் ஈடுபட்ட 55 நாடுகளுக்கு அழைப்பு அனுப்பியது. ஒரு அமைதி உடன்பாடு கொள்ளவே அந்நாடுகள் அவ்வாறு செய்தன. அதன்படி 1951-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 4-ம் நாள் சான்பிரான்சிஸ்கோவில் (Sanfrancisco) அமைதி நாடு (Peace Conference) கூடியது. இறுதியில் செப்டம்பர் திங்கள் 8-ம் நாள் ஜப்பானும் 48 நாடுகளும் சான்பிரான்சிஸ்கோ உடன்பாட்டில் கையெழுத்திட்டன. ரஷ்யா, செக்கோஸ்லோவியர், போலந்து ஆகிய நாடுகள் மாநாட்டில் கலந்து கொண்டன. ஆனால் உடன்பாட்டில் கையெழுத்திடவில்லை. இந்தியாவும் பர்மாவும் தனித்தனியாக ஜப்பானுடன் உடன்படிக்கை செய்து கொண்டன. இத்தகைய உடன்படிக்கைகளால் நேச நாடுகளுக்கும் ஜப்பானுக்கும் இடையே நடைபெற்று வந்த போர் முடிவுற்றது. கொரியா, பார்மோசா, பெஸ்கடோர்ஸ் ஆகிய பகுதிகளிலிருந்து ஜப்பான் தன் படைகளை விலக்கிக் கொண்டது. ஐ.நா. சங்கத்தின் இரண்டாவது விதியை ஏற்றுக் கொண்டது. ரஷ்யாவும் ஏனைய பொதுவுடைமை நாடுகளும் அதில் நீண்ட நாட்கள் சேராமலேயே இருந்தன. 1956-ம் ஆண்டில் ரஷ்யாவிற்கும் ஜப்பானுக்குமிடையே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி அவர்களுக்கிடையிலிருந்த பகைமை மறைந்தது. இறுதியில் அமெரிக்காவிற்கும் ஜப்பானுக்குமிடையே 1952-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28-ம் நாள் ஒரு உடன்படிக்கை கையெழுத்தாயிற்று. அதிலிருந்து நேசநாட்டுப்படைகள் ஜப்பானிலிருந்து வெளியேறின. மேலும் அமெரிக்கா ஜப்பானின் நிர்வாகத்தை ஏற்று நடத்திவந்த ஆட்சியும் முடிவடைந்தது. ஜப்பானின் பாதுகாப்பிற்காக அமெரிக்கா அங்கு ஒரு படையை வைத்துக் கொள்ள அனுமதி பெற்றது. இவ்வாறு ஜப்பானில் நிர்வாகத்தை ஏற்றுக் கொண்ட ஆறு ஆண்டுகளில் பல மாற்றங்கள் அங்கு ஏற்பட்டன.

## ஜப்பானிய வெளிநாட்டுக் கொள்கை

ஜப்பான் 1945-ம் ஆண்டுக்குப் பின் அமெரிக்காவின் கீழ் சில ஆண்டுகள் இருந்து பின்தனியே தன் ஆட்சியினை நடத்த முற்பட்டது. அது சமகால ஐரோப்பிய நாடுகளுடனும், பிற நாடுகளுடனும் நல்லதோர் உறவினை ஏற்படுத்திக் கொண்ட அவ்வுறவினை பற்றி ஈண்டு நோக்குவோமாக,

அமெரிக்கா

ஜப்பான் அமெரிக்காவுடன் இருவழிக் கொள்கையினைப் பின்பற்றி வருகின்றது. ஒன்று அமெரிக்காவினை நெருங்கி நெருங்கிப் போய் கொண்டிருப்பது. முற்றொன்று அமெரிக்கா பின்பற்றும் கொள்கையிலிருந்து விலகிச் செல்வது.

ஜப்பானில் இது வரையில் பொறுப்பேற்ற பேரமைச்சர்களும் வெளிநாட்டு அமைச்சர்களும், பன்னாட்டு அமைதிக்கும், நிலையான தன்மைக்கும் ''முக்கியத்துவம் கொடுத்து வலியுறுத்தி வந்துள்ளனர். 1978 முதல் 1980 வரை பொறுப்பிலிருந்த மசு யோஹி ஷிரா அமெரிக்காவுடன் முன்புள்ளவர்கள் பின்பற்றிய கொள்கையினையே பின்பற்றினார். அவருக்குப் பின்னால் பேரமைச்சர் பொறுப்பேற்ற சென்கோ சுசுகி அவர்கள் ''நாங்கள் அமெரிக்காவுடன் பாதுகாப்பு உடன்பாட்டில் சேர்ந்துள்ளது எதற்காகவென்றால் எங்கள் சுதந்திரத்தைப் பேணவும் எங்கள் பாதுகாப்பை முன்னிட்டும் ஆகும்'' என்று குறிப்பிட்டதிலிருந்து அவரது போக்கும் நோக்கும் இனிது விளங்கும். பன்னாட்டு அரங்கில் ஜப்பானின் பங்கு அமைதியைபட பேணுவதே ஆகும் என்று சுசுகி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

**ரஷ்யா**

1956-ம் ஆண்டில் ஜப்பானும் சோவியத்தும் வெளியிட்ட அறிக்கையின் பேரில்தான் அவ்விரு நாடுகளின் உறவு அமைந்துள்ளது எனலாம். 1972-ம் ஆண்டில் குரோமிகோ ஜப்பானுக்கு பயணம் மேற்கொண்டார். அதிலிருந்து அவர்களுக்கு நம்பிக்கை ஒளி ஏற்பட்டது. அதன்மூலம் சிலதீவுகளின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் நம்பிக்கையும் ஏற்பட்டதில் வியப்பேதுமில்லை.

வாணிபத்தைப் பொறுத்த மட்டில் இரு நாடுகளுக்கிடையில் லாபகரமான வாணிபம் நடைபெற்றது என்றால் அதில் எட்டுணையும் ஐயமில்லை. இரு நாடுகளுக்கிடையில் பல ஒப்பந்தங்கள் ஏற்பட்டன. 'நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வாணிபம் வளர்ந்து வந்தது. 1974-ம் ஆண்டில் மேற்கொண்டு 58 சதவிகிதம் வளர்ச்சி பெற்றது. நாட்டின் கனிவளங்களைப் பயன்படுத்திக் கொள்வதில் இரு நாடுகளும் பல ஒப்பந்தங்களை செய்து கொண்டன. சாகாயின் தீவிலுள்ள எண்ணெய் பற்றும் எரிவாயுவினைப் பயன்படுத்திக் கொள்ள இரண்டு நாடுகளும் ஒப்பந்தம் செய்து கொண்டன. 1976-ம் ஆண்டில் பிப்ரவரித் திங்களில் இரண்டு அரசாங்கங்களுக்கும் இடையிலான ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

சமீப காலங்களில் சுப்ரீம் சோவியத்தும் ஜப்பானின் டயட்டும் பல ஒப்பந்தங்கள் செய்து கொண்டன. இது 1990-ம் ஆண்டு சோவியத் ரஷ்யா சிதைந்து போவதற்கு முன்பு ஏற்பட்டதாகும். இரு நாடுகளுக்கும் பண்பாட்டு ரீதியிலம், கலைத்துறையிலும் பல உறவுகள் ஏற்பட்டுள்ளன. ஜப்பானின் புகழ்பெற்ற கலைஞர்கள் சோவியத் ரஷ்யாவிற்குச் சென்று தங்கள் செயல்பாடுகளை எடுத்துக்காட்டி உள்ளனர். குரோமிகோவின் அரசு முறையிலான பயணம் இதற்கு வலிவும் பொலிவும் கொடுத்தது.

**சீனா**

1975-ம் ஆண்டில் துவங்கப்பட்ட ஜப்பானிய சீன-பேச்சு வார்த்தைகளின் மூலம்' இரண்டு நாடுகளுக்கு இடையிலான உறவு மேன்மேலும் வளர்ந்து வரலாயிற்று. ஜப்பான் ரஷ்யாவுடனும், சீனாவுடனும் சம அளவில் சமதுாரத்திய முறையிலான உறவினை மேற்கொண்டு சுமுகமாக இருந்து வருகின்றது.

சீன ஜப்பானிய உறவுகள் இருநாடுகளில் வெளிவிவகார அமைச்சர்கள் மூலம் நன்கு பிணைக்கப்பட்டது. 1976-ம் ஆண்டில் மீன்பிடித்தல் தொடர்பான ஒரு ஒப்பந்தமும் செய்து கொண்டது.

தைவான் பிரச்சனையைத் தவிர வேறு பிரச்சனைகளும் பல இருந்தன. அவைகளை எல்லாம் பேச்சு வார்த்தைகள் மூலம் நன்கு சீராக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

1978-ம் ஆண்டில் சீன-ஜப்பானிய அமைதி மற்றும் நட்புறவு உடன்படிக்கை ஒன்று கையெழுத்தானது. பல கருத்து வேறுபாடுகளுக்கிடையில் தடங்களுக்குயிடையில் சுமுகமாக உடன்பாட்டினை இரு நாடுகள் ஏற்றுக் கொண்டன.

**ஜப்பானும் ஆசியாவும்**

ஜப்பான் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கச்சாப் பொருள்கள் மீதும் மூலப்பொருள்கள் மீதும் ஆர்வமும் கவர்ச்சியும் கொண்டிருந்தது. அது போன்றே தென்கிழக்கு ஆசிய நாடுகளும் ஜப்பானிய முதலீட்டாளர்கள்பால் நாட்டம் கொண்டிருந்தன. அது மட்டுமல்லாமல் வாணிகம் செய்ய தக்க இடமாக அதை எண்ணி வந்தார்கள். எனவே அதற்கு ஏற்ற கொள்கையினை உருவாக்க எண்ணம் கொண்டிருந்தனர்.

ஜப்பான் தென்கொரியாவுடனும் சுமுக உறவினை மேற்கொண்டிருந்தது.

ஜப்பான் இந்தியாவுடனும் சீரிய நட்புறவினை மேற்கொண்டிருந்தது. கச்சாப்பொருட்களைப் பெறவும், பொருள்களுக்குரிய சந்தையினைப் பெறவும் ஜப்பான் பல திட்டங்களை மேற்கொண்டது.

இதைப்போலவே தென்கிழக்கு ஆசிய நாடுகளுடனும் ஜப்பான் நல்லதோர் உறவினை மேற்கொண்டுள்ளது. "1980களில் ஜப்பானின் வெளிநாட்டுக் கொள்கை" என்ற நூலில் ஜப்பானிய வெளிநாட்டு அமைச்சர் சுபுரோ ஒகிடா என்பவர் வெளிநாட்டுக் கொள்கையினை நன்கு கோடிட்டுக் காட்டியுள்ளார். அது அமைதிக்காக அர்ப்பணம் செய்து கொண்டுள்ளதாகக் காட்டப்பட்டுள்ளது. பன்னாட்டு அமைதி, நலைத்த தன்மையினை ஜப்பான் பெரிதும் தேவையானது என்று கருதுகிறது. ஆதன் நோக்கம் என்னவென்றால் பன்னாட்டு நிலைத்தன்மையினை பராமரிப்பதாகும். பொதுவாக உலகத்துக்கு தொழில் நுணுக்கத்தில் தெவிடுதல். குறிப்பாக ஏழை நாடுகளுக்கு உதவி செய்தல் ஆகும். தொழல் நுணுக்க துறையில் எல்லா நாடுகளுக்கு உதவவேண்டும் என்ற உயர்வான எண்ணத்தினை அது பெற்றுள்ளது. வரவேற்கதக்கதாகும். அரசியல், பொருளாதாரத்தில் ஒரு விழ்ப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்பது மற்றொரு நோக்கமாகும். சமீப ஆண்டுகளில் ஜப்பான் உலக நாடுகளுடன் அதிசயத்தக்க முறையில் நல்லதோர் உறவினை ஏற்படுத்தி வந்து உள்ளது என்பதை எவரும் மறுக்கவோ அல்லது மறைக்கவோ முடியாது.